G. B. Sathyanesan, B.A.

கிறிஸ்துவின்
இரண்டாம் வருகையும்
நித்தியமும்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

17.7.81

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு." ஆமோ. 4:12.

கிறிஸ்துவின்
இரண்டாம் வருகையும்
நித்தியமும்

"இதோ. சீக்கிரமாய் வருகிறேன்"—வெளி. 22:12.

1980

C. P. M.,
MAHABOOPALAYAM,
MADURAI

Phone : 24892   Pin : 625 010

முதற்பதிப்பு —
இரண்டாம் பதிப்பு — 1973
மூன்றும் பதிப்பு — 1976
நான்காம் பதிப்பு — 1978
ஐந்தாம் பதிப்பு — 1980
(இரத்த சாட்சிகளில் குறைத்தும்,
முடிவுரையில் கூட்டியும் இருக்கிறது)

விலை ரூபாய் 1.00

இதர வெளியீடுகள் :

1. சமாதானம்
2. ஜெபம்
3 சோதனை
4. வருந்தாமும் மன்னுவும்
5. தேவசித்தம்
6. பதினைந்து முத்துக்கள்
7. இயேசுவின் மேனி

பொருளடக்கம்

G.B. Sathyanesan, B.

		பக்கம்
1.	அதிகாரம்—1	... 1
2.	அதிகாரம்—2	
	ஏழு உயிர்த்தெழுதல்கள்	... 6
	முதல் வரிசை—கிறிஸ்து	... 7
3.	அதிகாரம்—3	
	இரண்டாம் வரிசை—மண	... 9
	வாட்டிசபை, அதிசய அணங்கு	... 11
4.	அதிகாரம்—4	
	'என் பிரியமே'	... 24
5.	அதிகாரம்—5	
	மூன்றும் வரிசை—உபத்திரவ காலத்து இரத்த சாட்சிகள்	... 60
6.	அதிகாரம்—6	
	நான்காம் வரிசை—இரண்டு சாட்சிகள்—ஏனோக்கும், எலியாவும்	... 66
7.	அதிகாரம்—7	
	இரத்தசாட்சிகள்	... 81
8	அதிகாரம்—8	
	ஐந்தாம் வரிசை—பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், சாதாரண இரத்தசாட்சிகளும்	... 128
9,	அதிகாரம்—9	
	சாத்தானின் திரித்துவம்	... 130

பக்கம்

10. அதிகாரம்—10

ஆயிர வருஷ அரசாட்சி ... 137
புதியவானம்—புதிய பூமி ... 150

11. அதிகாரம்—11

ஆரும் வரிசை-மறுபடியும் பிறந்த
வர்கள் அல்லது இரட்சிக்கப்பட்ட
வர்கள் ... 159

12. அதிகாரம்–12

ஏழாம் வரிசை—துன்மார்க்கரும்
நித்தியமும் ... 160

முன்னுரை

கர்த்தருக்குள் பிரியமானவர்களே !

இச்சிறு புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரும் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும் என்னும் ஆவலினால் அவருடைய மகிமைக்காக எழுதலானேன். உலகத்தின் நிலையையும் சபைகளின் நிலையையும் கவனிக்கும் போது இயேசு பரிசுத்தவான்களைச் சேர்க்கச் சீக்கிரம் வருகிறார் என்பது தெளிவாகிறது. இயேசு பாடுபட்டு மரணமடையத் தம்மைத் தாமே கெத்செமனேயில் மனுஷரிடத்திலும், தன் ஜீவனை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி கல்வாரியில் தம் ஆவியைத் தாமே பிதாவினிடத்திலும் ஒப்புக்கொடுத்தார் நாம் மகிமையுள்ளவர்களாக அவரோடு நித்தியத்தில் காணப்பட வேண்டும் என்னும் நோக்கத்துடன் அப்படிச் செய்தார் என்று எபே. 5 : 27 - ல் காண்கிறோம். எனவே அவரது நோக்கத்தை நிறைவேற்றாது நாம் உலகத்தில் ஜீவிப்பது தகுதியன்று.

அன்றியும் அவர் பரிசுத்தவான்களை எடுத்துக் கொண்ட பின்பு கைவிடப்பட்ட தேவ ஜனத்துக்குத் தாங்கவொண்ணா உபத்திரவம் சம்பவிக்கப்போகிறது "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத். 24 : 21). அப்போது பொன்னை வெறுத்து வெள்ளியைத் தெருக்களில் எறிந்து விடுவார்கள். (எசேக்.7:19) அந்திக் கிறிஸ்துவின் முத்திரையின்றி வாங்கவோ விற்கவோ

கூடாதபடி வியாபாரம் அப்போதைய அரசாங்கத்தின் கையிலி ருக்கும் (வெளி.13:17) அதற்கு அறிகுறியாக இப்போதே பல பொருள்களை அரசாங்கங்கள் விற்கின்றன. சூப்பர் மார்க் கெட்டுகள் (அரசாங்கக் கடைகள்) ஏற்படுத்தப்பட்டிருக் கின்றன. அன்றியும் ஐரோப்பாவில் பிரசில் (Brussels) என்னு மிடத்தில் ஒரே நாணயத்தால் அகில உலகத்துடனும் வியாபாரம் செய்யக்கூடிய ஒழுங்குகள் செய்திருப்பதையும் நாம் அறிகிறோம்.

ஆகவே இயேசு தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்ததின் நோக்கம் உன்னில் நிறைவேறவும், நித்திய சாபத்திலிருந்து நீ காக்கப்படவும், "உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப் படு." (ஆமோஸ் 4:12)

இப்புத்தகத்தின் "இரத்த சாட்சிகள்" என்னும் பகுதி பெந்தெகொஸ்தே பேரொலியிலிருந்து எடுக்கப்பட்டது. இதை எழுத உதவி செய்த சகோதரனுக்கும், அச்சுப் பிழைகளைத் திருத்தி உதவிய சகோதரனுக்கும் என் நன்றியும் தேவாசீர் வாதமும் என்றுமுள்ளது.

ஆக்கியோன்

G.B. Sathyanesan, B.A

இயேசுவின் இரண்டாம் வருகையும், நித்தியமும்

அதிகாரம்—1

உலக விஞ்ஞானிகளும், வானசாஸ்திரிகளும் இவ்வுலகம் மிக அண்மையில் பெரும் மாற்றம் அடையும் என்கிறார்கள். பொதுவாக, இவ்வுலகத்திற்கு என்ன சம்பவிக்குமோ என்னும் பயம் எல்லா மனுஷருடைய இருதயங்களிலும் இருக்கிறது. இயேசு பெருமான் ஏறக்குறைய 2,000 வருடங்களுக்கு முன், "பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்" என்று கூறியதுபோல் சம்பவித்துக் கொண்டிருக்கிறது. (லூக். 21 : 23-26 வாசிக்கவும்) மனுஷர் ஒரு காலத்தில் இவ்விதக் காரியங்களைக் குறித்து நகைத்தனர். ஆனால் தற்கால வான சாஸ்திரிகள் இவை சீக்கிரம் நிறைவேறும் என்கிறார்கள். அதாவது "நோவே" அல்லது புதிய நட்சத்திரங்கள் திடீரெனத் தோன்றி, ஒளி வளர வளர அதிகப் பிரகாசமாகிப் பின்பு மங்கிக் காணப்படாமல் போகும். இந்தப் பூமியும் அவற்றுள் ஒன்று அல்லது அவற்றுள் ஒன்றின் ஒரு (அம்சம்) பாகமாயிருக்கிறது என்றும், இது சூரியனை விட்டு அகன்றவுடன் ஓர் எரிபந்தமாகி விடும் என்றுங் கூறுகின்றனர். அன்றியும், இது உள்ளிருக்கும் அக்கினியால் வெடித்து அல்லது வானத்திலுள்ள வேறொன்றுடன் மோதி ஓர் அக்கினிப்பந்தமாகும் என்கிறார்கள். (Halley's Bible Handbook, Page 669). இன்னமும் விஞ்ஞானிகளில் பலரும் இக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் அணு குண்டுகளினால் இவ்வுலகம் எரிக்கப்பட்டுவிடுமோ என்று பயந்து கொண்டிருக்கின்றனர். யாவற்றிற்கும் மேலாக, இப்பொழுது இருக்கிற வானங்களும், பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கின்றனவென்றும், வானங்கள் மடமட என்று

அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் என்றும் (II பேதுரு 3 : 7, 10) சத்திய வேதம் சொல்லுகிறபடியால், இவ்விதம் சம்பவிக்கும் என்பது மிக நிச்சயமே!

உலகம் இவ்விதமாய் அக்கினியால் அழிக்கப்படும்போது, அதிலிருக்கும் தேவ பக்தர்களும் அதனுடன் அழிக்கப்படுவார்களோ? ஒரு வீடு தீக்கிரையாகப் போகும்போது, தகப்பன் தன் பிள்ளைகளை அதிலிருந்து தூக்கி வெளியே கொண்டுபோய்ப் பாதுகாப்பது நிச்சயம் அல்லவா? ஆம்! அப்படியே நம் பரம பிதாவும் நிச்சயமாகவே இவ்வுலகத்திற்கு வரப்போகும் பயங்கர அழிவுக்கு முன்னதாகவே தம் பக்தர்களை இவ்வுலகத்திலிருந்து தம்மிடம் எடுத்துக் கொள்வார். அவ்விதம் எடுத்துக்கொள்ள வேண்டுமாயின், நாம் அதற்குத் தகுதியாய் இருக்க வேண்டும்.

இதைக் குறிப்பிடும் பொருட்டாகத்தான் இயேசு, "இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு" என்று லூக்கா 21:36-ல் கூறினர். ஆகவே, வரும் அழிவிலிருந்து தப்பப் பாத்திரவான்களாக வேண்டிய விதத்தை நாம் ஆராயவேண்டியது அவசியம்.

அன்றியும், இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் முதலாவது சகல மனுஷரின் பாவத்தையும் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். அவர் "ஒவ்வொருவருக்காகவும்" மரணத்தை ருசி பார்த்தார். (எபி. 2:9). இவ்விதமாய்த் தம் இரத்தத்தினல் பாவ மன்னிப்பை அருளினது மாத்திரமல்ல, நாம் அவருடைய நிறைவான வளர்ச்சியடையவேண்டிய சகல ஒழுங்குகளையும் செய்திருக்கிருர். தம்மைப்போல நாம் பூரண-மடைய விரும்பி, "பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்ருர். இவ்வித ஜீவியத்தைப் பெற்று அவருக்காக

வாஞ்சையோடு காத்திருக்கிற பழுதற்ற பரிசுத்தவான்களைச் சேர்க்கும்படியாக அவர் இரண்டாம் தரம் வருவார். "இயேசுவின் இரண்டாம் வருகை" என்பது இதுவே. இதைக் குறிப்பிட்டு, இயேசு பரமேறுகையில், வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு நின்றவர்களை நோக்கிக் "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று (அப். 1:11) இருவர் அவர்களருகே நின்று கூறினார்கள். ஆம்! நிச்சயமாகவே இயேசு சீக்கிரமாய் வருவார். ஆகவே, நாம் அவருடைய வருகையில் உள்ள பல அம்சங்களையும், அதற்குரிய அடையாளங்கள் முதலியவற்றையும் ஆராய்ந்து அறிந்து, ஆயத்தமாய் இருக்க வேண்டியது மிக அவசியமாகும்.

அன்றியும் மனுஷன் நித்திய ஆத்துமா உள்ளவனாக இருக்கிறான். அவன் கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும் நித்தியமாய் ஜீவிக்க வேண்டியவன். ஆகவே, "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்" என்று இயேசு மத்தேயு 25 : 46-ல் கூறினார். அன்றியும், தானி 12:2-ல், "பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும். சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" என்று வாசிக்கிறோம். ஆகவே நித்தியத்தைக் குறித்தும் நாம் அறிய வேண்டியது மிக அவசியம்.

இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறித்து வேதத்தில் ஆராயும்போது ஒன்றுக்கொன்று மாறாக இருக்கும் வேறு சில வசனங்களைக் காண்கிறோம். உதாரணமாக, சில இடங்களில் இயேசு திருடனைப்போல் இரகசியமாய்

வருவார் என்றும், சில இடங்களில் ஆரவாரத்தோடு வெளியரங்கமாய் யாவரும் காணத்தக்கதாய் மகிமையுடன் வருவார் என்றும் வாசிக்கிறோம். கர்த்தருடைய வருகை என்பது ஓர் இரகசியமாகும். ஆகவே பரிசுத்த பவுல், "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று கூறி I கொரி. 15:51-ல் கர்த்தருடைய வருகையில் சம்பவிப்பதைச் சுட்டிக் காட்டுகிறார். ஆகவே இது படிப்பினாலும், புத்தகங்களை வாசிப்பதினாலும், அறிந்து கொள்ளக் கூடியதன்று. சிலர் இவ்வுண்மையை உணராது யாவற்றையும் சேர்த்து உபதேசிப்பதால் உண்மையை அறிய வாஞ்சிக்கும் உத்தமர் உள்ளம் கலங்குகிறது. ஆனால் நம் கர்த்தர் கலக்கத்திற்குத் தேவனல்லவே! இவ்விதமான காரியங்களைப் பரிசுத்த ஆவியானவர் வரையறுத்துச் சேர்க்க வேண்டியவற்றைச் சேர வேண்டிய இடத்தில் சேர்க்கிறார். "அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்' என்று ஏசா. 34:16-ல் வாசிக்கிறோம். அன்றியும், இவ்வித மறைபொருளான இரகசியங்கள், ஆவியானவராலே அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் தான் வெளிப்படுத்தப்படுகின்றன. (எபே. 3 : 6) அப்போஸ்தலர் என்னப்படுகிறவர்கள் உலகத்தில் ஒன்றும் இல்லாதவர்களாக இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் மாத்திரமல்லர். உலகத்தில் அற்பமாகப் பைத்தியக்காரர்போல் எண்ணப்பட்டாலும், பரிசுத்தமும் ஜெப ஜீவியமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள். (I கொரி. 4:9-13). இவர்கள் மூலமாகப் பரிசுத்தாவியானவர் வேதத்தில் உள்ள இவ்விதச் சிக்கல்களை அறுத்து, ஜோடு ஜோடாக வசனங்களை இணைத்துத் தருகிறார். நாம் ஆராயும் இவ்விஷயத்திலும் பரிசுத்தாவியானவரே அவ்விதம் செய்வாராக!

இரண்டாம் வருகை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறுமிடத்தில் அவர் எவ்விதமாய் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரோ, அப்படியே மறுபடியும் வருவார்

G.B. Sathyanesan,

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அப். 1:9-11). இவ்விதம் மறுபடியும் வருகையின் நிகழ்ச்சியில் மூன்று பகுதிகள் உள்ளன.

முதலாவது, அவருடைய இரகசிய வருகையில், அவர் மத்திய ஆகாயத்தில் வெளிப்படும்போது மறுரூபமடைந்து எடுத்துக் கொள்ளப்படுபவர்கள் முதற்பலன் என்றும், மணவாட்டி என்றும் அழைக்கப்படுவர். (I தெச. 4:14-18; வெளி. 12:5).

இரண்டாவது, அவர் வந்து தம்முடன் எடுத்துக் கொள்பவர்கள் மகா உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் என்றும், 'இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்' என்றும், அரிவாளை நீட்டி அறுத்து எடுக்கப்பட்டவர்கள் என்றும் அழைக்கப்படுவர். (வெளி. 7:9-14; வெளி. 14:14-18).

மூன்றாவது, தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை செலுத்தும்படிக்கு, சகல தூதர்களுடன் வருவார். (வெளி. 1:7; சகரியா 14:4,5; II தெச. 1:7-10).

இனிமேல் இவைகளைக் குறுத்தும், இதனுள் அடங்கியிருக்கும் இரகசியங்களைக் குறித்தும் அறிய வேண்டும்.

மேற்கூறிய இயேசு கிறிஸ்துவின் வருகைகளில் மனுஷர் தங்கள் ஜீவியத்திலுள்ள பரிசுத்தம், பாவம் இவைகளின் அளவின்படி, வரிசை வரிசையாய் வகுக்கப்பட்டு, வித்தியாசமான காலங்களில் உயிர்த்தெழுதலில் பங்கடைவர். அன்றியும், உயிர்த்தெழுதலின் வரிசைக்கு, அவரவர் ஜீவித்த காலம், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிரமாணம் இவைகளுங் கூடக் கணக்கிடப்பட்டு, மகிமை பலன் முதலியவை அளிக்கப்படும். ஆகவே இவ்வரிசைகளைக் குறித்து மிகக் கவனமாய் ஆராய வேண்டும்.

அதிகாரம்—2

ஏழு உயிர்த்தெழுதல்கள்

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற் பலனானார். .... அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (I கொரி. 15 : 20, 23 .

இயேசுவின் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்களென்றும், அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உயிர்த்தெழுதலின் பல வரிசைகளைக் குறித்தும், அவைகளின் வெவ்வேறான மகிமையைக் குறித்தும் (I கொரி. 15 : 35 - 49) கவனிப்போமாக.

முதலாவதாக, உயிர்த்தெழுதலை இரண்டு பெரும் பாகமாகப் பிரிக்கலாம். (1) நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருப்பார்கள். (2) தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருப்பார்கள். (யோவா 5:28-29). இதைக் குறித்து தானியேல் 12:2ல், "பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்தியநிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக, நீதிமான்களின் உயிர்த்தெழுதல் (லூக்கா 14:14) என்றும், துன்மார்க்கரின் உயிர்த்தெழுதல் என்றும் உயிர்த்தெழுதல்களில் இரண்டு பெரும் பிரிவுகள் இருக்கின்றன. நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் 6 வரிசைகளும், துன்மார்க்கரின் உயிர்த்தெழுதலில் 1 வரிசையுமாக, மொத்தம் உயிர்த்தெழுதலில் 7 வரிசைகள் உண்டு. இவைகளை 7 உயிர்த்தெழுதல்கள் என்றும் சொல்லலாம். முதல் 5 உயிர்த்தெழுதல்கள் முதலாம் உயிர்த்தெழுதல் (First resurrection) என்றும் (வெளி. 20 : 6), மேன்மையான

உயிர்த்தெழுதல் (Better resurrection) என்றும் (எபி. 11:35) சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உயிர்த்தெழுதல் மிகவும் விசேஷமானது. எப்படியெனில், "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து. அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி 20:6). இந்த மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் அநேகர் தங்களுக்கு நேரிட்ட உபத்திரவங்களிலிருந்து "விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்." (எபி. 11:35). பரிசுத்த பவுலும், தான் இந்த முதலாம் உயிர்த்தெழுதலில் எப்படியாயினும் பங்கடையத் தகுதியாகக் காணப்படவேண்டுமென்று விரும்பி, "அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" என்று சொல்லுகிறார். (பிலி. 3:10,11). இந்த முதலாம் உயிர்த்தெழுதலுக்குட்பட்ட முதல் 5 வகுப்பினரும் இப்பூமியில் இயேசுவினால் ஸ்தாபிக்கப்படும் 1000 வருட அரசாட்சிக்கு வருவார்கள். இதற்குப் பிறகு கடைசி இரண்டு வகுப்பினர் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இது பொதுவான உயிர்த்தெழுதலேயாகும். (General Resurrection). இந்த ஏழு உயிர்த்தெழுதல்களைக் குறித்துத் தனித்தனியாகக் கவனிப்போமாக.

முதல் வரிசை—கிறிஸ்து

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் **முதற்பலனானார்**" (1கொரி. 15:26). லேவியராகமம் 23-ஆம் அதிகாரத்தில் உரைக்கப்பட்ட வெள்ளாண்மை அறுப்பின் பல அம்சங்களுக்கு முதலாம் உயிர்த்தெழுதலில் அடங்கியுள்ள 5 வரிசைகளை ஒப்பிடலாம். இஸ்ரவேலர் கானான் தேசத்தில் போய்ச் சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, அவர்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரவேண்டும்.

(வெளி. 22:16). இது சரித்திரத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு ஓர் அடையாளம், [illegible] இந்தக் கதிர் [illegible]. அதேபோல "முதல் [illegible] முதல் [illegible]" (லூக். 23:19) [illegible] "முதல் [illegible]" [illegible] இயேசு [illegible], அவரிடத்தில் பாவமில்லை. (I யோவா. 3:5); அவர் பாவம் அறியவில்லை. (II கொரி. 5:21); அவர் பாவஞ்செய்யவில்லை. (I பேதுரு 2:22); ஒரு தடவை அவர் தமது சத்துருக்களைப் பார்த்து, "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்?" என்று கேட்டார். (யோவான் 8:46). அவர் பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார். (எபி. 7:26). அவர் சம்பூரணர். (மத். 5:48; எபி 2:10; 5:8, 9; 7:28) மனுஷாவதாரத்தில், அவர் தன்னைச் சீஷர்களுக்கு முன்பாக வெளிப்படுத்தினபோது அவருடைய [illegible] பரிசுத்த [illegible], [illegible] மகிமையைப் பார்க்கிலும் மேன்மையாகக் காணப்பட்டது. "அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்று அப். யோவான் கூறுகிறார். (யோவான் 1:14). இக்கருத்தை, இயேசு எல்லா விதத்திலும் பரிபூரணராக இருப்பினும், மனுஷருடைய இரட்சிப்புக்காக இவ்வுலகில் நம்மைப் போல மாம்சமான மனுஷரூப மாம்சத்தில் வெளிப்பட்டபடியினால், அவரும் பிதாவாகிய தேவனின் பரிபூரணமான சித்தத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, உபத்திரவங்களினால் பூரணப்படுத்தப்பட்டார். (எபி. 2:10; 5:8-9; பிலி 2:6-8). ஆனபடியினால் அவர் மரணத்தையும், பாதாளத்தையும், சாவையும் ஜெயித்தவராய் என்றும் நான் உயிர்த்தெழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறார் (வெளி. 1:18; பிலி 2:9-11)

அதிகாரம் 3

இரண்டாம் வரிசை - மணவாட்டி சபை

கிறிஸ்துவுக்குள் தேறினவர்கள் (கொலோ. 1:28), அல்லது கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியடைந்து பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்கள் (எபே. 4:11-13; மத். 5:48) இரண்டாவது வரிசையில் உயிர்த்தெழுவார்கள்.

கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபை இவர்களே (எபே. 5:27). பிசாசு, மாமிசம், உலகம் இம்மூன்றையும் ஜெயித்தவர்கள் இவர்களே (வெளி. 2:26; 27; 3:12, 21). வெளி. 12:5-ல் சொல்லப்பட்ட சிங்காசனத்தினிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்பிள்ளை இவர்களே.

வெளி. 12:1-5-ல் சொல்லப்பட்ட சூரியனை அணிந்த ஸ்திரீயைக் குறித்தும், சிங்காசனத்தினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்பிள்ளையைக் குறித்தும் சிலர் பலவிதமான தவறான வியாக்கியானங்கள் கூறுவதுண்டு. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்போமாக :-

ரோமன் கத்தோலிக்க வேதத்தின்படி, இந்த ஸ்திரீ, இயேசுவின் தாயாகிய கன்னிமரியாள் என்றும், ஆண்பிள்ளை, இயேசு கிறிஸ்து என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது முற்றிலும் தவறே. எப்படியெனில், இயேசு மரியாளிடத்திலிருந்து பிறந்தவுடனே வெளி. 12:5-ல் சொல்லப்பட்டபடி தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர் பிறந்து ஏறக்குறைய 33½ வருஷங்கள் இவ்வுலகில் ஜீவித்து, பிறகு சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, 40 நாளளவும், அப்போஸ்தலருக்குத் தரிசனமாகிப் பின்புதான் பிதாவாகிய தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டார். (அப்.

G.B. Sathyanesan, B.A.

1:3.9.) மேலும் ஆண் பிள்ளை சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, ஸ்திரியானவள் வனாந்தரத்திற்கு ஓடிப் போனாள் என்று வெளி. 12:6-ல் சொல்லப்பட்டிருப்பதுபோல மரியாள் இயேசு பிறந்தவுடன் எந்தவிதமான வனாந்தரத்திற்கும் ஓடிப்போகவில்லை.

ஸ்கோபீல்டு வேத புஸ்தகத்தின் வியாக்கியானத்தில் (Scofield reference Bible) சூரியனை அணிந்த இந்த ஸ்தீரி இஸ்ரவேலர்என்றும், அவள் பெற்ற ஆண்பிள்ளை, இயேசுகிறிஸ்து என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் பெரும்பிழை. எப்படியெனில் வெளி 12: 1-5-ல் சொல்லப்பட்ட ஸ்திரி, உன்னதத்தில் வசிக்கும் புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய சபையையும் அவள்பிறப்பித்த ஆண்பிள்ளை, இந்தச் சபையிலிருந்து உண்டான பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்களையும் குறிக்கிறது. இதைக் குறித்துக் கீழே விவரமாகப் பார்ப்போம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. (எபி. 7:19). அவர்களுடைய ஆசாரிய முறைமையும் குறைவுள்ளதே எபி.7:11) ஆகையினால் தான், ஏசாயா 26:18-ல், "நாங்கள் கர்ப்பமாயிருந்து வேதனைப்பட்டு, காற்றைப் பெற்றவர்களைப்போல் இருக்கிறோம்" என்று வாசிக்கிறோம்.

"அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபி. 11:40). அவர்கள் காற்றைப் பெற்றார்களேயன்றி ஆண்பிள்ளையைப் பிறப்பிக்கவில்லை. இங்கேயும், இயேசு பிறந்த பின்பு ஸ்திரீ வனாந்தரத்துக்கு ஓடிப்போனதுபோல, இஸ்ரவேலர் (யூதர்கள்) வனாந்தரத்துக்கு ஓடிப்போகவில்லை.

'Dispensational Truth by Clarence Laskin', "Halley's Bible Handbook" என்ற புத்தகங்களில் வெளி 12-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஸ்திரீ, முதல் 5 வசனம் வரை இஸ்ர

வேலரைக் காட்டுகிறதென்றும், 6 ஆம் வசனத்திலிருந்து அது சபையைக் காட்டுகிறதென்றும், இங்குக் கூறப்பட்டுள்ள ஆண் பிள்ளை, இயேசுகிறிஸ்து என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் முற்றிலும் தவறு என்பதை மேற்கூறிய காரணங்களால் அறிந்து கொள்ளலாம். அப்படியானால் அவள் யார்? அவள் தான் புதிய ஏற்பாட்டுச் சபையாகிய "அதிசய அணங்கு". இதைக் குறித்துக் கீழே விவரமாய்க் காண்போம்.

அதிசய அணங்கு

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றசபையை ஸ்திரீக்கு ஒப்பிட்டிருக்கிறது. எபே. 5:32-ல் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் உள்ள இரகசியம் பெரியது என்று காண்கிறோம். "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல" என்றும் (எபே 5:23), "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" என்றும் வாசிக்கிறோம் (எபே. 5 : 30). "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" (கொலோ. 1:18). நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும் போது, தனித்தனியே அவருடைய சரீரத்தின் அவயவமாகவும், மொத்தமாக அவருடைய சரீரமாகவும் மாறுகிறோம். "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". (I கொரி. 12:13). எனவே, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற சபையே கிறிஸ்துவின் மனைவி; அவள் அதிசயமானவளே; அவள் வாசஞ் செய்வது உன்னதங்களிலே. 'கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்' (எபே. 2:7). ஞானஸ்நானத்தில் அவரோடேகூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு (ரோம.6:4), பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றுக்கொள்ளும்போது, அவரோடேகூட எழுப்

பப்படுகிறோம். அவருடைய உயிர்த்தெழுதலில் இணைக்கப் படுகிறோம். அப்பொழுது உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரச் செய்கிறார்.

இதுவே வானத்திலே அடையாளமாய்க் காணப்பட்ட அதிசய அணங்கு; அவள் கிறிஸ்துவின் மனைவி; அவள் பூமிக்குரியவளல்ல; பரலோக சிந்தையுடையவள்; மேலானவைகளை நாடுகிறவள்; கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுகிறவள் (கொலோ. 3:1-2).

அவள் சூரியனை அணிந்திருந்தாள். சூரியனை அணிந்திருந்தது, தேவநீதியைக் காண்பிக்கிறது. சூரியன் எல்லா வான ஜோதிகளிலும் மிகப் பெரிய சுடர். அதுபோல, தேவனுடைய நீதியே எல்லா நீதியைக் காட்டிலும் பெரியது. சபையாகிய அந்த ஸ்திரீ தேவ நீதியாகிய சூரியனையே அணிந்திருந்தாள். நமது நீதியோ அழுக்கான கந்தையைப் போல் இருக்கிறது. ஆகையால்தான் தேவ நீதியைப் பரிசுத்தவான்கள் அணிந்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

நீதி என்றால் என்ன? மெய்க்கிறிஸ்தவன் தரிக்க வேண்டிய சர்வாயுதவர்க்கத்தில் "நீதியென்னும் மார்க்கவசம்" ஒன்று என்று எபே. 6:14ல் காண்கிறோம். I தெச. 5:8-ல் அதே மார்க்கவசம், "விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசம்" என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, விசுவாசமும், அன்பும் சேர்ந்து கிரியை செய்வதினால் உண்டாகும் பலனே (Product) நீதி. ஆதலால், விசுவாசத்திலும், அன்பிலும் எவ்வளவாய்ப் பெருகுகிறோமோ அவ்வளவாய் நீதியில் வளருகிறோம்.

கர்த்தருடைய நீதியே தூக்குநூல் (ஏசா. 28:17). அதைக் கொண்டே நம்மை அவர் அளந்து பார்ப்பார். ஆதலால் நீதியின் சூரியனாகிய அவருடைய நீதியை நாம் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, அந்த அளவுக்கு வளரவும் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அவள் பாதங்களின் கீழே சந்திரன் இருந்தது. சந்திரனுக்குத் தன்னில் தானே வெளிச்சம் இல்லை; சூரியனிடமிருந்து வெளிச்சத்தைப் பெற்றுப் பிரகாசிக்கின்றது. சந்திரன் பேசக் கூடுமாகில் அது, ''எனக்குள்ளே வெளிச்சம் இல்லை. சூரியனிடமிருந்தே வெளிச்சத்தைப் பெற்று ஒளிவீசுகிறேன். ஆகையால் என்னுடைய கெட்டிக்காரத்தனமல்ல; என் திறமையுமல்ல; சூரியனே என்னைப் பிரகாசிக்கச் செய்கின்றது'' என்று சூரியனைக் குறித்து ஓர் உண்மையுள்ள சாட்சியைக் கூறக் கூடியதாயிருக்கும். சங். 89-37-ல், ''சந்திரனைப்போல அது என்றென்றைக்கும் உறுதியாயும், ஆகாயமண்டலத்துச் சாட்சியைப்போல் உண்மையாயும் இருக்கும்'' என்று வாசிக்கிறோம்.

''உண்மையுள்ள சாட்சி'' கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே (வெளி. 1:5). இவர் பிதாவுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமானவர். ஆதலால், பிதாவை இருக்கிற வண்ணமாக விளங்கப்பண்ணிக் கொண்டிருந்தார். அதனாலேயே, ''என்னைக்கண்டவன் பிதாவைக் கண்டான்'' என்றார். (யோவா. 14 : 9). எனவே, ''பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது''என்று ரோம. 5:21-ல் சொல்லியிருப்பதுபோல, தேவனுடைய கிருபை நீதியின் மூலமாகவே ஆளுகை செய்யும் என்று சந்திரன் வெளிப்படுத்துகிறது. இப்படிப் பட்ட அவர் மீது சபையானது உறுதியாய் நின்று கொண்டு, அவருடைய கிருபையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. வேறு விதமாய்ச் சொன்னால், சபை கிருபை மீது நிற்கிறது.

சிரசின் மீது பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தது. ஆங்கிலத்தில் பன்னிரண்டு நட்சத்திரங்களாலான கிரீடம் (a crown of twevle stars) என்று வாசிக்கிறோம். பன்னிரண்டு நட்சத்திரங்கள் அப்போஸ்தல உபதேசத்தையும், அப்போஸ்தலப் பிரதிஷ்டையையும் காண்பிக்கிறது.

பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றிருந்தாலும், உபதேசத்திலும், பிரதிஷ்டையிலும் உறுதியாய்த் தரித்திராவிட்டால் ஜெய ஜீவியம் செய்ய முடியாது.

நட்சத்திரங்கள் சபைக்குள் பரிசுத்தாவியானவர் நடப்பிக்கும் ஆவிக்குரிய ஊழியத்தைக் குறிப்பிடும். "ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்" (தானி. 12:3). ஆகையால் இந்த சபை அநேகரை இரட்சிப்பின் அனுபவத்துக்குள் மட்டுமல்ல, தேவ நீதியை அணிந்து கொள்ளும் மேலான அனுபவத்துக்கு, அதாவது, பூரணத்துக்கு வழி நடத்துகிறது.

இப்படியாக சபையாகிய இந்த ஸ்திரீ பிதாவின் நீதியை அணிந்தவளாய், குமாரனுடைய கிருபையில் நிலைத்திருந்து, பரிசுத்தாவியினால் நிரம்பிக் கிரியை செய்து கொண்டிருக்கிறாள். கிறிஸ்துவ தேவன் இவளுக்குள்ளே வாசஞ்செய்கிறார்.

அவள் கர்ப்பவதியாயிருந்து பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள். முதலாவது அவள் கர்ப்பதியாயிருந்தாள். ஓர் ஆண்பிள்ளை அவள் கர்ப்பத்தில் உருவாயிற்று. இந்த ஸ்திரீயல்ல, அந்த ஆண்பிள்ளையே தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தேவனுடைய நீதியால் மூடப்பட்டுக் குமாரனுடைய கிருபையில் நின்று, உண்மையுள்ள சாட்சியாயிருந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திலும் அப்போஸ்தல உபதேசத்திலும் நிலை கொண்டிருந்து, ஆவியின் வரங்களாலே அலங்கரிக்கப்பட்ட சபை உன்னதத்திலே காணப்பட்டாலும் அந்தச்சபை சிங்காசனத்தினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. அந்தச் சபையிலிருந்து உருவாக்கப்பட்டதும், ஆவி, ஆத்துமா, சரீரம் முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டுக் கறை திரையொன்றுமில்லாமலும், மாசற்றதும், பழுதற்றதும், பிழையில்லாததும், கர்த்தருடைய மகிமை

யால் நிறைந்ததுமான, பூரணராக்கப்பட்ட ஒரு கூட்டம் பரிசுத்த வான்களே ஆண் பிள்ளையாம். இவர்கள் ஜெயங்கொண்ட பரிசுத் தவான்கள். பிசாசையும், உலகத்தையும், மாமிசத்தையும் மட்டு மல்ல, சுயத்தையும் ஜெயித்த ஜெயவீரர்கள்.

அந்த ஆண்பிள்ளை சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் எனப் பார்த்தோம். ஆவிக்குரிய ஜீவியத் தில், ஒவ்வொரு ஜாதியும் ஒரு குறிக்கப்பட்ட பொல்லாத சுபாவத்தை வெளிப்படுத்துகின்றது. (உ.ம்.) ஏத்தியர்-பயம்; கிர்காசியர் - பின்மாற்றம்; எமோரியர் - வீண் பேச்சு; கானானியர் தாழ்வான ஆவிக்குரிய ஜீவியம்; பெர்சியர் - பாதுகாப்பில்லாத ஜீவியம்; ஏவியர் - இச்சையான ஆசைகள்; எபூசியர் - குற்றங் கண்டுபிடிக்கும் சுபாவம்; மீதியானியர் - மாம்சம்; அமலேக்கி யர் - அதைரியம். இப்பேர்ப்பட்ட பொல்லாத சுபாவங்களை ஜெயித்தவர்களே சகல ஜாதிகளையும் ஆளுபவர்கள். சபை பலவிதமான சோதனைகள், பாடுகள், உபத்திரவங்கள் வழியாகக் கடந்து செல்ல வேண்டியதாயிருக்கிறது. தனித்தனியாகவும் ஒவ் வொருவரிலும் உள்ளான மனுஷன் (Inner man) இவ்வித ஆண் பிள்ளையாய் உருவாக்கப்படவேண்டும். அதற்காக ஒவ் வொரு தேவனுடைய பிள்ளையும் பலவிதமான சோதனைகள், கஷ்டங்கள், நிந்தைகள், பரியாசங்கள், நொறுக்குதல்கள் வழி யாகக் கடந்து சென்று கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி யடைந்து பூரண புருஷனாக வேண்டும்.

பின்பு ஸ்திரியானவள் பிரசவ வேதனையடைந்தாள். சபை யானது ஓர் ஆண் பிள்ளையை - ஜெயங்கொண்ட பரிசுத்த வான்களைப் பிறப்பிக்கும்படியாகப் பிரசவ வேதனையடைகிறது. நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான பெருமூச்சோடு கூடிய ஜெபத்தை இது குறிக்கிறது. சபைக்குள்ளே மொத்தமாகவும், தனித்தனியாகவும் பெருமூச்சோடு ஜெபிக்கிற ஜெபஜீவியம் தேவையாயிருக்கிறது. எப்படியாவது பூரணப்படவேண்டும்; ஜெயங்கொண்டவர்களாக வேண்டும், கர்த்தருடைய வருகை யில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரே பாரத்தா

லும், கவலையாலும் நிறைந்திருப்பதவசியம். அல்லும் பகலும் நான் எப்படியாவது பரிசுத்தப்பட்டால் போதும் என்று ஆவலோடு ஜீவிக்கிற ஜீவியம் தேவை.

பின்னை பெரும்படி வருத்தப்பட்டு அலறினள், ஜெயங் கொண்ட பரிசுத்தவான்கள் ஆயத்தப்பட்டதாலே, கர்த்தருடைய வருகையை ஆவலோடு எதிர் நோக்கிக்கொண்டிருப்பதே சபையின் இலட்சணம். எப்பொழுது கர்த்தர் வருவார் என்று ஏங்கி, சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து தவிக்கிற ஓர் அனுபவம் சபைக்கு அத்தியாவசியமானது.

இப்படிப் பிறக்கும் ஆண்பிள்ளையைப் பட்சிக்கும் படி வலுசர்ப்பம் ஒன்று உன்னதங்களிலே காத்துக் கொண்டிருக்கிறது. பரிசுத்த பவுல், "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்கிருர். (எபே. 6:11-12). ஆகையால் வலுசர்ப்பம் எனப்பட்ட பிசாசும் இப்பொழுது வான மண்டலங்களிலேயே இருக்கிருன். உண்மையான சபைக்குப் பிசாசுடனும், அவனுடைய தூதர்களுடனும் அனுதினமும் போராட்டம் உண்டு. கர்த்தருடைய நாளில் ஆண்பிள்ளை சிங்காசனத்தினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வரைக்கும், அதாவது ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களைக் கிறிஸ்து தமது இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளும் வரைக்கும் இந்தப் போராட்டம் நீடிக்கும்.

இந்த வலுசர்ப்பத்துக்கு ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் உண்டு. ஏதேன் தோட்டத்தினுள் புகுந்து, ஆதாம் ஏவாளை வஞ்சித்த சர்ப்பம் இதுவே இதற்கு உலகம் உண்டானது முதல் நடந்த சகலமும் தெரியுமாதலால் அனுபவ

சாலி; தந்திரசாலியுங்கூட; வல்லமையும் உண்டு. இப்பிரபஞ்சத்தின் தேவனாக இருப்பதால் கிரீடாதிபதியாய்க் காணப்பட்டான்.

இந்த வலுசர்ப்பம் தன் வாலினாலே வானத்து நட்சத்திரங்களிலே மூன்றிலொரு பங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று. நட்சத்திரங்கள் என்பது அநேகரை நீதிக்குட்படுத்துகிற தேவனுடைய ஜனங்களே (தானி. 12 : 3). ஆவிக்குரிய உலகில் நட்சத்திரங்கள்போல் மின்னிக்கொண்டிருக்கிற பரிசுத்தவான்களைத் தந்திரமாய் வஞ்சித்து, கீழே விழத்தள்ளுவதே இந்த வலுசர்ப்பத்தின் வாஞ்சை. அதனாலேயே இந்நாட்களில் நட்சத்திரங்களைப்போல் பிரகாசித்து, கர்த்தருக்கென்று கிரியை செய்து கொண்டிருக்கிற பரிசுத்தவான்களில் பலர் தங்கள் ஜெய ஜீவியத்தை நஷ்டப்படுத்துவதாலும், தங்கள் ஆதி அன்பை இழந்து போவதாலும், ஆதிப் பிரதிஷ்டையை விட்டு விடுவதாலும் பிசாசின் வஞ்சனையில் சிக்குண்டு விழுந்து போகின்றனர். பின்மாறி இருளடைகின்றனர். வேறு சிலர் மார்க்கந்தப்பின நட்சத்திரங்களாய்த் தங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் மறந்துவிட்டுத் தங்கள் இஷ்டம்போல் நடந்து கர்த்தரைப் பிரியப்படுத்தலாமென்று எண்ணுகின்றனர். இந்த இரண்டு கூட்டத்தாரும் வலுசர்ப்பத்தின் வாலினால் தாக்கப்பட்டவர்களே.

அருமையான நண்பர்களே! அதிசய அணங்கின் ஆண்பிள்ளையாகும்படி நீங்கள் மனந்திரும்பி, ஞானஸ்நானத்துக்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்று, அப்போஸ்தல உபதேசத்திலும், ஐக்கியத்திலும் நிலைத்திருந்து, ஜெயங்கொண்டவர்களாய் மாறும்படி, கர்த்தருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

இயேசுவின் இரண்டாம் வருகையின் முதல் பகுதி–அதாவது: அவர் திருடனைப்போல் வரும் இந்த வருகை, ''இரகசிய வருகை'' என்று கூறப்படக் காரணமென்ன?

இந்த வருகை எதிர்பாராத வேளையில் இருப்பதாலும் (மத். 24:4 - 51), எல்லோரும் இதை அறிந்து கொள்ளக்கூடாமலிருப்பதாலும் (I கொரி. 15:51), இது "இரகசிய வருகை" என்று கூறப்படுகிறது இதைக் குறித்து, I தெச. 4:16ல், "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்" என்று சொல்லப்பட்டிருந்தாலும், இந்தத் தொனியை அவரது வருகைக்குத் தகுதியாக இருப்பவர்களைத் தவிர மற்றவர்கள் கேட்க மாட்டார்கள். உதாரணமாக, கர்த்தர், பவுலை முதலாவது வழியில் சந்தித்தபோது; "சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? ...... முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" என்று அவனுடனே பேசினார். இதைச் சவுல் மாத்திரம் கேட்டானேயொழிய இந்தச் சத்தத்தையோ, அல்லது வார்த்தைகளையோ அவனுடனே கூட இருந்தவர்கள் கேட்க முடியவில்லை (அப்.9:7:22:9:26:14). அதேவிதமாக, இயேசு ஒரு தடவை. "பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்றார். அப்பொழுது "மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்" என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கு நின்று கொண்டிருந்து அதைக் கேட்ட ஜனங்கள், "இடி முழக்கமுண்டாயிற்று" என்றார்கள். வேறு சிலர்: "தேவதூதன் அவருடனே பேசினான்" என்றார்கள் (யோவா. 12:28.29). இவ்விதமாகவே இயேசுவின் இரகசிய வருகையானது எல்லாருக்கும் வெளிப்படாமல், அதற்கென்று ஆயத்தமாக, தகுதியாக, விழிப்பாக, ஆவலாகக் காத்துக் கொண்டிருக்கும் பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு மாத்திரமே வெளிப்படும். இவர்களுக்கு ஒப்பனையாக, லேவி.23:15-17-ல் இஸ்ரவேலர் மெல்லிய மாவிலே, புளிப்பாகப் பாகம்பண்ணப்பட்ட இரண்டு அப்பங்களைக் கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டபோது, இவ்வுலகில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபை ஸ்தாபிக்கப்பட்டது. (கொலோ 1:18; I கொரி.12:13.) அந்நாள்

G.B. Sathyanesan, B.

முதற்கொண்டு இதுவரைக் கர்த்தர், காத்துக்கொண்டிருக்கும் தேவமக்களுக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கொடுக்கிறார். ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற (ரோமர் 8:23) இவர்கள், புளிப்பாகப் பாகம் பண்ணப்பட்ட அந்த இரண்டு அப்பங்களைப் போல கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும். 'புளிப்பு' என்பது பரிசுத்தாவியினால் உண்டாகும் பரிசுத்தத்தை, அல்லது மறுரூபமாகுதலைக் காட்டுகிறது. இதைக் குறித்து இயேசு, "பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும் மூன்றுபடிமாவிலே அடக்கி வைத்தாள் என்றார்." (மத். 13: 33). எவ்விதம் கொஞ்சம் புளித்தமாவு, மா முழுவதையும் புளிப்பாக்கி, அதனுடைய தோற்றம், அளவு, ருசி, வாசனை முதலியவற்றை மாற்றி விடுகிறதோ, அவ்விதமாகவே பரி. ஆவியைப் பெற்று, ஆவியினால் பரிசுத்தமாக்கப்படும் போது, நமது நடை, உடை, பாவனை, ருசி, ஆசை நோக்கங்கள், எண்ணங்கள், சுபாவங்கள் யாவும் மாற்றப்பட்டு 'மூன்றுபடி' யாகிய நமது ஆவி ஆத்துமா, சரீரம் மூன்றும் முற்றிலுமாகப் பரிசுத்தமடைந்து கர்த்தருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாக்கப்படுகிறோம். (I தெச. 5:23; ரோமர் 15:15; II கொரி. 3: 18)

லேவியராகமம் 23:17-ல் சொல்லப்பட்ட இரண்டு அப்பங்கள் எதைக் குறிக்கின்றன? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் உண்டாகும் ஆவிக்குரிய சரீரமாகிய சபையில் உண்டாகும் இரண்டு விதமான கூட்டத்தாரை இவ்விரண்டு அப்பங்களும் குறிக்கின்றன. ஒன்று விசுவாசிகள்; மற்றது ஊழியக்காரர்கள்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எவ்விதம் இஸ்ரவேலர் எல்லாரும் சபையாராகவும், அவர்களில் லேவியர் மாத்திரம் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும் ஊழியர்களாகவும் பிரித்தெடுக்கப்பட்டார்களோ, அவ்விதமாகவே, புதிய ஏற்பாட்டுச் சபையிலும், கர்த்தர் பரி. ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களில் சிலரைத் தமது ஊழியத்துக்கென்று பிரித்தெடுக்

கிறார். 12 அப்போஸ்தலர்களையும், பின்பு 70 சீஷர்களையும், பரி. பவுல் முதலியோரையும் அன்று தெரிந்தெடுத்ததுபோல, இன்றைக்கும் சுவிசேஷ ஊழியத்துக்கென்று வித்தியாசமாகப் பிரித்தெடுக்கிறார் (ரோம. 1:1; லூக். 6:13-16; 10:1). "ஆரோனைப்போலத் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை" (எபி. 5:4). மற்றவர்கள் பரிசுத்த ஆவியைப்பெற்று, விசுவாசிகளாக இருக்கிறார்கள். இதை விளக்கவே பரி. பவுல் கொரிந்து சபையாருக்கு, "நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனுடைய பண்ணையும், மாளிகையுமாயிருக்கிறீர்கள்" என்று எழுதுகிறார். (I கொரி. 3:9). இந்த இரண்டு கூட்டத்தாரும் தங்கள் அழைப்பிலே பூரணப்படின் இயேசுவின் இரசிய வருகையில் மணவாட்டி சபையாக எடுத்துக் கொள்ளப்படுவார்கள். நித்தியத்தில் பூரணப்பட்ட விசுவாசிகள் புதிய எருசலேமாகவும் (கலா. 4:26; வெளி. 21:2, 10). பூரணப்பட்ட ஊழியர்கள் சீயோனாகவும் (வெளி. 14:1-5,22:4) இருப்பார்கள். இதை விளக்கும்படி எபிரேயர் 12:22-24ல், "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும்,......... வந்து சேர்ந்தீர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரலோக இராஜ்யத்தினிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்ட உண்மையான ஊழியர்களுக்கு விசேஷித்த இடமும், கீர்த்தியும் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை ஏசாயா 56 3-7ல் காண்கிறோம். "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை" (II பேது. 1:10).

மணவாட்டி சபையை எடுத்துக்கொள்ளும்படி இயேசு வரும்போது: "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட

ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்'' என்று பரி. பவுல், I தெ. 4:16-17-ல் கூறுகிறார். இங்கு "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்'' என்று பரி. பவுல் சொல்லும்போது, அவர்கள் I கொரி. 3:1-3ல் சொல்லப்பட்ட "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக'' இருக்க முடியுமா? முடியாது. ஏனெனில் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக எண்ணப்பட்ட இவர்களிடத்தில் பரிசுத்தமாக்கப் படாத சுபாவங்களாகிய பொறாமையும், வாக்குவாதமும், பேதகங்களும் காணப்பட்டன. அவர்கள் உள்ளான பெலனற்றவர்களாக, மாம்சத்துக்குரியவர்களாயிருந்து, மனுஷ மார்க்கமாய் நடந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய இரகசிய வருகையில் எப்படி போக முடியும்? ஆகையால் "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்'' என்று பரி பவுல் சொல்லும்போது, அவர்கள் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்'' அல்ல; ஆனால் அவர்கள் "கிறிஸ்துவுக்குள் தேறினவர்களேயாவர்.''

லேவி. 23:17-ல் கண்டபடி, எப்படி இரண்டு அப்பங்கள் ஆயத்தமாக்கப்பட்டுக் கர்த்தருக்கென்று முதற்பலனாகக் கொண்டு வரப்பட்டனவோ, அவ்விதமாக ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் இயேசுவின் இரகசிய வருகைக்குத் தங்களை ஆயத்தப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். இரவிலே திருடன் இரகசியமாக எதிர்பாரத நேரத்தில் விலையேறப்பெற்ற சம்பத்தை அல்லது ஆபரணத்தைத் (precious jewels) (மல். 3.17-18) திருடிக்கொண்டுபோக வருவது போல, இயேசுவும் பரிசுத்தாவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு தமது வருகைக்கு ஆவலோடுக் காத்துக்கொண்டிருக்கும் பரிசுத்தவான்களுக்காக மாத்திரம் வருவார். (ரோமர் 15:15; I தெச. 5:2; எபி. 9:28). நாம் அவருடைய பார்வையில் விலையேறப் பெற்ற ஆபரணத்தைப் போல் காணப்படவேண்டுமாயின், நாம் முற்றிலுமாகப் பரிசுத்தமடைவதுடன் மல். 3:18-ல் காண்கிறபடி, இயேசுவுக்கென்று ஊழியக்காரரும், விசுவாசிகளுங்கூட தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின்படி ஊழியஞ் செய்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். எபி. 9:28-ல், "தமக்காகக்

காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு" தரிசனமாவார் என்று வாசிக்கிறோம். "காத்துக்கொண்டிருக்கிறவர்கள்" என்ற பதம் கிரேக்க பாஷையில், "ஆவலோடு காத்துக்கொண்டிருக்கிறவர்கள்" எனப் பொருள்படும். இயேசுவின் வருகைக்கு ஆவலோடு காத்துக்கொண்டிருக்க வேண்டுமாயின், பூமிக்குரிய பற்றற்றவர்களாயிருக்க வேண்டும். "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (லூக்.12:34) என்று இயேசு சொன்னார். ஆகையால் நமது இருதயத்தின் வாஞ்சையும், விருப்பமும் பரலோகத்தில் இருக்கும்படியாக, நமது பொக்கிஷத்தைப் பரலோகத்தில் சம்பாதித்து வைக்க வேண்டும். (கொலோ. 3:1-2).

அதை எவ்விதம் செய்வது? நாம் பூமியின் ஆஸ்திகளை இயேசுவுக்காக எவ்வளவு வெறுத்து விட்டு விடுகிறோமோ, அவ்வளவு பரலோகத்தில் நமக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். "இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?" என்று கேட்ட வாலிபனை நோக்கி இயேசு, "நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய் உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றி வா" என்றார். (மத். 19:20-21). இதை அறிந்துதான் ஆதி காலங்களில் விசுவாசிகள் பரலோகத்தில் அதிக மேன்மையும், நிலையுள்ளதுமான சுதந்தரம் தங்களுக்குக் கிடைக்குமென்று நம்பித் தங்கள் ஆஸ்திகளைச் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தார்கள். (எபி. 10:34). இதைத் தவிர நாம் இயேசுவுக்காகப் பலவிதமான நற்கிரியைகள் செய்வோமாயின், அவைகள் ஒவ்வொன்றுக்கும் பிரதிபலன் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 10:41-42; லூக். 6:35; 14:12-14; I கொரி. 15:58). மேலும் இயேசுவின் நிமித்தமாக நாம் பாடுகள், நிந்தைகள், அவமானங்கள் முதலிய சோதனைகளை அனுபவிக்கும் போதும் பரலோகத்தில் நமது பலன் மிகுதியாயிருக்கும். (லூக்கா 6:22-23).

மேலும், "இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை (Precious fruit) அடைய வேண்டுமென்று, முன்மாரியும் பின் மாரியும் வருமளவும் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்" என்று யாக்கோபு 5:7-ல் வாசிக்கிறோம். ஆகையால் தேவனுடைய பார்வையில் நாம் "நற்பலனாக" அல்லது "விலையேறப் பெற்ற கனியாகக்" காணப்பட வேண்டுமாயின் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றுக் கொண்டால் மாத்திரம்போதாது; மறுபடியும் மறுபடியும் காத்திருந்து ஆவியின் புதிய நிறைவைப்பெற்றுக் கொள்ள வேண்டும் (எபே. 5.18). தேவன் இயேசு கிறிஸ்து மூலமாய்க் காத்திருக்கும் தம்முடைய பிள்ளைகளுக்குப் பரிசுத்தாவியைச் சம்பூரணமாய்ப் பொழிந்து, அவர்களை அதனால் புதிதாக்குகிறார். (ஏசா. 40:31; தீத்து 3:5-7). "தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும்". (எபி. 6:7) நாம் ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே இயேசுவின் சாயலுக்கொப்பாக மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபமாக்கப்பட முடியும். ஆவியினால் நிறைந்திருப்போமாகில், லூக்கா 21:34-36-ல் கட்டளையிடப்பட்டிருப்பது போல, இனி வரப்போகும் உபத்திரவக் காலத்துக்குத் தப்புவிக்கப்பட்டு, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு **எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்கக் கூடியவர்களாவோம்.** ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சிபெற்று அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு, ஆவிக்குரிய வரங்கள் அல்லது ஞான வரங்கள் அவசியமாயிருக்கின்றன. கொரிந்திய சபையார் யாதொருவரத்திலும் குறைவில்லாதவர்களாய் இயேசுவின் வருகைக்குக் காத்திருந்தார்கள் என்று I கொரி. 1:7-ல் வாசிக்கிறோம். பக்திவிருத்தியடைந்து முன்னேறிப் போவதற்கு, "ஞான வரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" என்று பரி. பவுல் சொல்லுகிறார். (I கொரி. 14 : 1) ஆகவே வரங்கள் மிக அவசியம் ஆனால் இயேசுவின் வருகைக்குப் போக வேண்டுமென்ற வாஞ்சையோடு ஜீவிக்கா

விடில் இந்த வரங்கள் நம்மைப் பெருமையுள்ளவர்களும், சுய நலமுள்ளவர்களுமாக்கி முடிவில் நாசத்துக்குக் கொண்டுபோய் விடும். இது சம்பந்தமாக இயேசு மத்தேயு 7:22-23ல் சொல்லிய வசனங்களைக் கவனிக்கவும். கொரிந்திய சபையார் ஆவிக்குரிய வரங்களைப் பெற்றவர்களாயிருந்தாலும், அவர்களைக் குறித்து பரி. பவுல்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் **குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி** முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்" என்று சொல்லுகிறார். (I கொரி. 1:8) ஆகையால். இயேசுவின் இரகசிய வருகையைக் குறித்து வேதத்தில் சொல்லப்படும்போதெல்லாம் பூரண பரிசுத்தம் அவசியம் என்பது வலியுறுத்தப் பட்டிருக்கிறது. உதாரணமாக பின்வரும் வசனங்களை வாசித்துப் பார்க்கவும். I தெச. 5:23; 3:12-13; பிலி. 1:11; 2:14 - 16; I கொரி. 1:7-8; II கொரி. 11:2. "ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (IIபேதுரு3:14).

அதிகாரம் 4

"என் பிரியமே!"

முதற்பலனகக் கர்த்தருடைய வருகையில் ஒரு நிமிஷத்திலே ஓர் இமைப்பொழுதிலே நாம் மறுரூபமாக்கப்பட்டு அவருடன் மேகங்களில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமாயின் நாம் எவ்வாறு ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று பொதுவாகப் பார்த்தோம். ஆனல் இது மிக முக்கியமானதும், நித்திய காலத்துக்குரியதும், என்றென்றைக்கும் நிலைநிற்பதுமான காரியமானபடியால், இன்னும் ஒன்று இரண்டு காரியங்களை விரிவாய் அறிந்துகொள்ள வேண்டும்.

முதலாவதாக, வெளி. 19 : 7 - ல், "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்" என்று வரையப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இவள் முதலாவது மனைவியாக இருந்து பின்பு மணவாட்டியாக மாறுகிறாள். (வெளி. 21:9) இது இயற்கை ஒழுங்கிற்கு மாறாக இருப்பதால் சிலர் ஆச்சரியப்படக்கூடும். ஆம்! கிறிஸ்தவ ஜீவியமுள்ள கிறிஸ்துவின் மணவாட்டி ஆச்சரியப்படுதற்குரியவளே! இதைக் காண்பிக்க வெளி. 12:1-ல் வானத்தில் ஓர் அடையாளம், அதாவது அதிசயம் (Wonder, Marvel-wey-tra) காணப்பட்டது என்று வாசிக்கிறோம். அன்றியும், "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே உட்காரவும் செய்தார்" என்று எபே. 2:7-ல் காண்கிறோம். இவ்விதம் வானத்தில், அதாவது, உன்னதத்தில் இருந்து ஆச்சரியமான ஜீவியம் செய்ய வேண்டும்.

முதலாவதாக, மனைவி பயமும், வெட்கமும் இன்றித் தன் கணவனை நேசிக்கிறாள். இவ்விதம் நாம் நம் ஆத்ம மணவாளனின் அன்பினால் நெருக்கப்பட்டுப் "பூரண அன்பு, பயத்தைப் புறம்பே தள்ளும்" (I யோவான் 4:18) என்பதற்கிணங்க, எந்த விதமான பயமுமின்றி அவரை நேசிக்க வேண்டும். இவ்விதமான மனைவியின் ஆவியை உடைய ஒருவரை யோவான் 20:15-ல் பார்க்கிறோம். மரியாள் இயேசுவைத் தேடிக் கல்லறைக்கு வந்து அவரைக் காணாதபடியால், தோட்டக்காரராகத் தோன்றியவரிடம் 'அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுவேன்" ("I will take him away") என்கிறாள். ஆ!! எவ்வளவு புத்தியீனமாக ஓர் ஸ்திரீ பேசுகிறாள்! முதலாவதாகப், பிணம் பாரமாயிருக்குமே! தன்னால் சுமக்கமுடியாதே என்ற பயம் அவளிடம் இல்லை. இரண்டாவதாக, ஓர் அந்நிய

வாலிபனைத் தான் தூக்கினால் உலகம் தன்னை எவ்வளவாய் நிந்திக்கும் என்ற எண்ணமும் வெட்கமும் அவளிடம் இல்லை. ஆனால் இவளோ இவைகள் யாவற்றையும் மறந்து, இயேசுவை முழுவதுமாய் நேசித்து, ஒரு மனைவியின் குணங் களை வெளிப்படுத்துகிறாள்.

அன்றியும் "விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங் கூட வரும்போது வெட்கப்படுவார்" என்று (மாற். 8:38) இயேசு சொல்லுவதால், வெட்கப்படுகிறவர்கள் நிச்சயமாய் அவர் வருகையில் எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்று அறிகிறோம். ஒரு மனைவி தன் புருஷனுடன் எச்சமயத்திலும் எவ்விடத்திற்கும் செல்ல வெட்கப்படமாட்டாள். ஆகவே, கிறிஸ்துவின் மணவாட்டி முதலாவது மனைவியாயிருக்கிறாள்.

இரண்டாவதாக, மனைவி புருஷனுக்காகச் சந்தோஷத் தோடு பாடுபடுகிறாள். ஆகையால் தான் அப்போஸ்தலர் அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடையப் பாத்திரராக எண்ணப்பட்டபடியால் சந்தோஷத்தோடு ஆலோசனை சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போனார்கள் (அப். 5:41). பரி. பவுல், "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப் படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோ, பட்டயமோ? .... உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டி யானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்று ரோமர் 8:35-39-ல் சொல்லு கிறார். அவர் கஷ்டங்களைக் குறித்து மேன்மை பாராட்டி (ரோம. 5:4), பரிபூரண சந்தோஷமடைந்து (II கொரி. 7:4), அவை

களில் பிரியப்பட்டார். (II கொரி. 12:10). இதுவே உத்தம மனைவியின் சுபாவம்.

மூன்றாவதாக, மனைவி பிள்ளை பெறுகிறாள். பரி. பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளை, "கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்" (I கொரி. 4:15) என்கிறார். இவ்விதமாக ஆவிக்குரிய பிள்ளைகளைப் பிறப்பிக்கிறது. அல்லது ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதைக் குறிப்பிடும் பொருட்டாகவே, "பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்து பாடு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்த சத்தமிடு; வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்கிறார்" என்று ஏசா. 54:1-ல் பார்க்கிறோம். இவ்விதம் பிள்ளைப் பேற்றிற்கு முதலாவது அறைவீட்டைப் பூட்டுவது போல், சுவிசேஷத்தினால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த, அறைவீட்டைப் பூட்டிப் போராடி ஜெபிக்கும் ஜெபம் மிக அவசியம் (மத். 6:6).

இவ்விதமாகத் தேவஜனம் உத்தம மனைவியாக ஜீவித்த பின்பு மணவாட்டியாக மாறுகிறாள். மணவாட்டியின் நிலையில் அவள் சந்தோஷப்பட்டுக் களிகூரும் இடத்தில் இருக்கிறாள். மனைவியின் நிலையில் அப்படி இல்லை. உலகப் பிரகாரமாய் மணவாட்டி ஒருநாள் சிறிது நேரம் மணவாட்டியாகச் சந்தோஷப் பட்டுக் களிகூர்ந்து, பின்பு மனைவியாகிப் பல கவலைகள், பாடுகளுக்குள்ளாகிறாள். ஆனால் கிறிஸ்துவுக்கு உத்தம மனைவியாக இப்போது ஜீவித்துப் பின்பு கிறிஸ்துவின் மணவாட்டியாக மாறுகின்றவளோ, என்றென்றைக்கும் மணவாட்டியாய் இருந்து சந்தோஷப்பட்டுக் களிகூருகிறாள். இவ்விதமாய் நாம் நித்தியமாய்ச் சந்தோஷப்பட்டுக் களிகூரும் பொருட்டாகவே இப்போது உத்தம மனைவியின் சுபாவங்கள் உள்ளவர்களாக இருக்கத் தேவன் எதிர்பார்க்கிறார். ஆ! என்ன பாக்கியம்! தேவ ஒழுங்கு பைத்தியம் போல் தோன்றினாலும் எவ்வளவு ஆச்சரியமும் பூரணமுமானது!

மணவாட்டிக்குக் கொடுக்கப்பட்ட வஸ்திரங்கள் கைகளினுல் செய்யப்பட்டவைகள் அல்ல; நித்தியத்தில் நம் சுபாவங்கள் வஸ்திரங்களாக மாறுகின்றன. ஆகையால்தான் துதியை உடையென்றும். இரட்சிப்பை வஸ்திரம் என்றும், நீதியைச் சால்வை என்றும் ஏசா. 61:3, 10-ல் காண்கிறோம். பொதுவாக இவ்விதச் சுபாவங்கள் யாவற்றையும் சேர்த்து அவளுக்குக் கொடுக்கப்பட்ட வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதி என்றழைக்கப்பட்டிருக்கிறது. வெளி. 19:8 இந்தச் சுபாவம் உள்ளவர்களுடைய கிரியைகளுங்கூட நீதியாகவே இருக்கும். தமிழில் "பரிசுத்தவான்களின் நீதியே" என்று எழுதப்பட்டிருப்பதற்கு மலையாள மொழி பெயர்ப்பிலும், Weymouth மொழி பெயர்ப்பிலும் "பரிசுத்தவான்களின் நீதியின் கிரியைகளே" என்று மொழி பெயர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆகவே மனதில் மாத்திரம் நீதி இருந்தால் போதாது. சகல கிரியைகளிலும் நீதி இருக்க வேண்டும். அன்றியும் இந்த வஸ்திரத்தில் மூன்று தன்மைகள் இருக்கின்றதைக் காண்கிறோம். **முதலாவதாகச் சுத்தம் :-** மனுஷனுடைய சுயநீதி அழுக்கான கந்தை என்று ஏசா. 64:6-ல் பார்க்கிறோம். கந்தை சோதனைக்கு நில்லாததுபோலச் சுயநீதியும் சோதனைக்கு நில்லாது. அன்றியும் மனுஷ நீதி அழுக்கானது. இவ்வஸ்திரத்தைக் களைந்து போட்டு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்திக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக இவ்வஸ்திரம் பிரகாசமுள்ளது என்று வாசிக்கிறோம். இயேசு மறுரூப மலையில் இருந்தபோது அவருடைய வஸ்திரம் பிரகாசித்தது என்றும், மோசே மலையில் தேவனுடன் பேசிக்கொண்டிருந்தபடியினுல் அவன் முகம் பிரகாசம் அடைந்தது என்றும் பார்க்கிறோம். இது பரிசுத்தவான்களின் ஜெப ஜீவியத்தைக் காட்டுகிறது. இவ்விதமாய் நாம் ஜெப ஜீவியத்தில் வளர, வளர நம் இரட்சிப்பின் வஸ்திரத்தின் பிரகாசம் வளர்ந்துகொண்டே வரும். மணவாட்டியின் வஸ்திரம் நிச்சயமாகவே பிரகாசமுள்ளதாய் இருக்க வேண்டும்.

இவ்விதம் ஜெபத்தால் பிரகாசமடைந்தவர்களே கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இதை உறுதிப் படுத்தும் பொருட்டாகவே இயேசு, "மனுஷகுமாரனுக்கு முன் பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழு தும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" என்ருர் (லூக். 21:36), ஆகவே ஜெபஜீவியம் இல்லாவிட்டால் கர்த்தருடைய வரு கையில் எடுத்துக் கொள்ளப்படமாட்டோம் என்பதை மறக்க வேண்டாம்.

மூன்ருவதாக, மெல்லிய வஸ்திரம் :- ஒருவர் மெல்லிய வஸ்திரம் தரித்திருந்தால், அவரையும் அவருடன் சேர்ந்திருப் பவர்களையும் அது உறுத்தாது அல்லது குத்தாது இருக்கும். இவ்விதமாய் ஆவிக்குரிய ஜீவியத்தில் முதலாவது தங்கள் இருதயத்தில் எவ்வித உறுத்தலும் இல்லாமல் இருக்க வேண் டும். சில தடவைகளில் நாம் செய்தது ஏதாயினும் ஒரு காரியத்தில் மற்றவர்கள் நம்மைக் குறித்து எவ்வளவு நற்சாட்சி கொடுத்தாலும், நம் இருதயத்தில் செய்தது "சரியல்ல" என்ற உணர்வு எழுமாயின், இது மெல்லிய வஸ்திரம் அன்று. ஆக வே நம்முடைய இருதயம் நம்மைக் குற்றப்படுத்தாத (I யோவா. 3 : 20, 21) ஜீவியம் வேண்டும். "நான் உயிரோடிருக்குமளவும் என் இருதயம் என்னை நிந்திக் காது" என்று யோபு (27 : 6) சொல்லுகிருர். ஆகையால் தான் கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப் படுகிறவர்கள் "கண்டிக்கப்படாதவர்களாக" இருக்கவேண்டும். தங்களுக்குள் கண்டிக்கப்படாதவர்களாக மாத்திரம் அல்ல, மற்ற வர்களும் இவ் வஸ்திரத்தைத் தொடும்போது உறுத்தாத மெல் லிய வஸ்திரமாக இருக்க வேண்டும். அதாவது இடறலற்ற ஜீவி யம் தேவை. "தேவன் என் இருதயத்தைப் பார்க்கிருர். யார் எப்படியும் நினைக்கட்டும்" என்று சொல்லி ஜீவியத்தில் மற்றவர் களுக்கு இடறல் உண்டாக்கும் சில தேவனுடைய பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் மெல்லிய வஸ்திரம் தரித்தவர்கள் அல்லர். ஆனுல் உத்தம பரிசுத்தர் அப்படிப்பட்டவர் அல்லர். ஆகவே பரிசுத்த பவுல், "இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும்

நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்'' என்று அப். 23:1ல் கூறி முடித்துவிடாது, அப். 24:16-ல் ''நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சி உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்'' என்கிறார். இவ்விதம் ஜீவிக்கப் பிரயாசப்பட்டவர் தம் பிரயாசத்தில் வெற்றி பெற்றுத் ''தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்'' என்கிறார் (II கொரி. 4:2). அது மாத்திரமல்ல, மாமிசம் புசிப்பது பாவமில்லாததாயிருந்தாலும் வேறொருவன் இடறுவானானால் தான் புசியாதிருப்பேன் என்றும் தீர்மானித்துக் கொண்டு வஸ்திரத்தை மெல்லியதாக்கிக் கொண்டார். நம் அருமை மீட்பராகிய இயேசுவும், ''அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்'' என்று யோவான் 17:19-ல் கூறியதும் இதைக் காட்டுகிறது. ரோமச் சபையார் இடறுதலற்ற ஜீவியம் செய்யும்படி தீர்மானிக்கக் கட்டளையிட்ட (ரோம. 14:13) ஆவியானவர், நாமும் அவ்விதம் செய்து நம் வஸ்திரத்தை மெல்லியதாக்கிக் கொள்ளும்படி ஏவுகிறார்.

மணவாளனாகிய இயேசுவுக்கும், மணவாட்டியாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தையும் சம்பாஷணையையும் உன்னதப்பாட்டில் காணலாம். இவைகள் யாவற்றையும் ஆராய்ந்து எழுதினால் இடம் போதாது. ஆகவே முக்கியமாக மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் உள்ள பொதுப் பெயரையும், அப்பெயர் வரக் காரணத்தையும் ஆராய்வது பிரயோஜனமாயிருக்கும்.

உன்னதப்பாட்டு முழுவதையும் ஆராயும்போது, மணவாட்டியைப் ''பிரியமே!'' என்று மணவாளன் அழைப்பதைக் கவனிக்கலாம். இவ்வாறு மணவாட்டியை அழைப்பதற்குக் காரணம், அவள் எப்போதும் மணவாளனுக்குப் பிரியமானதைச் செய்து கொண்டிருந்ததேயாகும். தெருவில் கத்தரிக்காய்க் கொண்டு போகும் ஒரு ஸ்திரீயின் பெயர் ''வள்ளி'' என்றிருக்கலாம். ஆனால் நாம் அவள் பெயரை அறிய முயற்சி செய்யாமல், அவளிடம் கத்தரிக்காய் இருக்கிறபடியால் அவளை, ''ஏ! கத்தரிக்

காய்'' என்று கூப்பிடுகிறோம். அவளும் அதனால் வருத்தப் பட்டுக் கொள்ளாமல் சந்தோஷமாய் வருகிறாள். இவ்விதமாய் மணவாட்டி மணவாளனுக்குப் பிரியமான சுபாவம் உடையவளாயிருக்கிறபடியால் அவளுக்குப் ''பிரியமே'' என்னும் பெயர் வந்தது.

நாம் ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில் தேவ சித்தம் செய்யப் பழகுகிறோம். இயேசுவின் ஜீவியத்தை யோவான் சுவிசேஷம் மூலமாக அறியும்போது முதலாவதாக தேவசித்தம் செய்து வந்ததாக அறிகிறோம்.(யோவா. 4:34; 6:38; 5:19,30). இதன் பின்பு, அவர் பிதாவுக்குப் பிரியமானவைகளை எப்போதும் செய்ததாக யோவான் 8:29-ல் பார்க்கிறோம். அன்றியும் இயேசு, மனுஷனாகிய யோவானுடைய கையினால் ஞானஸ்நானம் பற்றுத் தம் தாழ்மையை வெளிப்படுத்தினது மாத்திரமல்ல, தேவனுடைய நீதியையும் வெளிப்படுத்தினார். இதைப் பார்த்த பிதா,''இவரில் பிரியமாய்'' இருக்கிறேன் என்று சாட்சி கொடுத்தது, இயேசு பிதாவுக்குப் பிரியமானதைச் செய்தார் என்பதை வெளிப்படுத்துகிறது ''இவரில் பிரியமாயிருக்கிறேன்'' என்று மறுபடியும் பிதா சாட்சி கொடுத்ததை மறுரூப மலையிலும் (மத். 17:5) காண்கிறோம். இவ்விதம் மணவாட்டிக்குப் 'பிரியமே' என்னும் பெயர் இருப்பதுபோல, மணவாளனுக்கும் இருப்பதை, ''என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே'' (ஏசா. 42:1) என்பதிலிருந்து அறிகிறோம்.

இயேசு தாமே, ''தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்'' என்றும், ''என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்'' என்றும் கூறுகிறார்.(எபி. 10:7; சங். 40:8) இங்கு இரண்டு காரியங்களை கவனிக்கிறோம் ஒன்று சித்தத்தைச் செய்வது. சித்தம் என்பது பிரமாணத்தை நிறைவேற்றுவதாகும். மற்றொன்று உள்ளத்தில் உள்ளதைச் செய்வது. இது பிரமாணமாய்க் கொடுக்கப்பட்டதன்று. உள்ளத்தில் இருப்பதை யோசித்து அறிந்து செய்யும் கிரியை அது பிரமாணம் அல்லது பொது ஒழுங்காக செய்வ

தன்று. மற்றவர்கள் உள்ளத்திற்கு சந்தோஷம் அல்லது பிரியம் உண்டாகும்படிச் செய்வதாகும். இதை இன்னமும் சிறிது விரிவாக ஆராய்வது அவசியமாகும்.

ஒருவன் "தாகமாயிருக்கிறேன்" என்றால் அவனுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டியது ஒழுங்கு, பிரமாணம் அல்லது சித்தமாகும். ஆனால் நமக்கு மிகவும் அன்பானவரும், கனத்துக்குரியவருமாகிய ஒருவர் "தாகமாயிருக்கிறேன்" என்றால், தண்ணீர் கொடாமல் இளநீர் கொடுக்கலாமா அல்லது சர்பத் கொடுப்பதா என்று யோசித்து இவைகளில் அவருக்குப் பிரியமாயிருக்கும் ஒன்றைக் கொடுப்போம். அவ்விதமே பசியாய் இருக்கும் ஒருவனுக்கு அப்போது நம் வீட்டில் இருக்கும் பதார்த்தத்தைக் கொடுத்துப் பசி ஆற்றுவது சித்தமாகும். ஆனால் அன்புக்கும் கனத்துக்கும் உரிய ஒருவருக்கு அவ்விதம் செய்யாது அவருக்கு விருப்பமான சுவையுடன் உணவு தயாரித்து அவர் பிரியப்படத்தக்க விதமாய், விசேஷமான ஆகாரத்தைக் கொடுத்து அவர் பசியை ஆற்றுகிறோம்.

சாப்பாட்டு விடுதியில் (Hotel) ஒழுங்கின்படி உள்ள ஆகாரத்தைக் கொடுக்கிறார்கள். ஆனால் ஓர் உத்தம மனைவி தன் புருஷனுக்கு அவன் உள்ளத்தை அறிந்து யோசித்து, தன் விருப்பத்திற்கு மாறாக இருந்தாலும், அவன் பிரியத்திற்கு ஏற்றதாக ஆகாரம் கொடுக்கிறாள். அவ்வீட்டில்மாத்திரமே சந்தோஷமும் சமாதானமும் இருக்கும். அப்படியே கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக வேண்டிய மனைவி, தன் சித்தத்தை விட்டு ஓய்ந்து, கிறிஸ்துவுக்குப் பிரியமானவைகளைச் செய்து "பிரியம்" ஆக வேண்டும்.

மணவாட்டி இவ்விதம் பிரியமானவளானபடியால் உன்னதப் பாட்டில் அவள் ஏழு தடவை "பிரியமே" என்று அழைக்கப் பட்டிருக்கிறாள். அன்றியும் மணவாளனும் பிரியமானவரானபடியால் அவரும் "பிரியமே" என்று நான்கு தடவை அழைக்கப் பட்டிருக்கிறார். இவ்விதமாய் மணவாளனும் மணவாட்டியும்

ஒருவருக்கொருவர் பிரியமாய் இருக்கிருர்கள். ஆ! என்ன இன்ப ஜீவியம்!

தேவ சித்தம் செய்வதால் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெறுகிருேம். ஆகவே இயேசு, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்ருர் (மத். 7 : 21).

ஆகவே தேவ சித்தத்தை அறிந்து அதன்படி ஜீவிக்க மிக ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். தேவ சித்தத்தை அறிந்துகொள்ளப் பல காரியங்கள் தேவையாக இருப்பினும் முக்கியமாய்க் கீழ்க்காணும் **இரண்டு** காரியங்களை எப்போதும் மிக ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும்.

முதலாவதாக, மனம் புதிதாக வேண்டும் (ரோமர் 12 : 2). ஒரே காரியத்தில் தேவ சித்தம் நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தக்கவாறு மாறிக்கொண்டிருக்கும். இதற்கேற்றபடி நம் மனம் மாறிக்கொண்டிருக்க வேண்டும். "பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா?" என்று தாவீது தேவனிடம் முதலாவது விசாரித்தபோது, "போ" என்ருர். மறுபடியும் பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாய் வந்தபோது தாவீது மறுபடியும் விசாரித்தார். அப்போது அவர் நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்ருலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது,சீக்கிரமாய் எழும்பிப்போ" என்ருர் (II சாமு. 5:19-24). இஸ்ரவேல் ஜனத்திற்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் கொடுக்கும் விஷயத்தில், ஆரம்பத்தில் மோசே கன்மலையை அடிக்க வேண்டியதாயிருந்தது. அது அப்போதைய தேவ சித்தம் ஆனல் அநேக

வருஷ அனுபவங்களுக்குப் பின்பு கன்மலையைப் பார்த்து பேச வேண்டும் என்று தேவன் சொன்னார். இப்போது பேசுவதுதான் தேவசித்தம்.

மேற்கூறிய இரண்டு உதாரணங்களையும் கவனிக்கும்போது தாவீது ஒரே காரியத்தை இரண்டு தடவை செய்வதற்கு இரண்டு தடவை விசாரித்தார். முதல் தடவையைப்போல் இரண்டாவது தடவை வெளிப்படுத்தப்படாதபோது, தன் பழைய மனதைப் புதிதாக்கித் தேவ சித்தம் செய்தார். ஆகவே ஜெயம் பெற்று, எருசலேமில் சமாதானத்துடன் மரித்தார். மோசே அப்படிச் செய்யவில்லை. முதன்முறை வெளிப்படுத் தப்பட்டதற்கு மாறாக இரண்டாவது முறை தேவ சித்தம் வெளிப்படுத்தப்பட்டாதபோது, தன் பழைய மனதைப் புதிதாக்கித்தேவ சித்தம் செய்தார். ஆகவே கானானுக்குள் பிரவேசியாதபடி புறப்பானர். இவர்வேறு பாவங்கள் செய்ய வில்லை மனதைப் புதிதாக்கித் தேவ சித்தம் செய்யாதபடியால் இவ்வளவு பயங்கர நியாயத்தீர்ப்பு வந்தது. ஆகையால் தான் இயேசுவும் மேற்கூறிய வசனத்தைக் கூறினர். ஆகவே நாம் பழைய அனுபவங்களின்படி மாத்திரம் ஜீவித்துத் தேவசித் தத்திலிருந்து தவறித்தேவ இராஜ்யத்திலிருந்து புறம்பாக்கப் படாதபடி, எப்போதும் மனம் புதிதாகித்தேவ சித்தத்தை அறிந்து அதன்படி செய்ய ஜாக்கிரதையாக இருப்போமாக.

இரண்டாவதாக, அவருடைய சித்தத்தை அறிய கொலோ. 1:9–ல் ஞானமும் ஆவிக்குரிய விவேகமும் தேவை என்று காண்கிறோம். இவ்விரண்டும் சுயநலமற்ற ஜீவியம் செய்யும் போது கிடைக்கும். சாலொமோனிடம் தேவன், "நீ விரும்பு கிறதை எனிடத்தில் கேள் என்று சொன்னபோது அவன்,

"ஞானத்தையும் அறிவையும் எனக்குத் தந்தருளும் என்றான்". அதற்குத் தேவன், "நீ ஐசுவரியத்தையும் சம்பத்தையும், கனத்தையும், உன்பகைஞரின் பிராணனையும், நீடித்த ஆயுசையும் கேளாமல், நான் உன்னை அரசாளப்பண்ணின என் ஜனத்தை நியாயம் விசாரிக்கத்தக்க ஞானத்தையும் விவேகத்தையும் நீகேட்டபடியினாலும், ஞானமும் விவேகமும் தந்திருக்கிறதுமல்லாமல், உனக்கு முன் இருந்த ராஜாக்களுக்காகிலும் உனக்குப் பின் இருக்கும் ராஜாக்களுக்காகிலும் இல்லாத ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும் உனக்குத் தருவேன் என்றார்" (II நாளா : 1.7-12), இங்கு சாதாரணமாய் மனுஷர் தங்களுக்காக விரும்பும் ஐசுவரியம், சம்பத்து. கனம், பகைவரின் பிராணன், நீடித்த ஆயுசு இவைகளைச் சாலொமோன் விரும்பாதிருந்ததைக் கவனிக்க வேண்டும். இவைகளை அவன் விரும்பிக் கேளாது, தேவ காரியத்தில் கவனமும், பாரமும் கொண்டபடியால், அவனுக்கு ஞானத்தையும், விவேகத்தையும் கொடுத்தார் ஆனால் இன்று பல தேவனுடைய மனுஷர் கூடக் பொருளாசையுள்ளவர்களாகவும், சத்துருக்களை நேசியாது பகைத்து அவர்கள் கஷ்ட நஷ்டங்களை விரும்புகிறவர்களாகவும் நீடித்த ஆயுளை விரும்பி இரகசியமாகவும், வெளியரங்கமாகவும் மருந்து உபயோகிக்கிறவர்களாகவும் மாறி விட்டார்கள். இவ்விதம் ஜீவிக்கிறவர்கள் சுய நலம் உள்ளவர்களாய் இருப்பதால் தேவன் ஞானத்தையும். விவேகத்தையும் கொடுக்கவில்லை. சகோதரனே! சகோதரியே! நீயோ உன்னை மறந்து தியாகியாக மாறி, கர்த்தருடைய காரியங்களில் அக்கறை காட்டுவாயாக. அப்பொழுது தேவன் உனக்கு ஞானத்தையும், ஆவிக்குரிய விவேகத்தையும் அளிப்பார். அதனால் நீ தேவசித்தத்தைத் தெளிவாய் அறிந்து செய்யக் கிருபை செய்வார். அப்பொழுது நீ தேவனுக்கு

G.B. Sathyanesan, B.A

மகிமையாகவும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் இங்கு ஜீவிப்பதுடன், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியமும் பெறுவாய். ஆம்! தேவன் அப்படியே செய்வாராக.

இதற்குப் பின்பு நாம் தேவனுக்குப் பிரியமானவற்றைச் செய்ய முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் நமக்கு என்ன மேன்மை கிடைக்கும் என்று ஒருவர் கேட்கலாம். அது உண்மையான கேள்விதான். எந்தத் துறையிலாகிலும் மிகுதியாக உழைப்போமாயின் மிகுதியான இலாபம் கிடைக்க வேண்டும். ஆகவே இவ்விஷயத்தைக் குறித்தும் அறிய வேண்டுவது மிக அவசியம்தான்.

"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தப் பண்ணப்போகிறேன்" என்று யோவான் 14:2 - ல் இயேசு சொன்னார். ஆகவே பிதாவின் வீடாகிய பரலோக இராஜ்யத்தில், "ஒரு ஸ்தலம்" என்னும் விசேஷித்த இடத்தை ஆயத்தம் பண்ணுவதாகச் சொல்லியிருக்கிறார். அன்றியும் இயேசு "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" என்கிறார். இதிலிருந்து நாம், அவர் இரண்டாவது அல்லது மறுபடியும் வருவது நம்மைப் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கப் பண்ணும் பொருட்டு மாத்திரமல்ல, அவர் ஆயத்தம் பண்ணின விசேஷித்த ஓர் இடத்தில் தம்மோடு நாம் இருக்கும்படியாக நம்மைச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டாகவே வருகிறார் என அறியலாம். தேவசித்தம் செய்கிறவர்கள் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள். அதற்கு மேலாகப் பிதாவுக்குப்

பிரியமானவற்றைச் செய்கிறவர்கள் "பிரியம்" என்கிற மணவாட்டி ஆகிறார்கள். தேவ சித்தம் செய்து இயேசுவுக்குச் சகோதர சகோதரிகள் ஆகிறோர். (மாற். 3:35) அவர்களுக்குள் மேலான அனுபவம் உள்ளவர்கள் "பிரியம்" என்னும் பெயரைப் பெறுகிறார்கள் ஆகவே உன் 2:2-ல் "குமாரத்திகளுக்குள்ளே எனக்குப் பிரியமானவளும் இருக்கிறாள்" என்று பார்க்கிறோம். அவ்விதமே ஒருவனுடைய சகோதர, சகோதரிகளுக்கும், மனைவிக்கும் வித்தியாசமுண்டு. மனைவி பிரியமானவளும் அவனுடைய சரீரமாகவும் இருக்கிறாள். அவனறையில் அவளுக்கு உரிமையும் உண்டு. இவ்விதமாகவே இயேசு ஆயத்தம் பண்ணின இந்த "ஸ்தலம்", "பிரியம்" என்னும் மணவாட்டிக்குக் கொடுக்கப்படுகிறது. "பிரியம்" என்று அழைக்கப்படும் மணவாளனும், "பிரியம்" என்று அழைக்கப்படும் மணவாட்டியும் தங்கும் ஸ்தலமும் பிரியமாய் இருக்க வேண்டும். சிலர் தங்கள் நாமங்களைத் தங்கள் வீட்டிற்குச் சூட்டுவதுபோல் நம் கர்த்தர் இந்த ஸ்தலத்தைக் குறிப்பிட்டு, "தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்துகொண்டார்" என்று சங். 78:68-ல் கூறியிருப்பது நம்மைப் பரவசப்படுத்துகிறதன்றோ! அன்றியும், "கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால் இங்கே வாசம் பண்ணுவேன்" (சங்.132:13,14) என்று கூறியிருக்கிறார். இவ்வசனத்திலிருந்து இயேசு (யோவான் 14:2) ஆயத்தம் பண்ணப்போன ஒரு "ஸ்தலம்" இந்த சீயோன் என்று விளங்குகிறதன்றோ! இதைக்குறித்துத்தான் தாவீது தீர்க்கதரிசனமாக "கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்" என்று சங்கீதம் 102:15-ல் சொன்னார். ஆகவே, அவருக்குப் பிரியமானவற்றைச் செய்கிறவர்களுக்குச் சீயோன் கொடுக்கப்படுகிறது

இந்த சீயோன் மகாராஜாவின் நகரமும், சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. (சங். 48:2)

அன்றியும் வெளி. 14:1-5 வசனங்களை ஆராயும்போது சீயோன் மலையில் நிற்கிறவர்களின் விசேஷித்த சுபாவங்களை அறிகிறோம். நாம் படித்துக்கொண்டு வருவதுபோல் இவர்கள் ஜீவியத்தில் தேவன் பிரியப்படத்தக்கதான சுபாவங்கள் 4,5- ம் வசனங்களில் கூறப்பட்டுள்ளன. அவருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவர் ஆயத்தம் பண்ணியிருக்கும் ஸ்தலத்தில் இருக்கவேண்டுமாயின், இன்னஇன்ன காரியங்களில் தேவன் பிரியப்படுகிறார் என்று நுட்பமாய் ஆராய்ந்து, அதன்படி ஜீவித்தால் மாத்திரமே கர்த்தருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படக்கூடும். வேத புஸ்தகத்தில் அநேக காரியங்கள் இருப்பினும் அவைகளில் சிலவற்றை ஆராய்வோம்.

தேவன் எவைகளில் பிரியப்படுகிறார் ?

முதலாவதாக '**தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறார்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்**'' (சங்.147:11) என்று வாசிக்கிறோம்.

A அவருக்குப் பயப்படுவதில் அவர் பிரியமாயிருக்கிறார். தேவபயம் என்பது தீமையை வெறுப்பதாகும். (நீதி. 8:13) தீமையைச் செய்யாதிருப்பதன்று; செய்வதற்கு முன் இருதயத்தில் உண்டாகும் எண்ணத்தை வெறுக்கவேண்டும். ஆகையால் நீதி. 28:14-ல் ''எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்'' என்று காண்கிறோம் தேவன் பிரியப்படாத சிந்தனை, பார்வை இவற்றைக் குறித்துப் பயம் இருக்க வேண்டும். மிரியாமும், ஆரோனும் மோசேக்கு விரோதமாய்ப் பேசினபோது,

தேவன் அவர்கள் பேச்சின் மேல் பிரியப்படாததால், "நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன" என்றார். (எண். 12:8) இதிலிருந்து மற்றவர்களுக்கு விரோதமாய்ப் பேசுகிற விஷயத்திலும் பயம் இருக்க வேண்டும் என்று காண்கிறோம்.

மேலும், "என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்" என்று தைரியமாகச் சொன்ன பரி. பவுல், "உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (II கொரி. 11:3) என்று பயந்திருக்கிறார். பிசாசு முதலாவது ஏவாளுடைய மனதை வஞ்சித்து, பின்பு விலக்கப்பட்ட கனியைப் புசிக்கப்பண்ணினதுபோல், இக்காலத்திலும் செய்து வருகிறான். உண்மையுள்ள இருதயத்துடன், மற்றவர்களுக்கு விரோதமாய்ப் பேசாமல் இருப்பதுடன், வீணான வார்த்தைகளையுங்கூடப் பேசக்கூடாது. நாம் பேசும் வார்த்தைகள் அழிந்து போவதில்லை. தற்பொழுது பேசும் வார்த்தைகளைப் பதிவுசெய்து திரும்பவும் அவற்றைப் பேசப்பண்ணும் கருவியைக் (Tape recorder) கண்டுபிடித்திருக்கிறார்கள். அவ்விதமே முன்பு நாம் பேசின வார்த்தைகளைக் கருவிக்குள் அடக்கித் திரும்பப் பேசச் செய்கின்ற கருவிகளையும் அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். மனுஷனுக்கு இவ்விதம் செய்யக் கூடுமானால் தேவனால் எவ்வளவு அதிகமாய்ச் செய்ய முடியும்! ஆகவே இயேசு "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங்குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்" என்று மத். 12:36-ல் கூறினார். அப்போஸ்தலனாகிய பவுல் எபே. 4:29-ல் "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்" என்கிறார். ஆகவே ஒருவருக்கொருவர் விரோதமாய்ப்பேச, வீண்

வார்த்தை பேச, கெட்டவார்த்தை பேசப் பயம் தேவை. இத்தகைய பயமிருக்குமாயின் அவர் பிரியப்படுவார்.

B. அன்றியும் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிருர் என்று மேற் கூறிய வசனத்தில் பார்த்தோம். தேவ மனுஷர் தேவனுக்காக இரண்டு விதமாகக் காத்திருக்க வேண்டும். a. கர்த்தர் நமக்காகக் கிரியை செய்யும் விஷயத்தில் அவருடைய ஏற்ற சமயத்திற்காகக் காத்திருக்க வேண்டும். தாவீது, "கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்" (சங். 40:1) என்கிருர். அவர் கோலியத்தைக் கொன்றதுபோது சவுல் சொன்னதுபோல் அவனுடைய மகள் அவருக்கு விவாகம் செய்து கொடுக்கப்படவில்லை. சாமுவேல் இராஜாவாக அவரை அபிஷேகித்தபோதிலும் உடனே இராஜாவாகவில்லை. இச்சந்தர்ப்பங்களிளெல்லாம் பொறுமையாகக் காத்திருந்தார். கர்த்தருக்காகக் காத்திருப்பதில் பிரியப்படுகிற தேவன் குறித்த நேரத்தில் அவரைக் கனம் பண்ணினுர். ஆனல் சவுலோ சாமுவேல் சொன்னதுபோல் 7 நாட்கள் மட்டும் காத்திருந்தானேயன்றி, 7 நாட்கள் முடியும் வரை காத்திருக்கவில்லை. ஆகவே தேவன் அவன் இராஜ்யபாரம், "நிலைநிற்காது" என்று கூறி அப்படியே செய்தார். I சாமு. 13 : 14 ஆகவே தேவன் தயை செய்யக் குறித்த நேரம் வரும்வரை (சங். 102 : 13) காத்திருக்க வேண்டும்.

B. ஜெபத்தில் கர்த்தர் பாதத்தில் காத்திருக்க வேண்டும். இவ்விதம் நாம் காத்திருக்கும்போது தேவன் நம்மேல் பிரியம் வைத்துப் புதுப்பெலன் அருளுகிருர். (ஏசா. 40 : 31). சக்தியில் குறைந்த ஒரு மின் கலத்தைச் (Battery) சக்தி மிகுந்த மின்சாரத்துடன் இணைத்துக் காத்திருக்க வைக்கிருேம். குறிக்கப்பட்ட நேரத்திற்குப்பின், சக்தியில் குறைந்த மின்கலம் நல்ல

சக்தி உடையதாகிறது. மோசே மலையில் ஜெபத்தில் காத்திருந்தார். ஆகவே அவர் முகம் பிரகாசம் அடைந்திருந்தது. முன்பு அவரைக் கல்லெறியவேண்டும் என்ற ஜனங்கள், இப்போது மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் காத்திருந்ததினால் பெற்றிருந்த பிரகாசத்தைப் பார்த்துப் பயந்தனர். இவ்விதம் நாம் கர்த்தருக்காகக் காத்திருக்கும்போது கர்த்தர் பிரியம் வைத்து நம்மை மற்றவர்களுக்கு முன்பாகக் கனம் பண்ணுகிறார். அதனுடன் எரேமியாவின் அனுபவத்தின் மூலம் தேவன் தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நல்லவராகவும் இருக்கிறார். (புல. 3 : 25) என்று அறிகிறோம். ஆ! என்ன பாக்கியம்! இவ்விதமாய்க் கர்த்தருக்குக்காகக் காத்திருக்கும் ஜீவியத்தில் கர்த்தர் பிரியப்படுகிறார்.

இரண்டாவதாக, தேவன் துதியில் பிரியப்படுகிறார்.

சங். 69 : 30, 31-ல், தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை ஸ்தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப் பார்க்கிலும் இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. துதிப்பதும் ஸ்தோத்திரிப்பதும் ஒன்று போல் காணப்பட்டாலும், வெவ்வேறான இரண்டு பொருள்கள் உள்ளனவாகும், ஒன்று அவருக்கு நன்றி செலுத்துவதாகும்; மற்றது அவரது மகிமையைச் சிந்தித்துப் புகழ்வதாகும். தாவீது இராஜா மாத்திரமல்ல, எசேக்கியா இராஜாவும் இவ்விதம் செய்திருக்கிறார். கர்த்தர் செய்த நன்மையின் காரணமாக இஸ்ரவேலர் துதித்தார்கள். ஆனால் சீக்கிரமாய் மறந்தார்கள். ஆகையால் பல பாவங்களுக்குள்ளானார்கள். (சங். 106:10–14) அன்றியும், ரோமர் 1:21-ல் காண்கிறபடி, நாம் தக்கவாறு தேவனைத் துதியாவிட்டால் வீணராவது மாத்திரமல்ல இருதயம் உணர்வற்றதாகி

இருளடையும். ஆகவே நாம் மறவாது தேவனைத் துதிக்க வேண்டும். யோசபாத் சத்துருக்களுக்கு முன்பு நின்றபோது கலங்காது துதித்துப் பாடுகிறார். துதியிலும் ஸ்தோத்திரத்திலும் பிரியப்படும் கர்த்தர் உடனேயே கிரியைசெய்து சத்துருக்களின்மேல் களிகூரத்தக்கதான ஜெயத்தை அளித்தார். (II நாளா 20 : 21-27).

அன்றியும் எரிகோவின் கோட்டை விழுந்த இடத்தை (1929-36) தோண்டி ஆராய்ந்த (Archaeologist) டாக்டர் ஜான் காற்ஸ்டான்க் (Dr. John Garstang) என்பவர் எரிகோவின் கோட்டை இரட்டைக் கோட்டையாக இருந்ததாகவும், அவற்றுள் ஒன்றின் அகலம் 6 அடியெனவும், மற்றதன் அகலம் 12 அடியெனவும், அவைகளின் உயரம் 30அடி எனவும் கூறுகிறார். ((Halley's Bible Haad book P. 154). இவ்வளவு பெரிதான கோட்டையையும், ஸ்தோத்திரத்தில் பிரியப்படும் தேவன் ஜனங்கள் துதித்தபோது தம் சர்வ வல்லமையால் விழப் பண்ணினார். அவ்விதமே சகோதரனே ! நீயும் துதிப்பாயானால் உனக்கு எதிராக இருக்கும் பல்வேறு சத்துருக்களின் கோட்டைகளையும் விழப்பண்ணுவார்.

எக்காலத்திலும் (சங். 34:1), எல்லாவற்றிலேயும் (I தெச. 5:18) அவரைத் துதித்து ஸ்தோத்திரிக்க வேண்டும். இருளிலும் வெளிச்சத்திலும், கனத்திலும் கனவீனத்திலும், கஷ்டத்திலும் நஷ்டத்திலும் ஸ்தோத்திரிக்க வேண்டும். யோபு தனக்குண்டான யாவற்றையும், தன் பிள்ளைகளையும் இழந்த தருணத்திலும், "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்றார் (யோபு 1:21). ஸ்தோத்திரத்தில் பிரியப்படும் தேவன் இதனால் பிரியமடைந்து அவனை இரண்டு மடங்காக ஆசீர்வதித்ததைச் சிந்திப்பது எவ்வளவு

ஆனந்தம்! ஆகவே அவரைத் துதித்து ஸ்தோத்திரித்து அவருக்குப் பிரியமானவர்களாவோமாக.

சில தடவைகளில் நம் ஜீவியத்தில் எவ்விதப் பிழையும் இல்லாதிருப்பினும், எவ்வித வெளிச்சமும் இன்றிக் கலக்கமுண்டாகிறது. இதைக் குறித்து, ஏசா. 50:10-ல், "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானே, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்" என்று வாசிக்கிறோம் இவ்விதமாய் நாம் சார்ந்து இருப்பது மாத்திரமல்ல, அவரைத் துதிக்கவும் வேண்டும். அவ்விதம் செய்யும்போது துதியில் பிரியப்படும் தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். இதை நிரூபிக்கவே, சங். 134:1-3-ல், "இதோ, இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரரே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். உங்கள் கைகளைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு நேராக எடுத்து, கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பாராக" என்றார் ஆகவே எக்காலத்திலும் ஸ்தோத்திரிக்க மறவாதீர்கள்.

மூன்றாவதாக, தேவன் விசுவாசத்தில் பிரியமாயிருக்கிறார்.

எபி. 11:6ன் மூலம் விசுவாசத்தால் தேவனைப் பிரியப்படுத்தலாம் என்று அறிகிறோம். இவ்வதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் விசுவாசம், பாவமன்னிப்பு, சரீர சுகம் முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விசுவாசம் அன்று. விசுவாசத்தால் நடந்த பலவிதக் கிரியைகளையும் அறிகிறோம்.

நம் வாழ்க்கையில் நேரிடுகிற பலவிதமான சோதனைகள், போராட்டங்கள் பூதனைகளினின்றும் விடுதலை பெறுவதற்கு விசுவாசம் மிகவும் தேவை. இச்சந்தர்ப்பத்தில் நாம், விசுவாசம், அற்ப விசுவாசம், சந்தேகத்துடன் உள்ள விசுவாசம், பெரிய விசுவாசம் போன்ற பல்வேறு விசுவாசத்தைப்பற்றி ஆராயாமல், யாக். 2:22-ல் கூறப்பட்டிருக்கும் பூரண விசுவாசத்தைக் குறித்தே ஆராய்வது நலமாகும். மின்சாரம் கிரியை செய்வதற்குச் செயலாற்றாத, செயலாற்றும் (Negative & Positive) இருவயர்கள் அவசியமாய் இருக்கிறதுபோல, பூரண விசுவாசத்திற்கும் இவ்விரண்டு பகுதிகளும் அவசியம். நம் ஜீவியத்தில் இவ்விரண்டும் கிரியை செய்தால்தான் பூரண விசுவாசத்தைப் பெற்றுத் தேவனைப் பிரியப்படுத்தக்கூடும். இவ்விதமாக இரண்டும் கிரியை செய்வது எப்படி?

விசுவாசம் கிரியையோடு முயற்சி செய்ய வேண்டும். ஆகவே கிரியை இல்லாத விசுவாசம் செத்ததென்று வாசிக்கிறோம். இயேசு ஐயாயிரம் பேரைப் போஷித்த வேளையில் அப்பத்தைப் பிட்பதற்கு முன்னதாக ஜனத்தை வரிசையாக உட்கார வைத்தார். இது விசுவாசத்தின் கிரியையாகும். அவ்விதமாகவே "ராகாப்" என்னும் வேசியும் விசுவாசத்தின் கிரியையால் வேவுபார்க்க வந்தவர்களைப் பாதுகாத்து அனுப்புகிறாள். மேலும், பட்டணம் அழிக்கப்படும் போது அவளும் அவளுடைய குடும்பத்தினரும் பாதுகாக்கப்படுவார்கள் என்னும் விசுவாசத்தால் அவர்கள் சொற்படியே வீட்டின்மேல் சிவப்பு நூலைக்கட்டி விசுவாசத்தின் கிரியையை வெளிப்படுத்தினாள். (யாக். 2.25). அவள் தன் ஜீவனைப் பாதுகாக்க விசுவாசித்தாள். அல்லது ஜீவனைப் பெற்றுக் கொள்ள விசுவாசத்தில் கிரியை அவளது செய்தாள் விசுவாசத்தில் பிரியப்படுகிற தேவன்

விசுவாசத்தைக் கனம் பண்ணிப் பாதுகாத்தார். பெற்றுக்கொள்ள அல்லது ஜீவனைப் பாதுகாக்க விசுவாசித்து, விசுவாசத்தில் கிரியை செய்வது பூரண விசுவாசத்தின் ஒரு பகுதி ஆகும். இதைப் பார்க்கிலும் முக்கியமான விசுவாசத்தின் மற்றொரு பகுதி சேர்ந்தால் மாத்திரமே விசுவாசம் பூரணமடையும். அப்பகுதியை ஆபிரகாமின் ஜீவியத்தில் காணலாம்.

தேவன் ஆபிரகாமிடத்தில் ஈசாக்கைப் பலியிடச் சொன்னார். ஆபிரகாம் விசுவாசத்தின் கிரியையை வெளிப்படுத்த, ஈசாக்கைப் பலிபீடத்தில் கட்டிக்கத்தியை எடுத்தான். அவன் கத்தியை எடுக்கும் போது ஈசாக்குப் பாதுகாக்கப்படுவான் என்று எண்ணவில்லை. ஆகாப் விசுவாசத்தின் கிரியையைச் செய்தபோது ஜீவனைப் பெற்றுக் கொள்வேன் என விசுவாசித்தான். ஆபிரகாம் விசுவாசத்தின் கிரியையைச் செய்தபோது ஜீவனை இழந்து அல்லது ஈசாக்கை இழந்து தேவனுடைய வாக்குத்தத்தத்தின் படி சந்ததியைப் பெற்றுக் கொள்வேன் என்று விசுவாசித்தான். ஆகையால் தான் யாக். 2:21-ல், "ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது" என்று வாசிக்கிறோம். ஆபிரகாம் கத்தியைக் கையிலெடுத்த போது தேவன் தடைபண்ணுவார் என்ற எண்ணம் ஆபிரகாமின் இருதயத்தில் இருந்ததில்லை. ஈசாக்கு மரித்தாலும் அதன் பின்பு எப்படியாகிலும் வாக்குத்தத்தத்தின் படி சந்ததியைப்பெற்றுக்கொள்வேன் என்னும் விசுவாசமிருந்தது. அகவே எபி 11:18, 19-ல், 'இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, தனக்கு ஒரே பேறான வனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்"

என்று வாசிக்கிறோம். இவ்விதமாய் இழந்து அல்லது இல்லாமல் போக ஒப்புக்கொடுப்பதற்கும் விசுவாசம் தேவை. இழக்க ஒப்புக்கொடுக்கும்போது வாக்குத்தத்தத்தை எண்ணிக்கொள்ள வேண்டும். ஆகையால் தான் இயேசு தன் ஜீவனை இழக்கிறவன் அதைக் காத்துக் கொள்வானென்று லூக்கா 9:24-ல் கூறினார். இலங்கை அல்லது பிற தேசங்களிலுள்ள ஒருவன் அங்குள்ள பிரஜா உரிமையை விட்டு விட்டு வரும்போது அங்குள்ள யாவற்றையும் அங்குள்ள அரசாங்க பாங்கில் செலுத்திவிட்டு யாவற்றையும் இழந்தவனைப் போல இந்தியாவில் வந்து இறங்குகிறான். இறங்கும்போது அவனுக்குத் தேநீர் அருந்தக் கூட காசு இல்லாமலிருக்கலாம் ஆயினும் அவன் கையிலிருக்கும் "பாங்குச் சீட்டு" (Bank Draft) அவன் இழந்த யாவற்றையும் இந்திய நாணயத்தில் பெற்றுக்கொள்ளச் செய்யும் என்ற நம்பிக்கை சந்தோஷத்தை உண்டாக்குகிறது. இவ்விதமாய் விசுவாசம் இம்மையில் தனக்குள்ளவற்றை இழந்தும், இழக்காதவனாக மறுமையில் தான் இழந்தவற்றின் விலை மதிப்பைப் பெற்றுக்கொள்ளச் சாதனமாயிருக்கிறது. இவ்விதமே ஆபிரகாம் ஈசாக்கைப் "பலியாக ஒப்புக் கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனைபாவனைவயாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான்". இவ்விதமாய் இழக்க ஒப்புக் கொடுக்கும் விசுவாசத்தின் கிரியை மிக மேன்மையானதாகும். இது பூரண விசுவாசத்தின் இரண்டாவது பகுதி (Negative side). ஆகவே நாம் நம்முடைய ஜீவன், கனம், பணம், சுக பெலன், பிள்ளைகள் முதலிய யாவற்றையும் இழக்க வேண்டியது வந்தாலும், வாக்குத்தத்தத்தை நம்பிப் பெற்றுக் கொள்ளக்கூடிய பூரண விசுவாசம் நம்மில் கிரியை செய்வதாக.

G.B. Sathyanesan, B.A.

ராகாபுடைய ஜீவனைப் பெற்றுக்கொள்ளுதற்குரிய விசுவாசத்தின் கிரியை, அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பப் பகுதியாகும். ஆனால் ஆபிரகாம் ஜீவனை இழந்து வாக்குத்தத்தத்தை நம்பிப் பெற்றுக்கொள்ளக் கூடியவனாயிருந்தது, அவனது ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசத்தின் கிரியையின் பிற்பகுதியாகும். நம் ஜீவியத்தில் வளர வளர ஆபிரகாமின் விசுவாசத்தைப் போன்ற விசுவாசம் இல்லாவிட்டால் தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியாது ஆகவே விசுவாசத்தின் கிரியை, முதல் பகுதியில் மாத்திரம் நில்லாது வளர்ந்துவரத் தேவன் உதவி செய்வாராக.

நான்காவதாக, தேவன் ஜெபத்தில் பிரியமாயிருக்கிறார்.

I தீமோ. 2:1-3 வசனங்களிலிருந்து, "நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது (ஜெபம்) நன்மையும் பிரியமுமாயிருக்கிறது" என அறிகிறோம். நாம் கர்த்தருடைய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமானால் ஜெபம் இன்றியமையாததென்று லூக். 21:36-லிருந்து தெளிவாகிறது. ஜெபத்தின் வளர்ச்சியைக் குறித்து "ஜெபம்" என்னும் புத்தகத்தில் வாசிக்கும்போது, மேலே கூறப்பட்டிருக்கும் தேவன் பிரியப்படுகிற ஜெபம், நீதிமானின் ஜெபமாகிய ஐந்தாவது ஜெபத்திற்குட்படுகிறது. இங்கே தங்களுக்காக ஜெபிக்காமல், மற்றவர்களுக்காகவே ஜெபிக்க வேண்டுமெனச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சாதாரணமாக, தேவ ஜனங்களின் ஜெபத்தில் பெரும் பகுதியும் தங்களுக்காகவும். மாமிசத்தின்படி தங்களுக்கு நெருங்கினவர்களுக்காகவும் இருக்கும். இவ்வித ஜெபத்திற்குத் தேவன் பிதாவாயிருப்பதால் பதிலளித்தாலும், தேவன் பிரியப்படும் ஜெபம் இது அன்று. இயேசு உலகத்தில் இருக்கும்போது மற்றவர்களுக்காக ஜெபித்த

தை யோவான் 17-ல் வாசிக்கிறோம். இங்கே சீஷர்களுக்காக ஒருவிதமாய் ஜெபிக்கிறார். கடைசியில் சிலுவையில் தொங்கும் போதும், "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று சத்துருக்களுக்காக வேறுவிதமாய் ஜெபிக்கிறதைக் காண்கிறோம். இவ்விதமாய் ஜெபத்திலும் ஓயாத தியாகியாக இருந்தார். அவருடைய மண வாட்டியாகிய பிரியமும் இவ்வனுபவம் உள்ளவளாக இருக்க வேண்டும். நாம் பரிசுத்த பவுலின் ஜெபத்தைக் கவனிக்கும்போது, அவர் எப்போதும் மற்றவர்களுடைய நிலைகளையும், தேவைகளையும் அறிந்து ஜெபித்தார் என்று அறியலாம். கலாத்தியர் ஆவியில் ஆரம்பித்து மாமிசத்தில் முடிக்கிறவர்களாக இருந்தபடியாலும், ஆவிக்குரிய ஜீவியத்தில் சிறுபிள்ளைகளாக இருந்தபடியாலும் அவர்களுக்காக கர்ப்பவேதனையுடன் ஜெபிக்கிறார். (கலா. 4;19).ஆனால் பிலிப்பியர் சுவிசேஷத்திற்கு உடன்பட்டவர்களானபடியால், 'சந்தோஷத்தோடே விண்ணப்பம்" பண்ணுகிறதையும் காண்கிறோம். எனவே, மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது அவர்களுடைய நிலையை ஆவியினால் பகுத்தறிந்து அதற்கேற்றபடி ஜெபிக்க வேண்டும். இவ்விதம் ஜெபிப்பது, "பரிசுத்தாவிக்குள் ஜெபம் பண்ணி," என்று யூதா 20-ல் வாசிப்பதின் ஓர் அம்சமாகும். ஆகவே, தேவன் பிரியப்படும் இவ்வித ஜெபத்தில் வளர்வதுடன் அவர் வருகையில் எடுத்துக் கொள்ளப்படும்படி, ஜெபம்பண்ணி விழித்திருக்க வேண்டும் (ஜெபத்தின் பல அம்சங்களையும் அதின் வளர்ச்சியையும் அறிய "ஜெபம்" என்னும் புத்தகத்தை வாசிப்பது நலமாயிருக்கும்.)

ஐந்தாவதாக, உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடம் தேவன் பிரியமாய் இருக்கிறார். II கொரி. 9:7

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இவ்விஷயத்தைக் குறித்து மிகுதியான வசனங்கள் கூறப்பட்டுள்ளன, அவைகளில் சிலவற்றை நாம் இங்கு ஆராய்வது நலமாயிருக்கும். ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்யும்படி தேவன் மோசேயிடம் சொன்னபோது, "உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் 'காணிக்கையை வாங்குவீர்களாக'' என்றார் (யாத். 25:2). அவ்விதமாகவே கர்த்தருடைய ஆலயத்தைக்கட்டும் பொருட்டாக, தாவீது பொருட்களைச் சவதரித்த போது ஜனங்கள் "உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்'' என்று I நாளா. 29:9-ல் வாசிக்கிறோம். இவ்விதம் உற்சாகமாய் கொடுக்கும்போது சந்தோஷம் ஏற்படுவதை இவ்வசனம் தெரிவிக்கும்.

ஒருவன் கர்த்தருக்காயினும் மனுஷருக்காயினும் கொடுக்கும் போது உற்சாகமாகவும் கொடுக்கலாம்; அல்லது மன நோவுடன் சூழ்நிலையினிமித்தமாகவோ அல்லது மற்றவர்கள் / நிமித்தமாகவோ கொடுக்க வேண்டியதிருக்கிறதே என்று துக்கத்துடனும் கொடுக்கலாம். பணத்தின் அளவை அல்லது பொருளின் அளவை மாத்திரம் கவனியாது, கொடுப்பவரது இருதயத்தின் நிலையைக் கவனிக்கும்தேவன் உற்சாகமுள்ள இருதயத்திலிருந்து கொடுக்கிறதின்மேல்மாத்திரம் பிரியப்படுகிறார்.

உற்சாகமுள்ள இருதயத்திலிருந்து கொடுப்பது மாத்திரம் கர்த்தருடையகாரியங்களுக்கு நன்கு பயன்படும். "மெதுவாகக் கொடுக்கலாம்'', 'பின்பு கொடுக்கலாம்'', கடைசியாகக் கொடுக்கலாம்'' என்று சிலர் கர்த்தருக்குரியவைகளை வைத்துக்கொண்

டிருக்கலாம். அவ்விதமாய்ச் செய்கிறவர்களுடைய பொருள் சில நடைகளில் கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு வேண்டியதற்கு மேலா கக்கூடும். உதாரணமாக, மோசே ஆசரிப்புக்கூடாரத்தைச் செய்யும்போதும் "இனி புருஷர்களாவது ஸ்திரீகளாவது பரிசுத்த ஸ்தலத்துக்கென்று காணிக்கையாக ஒரு வேலையும் செய்யவேண்டாம்" என்று கட்டளையிட்டான். இவ்விதமாய் ஜனங்கள் கொண்டுவருவது நிறுத்தப்பட்டது என்று யாத். 36:6,7-ல் வாசிக்கிறோம். அசதியாகத் தங்களிடம் வைத்திருந்து பின்பு கொடுக்க எண்ணியவர்களிடம் ஒருவேளை உச்சிதமான நல்ல பொருள் இருந்திருக்கலாம். ஆனால் வேண்டாம் என்று கட்டளை பிறந்ததும் நிறுத்திவிடப்பட்டது. ஆகவே அசதியாய்க் கொண்டு வந்தவர்களின் பொருட்கள் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்து வேலைக்குச் சேரவில்லை. உற்சாகமாய்க் கொடுத்தவர்களின் பொருட்கள் ஒருவேளை கொஞ்சமாயிருந்தாலும் அவை கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தில் சேர்ந்தன. சிறிய பொருளையும் உற்சாகமாய்க் கொடுத்தவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் அதைப்பார்க்கும் போது அவர்களுக்கு எவ்வளவு சந்தோஷமிருந்திருக்கும்! மற்றவர்களுடைய பொருள் யாதொன்றும் இல்லாமையால் அதை எண்ணி அவர்களுக்கு எவ்வளவு துக்கம்! நண்பனே, உம் அசதியால் இவ்விதத் துக்கம் உமக்கு நேரிடக் கூடாது.

சமீபத்தில் எளிய சபை ஒன்றில் ஒரு கன்வென்ஷன் நடத்தத் தீர்மானித்தார்கள். கன்வென்ஷனின் ஆரம்பத்தில் ஓர் சகோதரன் தன் தோட்டத்திலுள்ள ஒரு பொருளைக் கொண்டு கொடுக்கும்படி ஏற்பட்டார். அப்பொருள் முதல் இரு நாட்களுக்கும் மிகவும் அவசியமாக இருந்தது. அவர் உற்சாகமாய்க் கொடுக்க மனமற்று அசதிக்கு இடங்கொடுத்து கன்வென்ஷனின் நான்காவது தினம் காலையில்தான் கொண்டுபோனார். ஆனால்

அன்று அப்பொருள் தேவைப்படவில்லை. அதைக் கன்வென்ஷனுக்கு உபயோகியாது பலருக்கும் வீணாகக் கொடுக்கவேண்டியதாயிற்று. நீங்களும் உற்சாகமின்றி அசதியாகக் கர்த்தருக்கென்று செய்யும் யாவும் இவ்விதமாகி விடாதபடி, செய்யக்கூடிய சிறியவற்றையும் உற்சாகமாய்ச் செய்யுங்கள். சில வருடங்களுக்கு முன் அதிக வருவாயுள்ள ஒரு குடும்பத்திலுள்ள அம்மாள் ஒரு நாள் தன்னிடம் அதிகமான பணம் இல்லாதிருந்த போது ஒரு கர்த்தருடைய பிள்ளைக்கு 25 பைசா கொடுக்கும்படி ஏவப்பட்டாள். இச்சிறு தொகையைக் குறித்து அவ்வம்மை வெட்கப்படாது உற்சாகமாய்க் கொடுத்தார்கள். இந்த 25 பைசாவும் 3 நாட்கள் பட்டினியாக இருந்த அப்பரிசுத்தவானுடைய பட்டினியை நீக்கஉதவிற்று. ஆ! தேவன் அவ்வம்மையின்மேல் எவ்வளவாய்ப் பிரியப்பட்டிருப்பார்! நண்பனே! நீரும் இவ்விதம் உற்சாகமுள்ள ஆவியுடையவராயிருப்பீரேயாயின் உம்மீதும் பட்சபாதம் இல்லாத தேவன் பிரியமாயிருந்து, உம்மைப் "பிரியமே" என்று அழைப்பார். ஆ! என்ன ஆனந்தம்!

இந்த உற்சாக மனம் கர்த்தருக்குக் கொடுப்பதற்கு மாத்திரமல்ல, ஊழியம்செய்வதற்கும் தேவை. ஆகவே, I நாளா.28:9-ல் "உற்சாக மனதோடும் சேவி" என்று வாசிக்கிறோம். கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் பரி. பவுலைப்போல் தேவஅன்பினால் நெருக்கப்பட்டுச் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் உற்சாகமாய்ச் செய்யவேண்டும். இக்காலத்தில் பலரும் இவ்வுற்சாகத்தை இழந்தபடியால் ஆவிக்குக் கீழ்ப்படியாதவர்களாகி விட்டார்கள். அன்றியும் "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" என்று சொன்ன தேவன் பலருக்கு ஏவுதல்களைக் கொடாமல் துக்கத்துடன் தூரமாய் நிற்கிறார். இதற்கு இவர்கள் ஊழியம் செய்யாதது காரணமன்று; அசதியான

ஊழியமே காரணமாகும். இவர்களைக் குறித்துதான் தேவன் அசதியாய்க் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிறவன் சபிக்கப் பட்டவன் என்று எரே. 48:10-ல் சொல்லுகிறார். ஆ! அசதி எவ்வளவு பயங்கரம்! ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் பிதா அவனைக் கனம் பண்ணுவார் என்று எழுதிய அதே வேதபுத்த கத்திலே "கர்த்தருடையவேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" என்று எழுதியிருப்பதையும் கவனிக்கவும். மயிர் சிலிர்த்து உள்ளம் நடுங்கவில்லையா? இதை அறிந்து தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்குப் புத்தி சொல்லும் போது, "என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத்தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்." (I நாளா. 28:9). என்கிறார். இங்கு உற்சாக மனதோடு சேவியா மல், கர்த்தரை நாம் விட்டுவிட்டால், அவர் நம்மை என்றைக்கும் கைவிடுவார் என்பதை மறந்துவிடவேண்டாம். உற்சாக மன மின்றித் தன்னிடத்தேயுள்ள ஒரு தாலந்தைக்கொண்டு வியா பாரம் பண்ணாமல் "சோம்பலாக" இருந்த பிரயோஜன மற்ற ஊழியக்காரனை, அழுகையும், பற்கடிப்புமுள்ள புறம்பான இருளில் தள்ளியதைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்.

அன்றியும் உற்சாக மனதுடன் சேவிக்க உத்தம இருதயம் தேவை என்பதை மேற்கூறிய வசனத்தில் காண்கிறோம். இந்த உத்தம குணத்தின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறபடி யால் அதை நாம் சிறிது தியானிப்போமாக.

ஆருவதாக, உத்தம குணத்தில் தேவன் பிரியமாயிருக்கிறர். I நாளா. 29:17.

"பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்ருன். அதற்கு நாத்தான்வேல்: "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா" என்ருன் (யோவா. 1:45, 46). இந்தச் சந்தர்ப்பத்தில் நாத்தான்வேல் இயேசுவைக் கனம்பண்ணவில்லை. ஆனல் அவன் இருதயத்தில் இருந்த உண்மை அல்லது அறிவு நாசரேத்திலிருந்து யாதொரு நன்மையும் வராது என்பதாகும். அவன் மனுஷனைப் பிரியப்படுத்தும்படி உண்மையை மறைத்துத் தந்திரமாய்ப் பேசாது நேர்மையாகப் பேசினுன். அவன் இயேசுவை கனம் பண்ணுதிருந்தபோதும், உத்தமத்தில் பிரியப்படும் இயேசு, அவன் உத்தம குணத்தைக் கண்டார். பின்பு அவன் தம்மிடம் வருவதைக் கண்டு, "அவனைக் குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்று சாட்சி பகர்ந்தார். இவ்விதமாய்த் தேவன் உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிருர் என்று I நாளா. 29:17ல் சொல்லப்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டது. உத்தமனுகிய யோபு, "என் வார்த்தைகள் என் இருதயத்தின் உண்மைக்கு ஒத்திருக்கும்" என்று (யோபு 33:3) கூறுகிருர். இவ்விதமாய் நாம் எப்போதும் உத்தமத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

சிலர், யாராயினும் பணம் கடன் கேட்டால் "இப்போது என் கையில் ஒன்றும் இல்லை" என்று சொல்லித் தங்கள் கையில் அப்போது இல்லாதிருந்ததால் உண்மை சொன்னதாகத் தங்களைத் திருப்திப்படுத்திக்கொள்வார்கள். ஆனல்

பெட்டியில் இருப்பது அவர்களுக்குத் தெரியும். கையில் இல்லை என்று சொன்னது உண்மை. ஆனால் பெட்டியில் இருக்கிறது என்பது அவர்கள் இருதயத்திற்குத் தெரியுமானபடியால், இருதயத்தின் உண்மையின்படி நேர்மையாகப் பேசவில்லை. ஆகவே அவர்கள் உண்மை பேசினது போல் தோன்றினாலும், உத்தம குணம் உள்ளவர்கள் அல்லர். இவர்கள்மேல் தேவன் பிரியப்படார். ஆகவே இக்காரியங்களில் உத்தமமாய் இருந்து கர்த்தரைப் பிரியப்படுத்த மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

இயேசுவின் ஜீவியத்திலும் இவ்வுத்தம குணத்திற்குப் பரி-சோதனை வந்தது. ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசுவிடம் வந்து, "நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?" என்று கேட்டார்கள். அதற்கு இயேசு; "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று?" என்று கேட்டார். பரிசேயர் அதற்குச் சரியான பதில் சொல்லத் தயங்கி, "எங்களுக்குத் தெரியாது" என்றார்கள். சாதாரணமாக, இப்படிப்பட்ட உரையாடல்கள் நடைபெறும்போது நாம், "உங்களுக்குத் தெரியாவிட்டால் எங்களுக்கும் தெரியாது" என்பது வழக்கம். அல்லது அவர்கள் சொல்லவில்லையே, அப்படியானால் நாம் மாத்திரம் ஏன் சொல்ல வேண்டும் என்று மனதில் எண்ணித் "தெரியாது" என்பது இயல்பு. அப்படிப் பேசுவது இருதயத்தின் உண்மைக்கு ஒத்த உத்தம குணமன்று. ஆகவே, இயேசு உத்தம குணத்தை நமக்குக் கற்பிக்கும் பொருட்டாக எனக்குத் தெரியாது என்று சொல்லாமல், "உங்களுக்குச் சொல்லேன்" என்றார். (மத். 21:23-27). இதில்

நம்முடைய கர்த்தர் எவ்வளவு கவனமாக இருதயத்தின் உண்மைக்கு ஒத்தபடி பேசி, உத்தம குணத்தைக் காத்துக் கொண்டார்.

மணவாட்டியாகிய சபைக்கு இவ்வித உத்தம குணம் நிச்சயமாக இருக்க வேண்டும். ஏனென்றால் உத்தம குணத்தில் தேவன் பிரியமாயிருக்கிறபடியால், அவளைப் "பிரியமே!" என்று அழைக்கிறார். அது மாத்திரமல்ல, உத்தம குணம் மிக முக்கியமானதால் இக்குணமுள்ள மணவாட்டிக்கு அவர் இன்னும் ஒரு பெயர் கொடுத்து, "உத்தமியே" என்றழைக்கிறார்.

உத்தம குணமுடைய தேவஜனம் சில சமயங்களில் தங்கள் அறியாமையினால் சில தவறுகள் செய்தாலும், தேவன் அவர்களைக் கைவிடாது தம்முடைய வல்லமையை அவர்களிடமும், அவர்கள் மூலமாகவும் விளங்கப் பண்ணுகிறார். (II நாளா. 16:9) இவ்விதமாய் விளங்கப்பண்ணுவதற்கு அவருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கின்றன. ஆகவே நாம் உத்தமர்களாக இருந்து, ஏதாயினும் தொந்தரவில் அகப்பட்டால் நிச்சயமாகவே உத்தமர்களுக்குத் தமது வல்லமையை விளங்கப்பண்ணும் பொருட்டு உத்தர்களைத் தேடித் திரியும் அவர் கண்கள் நம்மைக் கண்டு நமக்கு உதவி செய்யும். அன்றியும், "உத்தமனுக்குக் கர்த்தர் துணை" (II நாளா. 19:11) யானபடியால் எவ்விதச் சூழ்நிலையிலும் பயப்படவும் கலங்கவும் அவசியமில்லை. ஆகவே உத்தம குணத்தை எப்போதும் காக்கத் தேவன் அருள்புரிவாராக.

ஏழாவதாக, நன்மை செய்து பாடுகளைப் பொறுமையோடு சகித்தால் தேவன் பிரியமாயிருக்கிறார்.

I பேதுரு 2:20

ஒருவன் ஆவிக்குரியவனாக ஜீவிக்க மனதாயிருக்கும் போது, அவனுக்குத் துன்பங்கள் உண்டாகின்றன. "தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று II தீமோ. 3:12-ல் காண்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட வேண்டுமென்று எண்ணிப் பார்வோனிடம் கேட்டார்கள். அவன் உடனேயே வைக்கோல் கொடாமல் குறிப்பிட்ட செங்கல்கள் கொடுக்க வேண்டும் என்று கஷ்டப்படுத்தினான். அன்றியும், நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த்தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று அப். 14 : 22-ல் பார்க்கிறோம். இவ்விதமாய்க் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆரம்பம் முதல் முடிவு மட்டும் உபத்திரவங்கள் உண்டு. நாம் நன்மை செய்து அதற்குப் பதிலாகத் தீமையை அனுபவிக்க வேண்டிய பல தருணங்கள் நமக்கு உண்டாகும். அப்போஸ்தலனாகிய பேதுரு தன் முதலாம் நிருபம் 3 : 17-ல், "தீமை செய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" என்கிறார். ஆகவே நன்மை செய்து பாடநுபவிப்பது தேவசித்தமாகும். இவ்வித அனுபவம் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்குத் தேவையான பல காரியங்களுள் ஒன்றாகும். தேவனுடைய இராஜ்யத்திற்குள் போக விரும்பும் ஒருவன் இவ்வித அனுபவத்திலிருந்து தப்பி, ஒளிந்துகொள்ள முடியாது. ஆகவே நன்மை செய்து பாடுபடும்போது சோர்ந்து போகாது இது தேவசித்தம் என்று நம்பிச் சந்தோஷமாயிருங்கள்.

ஆனால் நாமோ தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதால் மாத்திரம் திருப்தியடையாது, அவருக்குப் பிரியமானவற்றைச் செய்து சீயோன் போக விரும்புகிறவர்களானபடியால், பாடுகளை அனுபவிக்கும் விஷயத்திலும் தேவனுக்குப் பிரியமாய்ப் பாடு அனுபவிப்பது எவ்விதம் என்று ஆராய வேண்டியது மிக அவசியமாகும்.

I பேதுரு : 20-ல், "நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்" என்று காண்கிறோம். எனவே ஒருவன் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையின்றி முறுமுறுத்துக் கொண்டு சகிக்கக் கூடும் என்றும், பொறுமையாகச் சகிக்கக் கூடும் என்றும் அறிகிறோம். அப்போஸ்தலர் 5-ஆம் அதிகாரத்தில் கூறியுள்ளபடி அப்போஸ்தலர்கள் கையினால் பல அற்புதங்கள் நிகழ்ந்தன; அவர்கள் பலருக்கும் சுகமளித்தனர். இவர்கள் இவ்விதம் ஜனங்களுக்கு நன்மை செய்த போதிலும், இவர்களைப் பிடித்துச் சிறையில் வைத்தனர். பின்பு அவர்களை அடித்தனர். இவ்விதமாய் நன்மை செய்து பாடு அனுபவித்த அவர்கள், "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய்" என்று 41-ஆம் வசனத்தில் காண்கிறோம்.

சந்தோஷமும் பொறுமையும் இணைந்துவருவன. ஆகவே கொலோ. 1-11-ல் "சந்தோஷத்தோடேகூடிய எல்லாப் பொறுமையும்" என்று வாசிக்கிறோம். இவை இரண்டும் இணைந்துள்ளனவாதலால் அப்போஸ்தலர்கள், நன்மை செய்து பாடுகளைப் பொறுமையாகவும் சந்தோஷமாகவும் சகித்தார்கள்

G.B. Sathyanesan, B.A

என்று அறிகிறோம். இயேசுவும் சகலவிதமான நன்மைகளையும் மானிடருக்குச் செய்து கடைசியாகப் பாடுகளைப் பொறுமையுடன் சகித்தார். எனவே, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார். அன்றியும், "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" என்று I பேது. 2:23-ல் வாசிப்பது இச்சத்தியத்தை நிரூபிக்கிறதன்றோ?

ஆனால் சில தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் செய்த நன்மைக்குப் பதிலாகத் தீமைவரும்போது, கோபித்து முறு முறுக்கிறார்கள். தாவீதும் அவன் மனுஷரும் நாபாலின் மேய்ப்பர்களுக்குச் சுற்றிலும் மதிலாயிருந்து நன்மை செய்தார்கள். ஆனால் நாபால் இதற்குப் பதிலாகத் தாவீதுக்கு விரோதமாய்ப் பேசித் தாவீதை நிந்தித்தான். இதையறிந்த தாவீது பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளாது கோபமடைந்தான். ஆனால் நாபாலின் மனைவி, தாவீதிடம் சென்று சமாதானம் பண்ணினபோது சாந்தமடைந்து பொறுமையாகச் சகித்தான். ஆகவே அவன் கர்த்தரின் பார்வையில் பிரியமுள்ளவனாய்க் காணப்பட்டான். இவ்விதமாகக் கடந்த காலங்களில் நாம் செய்த நன்மைக்குப் பதிலாகத் தீமை வந்த போது கோபித்து அல்லது முறுமுறுத்திருக்கலாம். நாம் அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டுப் புதிய பிரதிஷ்டைகளைப் பண்ணினால், தேவன் அவைகளை மன்னித்து நன்மை செய்து பாடுகளைப் பொறுமையுடன் சகிக்கக் கிருபை அருள்வார்.

வேறுசிலர் இவ்விதச் சூழ்நிலையில் சோர்ந்து போகிறார்கள். ஆகையால்தான் "நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக" என்று கலா. 6:9 ல் பார்க்கிறோம். ஒரு நன்

மையைச் செய்து அதற்குப் பதிலாக வரும் பாடுகளைப் பொறுமையுடன் சகிக்கிறோமா என்று அறிகிறதற்குத் தேவன் பாடுகளை அனுப்புவார். அப்போது சோர்ந்து போகக் கூடாது. "தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்" என்று கலா. 6:9 ல் பார்க்கிறோம். ஒரு நன்மையை விதைத்து அதற்கு வரும் பாடுகளாகிய வெயில், காற்று முதலியவற்றால் சோர்ந்து போகாதிருந்தால் மணிகளால் நிறைந்த கதிரை அறுப்போம். ஆம்! நம் தேவன் எவ்வளவு நல்லவர்! யோசேப்பு தன் சகோதரருக்கு நன்மை செய்தான்; பதிலாகப் பாடுகள் வந்தன. அவைகளை எவ்வித முறுமுறுப்புமின்றிப் பொறுமையுடன் சகித்தான். இந்நிலையில் தீமை செய்த சகோதரர் மறுபடியும் அவனிடம் வந்தனர். "நன்மை செய்வதில் சோர்ந்து போகாத" யோசேப்பு, மறுபடியும் தீமைசெய்த சகோதரருக்கு நன்மைசெய்யத் தீர்மானித்து, பணம் வாங்காது, ஆகாரமும் தானியமும் கொடுத்தான். இவ்விதம் நன்மை செய்து பாடுகளைப் பொறுமையுடன் சகிக்கும் சுபாவம் அவனுக்குள் இருந்து, அவன் தேவனுக்குப் பிரியமானவனாகக் காணப்பட்டபடியால், அவன் அந்நிய தேசத்தில் எல்லோருக்கும் மேலானவனானான். அன்றியும், அவன் மரித்த பின்பும் அவனுடைய சரீரம் சுகந்த வர்க்கத்தால் பாதுகாக்கப்பட்டுப் பின்பு கானானுக்கும் கொண்டு போகப்பட்டது எவ்வளவு பெரிய ஆச்சரியம்! அவன் நன்மையை விதைத்து இளம்பயிரானபோது, வெயில், காற்று இவற்றினால் சோர்ந்துபோகாதபடியால், அவன் அறுப்பு எவ்வளவு மகிமையுள்ளதாயிருந்தது! இவ்விதமாகவே நாமும் நன்மை செய்து பாடு அனுபவிக்கும் போது, பொறுமையுடன் இருப்போமாயின் தேவனுக்குப் பிரியமானவர்களாகி நித்தியத்தில் தேவனால் கனம்பண்ணப்படுவோம்.

இவ்விதம் மேற்கூறியவற்றிலெல்லாம் தேவனுக்குப் பிரியமாயிருந்து, சீயோனை அடையவேண்டும்.

அதிகாரம்-5

மூன்றும் வரிசை, உபத்திரவ காலத்து இரத்தசாட்சிகள். இயேசுவின் இரகசியவருகையில் ஆயத்தமாயிருந்த மணவாட்டி சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு கிருபையின் காலம் முடிவடைகிறது. பின்பு உபத்திரவ காலம் ஆரம்பிக்கிறது. இது ஏழு வருஷங்களுக்கு நீடிக்கும். வானத்திலே சஞ்சரிக்கும் பிசாசும், அவனுடைய தூதர்களும், மிகாவேலினாலும் அவனது சேனைகளினாலும் பூமியிலே விழும்படி தள்ளப்படுகிறார்கள். (வெளி. 12:7-9). இதன்பின் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை இப்பூமியில் 7 வருஷங்கள் நடைபெறும். அவன் பூமியிலிருக்கிற சகல ஜனங்களையும், விசேஷமாகக் கைவிடப்பட்டுப் போன சபையையும், எல்லாக் கிறிஸ்தவர்களையும் உபத்திரவப்படுத்துவான். இதைக் குறித்துத்தான் வெளி. 12:13-17-ல் வலுசர்ப்பமானது அந்த ஆண் பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயையும், அவளுடைய சந்ததியான மற்றவர்களையும் துன்பப்படுத்தினது என்று வாசிக்கிறோம். இந்த உபத்திரவம் முதல் 3½ வருஷங்கள் (1260 நாட்கள்) இருக்கும் (வெளி12:6). அக்காலத்திலுள்ள அரசியல் அதிகாரங்கள் மூலமாகவும், விழுந்துபோன சபைகள் மூலமாகவும் அந்திக் கிறிஸ்து வல்லமையாகக் கிரியை செய்து அக்காலத்திலுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களையும் மிகவும் துன்பப்படுத்துவான். அந்திக் கிறிஸ்துவாகிய மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரும் அக்காலத்தில் கொலை செய்யப்படுவார்கள். மேலும் அக்காலத்தில் "சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமை இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது. அதின்

நாமத்தையாவது, அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவரும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் கட்டளை பிறக்கும். அதினிமித்தம் அநேக உண்மையான கிறிஸ்தவர்கள் பசியினாலும், பட்டினியிலும், தாகத்தினாலும் வருந்தி மடிவார்கள், (வெளி. 13:17;20:4).

கர்த்தருக்கு உண்மையாயிருக்கும் கிறிஸ்தவர்கள் அந்திக் கிறிஸ்துவினால் கொலை செய்யப்பட்டு இரத்தசாட்சியாவார்கள். (வெளி. 13:17,15). "உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்" என்று வெளி. 13:18ல் வாசிக்கிறோம். இந்த ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிருப்பவர்கள் யார்?

இரண்டு விதமான ஜீவபுஸ்தகங்களைப் பற்றி வேதத்தில் கூறப்பட்டுள்ளது. (1) ஜீவ புஸ்தகம் (வெளி. 20 : 12, 15) (2) ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புஸ்தகம் (வெளி. 13:8) (1) மரித்தோர் உயிரோடெழுந்ததும் ஜீவ புஸ்தகம் திறக்கப்பட்டது (வெளி 20:12) ஆயிர வருஷ அரசாட்சிக்குப் பின்னரே வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு நடக்கிறது. அப்பொழுது இரட்சிக்கப்பட்டவர்களும், பாவிகளுமே எழும்புவார்கள். ஏனெனில், அதற்கு முன்னதாக நடந்த உயிர்த்தெழுதல்களில் மணவாட்டிக் கூட்டத்தாரும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், இரத்தசாட்சிகளும்கூட உயிரோடெழுந்தாயிற்று. ஆகையினால் வெளி. 20:15-ல் சொல்லப்பட்டபடி, "ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்". இந்த ஜீவ

புஸ்தகத்திலே எழுதப்பட்டவர்கள் மணவாட்டிக்கூட்டத்தாராய் இருக்கமுடியாது. இவர்கள் இரட்சிப்பின் அனுபவத்தை மாத்திரம் பெற்றவர்களே. லூக்கா 10:20-ல் இயேசு தமது சீஷர்களிடம், "ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக சந்தோஷப்படுங்கள்" என்றார். இப்படி இயேசு கூறின வேளையில் சீஷர்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கவில்லை. இரட்சிப்பின் அனுபவம் மட்டுமே அவர்களுக்கிருந்தது. எனவே ஒருவன் இரட்சிக்கப்பட்டவுடனே அவனுடைய பெயர் பரலோகத்தில் எழுதப்படுகிறது என அறிகிறோம். ஆதலால் வெள்ளைச் சிங்காசனத்து நியாயத் தீர்ப்பின் சமயம் ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்களாய் காணப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களும், ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்கள் துன்மார்க்கரும், பாவிகளுமே என்று அறிந்து கொள்ளலாம்.

(2) வெளி. 21:27-ல் "ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் (புதிய எருசலேமில் அல்லது தேவனுடையநகரில் அல்லது தேவனுடைய இராஜ்யத்தில்) பிரவேசிப்பார்கள் என்றுவாசிக்கிறோம். இயேசு தாமே ஒருவன் தேவனுடைய இராஜ்யமாகிய புதிய எருசலேமில் பிரவேசிக்க வேண்டுமாயின், அவன் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவனாக இருத்தல் வேண்டுமென்று யோவான் 3:5-ல் உரைத்திருக்கிறார். வெளி. 21-ம் அதிகாரத்தில் புதிய எருசலேமை அல்லது ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியைக் குறித்தே யோவான் அப்போஸ்தலன் விளக்கி கொண்டுபோகிறார். இந்த மணவாட்டிக் கூட்டத்தார் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றவர்கள், எனவே, பரிசுத்தாவியின்

அபிஷேகம் பெற்றவர்களின் பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது என்று அறிந்து கொள்ளலாம். பரிசுத்தாவியின் அபிஷேகம் பெருத யாவரும் அல்லது ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத யாவரும், உபத்திரவ காலத்தில் பெலனும் தைரியமும் இல்லாதபடியினுல், இயேசுவை மறுதலித்து அந்திக்கிறிஸ்துவை வணங்குவார்கள், ஆனுல் பரிசுத்தாவியைப் பெற்று. ஆட்டுக்குட்டியின் ஜீவ புத்தகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டிருப்பினும், பூரணப்படாமல் இயேசுவினுடைய இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படாது கைவிடப்பட்டவர்கள் உபத்திரவ காலத்தில் வைராக்கியமடைந்து இயேசுவை மறுதலியாமல் இரத்த சாட்சிகளாக மரிக்கத் துணிவார்களென்று எண்ணலாம். இவர்களைக் குறித்து வெளி. 7 : 14-ல், "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. உபத்திரவ காலத்தில் முதல் 3½ வருஷத்தில் மரித்த இந்த இரத்த சாட்சிகளை உயிர்ப்பித்துத் தம்மிடத்தில் சேர்த்துக் கொள்ளும்படியாக, இயேசு வெண்மையான மேகத்தின்மேல் உட்கார்ந்தவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடையவராய்க் காணப்படுவார். (வெளி. 14 : 14) "அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னன். அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின் மேல் நீட்டினுர். பூமியின் விளைவு

அறுப்புண்டது.'' (வெளி. 14 : 15-16). இதுதான் 'அறுப்பு'' (Harvest) என்று சொல்லப்படும் (லேவி. 23 : 22). இது **இயேசுவின் இரண்டாம் வருகையின் இரண்டாம் பகுதி.** அதாவது மத்தேயு 25 : 1-7-ல் சொல்லப்பட்டது போல, மணவாளன் மணவாட்டியோடு வரும்போது, அவருக்கு எதிர் கொண்டு போன ஐந்து புத்தியுள்ள கன்னிகைகளைப் போல அந்த அறுப்பு இருக்கிறது. மத். 25 : 1-ல் ''மணவாட்டியோடு'' என்ற வார்த்தை நமது வேதத்தில் காணப்படாவிட்டாலும், அது கிரேக்கு மூல பாஷையிலும், மாபெட் திருத்துதலிலும் (Moffat Translation), ரோமன் கத்தோலிக்கப் புதிய திருத்து தலிலும் (R. C. new Translation) காணப்படுகிறது. அதாவது மணவாட்டியைச் (பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்களை) சேர்த்துக் கொண்ட பிறகு இயேசு 3½ வருஷங்களுக்குப் பின் நடுராத்திரியில் அதாவது உபத்திரவ காலமாகிய 7 வருஷத்தின் மத்தியில் கன்னிகைகளுக்காக வருகிருர். யார் இந்தக் கன்னி கைகள்? அவர்கள் தாம் உபத்திரவ காலத்தில் முதல் 3½ வருஷ காலங்களில் மரித்த இரத்த சாட்சிகள். இவர்கள் மணவாட்டி யல்லர். எப்படியெனில் இங்குச் சொல்லப்பட்ட கன்னிகைகள் புத்தியுள்ளவர்களாக, எண்ணெய் உடையவர்களாக இருந் தாலும் இவர்கள் ஒரு ஆளாகச் சொல்லப்படாமல் ஐந்துபேராகச் சொல்லப்பட்டிருக்கிறது. மணவாட்டியோ அப்படியல்லள். அவள் கற்புள்ளவளாகவும் (II கொரி. 11 : 2), ஒரே ஆளாகவும் (உன். 6 : 9) சொல்லப்பட்டிருக்கிருள். ஏனெனில் பூரணம் ஒன்றே. ஆகையால் மணவாட்டியாகிய சபை பலராக இருந் தாலும், அவர்களெல்லாரும் ஆவியின் ஒருமைப்பாட்டிலும் உபதேசத்திலும், குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறி விலும், பிரதிஷ்டையிலும் ஒருமைப்பட்டுக் கிறிஸ்துவின் நிறை வான வளர்ச்சிக்கு வந்திருக்கிருர்கள். (எபே. 4:3,11). இதை

G.B. Sathyanesan. B A

குறித்து இயேசு; "நாம் ஒன்றுயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றுயிருக்குர்படி. நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், ... வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவா 17.22-24) என்றுர். ஆகையால் இங்குக் காணும் புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளும் கிறிஸ்துவுக்குள் தேறினவர்களல்லர். மேலும் இவர்களைக் குறித்து, "மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லோரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்" எனச்சொல்லப்பட்டிருக்கிறது. (மத். 25:5) புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளும் சேர்ந்துதான் தூங்குகிருர்கள். காரணமென்ன? ஆவியினுல் நிறைந்து ஜீவிக்காதபடியினுலும், உள்ளான மனுஷனில் பெலன் இல்லாதபடியினுலும் உபத்திரவத்தின் மத்தியில் தங்கள் மணவாளனுக்காக விழித்திருந்து, காத்திருக்க முடியவில்லை. பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக இயேசுவின் சீஷர்கள் ஒரு மணி நேரமாவது இயேசுவோடுகூட விழித்திருந்து ஜெபிக்க முடியாமல் நித்திரைபண்ணினுர்கள். (மத். 26:40) ஏனெனில் அச்சமயம் அவர்கள் பரிசுத்தாவியைப் பெறுமலிருந்தபடியால் உள்ளான பெலனில்லை. இயேசுவின் பாடுகள், மரணத்தைக் குறித்துக் கேள்விப்பட்டும், அவருடைய வியாகுலத்தைக் கண்டும், தாங்கமுடியாமல் துக்கமடைந்து நித்திரைபண்ணினுர்கள் (லூக் 22:45, 46). ஆனுல் மணவாட்டியான சபை மணவாளனுன இயேசுவைச் சந்திக்க எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருக்கிறது. (லூக். 21:36). இயேசுவின் இரகசிய வருகையில் போகாது கைவிடப்பட்ட, இரத்தசாட்சிகளான பரிசுத்தவான்களைத் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ள இயேசு உபத்திரவ காலத்தின் முதல் 3½ வருஷங்களின் முடிவிலே வருகிருர்.

"ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது" (மத் 25:10) "கதவும் அடைக்கப்பட்டது" என்று சொல்லப் பட்டதினால், இந்தக்காலத்துக்குப் பின்பு மனுஷர்கள் இரட்சிப் படைய வழியில்லை என விளங்குகிறது. இதைக் குறித்துக் கீழே விவரமாகக் காணலாம்.

உபத்திரவ காலத்தின் முன் பகுதியான 3½ வருஷங்களில் அந்திக்கிறிஸ்து யூதர்களோடு கள்ளத்தனமாக ஒரு உடன் படிக்கைப்பண்ணி அவர்களுக்குச் சாதகமாக அநேக காரியங் களைச் செய்வான். (தானி. 9:27). யூதர்களும் அந்திக்கிறிஸ்து தான் மெய்யான மேசியா என்று எண்ணி வருவர்.

அதிகாரம்-6

நான்காம் வரிசை — இரண்டு சாட்சிகள் ஏனோக்கும், எலி யாவும் (வெளி 11:3 - 12). இவ்விரண்டு பேரும் உபத்திரவ காலத்தின் பின் பகுதியான 3½ வருஷ காலத்தில் வெளிப்படு வார்கள். இங்குச் சொல்லப்பட்ட இவ்விரண்டு சாட்சிகளும் எலி யாவும், மோசேயும் என்று சிலர் கூறுவர். அது சரியன்று ஏனெனில், "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படை வதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற(து)" என்று எபி ரேயர்9:27-ல் சொல்லப்பட்டபடி மரணத்தைக் காணாதபடி உயி ரோடு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கும், எலியாவும் மறுபடி யும் "மகாஉபத்திரவ காலத்தில்" இப்பூமிக்கு வந்து, தங்களது ஊழியத்தை நிறைவேற்றிப் பின்பு மரிக்க வேண்டியது அவசிய மாயிருக்கிறது. இது இப்படியிருக்க மரித்த மோசே மறுபடி யும் உபத்திரவ காலத்தில் இப்பூமிக்கு வருவார் என்று சொல் வது

தவறு. ஏனோக்கு மனசாட்சியின் யுகத்திலிருந்தவர். எலியா பழைய ஏற்பாட்டுக் காலத்திலுள்ள தீர்க்கதரிசிகளில் ஒருவர். சகரியா 4:11-14ல் சொல்லப்பட்ட. "பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே" (வெளி.11:4). இவர்கள் உபத்திரவகாலத்தின் பின் பகுதியாகிய 3½ வருஷத்தின் துவக்கத்தில் இவ்வுலகில் வந்து. அக்காலம் (1260 நாட்கள்) முழுவதும் சுவிசேஷத்தை ஜனங்களுக்கு வல்லமையோடும், அற்புத அடையாளங்களோடும் அறிவித்து, மனந்திரும்பும்படியாகவும், அந்திக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு உட்படாமல் இருக்கும்படிக்கும் எச்சரிப்பார்கள். (வெளி. 11:3-6) இந்தக் காலம் "மகா உபத்திரவத்தின் காலம்" அல்லது "யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்" (எரே. 30:7) என்று சொல்லப்படும். இக்காலத்தில் அந்திக் கிறிஸ்து யூதரோடு பண்ணியிருந்த உடன்படிக்கையை முறித்து விட்டு அவர்களுக்கு விரோதமாக எழும்பி அவர்களை மிகவும் உபத்திரவப்படுத்துவான். தானி. 9:27-ல் சொல்லப்பட்டபடி, அந்திக்கிறிஸ்து "ஒருவாரம்" அதாவது 7 வருஷங்கள் யூதர்களோடு தந்திரமாக உடன்படிக்கைபண்ணி அவர்களுக்கு அனுகூலமாக இருப்பான். இவன்தான் மெய்யான மேசியா என்று யூதர்கள் எண்ணுவார்கள். ஆனால் உபத்திரவ காலத்தின் முதல் 3½ வருஷங்களின் முடிவிலே, கர்த்தராகிய இயேசு வெண்மையான மேகத்தின் மேல் உட்கார்ந்தவராய்த் தமது சிரசின் மேல் பொற்கிரீடத்தையும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடையவராகக் காணப்படும் காட்சியைக் (வெளி. 14:14) கண்டவுடனே யூதர்கள் பிரமிப்படைந்து, தங்களது பெரும் பிழையை உணர்வார்கள். அதே சமயத்தில் அந்திக்கிறிஸ்து தனது உண்மையான ரூபத்தை வெளிப்படுத்துவான். எப்படியெனில், "அந்தவாரம்

பாதி சென்ற போது, பலியையும் காணிக்கையையும் ஒழி பண்ணுவார்''. அதாவது 7 வருஷங்களின் மத்தியிலே, (மு 3½ வருஷங்கள் கழிந்தவுடனே) அவன் யூதர்களுக்கு விரோ மாக எழும்பி தேவனுக்குச் செலுத்த வேண்டிய பலியை காணிக்கையையும் தடை செய்வதுமல்லாமல் அவன் எதிர் நிற்கிறவனும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக் படுவதெதுவோ அவை யெல்லாவற்றிற்கும் மேலாகத் தன் உயர்த்துகிறவனும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போ உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக் வனும் இருப்பான். (II தெச. 2:4) இநதச் சம்பவத்தை கண்டவுடனே, யூதர்கள் மிகுந்த ஏமாற்றமும் திகலுமடைந் தங்கள் பிழையை உணர்ந்து அந்திக்கிறிஸ்துவுக்கு எதிர் நிற்பார்கள். அப்பொழுது சகரியா 12 : 10-ல் சொல்லப்பட் நிறைவேறும். கர்த்தர் தாவீது குடும்பத்தாரின் மேலு எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியைய விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவார். அப்பொழு அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்த்து, ஒரு தன் ஒரே பேருனவனுக்காகப் புலம்புகிறது போல அவருக்கா புலம்பி, ஒருவன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோ அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். ஏனெனில் இதுவ யூதர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மெய்யா மேசியாவென்ருவது, இரட்சகரென்ருவது, சர்வ வல்லமையுள் தேவனென்ருவது, விசுவாசியாமலும் ஏற்றுக்கொள்ளாம இருந்தனர். இயேசுவின் காட்சியைக் கண்ட பின்பு அவர் கண்கள் திறக்கப்பட்டன. ஆனபடியினுல், அவர்கள் தங்கள் பெரும் பிழையை உணர்ந்து துக்கப்பட்டதுமல்லாமல், தங் மோசம் போக்கின அந்திக்கிறிஸ்துவோடு எதிர் நிற்பார்கள் அவன் இவர்களை மிகவும் உபத்திரவப்படுத்துவா

தானியேலின் எழுபது வாரங்கள்

இயேசு ஒலிவ மலையில் சீஷர்களோடு உபத்திரவக் காலத்தைக் குறித்துப் பேசுகையில், தானியேலின் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிட்டு, "வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்" என்றார். (மத். 24 : 15; தானி. 9 : 24-27)ல் இது வேதத்தில் உரைக்கப்பட்ட மிகவும் முக்கியமான ஒரு வெளிப்படுத்தலே யாகும். ஏனெனில் இதில் இயேசுவின் முதலாம் வருகையின் காலமும், அவரது சிலுவையின் மரணமும், அந்திக்கிறிஸ்துவின் வருகையின் காலமும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

இந்தத் தரிசனம் எந்தக் காலத்தில் தானியேலுக்கு அளிக்கப்பட்டது என்பதைத் தானி. 9 : 1-ல் காணலாம். மேதியனாகிய தரியு இராஜா பாபிலோனில் அரசாண்ட முதலாம் வருஷத்தில், அதாவது பாபிலோன் விழுந்த அதே வருஷத்தில் கி. மு. 538-ல் இந்தத் தரிசனம் கிடைத்தது. தானியேல் எரேமியா தீர்க்கதரிசனத்தைப் படித்து, அதன் மூலமாகத் தனது ஜனத்தின் "சிறையிருப்பு" சீக்கிரமாக முடியப்போகிற தென்று அறிந்து கொண்டான். (எரே. 25 : 11) எப்படி யெனில் இந்தச் சிறையிருப்பு கி. மு. 606-ல் துவக்கி 68 வருடங்கள் கழிந்து விட்டன. இன்னும் 2 வருடங்கள்தான் மீதிருந்தன. இதை அறிந்தவுடனே தானியேல் உற்சாகமுற்று உபவாசம் பண்ணிக் கர்த்தரை நோக்கி ஊக்கமாகத் தனது ஜனத்துக்காகவும், பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்காகவும் ஜெபித்தான். அப்போது அவனுக்கு அறிவை உணர்த்தும்படி காபிரியேல் தூதனைத் தேவன் தரிசனத்தில் அவனிடத்தில் அனுப்பினார் தானியேல் 70 வருஷ சிறையிருப்பின் முடிவைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, காபிரியேல்

அதைக் குறித்து அவனுக்கு வெளிப்படுத்தினதுமல்லாமல், அதைத் தவிர இன்னொரு முக்கிய விஷயத்தையும் அதாவது 70 வாரங்களின் இரகசியத்தையும் வெளிப்படுத்தினான்.

இந்த 70வாரங்கள் தானியேலின் ஜனமாகிய யூதர்களுக்கு மாத்திரம் நியமிக்கப்பட்டிருக்கிறதேயன்றிப் புற ஜாதியாருக்கோ அல்லது சபைக்கோ சம்பந்தமானவையல்ல. இந்த 70 வாரங்களுக்குள் தேவனுடைய ஜனமாகிய யூதர்கள் சிட்சிக்கப்பட்டு அவர்களது மீறுதல்கள், பாவங்கள், அக்கிரமங்கள் யாவும் மன்னிக்கப்பட்டு தங்களுடைய சொந்த நாடாகிய பலஸ்தீனாவில் மறுபடியும் நித்திய நீதியோடு நிலைநிறுத்தப்பட வேண்டும். இவ்விதமாக 70வாரங்களுக்குப் பின்பு ஆயிரம் வருஷ அரசாட்சி இப்பூமியில் நடைபெறுகிறது.

இந்த 70 வாரங்களும், ஏழு எழுபது வருஷங்களாக அல்லது 490 வருஷங்களாகத் தீர்க்கதரிசனக்கணக்கின்படி கணக்கிடப்பட்டிருக்கின்றன. (எசேக். 4:6) கானானை வேவு பார்க்க 40 நாட்கள் சென்றன. ஆனால் இஸ்ரவேலர் விசுவாசமில்லாமல் முறுமுறுத்துக் கீழ்ப்படியாமையுள்ளவர்களாய்த் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியால், கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வருடமாக அவர்களுக்கு மாற்றப்பட்டது. (எண் 14:34) இந்த 70 வாரங்கள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (தானி. 9:25, 27) அதாவது (1) 7 வாரங்கள் = 49 வருஷங்கள் (2) 62 வாரங்கள் = 434 வருஷங்கள் (3) 1 வாரம் = 7 வருஷங்கள். "எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்" என்று தானி. 9:25-ல் வாசிக்கிறோம்.

எருசலேமைத் திரும்பக் கட்டுகிறதற்கான கட்டளை பெர்சியா இராஜாக்களால் 3 தடவை பிறப்பிக்கப்பட்டதை நாம் வேதத்தில் காண்கிறோம். அவை யாவன : (1) கி. மு. 536-ல் கோரேஸ் ராஜாவினாலும் (II நாளா. 36:22-23; எஸ்ரா 1:1-4)-(2) கி. மு. 519ல் தரியு ராஜாவினாலும் (எஸ்ரா 6:6-12)–(3 கி மு 454-ல் அர்தசஷ்டா ராஜாவினாலும் (எஸ்ரா 7:11-26, நெகே. 2:1-8) பிறப்பிக்கப்பட்டன. இவைகளில் கடைசியாக அர்த சஷ்டா ராஜாவினால் கி. மு. 454ல் கொடுக்கப்பட்ட கட்டளை தான் பிரதானமானது. இந்த வருஷத்திலிருந்து மேசியா வருமட்டும் 7 வாரமும், 62 வாரமும் செல்லும் என்று வாசிக்கிறோம். (தானி. 9:25) அப்படியாயின் (7+62) = 69 வாரங்கள் அல்லது 483 வருஷங்களைக் கி. மு. 454-லுடன் சேர்க்கும் போது இயேசு இவ்வுலகில் தோன்றித் தமது ஊழியத்தைத் துவக்கிய வருஷமாகிய கி. பி. (29+1) = 30 வருகிறது. இதற்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுகிறார் என்று தானி. 9:26-ல் வாசிக்கிறோம். இயேசுவின் சிலுவையின் மரணம் ஏறக்குறைய கி. பி. 34-ல் நடந்ததென்பதை நாம் அறிவோம்.

இதற்குப் பின்பு புறஜாதியாரின் காலம் ஆரம்பிக்கிறது. இது 69 ஆம் வாரத்துக்கும், 70 ஆம் வாரத்துக்கும் இடையிலுள்ள காலம். இதைக்குறித்துத் தானியேலுக்கும் மற்றப் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும் எந்தவிதமான வெளிப்படுத்தலும் கொடுக்கப்படவில்லை. இதுதான் சபையின் காலம் அல்லது கிருபையின் காலம். இது ஒரு இரகசியம். இது துவக்கி இப்போது ஏறக்குறைய 2000 வருடங்கள் சென்று விட்டன. இயேசுவின் இரகசிய வருகையோடு இந்தக்காலம் முடிவடையும்.

இதற்குப் பின்பு தானியேல் 9:27-ல் சொல்லப்பட்ட கடைசி ஒரு வாரமாகிய 70-வது வாரம் ஆரம்பிக்கிறது. அது பயங்கர உபத்திரவ காலயாகிய 7 வருஷங்கள். இந்த வசனத்தில் "அவர்" என்று சொல்லப்பட்டது 26-ஆம் வசனத்தில்சொல்லப் பட்ட "வரப்போகிற பிரபு" அல்லது அந்திக்கிறிஸ்துவேயாகும். அவன் யூதரோடு தந்திரமாக அனுகூலமாக இருப்பதுபோல 7 வருஷ காலத்துக்கென்று உடன்படிக்கை பண்ணி, அந்த வாரத்தின் மத்தியில் அதாவது 3½ வருஷங்களின் முடிவில் தான் பண்ணிய உடன்படிக்கையை மீறி யூதர்களை மிகவும் துன்பப் படுத்துவான்.

இதைக் குறித்து இயேசு மத். 24:15-26-ல் தெளிவாகக் கூறுகிறர். "உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித் திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்தஉபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப் படாதிருந்தால், ஒருவனுகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்."

அந்த நாட்களில் இரண்டு விதங்களில் பூமியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் மகாகொடிய உபத்திரவங்கள் உண்டாகும். ஒன்று தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த ஏழு கோபக் கலசங்கள், அந்திக் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்ட பூமியின் குடிகள்மேல் ஊற்றப்படும். (வெளி. 16 ம் அதி.) மற்றென்று மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்காதவர்களுக்கு அந்திக் கிறிஸ்துவினுல் சொல்லிமுடியாத உபத்திரவம் உண்டாகும்.

இந்தக் காலத்தில் மனுஷர்கள் இரட்சிப்படைய வழியில்லை. ஏனெனில், தேவ கோபாக்கினை இப்பூமியில் ஊற்றப்படுகிற

படியால், மனுஷர்கள் அதனிமித்தம் பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல் தங்கள் கிரியைகளை விட்டு மனந் திரும்பவில்லை என்று வெளி. 16:9,11,21-ல் வாசிக்கிறோம்.

இயேசுவினுடைய இரகசிய வருகையில் "ஆண்பிள்ளை" அதாவது பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, கிருபையின்காலம் அல்லது சபையின் காலம் முடிவடைந்து, இவ்வுலகில் 7 வருஷ உபத்திரவகாலம் ஆரம்பிக்கிறது. இவைகளைக் குறித்து ஏற்கனவே நாம் சுருக்கமாகப் பார்த்தோம். இக்காலத்தில் நடக்கும் சம்பவங்களை இனிமேல் சிறிது விபரமாகப் பார்ப்போம். இவைகளை இரண்டு விதமாக-யூதர்களின் சம்பந்தமாகவும்(வெளி,6-11அதிகாரங்கள்) புதிய ஏற்பாட்டுச் சபையின் சர்பந்தமாகவும் (வெளி. 12-19 அதிகாரங்கள்) பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

முதல் $3\frac{1}{2}$ வருஷங்கள்

யூதர்களைப் பற்றிய நோக்கு (Jewish Vision)

(1) **வெள்ளைக் குதிரை.** (வெளி. 6:1-2) இதின் மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; ஆனால் அவனிடத்தில் அம்புகள் இல்லை. இது கொடிய வஞ்சகத்தைக் காட்டுகிறது. பார்வைக்கு நீதி, நியாயம்போலத் தோன்றினாலும், அக்காலத்தில் ஒரு தந்திரமும், வஞ்சகமுமான ஆளுகை ஏற்படும்,

வெளி. 19 : 11-16-ல் மற்றொரு வெள்ளைக் குதிரையைக் காண்கிறோம். அதன்மீதமர்ந்து இயேசு உண்மையும் சத்தியமு முள்ளவராய்ப் பரலோகத்தின் சேனைகளோடு அர்மகெதோன் யுத்தத்துக்கு வருகிறார்.

(2) **சிவப்பான குதிரை**. (வெளி. 6 : 4) இதின் மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது

முதலில் நீதி, நியாயம் போலத் தோன்றின வஞ்சகமான ஆளுகை, பின்பு பட்டயத்தினால் யுத்தம் செய்கிற கொடூரமான ஆளுகையாக மாறுகிறது.

(3) **கறுப்புக் குதிரை**. (வெளி. 6 : 5-6) பின்பு யுத்தத்தின் பலனாகக் கொடிய பஞ்சம் ஏற்படுகிறது. இக்காலத்தில் யூதர்கள், அந்திக்கிறிஸ்துதான் மேசியா என்றெண்ணி, அவனோடு உடன்படிக்கை பண்ணியிருப்பதால் அவர்கள் எவ்விதக் குறைவுமின்றி வாழ்ந்து எருசலேமில் தேவாலயத்தை மறுபடியும் கட்டுவார்கள். ஆனால் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குட் படாமல் எதிர்த்து நிற்பவர்கள் பஞ்சத்தினால் மிகவும் கஷ்டப் படுவார்கள்.

(4) **மங்கின நிறமுள்ள குதிரை**. (வெளி. 6:7-8) இதன் மேல் ஏறியிருந்தவனுக்கு "மரணம்" என்று பெயர். பாதாளம் அவன் பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும் பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

சபையைப் பற்றிய நோக்கு. (Church Vision)

வலுசர்ப்பம் : (Dragon) வெளி. 11 : 3-4. சாத்தான் ஆதி முதற்கொண்டு ஜனங்களை வஞ்சிக்கிறான். "சர்ப்பமானது

தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது'' என்றும் (II கொரி. 11 : 3), அவன் ''உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு'' என்றும் (வெளி. 12 : 9). ''சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே'' என்றும் (II கொரி. 11 : 14) வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வெளி 12:3-4-ல் அவன் தன் தலையினாலல்ல, தன் வாலினால் நட்சத்திரங்களைப் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்த ⅓ பங்கு பரிசுத்தவான்களை இழுத்துப் பூமியில் விழத்தள்ளினான் என்று பார்க்கிறோம் பரி. பவுலும் சாத்தானுடைய ''தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே'' என்கிறார். . (II கொரி. 2:11) இக்காலத்தில் ''சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் ' அனுப்புவார்'' (II தெச. 2:11-12),

முதலாம் மிருகமாகிய அந்திக்கிறிஸ்து. (வெளி 13: 1- 10) இது வலுசர்ப்பத்தினிடத்திலிருந்து மிகுந்த பலத்தையும், சிங்காசனத்தையும், அதிகாரத்தையும் பெற்றுக் கைவிடப்பட்ட பரிசுத்தவான்களோடு யுத்தம் செய்து. அவர்களை ஜெயிக்கிறது. அதாவது பரிசுத்தவான்கள் அக்காலத்தில் இயேசுவையும், சத்தியத்தையும் மறுதலியாமல் இரத்த சாட்சிகளாக மரிக்கிறார்கள். இந்த முதலாம் மிருகம் சாத்தானுடைய வல்லமையைப் பெற்ற ஒரு பயங்கர அவதாரமென்றும், அதனுடைய இலக்கம் 666 என்றும் காண்கிறோம். (வெளி. 13 : 18).

இரண்டாம் மிருகமாகிய கள்ளத்தீர்க்கதரிசி (வெளி. 13 : 11- 18). இது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பான இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து வலுசர்ப்பத்தைப் போலப்

பேசினது. இது அநேகஅற்புதங்களைச் செய்து யாவரும் அந்த முதலாம் மிருகத்தை வணங்கும்படிச் செய்தது. அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது, அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளாதவர்கள் வாங்கவும், விற்கவும் முடியாதபடிச் செய்தது. ஆகையால் இதற்கு எதிர்த்து நிற்பவர்களெல்லாரும் கொடிய பஞ்சத்தினுல் வாதிக்கப்படுவார்கள்.

சிவப்பான மிருகமும், அதின் மேல் ஏறியிருந்த ஸ்திரீயும். (வெளி. 17, 18 அதிகாரங்கள்). இந்த மிருகத்துக்கு வெளி. 13:1-3ல் சொல்லப்பட்ட மிருகத்தைப் போல 7 தலைகளும், 10 கொம்புகளும் இருப்பினும் இது வேருென்ருகும். எப்படியெனில் வெளி 13-ல் சொல்லப்பட்டுள்ள மிருகத்தின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாகக் காயப்பட்டிருந்தாகவும், அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. (வெளி. 13 : 3) வெளி 17ல் காணும் மிருகம் அப்படியன்று. வெளி. 17-ல் கூறப்பட்டுள்ள மிருகத்தின் 7 தலைகளும் 7 மலைகளென்றும், 10 கொம்புகளும் 10 இராஜாக்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (வெளி. 17 : 9, 12) இவர்கள் இயேசுவோடு யுத்தம் செய்து தோற்கடிக்கப்படுகிருர்கள். (வெளி 17 : 14).

இந்த மிருகத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் ஸ்திரீ உலக பிரகாரமான விழுந்துபோன பொய்யான சபையைக் காட்டுகிறது. அந்த மிருகத்தின் 7 தலைகளும், 7 மலைகளைக் குறிக்கிறபடியால் 7 மலைகள்மேல் கட்டப்பட்ட உரோமாபுரி நகரத்தில் தோன்றிய ரோமன் கத்தோலிக்க சபையை இங்குக் காண்கிருேம். இந்தப் பொய்யான சபை, கடந்த காலங்களில் கோடிக்கணக்கான

கிறிஸ்தவர்களைப் பலவகைகளில் உபத்திரவப்படுத்தி, வதைத்துக் கொன்றூர்களென்பதைச் சரித்திரத்தின் மூலமாக யாவரும் அறிவர். இதைக் குறித்து விவரமாக "இரத்த சாட்சிகள்" "மகா பாபிலோன்" என்ற தலைப்புக்களின் கீழ்ச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

மகா உபத்திரவகாலம்

7 எக்காளங்கள்

(1) **முதலாம் தூதன் எக்காளம் ஊதினுன்.** (வெளி 8:7) அப்பொழுது இரத்தங் கலந்த கல்மழையும், அக்கினியும் உண்டாகி, **பூமியிலே** கொட்டப்பட்டது. அதினுல் மரங்களில் ⅓ பங்கு வெந்து போயிற்று பசும்புல்லெல்லாம் எரிந்து போயிற்று

(2) **இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினுன்.** (வெளி. 8:8-9). அப்போது அக்கினியால் எரிகிற பெரியமலை போன்றதொன்று **சமுத்திரத்திலே** போடப்பட்டது; அதினுல் சமுத்திரத்தில் ⅓ பங்கு இரத்தமாயிற்று. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் ⅓ பங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் ⅓ பங்கு சேதமாயிற்று.

(3) **மூன்றும் தூதன் எக்காளம் ஊதினுன்.** (வெளி 8:10-11) அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் ⅓ பங்கின் மேலும், நீரூற்றுகளின் மேலும் விழுந்தது. அந்த நட்சத்திரத்துக்கு எட்டி என்று பெயர். அதினுல் தண்ணீரில் ⅓ பங்கு எட்டியைப்போல் கசப்பாயிற்று. இப்படிக் கசப்பான தண்ணீரினுல் மனுஷரில் அநேகர் செத்தார்கள்.

(4) **நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்** (வெளி 8:12) அப்பொழுது **சூரியனில்** $\frac{1}{3}$ பங்கும், **சந்திரனில்** $\frac{1}{3}$ பங்கும், **நட்சத்திரங்களில்** $\frac{1}{3}$ பங்கும் சேதப்பட்டது; அவற்றவற்றில் $\frac{1}{3}$ பங்கு இருளடைந்தது; பகலிலும் $\frac{1}{3}$ பங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று.

(5) **ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்** (வெளி.9:1-12). அப்பொழுது பாதாளக்குழி திறக்கப்பட்டு, அதிலிருந்து வெட்டுக்கிளிகளைப் போன்ற பிசாசின் சேனைகள் புறப்பட்டு வந்து பூமியின் புல்லையும், பசுமையான எந்தப் பூண்டையும், எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் **தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷர்கள் யாவரையும்** சேதப்படுத்தின. இவைகளுக்கு மனுஷரைக் கொலை செய்யும்படிக்கு உத்தரவு கொடுக்கப்படாமல், அவர்களை 5 மாதமளவும் வேதனைப்படுத்தும்படிக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. அவைகள் செய்யும் வேதனை, தேளானது மனுஷரைக் கொட்டும்போது உண்டாகும் வேதனையைப் போலிருக்கும். அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள்; சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள்; சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.

(6) **ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்** (வெளி.9:13-21). அப்பொழுது மனுஷரில் $\frac{1}{3}$ பங்கைக் கொல்லும்படிக்கு, ஐப்ராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருந்த 4 தூதர்கள் அவிழ்த்து விடப்பட்டார்கள்.

மேலும் இருபதுகோடி குதிரைச் சேனைகளாகிய இராணுவங்கள் புறப்பட்டு வந்தன. அவைகள் பார்வைக்கு மனுஷர்கள், குதிரைகள், சிங்கங்கள், பாம்புகள் போலத் தோன்றின. அவை

களுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி, புகை, கந்தகம் இம்மூன்றினாலும் மனுஷரில் $\frac{1}{3}$ பங்கு கொல்லப்பட்டார்கள்.

(7) **ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்.** (வெளி 11:15) அப்பொழுது உலகத்தின் இராஜ்யங்கள்) நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் இராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெர்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின.

ஏழாம் தூதன் எக்களம் ஊதும்போது "தேவ ரகசியம்" நிறைவேறும். (வெளி. 10:6)

இரண்டாவது 3½ வருஷங்கள்
7 கலசங்கள்

முதலாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைப் பூமியின் மேல் ஊற்றினான், (வெளி. 16:2) உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதன் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று.

இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான்; (வெளி. 16:3) உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று. சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டு போயின.

மூன்றும் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; (வெளி. 16:4) உடனே அவைகள் இரத்தமாயின.

நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மே ஊற்றினன். (வெளி. 16:8-9). தீயினால் மனுஷரைத் தகிக்கு படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அப்பொழு மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினலே தகிக்கப்பட்டு, இந் வாதைகளைச் செய்ய அதிகாரமுடைய தேவனுடைய நாமத்தை தூஷித்தார்களேயல்லாமல் அவரை மகிமைப்படுத்த மன திரும்பவில்லை.

ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடை சிங்காசனத்தின்மேல் ஊற்றினன் (வெளி. 16:10,11) அப்பொழுது அதின் இராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வருத்தத்தினலே தங்கள் நாவுகளைக் கடித்துக் கொண்டு தங்கள் வருத்தங்களாலும் தங்கள் புண்களாலும் பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.

தேவனுடைய முத்திரையைத் தங்கள் நெற்றிகளில் தரித்தி ராத மனுஷர்கள் யாவரும் மிருகத்தினுடைய ஆட்சிக்குட் பட்டவர்களாயிருக்கிறார்கள்.

ஆறும் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினன். (வெளி. 16:12-16) அப்பொழுது வலுசர்ப்பத்தின் வயிலும் மிருகத்தின் வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வந்து, பூலோகமெங்கு முள்ள இராஜாக்களைச் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்துக்கு அர்மகெதோன் என்னப் பட்ட இடத்தில் அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்.

ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாசத்தில் ஊற்றினன் (வெளி. 16 : 17-21) அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து "ஆயிற்று" என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது.

அப்பொழுது இதுவரை உண்டாயிராத பெரிய பூமியதிர்ச்சி உண்டானது. மகா நகரம் 3 பங்காகப் பிரிக்கப்பட்டது. புற ஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன: தீவுகள் யாவும் அகன்றுபோயின. பர்வதங்கள் காணப்படாமற் போயின. தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர் மேல் விழுந்தது. அந்தக் கல்மழையினல் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள். அந்த வாதை மகா கொடியதாயிருந்தது.

மகா உபத்திரவகாலமாகிய இந்த இரண்டாவது 3½ வருஷங்களிலும், சாத்தான் உபத்திரவகாலத்தின் ஆரம்பத்தில் கிரியை செய்ததுபோலவே முடிவுவரை வல்லமையாகக்கிரியை செய்து கொண்டேயிருப்பான்.

அதிகாரம்-7

இரத்த சாட்சிகள்

ஆதி நூற்றுண்டு முதற்கொண்டு இதுவரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உத்தமமாய்ப்பின் பற்றுகிற உண்மையான கிறிஸ்தவர்களுக்கும், சபைக்கும் ஆதிநூற்றுண்டு முதற்கொண்டு இன்று மட்டும் பலவிதமான இன்னல்களும், உபத்திரவங்களும் சம்பவித்துள்ளன. சத்தியத்தினிமித்தமும், கிறிஸ்துவினிமித்தமும் தங்கள் உயிரை இழந்தவர்கள் கோடிக்கணக்கானவராவர்.

G.B. Sathyanesan, B.A

அப்போஸ்தரர் காலத்திலே (கி.பி. 30-100) ஆ நூற்றாண்டு சபைக்கு உபத்திரவமுண்டாயிற்று. இயேசுவை சிலுவையிலறைந்த யூதரும் யூத மார்க்கத்தமைந்தவர்களு கிறிஸ்தவர்களுக்குக் கொடிய பகைஞராயிருந்தனர். அ காலத்தில் எருசலேமை ஆண்டு வந்த ரோமரும், கிறிஸ்தவர்க இராஜ வணக்கத்தை எதிர்த்து நின்றதாலே அவர்களுக்கு சத்துருக்களாயினர்.

நேரோ Nero இராயன் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் உண்டாயிற்று இராயனுடைய தூண்டுதலின் மீது எருசலேம் நகரத்தில் தீக்கொளுத்தப்பட்டது. பின்பு கிறிஸ்தவர்கள் நகரத்தை எரித்தார்கள் என்று பொய்யாய் குற்றஞ்சாட்டப்பட்டு, ஆயிரக்கணக்கான பேர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். கி.பி. 65 முதல் 68 வ இந்த உபத்திரவம் கொடியதாயிருந்தது இந்நாட்களிலேயே பேதுரு அப்போஸ்தலனும், பவுல் அப்போஸ்தலனும் இரத்த சாட்சிகளாய் மரண்டார்கள். நேரோ இராயன் கட்டளைப்படி அநேக கிறிஸ்தவர்களின் உடம்பின் மீது கீலும் (Pitch) கொழுப்பும் (grease) பூசி, இராயனுடைய தோட்டத்தில் கம்பங்கள் நாட்டி அவற்றில் இவர்களைச் சேர்த்துக் கட்டித் தீப் பந்தம் போல் எரிய வைத்துக் கொன்றார்கள். அவர்கள் எரியும் போது நேரோ இராயன் தோட்டத்தில் இரதத்தில் ஏறி வலம் வந்து, அக்கோரக் காட்சியைக் கண்டு களித்தானும். அந்த தோட்டத்திலேயே இக்காலம் போப்பு வசிக்கும் வற்றிக்கன் அரண்மனை (Vatican Palace) கட்டப்பட்டுள்ளது.

அப்போஸ்தலர் பின்வருமாறு மரித்ததாகக் கருதப் படுகிறது:— 1. பெரிய யாக்கோபு கி பி. 44-ல் சிரச்சேதம் செய்யப்பட்டார். 2. பிலிப்பு கி. பி. 54-ல் சவுக்கால் அடி

கப்பட்டுச் சிலுவையிலறையப்பட்டார். 3. மத்தேயு கி. பி. 60-ல் நடப்பா (Nadabah) என்ற பட்டணத்தில் கட்டாரியினுல் (halberd) அடித்துக் கொல்லப்பட்டார். 4. சின்ன யாக்கோபு அவருடைய 94-வது வயதில் கல்லெறியுண்டு, பின்பு அடிக்கப்பட்டு மரித்தார். 5. மத்தியா எருசலேமில் வெட்டப்பட்டார். 6. அந்திரேயா ஒடேசா (Odessa) நகரில் 'X' வடிவத்தில் உள்ள சிலுவையிலறையப்பட்டார்.

7. பேதுரு நேரோ இராயன் காலத்திலே தலைகீழாய்ச் சிலுவையிலறையப்பட்டு மரித்தார். 8. ததேயு என்னப்பட்ட யூதா கி. பி. 72-ல் ஒடேசாவில் சிலுவையிலறையப்பட்டார். 9. பற்தொலொமேயு சிலுவையிலறையப்பட்டார். 10. தோமா இந்தியாவில் ஈட்டியால் குத்தப்பட்டு மரித்தார். 11. சீமோன் கி.பி 74ல் பிரித்தானியாவில் சிலுவையிலறையப்பட்டார். 12. இயேசுவுக்கு அன்பான சீஷஞன யோவான் அப்போஸ்தலன் மட்டும் இரத்தசாட்சியாக மரிக்காமல், எபேசு பட்டணத்தில் 100 வயதுள்ளவராய் இயற்கையான மரணமடைந்தார். 13. பவுல் அப்போஸ்தலன் நேரோ இராயன் காலத்தில், கி.பி. 68-ல் ரோமாபுரியில் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

கி.பி. 192 முதல் ஏறக்குறைய கி. பி. 235 வரை உள்ள உபத்திரவத்தில், அநேக கிறிஸ்தவர்களுடைய சரீரத்தின் மீது கொதிக்கிற கீலைப்பூசின பின்பு அவர்களை எரித்தனர். பட்டயத்தால் வெட்டப்பட்டவர்கள் பலர், காட்டு மிருகங்களுக்கு இரையாக எறியப்பட்டனர். இன்னும் பலர் காட்டு மாடுகள் முட்டிக் கொல்லும் வாதைக்குள்ளாயினர். சிலரைத் தண்ணீரில் போட்டுத் தீ எரித்து, வேகவைத்துக் கொன்ருர்கள்; குதிரைகளின் கால்களில் கட்டி இழுக்கப்பட்டதால் சிலர் மரித்தனர்.

எவ்வித விசாரணையுமின்றிக் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டு பொதுவான ஒரு பெருங்குழியில் போடப்பட்டு மூடப்பட்டன

கி.பி. 249 முதல் சுமார் 253 வரை உள்ள உபத்திரவத்தி சிலிசியா நாட்டைச் சேர்ந்த ஜூலியன், தேள்களும் பாம்புகளு அடங்கிய ஓர் தோல் பைக்குள் அடைக்கப்பட்டுச் சமுத்திரத்தி எறியப்பட்டான். சித்திரவதை செய்யப்பட்ட கிறிஸ்தவர்களி அநேகர், தங்கள் உயிரைக் காப்பாற்ற எண்ணி மறுதலித்து விட்டனர். மறுதலித்தாலும் தாங்கள் ஏற்கனவே அநுபவித் சித்திரவதையினிமித்தம் மரித்தனர். இப்படித் தங்கள் வி வாசத்தையும் தங்கள் உயிரையும் இழந்த பலர் உண்டு சிலரோ, முதலில் மறுதலித்துப் பின்பு அதினிமித்தம் மன தாபப்பட்டு, மறுபடியும் உத்தம விசுவாசிகளாய் மரண வரைக்கும் வாதிக்கப்படத் தங்களை ஒப்புக்கொடுத்தனர்.

கி பி. 257-ஆம் வருடம் தொடங்கிய உபத்திரவத்தி எரிந்துகொண்டிருந்த சுண்ணாம்புக் காளவாய்க்குள் 300 கிறி தவர்களுக்கு அதிகமான பேர் ஒரே வேளையில் குதிக்கும்படி வற்புறுத்தப்பட்டு, அவ்விதம் மாண்டனர். ஆனால் இந்த கொடிய மன்னனாகிய வாலெரியன் பரிதாபமாக மரித்தான். பாரசீக மன்னனாகிய சாபோர் (Sapor) வாலெரியனை கைதியாகச் சிறைப்படுத்தித் தன் தேசத்திற்குக் கொண்டு போய்ப் பல விதமான அவமானங்களுக் குட்படுத்தி, அவனை இழிவாக நடத்தி, ஏழு வருஷகாலமாகத் தன்னுடைய பாதப் படியாக (foot-stool) அவனை வைத்திருந்தான். அ தா வ குனியப்பண்ணித் தனது கால்களை அவன் மீது வைத்திருப் பது வழக்கம். பின்பு வாலெரியனுக்கு 83 வயதானபோது பாரசீக மன்னன் அவன் கண்களைப் பிடுங்கிச் சவுக்கினால்

அடித்து, அந்தக் காயங்கள் மீது உப்புத் தடவி, அவன் மரிக்கும் மட்டும் அவனை உபத்திரவப் படுத்தினான்.

பின்பு கலேரியஸ் (Galerius) என்ற இராயன், கிறிஸ்தவர்களை அழிக்க அழிக்க, அவர்கள் அதிகமாய்ப் பெருகுவதைக் கண்டு, சோர்ந்து கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தக் கூடாது என்று தனது மரணப் படுக்கையிலிருந்து ஓர் உறுதியான கட்டளை பிறப்பித்தான். கலேரியஸ் வயிற்றில் ஓர் சின்னக்கட்டி (ulcer) உண்டாகித் தீரா நோயாக மாறிச் சரீரம் முழுவதும் எலும்பின் ஊனுக்குள்கூடப் பரவிப் புழுக்கள் உற்பத்தியாகத் தொடங்கிற்று. இவ்வாறு ஒரு வருஷம் வேதனைப்பட்ட காலத்திலேயே அவன் மேற்கூறிய சட்டத்தைப் பிறப்பித்தான். அவன் மரித்தபோது, அவன் சரீரம் முழுவதையும் புழுக்கள் மூடியிருந்தனவாம்

கி.பி. 313-ல் கான்ஸ்டன்டைன் (Constantine) இராயனானான். அப்பொழுது கிறிஸ்தவர்களுக்கு நல்ல காலம் பிறந்தது எனலாம். ஆனால் உபத்திரவ காலத்திலே, கிறிஸ்தவர்களுடைய ஆவிக்குரிய நிலை மிக உன்னத நிலையிலிருந்தது. அவனவன் தன் தன் குரூரமான மரணத்தைச் சகிக்க, இரத்தசாட்சியாய் மரிக்க, சித்திரவதை செய்யப்பட பரிசுத்தமுள்ளவனாயும் உபத்திரவத்திலே பொறுமையுள்ளவனாயும் பாடுகளிலே சந்தோஷிக்கிறவனாயும், கலக்கத்தின் நடுவில் சமாதானமுள்ளவனாயும் துன்பப்படுத்துகிறவர்களை நேசித்து, மன்னிக்கக் கூடியவனாயுமிருந்தான். சபையின் பொதுவான நிலையும் அதுவே.

கி. பி. 1530-ல் புரொட்டெஸ்டாந்து மார்க்கத்துக்குட்பட்ட யாவரும் ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தைத் தழு-

விக்கொள்ள வேண்டும் என்ற கடுஞ்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. கி. பி. 1546-ல் மார்ட்டின் லூதர் மரித்தார்.

இக்காலத்திலேயே ஸ்விட்சர்லாந்து தேசத்தில் ஜுவிங்கிலி (Zwingli) என்ற சீர்திருத்தவாதி தோன்றினார். ஜான் கால்வின் (John Calvin) என்பவரும் லூதர் இருந்த காலத்திலேயே புரட்சி வீரர்களில் ஒருவராய் விளங்கினார்.

தங்கள் விசுவாசத்தினிமித்தம் சாட்சியினிமித்தம் இரத்த சாட்சியாய் மரித்தவர்கள் கோடிக்கணக்கானவர்கள். புறமதஸ்தரல்லர் ; ரோமன் கத்தோலிக்கரே கிறிஸ்தவர்களை (புராட்டெஸ்டாந்துக்காரரை) முற்றிலும் அழிக்கும் நோக்கத்தோடு, மிகக் கொடிய தந்திரங்களினாலே கருவிகளினாலே சித்திரவதை செய்தனர், அவர்கள் கையாண்டமுறைகள் மிகக் கொடியன. எண்ணுக்கடங்காதன. வெடி வைத்துக் கொன்றார்கள் ; குத்திக் கொன்றார்கள் ; வெள்ளத்தின் அடியில் அமிழ்த்திக் கொன்றார்கள். சிரச்சேதம் செய்தார்கள். தூக்கிலிட்டார்கள். நிலத்தின்மீது போட்டு இழுத்தார்கள். சூலத்தில் குத்தி நிறுத்தினார்கள். உயிரோடே எரித்தார்கள். ஜீவனோடே குழியில் போட்டு மூடினார்கள். இரும்புக் கோலில் குத்தித் தீயில் சுட்டார்கள். அடுப்பில் இட்டு வேக வைத்தார்கள். தீச்சூளையில் எறிந்தார்கள். செங்குத்தான இடத்திலிருந்து கீழே தள்ளிக் கொன்றார்கள். கோபுரத்திலிருந்து கீழே தள்ளினார்கள். சேற்றில் ஆழ்த்தினார்கள் பட்டினியும், குளிரும், பலரைக் கொன்றன. தலைகீழாக நிற்கக் கட்டித் தூக்கிக் கம்பிகளினால் (Pulleys) வலித்திழுத்தார்கள். தலை முடியில் கட்டித் தூக்கினார்கள். கையைக் கட்டித் தூக்கினார்கள். கால்களைக் கட்டித் தூக்கினார்கள். வாயில் வெடி மருந்திட்டு நிறைத்து

வெடிக்கச் செய்தார்கள். வாள் கொண்டும், அரிவாள் கொண்டும் தோல் உரித்தார்கள். குதிரையின் வாலில் கட்டித் தெருக்களிலும், கூர்மையான கற்கள் மீதும் வலித்திழுத்தார்கள். வண்டிச் சக்கரத்தில் கட்டி உருட்டினார்கள். அடை கல்லில் வைத்து, கொட்டாப்புளி கொண்டடித்தார்கள். துருத்தியினால் வயிற்றில் காற்றடைத்து ஊதி, வீங்கப்பண்ணினார்கள். இரும்பைக் காய வைத்துச் சுட்டுக் கிழித்தார்கள் பழுக்கக் காய வைத்த குறடு கொண்டு மாமிசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிய்த்துப் பறித்தார்கள். கத்தி கொண்டு அறுத்தார்கள். கோடரியினால் கொத்தித் துண்டு துண்டாக்கினார்கள்: உளியினால் கொத்திக் கீறினார்கள். சீவுளிகொண்டு தேகத்தைச் சீவி மாமிசத்தைச் செதுக்கினார்கள். முக்கூருள்ள ஆயுதத்தால் குத்தினார்கள். உச்சி முதல் உள்ளங்கால் மட்டும் குண்டூசிகளினால் அறைந்தார்கள். சரீரத்தின் மாமிசத்தைப் (சதையைப்) பிடுங்கி எடுத்து, அதனோடு தண்ணீரும் சுண்ணாம்பும் பழந்துணியும் சேர்த்துத் தொண்டையில் செலுத்தி, மூச்சுத்திணறப் பண்ணினார்கள் குகைகளிலும் இருட்டறைகளிலும் போட்டுக் கட்டினார்கள். ஸ்தம்பங்களோடு சேர்த்துக் கட்டினார்கள் விருட்சங்களோடு சேர்த்து நிறுத்தி, ஆணி அடித்தார்கள். எரிந்து கொண்டிருக்கும் திரி கொதிக்கிற எண்ணெய், எரிகிற பந்தம், உருகின ஈயம் முதலியவற்றால் உபத்திரவப் படுத்தினார்கள். வயிறு வெடித்து, குடல் வெளியே வரும் வரை மிதித்துக் கொன்றார்கள். முதுகில் ஏறி நின்று, துள்ளிச்சாடி, நடனம் பண்ணினார்கள். கை கால் விரல்களின் நகங்களைக் குறட்டினால் பிடுங்கி எடுத்தார்கள். தாய்மார் முன் பிள்ளைகளை மோதியடித்துக் கொன்றார்கள். சில வேளை, பிள்ளைகளைச் சித்திரவதை செய்தார்கள், ராக் (Rack) என்ற கருவியால் கிடத்திக் கைகால்களைக் கட்டி இயந்திரத்தினுதவியால் சரீரத்தை நீள வைப்பதாலே, எலும்புப்

பூட்டுகள் கழன்றன. கைகளைப் பின்னாலே வைத்துக்கட்டி, ஓர் இயந்திரத்தில் பிணைத்து, விசையாய்ச் சுற்றுவதாலே கைகள். நெருங்கி நெருங்கி இரண்டும் ஒன்றாகச்சேரும். அதே வேளையில் தோள் மூட்டுகள் விலகும். இம்சிக்கப்படுகிறவன் வாயினின்றும் மூக்கினின்றும் இரத்தம் வடியும். இப்படி எத்தனையோ சொல்லிக்கொண்டு போகலாம். எல்லா உபத்திரவங்களையும், சித்திரவதைகளையும், இம்சைகளையும் முக பாவம் மாறாமல் சந்தோஷமாய்ச் சகித்து, உயிரைப் பலியாக்கிய ஆண்களும் பெண்களும், சிறுபிள்ளைகளும் வயோதிபரும், ஏழைகளும் ஐசுவரியவான்களும், எண்ணுக்கடங்காதவர்கள்.

ஆதி அப்போஸ்தலரும் சுவிசேஷகரும்

1. ஸ்தேவான்

ஸ்தேவான் புதிய ஏற்பாட்டின் காலத்தில் முதலாம் இரத்த சாட்சி. இவருடைய மரண விவரம்அப்போஸ்தலர் நடபடிகளில் 6ஆம், 7ஆம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இவர் கல்லெறியுண்டு மரித்தார்.

2. மத்தியா

இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத்து மாண்டு போனதாலே, அந்த இடத்தை நிரப்பும்படி அப்போஸ்தலரும் இரத்த சாட்சியுமான மத்தியா தெரிந்துகொள்ளப் பட்டார் இவர் எருசலேமில், முதலாவது கல்லெறியப்பட்டுப் பின்பு வெட்டப்பட்டு மரித்தார்.

3. யூதா

அப்போஸ்தலரும் இரத்த சாட்சியுமான இந்த யூதா யாக்கோபின் சகோதரன். கி. பி. 72-ல் சிலுவையில் அறையப் பட்டு மரித்தார்.

4 பர்தொலொமேயு

பற்தொலொமேயு எனப்பட்ட அப்போஸ்தலரும், இரத்த சாட்சியுமான இவர்மீது விக்கிரகாராதனைக்காரர் கோபமூண்டு அவரைக் கொன்றார்கள் சிலர் அவர் பட்டயத்தால் கொல்லப் பட்டார் என்றும், வேறு சிலர் தடியால் அடித்துக் கொல்லப் பட்டார் என்றும் கூறுகின்றனர்.

5. யாக்கோபு

யாக்கோபு அப்போஸ்தலரைக் கொலைக்களத்துக்கு அழைத் துச் செல்லும்போது, அவருக்கு விரோதமாய்ப் பொய்யாய்க் குற்றஞ்சாட்டும் பொருட்டு ஒருவன் கூடப் போனான், யாக்கோபு மிகவும் பயந்து, நடுங்கி முகம் வெளுத்துக் காணப்படுவார் என்று அவன் எதிர்பார்த்தான். ஆனாலும் யாக்கோபு பெரிய யுத்தத்தில் ஜெயங்கொண்டவர்போல் நிற்பதையும், அவர் முகத்தில் சந்தோஷம் நிறைந்திருப்பதையும், அவர் உதடுகளில் புன்னகை பூத்திருப்பதையும் கண்டு, அந்தப் பொய்ச்சாட்சி அதிச யப்பட்டு, யாக்கோபு விசுவாசித்த இயேசு இரட்சகரே உண்மை யான தேவனாக இருக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால், மரிக்கப்போகும் எந்த மனுஷனும் இவ்வளவு தைரியமாயும் சந்தோஷமாயும் இருக்கமுடியாது என்றும் எண்ணி, விசுவாசித்து கர்த்தராகிய இயேசுவே மெய்யான ஜீவனுள்ள இரட்சகர் என்று அறிக்கையிட்டான் அதன் நிமித்தமாக, அந்தப் பொய்ச்சாட்சி கூறப் போனவனையும் யாக்கோபுடனே சேர்த்துச் சிரச்சேதம் செய்தனர், இது கி. பி, 44-ல் நடந்தது.

அதே காலத்திலே பந்தி விசாரிப்புக்கென்று தெரிந்தெடுக் கப்பட்ட ஏழுபேரில் ஒருவனான தீமோன் கொரிந்துவிலும்,

பர்மேனு பிலிப்பி பட்டணத்திலும் இரத்தசாட்சிகளாய் மரித்தனர்.

6. பிலிப்பு

பிலிப்பு பிரிகியாவுக்கு வந்தபோது ஹீராபோலி என்ற பட்டணத்தில் ஜனங்கள் விக்கிரகாராதனையில் மூழ்கி கிடப்பதையும், ஒரு பெரிய சர்ப்பத்தைத் தெய்வமாக வணங்குவதையும், கண்டார். அவர் அங்கு பிரசங்கித்து, அநேகரைக் கிறிஸ்தவர்களாக்கினது மட்டுமல்ல, அந்தச் சர்ப்பத்தையும் கொன்றார். இந்தச் செய்கை அங்குள்ள அதிகாரிகளுக்கும், பூசாரிகளுக்கும் அதிக ஆத்திரத்தையும் கோபத்தையும் உண்டாக்கிற்று. ஏனெனில், அதுமட்டும் ஜனங்களுடைய மூட நம்பிக்கையினாலே மிகுதியான பணம் சம்பாதித்து வந்தார்கள். ஆகையினால் பிலிப்புவைச் சிறைச்சாலையில் போட்டார்கள். பின்பு, மிகவும் கொடுமையாய் அவரைச் சவுக்கால் அடித்துச் சிலுவையிலறைந்து கொன்றார்கள். அவருடைய சிநேகிதனாகிய பற்தொலொமேயு அவருடைய பிரேதத்தைச் சிலுவையிலிருந்து இறக்கி எடுத்துக்கொண்டுபோய் அடக்கம் செய்தார், பிலிப்பு கி. பி. 52-ல் மரித்தார்.

7. மத்தேயு

இவர் பார்த்தியாவுக்குப் போனபோது கி.பி. 60-ம்ஆண்டில் பட்டயத்தால் வெட்டப்பட்டு மடிந்தார்.

8. மாற்கு

சுவிஷேகரும் இரத்த சாட்சியுமான மாற்கு, அலெக்சாந்திரியாவுக்குத் திரும்பி வந்தபோது, அவருக்கிருந்த வல்லமையைக் கண்டு பொறாமைகொண்ட சில எகிப்தியர் அவரைக் கொல்லத்

திட்டமிட்டனர். அவர்கள் மாற்குவைப் பிடித்துக் கால்களைக் கட்டித் தெருக்கள் வழியாக இழுக்கும்படி ஏற்பாடுசெய்தார்கள். அதனாலே தேகமெல்லாம் உராய்ந்துகாயங்கள் உண்டானதினாலே இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அந்நிலையில் இரவுமுழுவதும் சிறையில் அடைத்துவைத்தனர். மறுநாள் அவரை நெருப்பினால் எரித்துக்கொன்றனர். எரிந்த பின் அவருடைய எலும்புகளைக் கிறிஸ்தவர்கள் தேடியெடுத்து மரியாதையோடு அடக்கம் செய்தார்கள்.

9. சின்ன யாக்கோபு

எருசலேமிலுள்ள யூதர், அங்குள்ளக் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் எழும்பித் தங்கள் பகையையும் வர்மத்தையும் இவர்மீது தீர்த்துக்கொள்ள விரும்பினார்கள் பொதுஜனங்களை இவருக்குவிரோதமாய் ஏவி எழுப்பிவிட்டபடியினாலே,வீதியிலே அவர் இருக்கும்போது அவர்கள் அவர்மீது விழுந்து, கீழேதள்ளி அடித்துக் காயப்படுத்திக் கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள்.

10. அந்திரேயா

கிரேக்க தேசத்தில் பத்ரே (Patrae) என்றஇடத்தில் விக்கிரக வணக்கத்துக்கு விரோதமாகப் பிரசங்கிக்கக் கூடாது என்று தேசாதிபதி இவருக்குக் கட்டளையிட்டுப் பயமுறுத்தினான். அந்திரேயாவோ பயப்படாமல் தொடர்ந்து தம்வேலையைச் செய்தார் ஆகவே சமநீளமுள்ள இரண்டு கட்டைகளாலே சிலுவை செய்யப்பட்டு அதன்முனைகள் இரண்டும் பூமியில் பதிக்கப்படவேண்டும் என்றும், அத்தச் சிலுவையில் அந்திரேயாவை அறைந்து கொல்லவேண்டும் என்றும் கட்டளைபிறந்தது (அந்தச் சிலுவை 'X' வடிவமிருக்கும். இதற்கு அந்திரேயாவின் சிலுவை என்றுபெயர்.) மெதுவாக வதைக்கப்பட்டுச் சாகவேண்டும் என்

பதற்காக இவரை அதில் ஆணிகளினுல் அறையாதபடி, சிலுவையோடு சேர்த்துக் கயிறுகளினுலே இறுகக் கட்டி-ஞர்கள்.

பூர்வ எழுத்தாளன் ஒருவர் அப்போஸ்தலருடைய தைரியத்தையும் பயமின்மையையும் பின்வருமாறு விவரிக்-கின்றுர்.

சாவுக்கேதுவான சாதாரண மனுஷன் செய்வது போலல்-லாமல், தமக்கென்று ஆயத்தம் பண்ணின சிலுவையை அந்திரேயா கண்டபோது, அவர் முகபாவம் மாறவில்லை; முகம் வெளுத்து விடவில்லை; அவருடைய இரத்தம் குளிரவில்லை; அவருடைய பேச்சுத்தடுமாறவில்லை; அவருடைய சரீரம் சோர்ந்து போகவில்லை; மனம் தளரவில்லை; மனத்தெளிவு மாற வில்லை; புத்தி மயங்கவில்லை. ஆனுல் அவருடைய இருதயத்தின் நிறைவினுல் அவருடைய வாய் பேசியது. அவர் சொன்னதாவது:- "நான் மிகவும் வரவேற்கிறதும் ஆசையோடு அடிக்கடி எதிர்நோக்கியிருந்ததுமான சிலுவையே! சந்தோஷத்தோடும் ஆவலோடும் மனப்பூர்வமாக நான் உன்னண்டை வருகிறேன். உன்மீது தொங்கின ஆண்டவருடைய தொண்டனுக-சிஷ்யனுக-நான் வருகிறேன். நான் உன்னை எவ்வளவாய் நேசிக்கிறேன்! உன்னைத் தழுவிக்கொள்ள நான் எவ்வளவாய் வாஞ்சிக்கிறேன்!"

அந்திரேயா மிகுந்த வேதனையை அனுபவித்தவராக மூன்று நாட்கள் இரவும் பகலும் அந்தச் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுதும், தம்மைச் சூழநின்ற ஜனங் களுக்கு இயேசுகிறிஸ்துவின் அன்பைப்பற்றிக் கூறிக்கொண்டி ருந்தார். அவருக்குச் செவிகொடுத்த ஜனங்கள், அவர் சொன் னதை நம்பத்தொடங்கினுர்கள். எனவே, தேசாதிபதியிடம்

அவரைச் சிலுவையிலிருந்து இறக்கி விடும்படியாகக் கெஞ்சினார்கள். அவர்களை மனம் முறியப் பண்ண விரும்பாத தேசாதிபதி, கடைசியாக அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிக் கயிறுகளை அவிழ்த்து, அந்திரேயாவை விடுவிக்கும்படிக் கட்டளையிட்டான். ஆனால், அவரைக் கட்டியிருந்த கடைசிக் கயிறு அறுக்கப்படும் போது, அவருடைய சரீரம் மரித்ததாய்ச் சிலுவையிலிருந்து கீழே விழுந்தது.

11 பேதுரு

பேதுருவையும், பவுலையும் சிறையில் 9 மாதம் கைதிகளாக வைத்தனர். அந்தச் சிறையிருப்பின் காலத்தில் அவர்கள்காவல் காரனின் தலைவர் இருவரையும், வேறு47 பேர்களையும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார்கள். ஒன்பது மாதங்களுங்களுக்குப் பிறகு, பேதுருவைச் சவுக்கினால் கடுமையாய் அடித்துத் தலைகீழாகச்சிலுவையில் அறைந்துகொன்றார்கள். இயேசு சிலுவையிலறையப் பட்டதுபோலத் தானும் அறையப்படத் தகுதியுள்ளவனல்லன் என்று பேதுரு எண்ணியதால் தலை கீழாய்ச் சிலுவையிலறைய வேண்டும் என்றுகேட்டுக்கொண்டதாகச் சொல்லுகின்றனர்.

12. தோமா

சீரிய பாஷையில் "தோமா" என்றும், கிரேக்க பாஷையில் 'திதிமு' என்றும், அழைக்கப்பட்ட இவர், அப்போஸ்தலனும் இரத்தசாட்சியுமாய் மரித்தார். புறமதஸ்தருடைய பூசாரிகள் கோபங்கொண்டு ஈட்டியால் இவரைக் குத்திக் கொன்றனர்.

13. பவுல்

ரோமா புரிக்குத் திரும்பி வந்தபோது சிறைப்படுத்தப்பட்டு, ஒன்பது மாதங்களாகச் சிறைச்சாலையில் இருந்தார். அதன்

பிறகு நேரோ ராயனுடைய கட்டளையின்படி, பேதுரு கொல்லப் பட்ட காலத்திலேயே இவரும் பட்டயத்தால் வெட்டப்பட்டார்.

14. லூக்கா என்னும் சுவிசேஷகன்

லூக்கா என்னும் சுவிசேஷகன், லூக்கா சுவிசேஷத் தையும், அப்போஸ்தலர் நடபடிகளையும் எழுதினர். பவுலுடன் ரோமாபுரிக்குச் சென்று புறஜாதியாருக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதில் உதவிசெய்தார். லூக்கா இயற்கையான மரணம் அடைந்தாரா அல்லது இரத்த சாட்சியாய் மரித்தாரா என்று திட்டமாய்ச் சொல்வதற்கில்லை

15. சீமோன்

சீமோனுக்கு செலோத்தே என்ற பெயருண்முண்டு. இவர் கி. பி. 74-ல் அஞ்ஞானிகளால் சிலுவையிலறையுண்டு மரித்தார்.

16 யோவான்

யோவான், தீர்க்கதரிசியும், அப்போஸ்தலரும் சுவிசேஷ கருமாவார். இயேசுவுக்கு மிகவும் அன்பாயிருந்த சீஷன். கிரேக்க தேசத்தில் அநேக சபைகளை ஸ்தாபித்தார்.

டொமிஷியன் (Domitian) இராயன் எபேசுவிலிருந்த இவரை ரோமாபுரிக்குக்கைதியாகக்கொண்டு போகும்படி கட்டளையிட்டான். அங்குக் கொதிக்கிற எண்ணெய் கொப் பரைக்குள் இவரைப் போடும்படி தீர்ப்பளித்தனர். ஒருவேளை அந்தத் தீர்ப்பின்படிச் செய்யாதிருக்கலாம்; அல்லது அற்புத மாய்ப் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். எப்படியாயினும், அதற்குப்

பின்பு பத்மு தீவுக்குத் தீவாந்தர சிட்சையாக அனுப்பப்பட்டார். அங்கிருக்கும்போதுதான் வெளிப்படுத்தின விசேஷத்தில் வரையப்பட்டுள்ள அழகான பரலோகத் தரிசனங்கள் இவருக்குண்டாயிற்று.

டொமிஷயன் மரித்தபின் நெர்வா)Nerva) என்ற இராயன் பட்டத்துக்கு வந்தான். அவன் கிறிஸ்தவர்களிடம் மிகவும் பட்சமாய் நடந்துகொண்டான். அவன் யோவானை மறுபடியும் எபேசுவுக்கு அனுப்பிவைத்தான். அங்கிருந்து யோவான் தம் பேருடைய சுவிசேஷத்தை எழுதினர். மிகவும் வயது முதிர்ந்தவராய் எபேசுவில் நீண்டகாலம் வாழ்ந்திருந்து இயற்கையான மரணமடைந்தார். யோவான் சாகும்போது அவருக்கு 100 வயது.

எருசலேம் பிடிக்கப்பட்டது—கி. பி. 70

நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன் தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டபடி, யூதருடைய தண்டனையும் எருசலேமின் அழிவும் ரோமச் சக்கரவர்த்திகளான நேரோ (Nero) டொமிஷியன் (Domitian) ஆகிய இரண்டு இராயர்களுடைய ஆட்சிகளுக்கும் இடையில் உள்ள காலத்தில் நடந்தேறியது.

எருசலேமிலுள்ள யூதரை ஆளும்படி ரோம தேசாதிபதி ஒருவன் நியமிக்கப்பட்டிருந்தான். அவன் மிகவும் அதிகமான வரிகளை அவர்களிடமிருந்து வசூலித்தான் அதனல் யூதர் அவனுக்கு விரோதமாய் எழும்பினர்கள். அவர்களை அடக்க சீரியா தேசத்து அதிபதி தன் இராணுவத்தோடு கூட எருசலேமுக்கு வந்தான். ஆனல், போதுமான படைபலம் தனக்கு இல்லாததினலே, இன்னும் எருசலேமைப் பிடிக்க

அவன் பிரயாசப்படாமல் இருக்கையில் எருசலேமின் கண்காணியும் பிஷப்புமாயிருந்த சிமியோன் எருசலேமிலிருந்த சகல கிறிஸ்தவர்களையும் கூட்டிக்கொண்டு, மலைகளின் நடுவிலிருந்த பெல்லா (Pella) என்ற சின்னதோர் பட்டணத்துக்குத் தப்பியோடி விட்டான். இந்த சிமியோன், யாக்கோபு அப்போஸ்தலருக்குப் பிறகு எருசலேமுக்கு பிஷப் (Bishop) ஆனார். இவ்விதமாகத் தெய்வாதீனமாக யூதருக்குண்டான பயங்கர அழிவினின்று கிறிஸ்தவர்கள் தப்பித்துக் கொண்டனர்.

சீக்கிரத்தில் எருசலேம் பட்டணம் ரோமரால் சூழப்பட்டு, முற்றுகை போடப்பட்டது. பட்டணத்தில் ஆகாரம் இல்லாமல் போயிற்று. பட்டணவாசிகள் பசியினால் வாடினர். அக்காலத்தில் இருந்த கவண் - இயந்திரங்களினாலே கற்களும் அம்புகளும் சரமாரியாய்ப் பொழிந்தன, மதிலுள்ள பட்டணத்தை இந்த இயந்திரங்களைக் கொண்டே தாக்குவது வழக்கம்.

ஏறக்குறைய எல்லா வீடுகளிலும் கொள்ளை நோய் உண்டாயிற்று. இப்படி நிர்ப்பந்த ஸ்திதியிலிருந்த புத்தியீனமான யூதரோ தாங்கள் ஒற்றுமையாய் நின்று, சத்துருக்களைத் தாக்குவதற்குப் பதிலாகத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டார்கள், எருசலேமை முற்றுகையிட்டிருந்த ரோம இராணுவத்தின் தளபதியாக வெஸ்பேஷியன் (Vespasian) என்பவன் அனுப்பப்பட்டான்.

ஆனால் இந்நாட்களில் கொடுங்கோல் மன்னனான நேரோ தன் ஜனங்கள் தன்னைக் கொல்லுவார்கள் என்று அஞ்சித் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டான். ஆகையினாலே, வெஷ்பேஷியன் உடன் தானே ரோமாபுரிக்குத் திரும்பிப் போக வேண்டியதாயிற்று அங்கே அவன் ரோமச் சக்கரவர்த்தியாகத்

கிரீடம் சூட்டப்பட்டான். வெஸ்வேஷியன் மகனான தீத்து (Titus) எருசலேமைச் சூழ்ந்திருந்த ரோமச் சேனைகளுக்குத் தளபதியானான்.

பஸ்கா பண்டிகையின் காலம் அது தீத்து முதலாவது யூதருடன் சமாதானம் செய்ய முயன்றான். யூதரோ இணங்கவில்லை. எனவே, முற்றுகை மீண்டும் தொடர்ந்தது. பட்டணத்தில் பஞ்சம் கொடிதாயிற்று. தெருக்களில் கட்டுப்படங்காத சில யூதர் சுற்றி நடந்து வீடுகளில் புகுந்து, உணவுக் பொருட்களைச் சூறையாடினார்கள். ஒருமுறை இந்த வீணரான மனுஷர்கள் ஒரு பெரிய வீட்டிலிருந்து இறைச்சி பொரிக்கும் வாசனையை முகந்து, உடனே அந்த வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். அங்கிருந்த ஸ்திரீயோ கனம் பொருந்தியவள். அவள் வீட்டிலுள்ள இறைச்சியைத் தங்களுக்குக் கொடுக்கும்படி பயமுறுத்தினார்கள். அவள் அடுப்பைச் சுட்டிக் காட்டினபோது, அவளுடைய சொந்தக் குழந்தையின் உடலின் ஒரு பாகம் பொரிக்கப்படுவதைக் கண்டு, வெளியேறினார்கள், இவ்விதமாகப் பசியின் கொடுமையினால், ஸ்திரீகளின் கைகள் இரக்கமில்லாமல் தங்கள் பிள்ளைகளைச் சமைத்தனர்.

கடைசியாக ரோமப் போர் வீரார்கள் எருசலேம் மதில்களை இடித்துப் பட்டணத்துக்குள் பிரவேசித்தார்கள். யூதர்கள் அவர்களுக்குப் பயந்து, எருசலேம் தேவாலயத்துக்குள் ஓடி அடைக்கலம் புகுந்தனர். அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ளாமல், கர்த்தராகிய இயேசுவைத் தள்ளிச் சிலுவையில் அறைந்தவர்கள். இதுவே அவர்களுக்கு நியாயத்தீர்ப்புப் போலாயிற்று. எருசலேம் தேவாலயத்தின் படிகள் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டவை. அவை கொல்லப்பட்டவர்களுடைய இரத்தத்தால் தோய்ந்து

நடக்க முடியாமல் வழுக்கின. மரித்தவர்களுடைய பிரதேங்களி ஞலே, நிறைந்தன தீத்து இந்த மேன்மையான தேவாலயத்தை அழிக்காமல், அப்படியயே பிடிக்க எண்ணினன். ஏனெனில், அக்காலத்தில் தேவாலயம் உலகத்தின் அதியங்களில் ஒன்ருய் விளங்கிற்று. ஆனல் ஒரு ரோமச் சேவகன் அதனுடைய தங்க மயமான ஜன்னல் ஒன்றின் வழியாய் எரியும் தீப்பந்தத்தை உள்ளே எறிந்து விட்டான். மகிமை பொருந்திய ஆலயத்தின் விசித்திரமான திரைகள் தீப்பற்றின பொன்மயமாய் விளங்கின தேவாலயாத்தின் உட்புறத்தையும், அதனுள் பதித்திருந்த சிறந்த பளிங்குக் கற்களையும் உள்ளே எட்டிப் பார்த்து ரசிக்க மட்டுமே தீத்துவுக்குச் சமயம் வாய்த்தது. தேவாலயத்தின் சில பொக்கிஷங்கள் மட்டுமே அக்கினியினுன்று காப்பாற்றப்பட்டு, கைப்பற்றப்பட்டன. அதற்குள் முழுக் கட்டடமும் எரிந்து சீக்கிரத்தில் சாம்பலாயிற்று. இப்படியாக ஏரோது கட்டின தேவாலயம் அழிக்கப்பட்டது. ஏரோதின் காலத்தில் இதை 18,000 வேலையாட்கள் சேர்ந்து 9 வருஷங்களாகக் கட்டினர்கள்.

யூதர் தங்களை எதிர்த்தபடியினுலே, ரோமர் யூதரைப் பயங்கரமாகப் பழி வாங்கினர். அநேகர் சிலுவையிலறையப்பட்டனர். பலர் ரோம இராஜியத்திலுள்ள பல பட்டணங்களுக்கும் அனுப்பப்பட்டு, அங்குள்ள அரங்க சாலைகளில் காட்டு மிருகங்களுக்கு இரையாக எறியப்பட்டனர். இன்னும் அநேகர் அடிமைகளாக விற்கப்பட்டனர். அடிமைகளை வாங்கிக் கொள்ள ஆள் இல்லாமற் போகும்படியாக எண்ணிக்கையில் அவ்வளவு அதிகம்பேர் இருந்தார்கள், இவ்வாறு உலகம் முழுவதும் யூதர் சிதறடிக்கப்பட்டாலும், தேசமில்லாமற் போனுலும், தலைவன் இல்லமற் போனுலும், தனிப்பட்டஜாதியாய் விளங்குவது அதிசயமே" கர்ந்தருடைய தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாகவே அப்படியிருக்கக் கர்த்தர் அருளியிருக்கிருர்.

இவ்விதம் கி. பி. 70-ல் எருசலேம் நகரம் முற்றிலுமாய் பாழாக்கப்பட்டது. தேவாலயம் அக்கினிக்கு இரையானபோது பொன்னால் பொதியப்பட்ட சமூகத்தப்ப மேசையும், ஏழு கிளைகளுள்ள பொன் குத்துவிளக்கும், வெள்ளிப்பூரிகைகளும் (எக்காளங்களும்) அக்கினியினின்று மீட்கப்பட்டன. அவையெல்லாவற்றையும் ரோமாபுரிக்குக் கொண்டு போய்த் தங்களுக்குக்கிடைத்த வெற்றிக்காக வெஸ்பேஷியனும், தீத்துவும் அவற்றை ஊர்வலமாகக் கொண்டுசென்றுபத்திரப்படுத்தி வைத்தனர்,

கி.பி. 85-ல் கிறிஸ்தவர்களை நியாயாதிபதிகளுக்குமுன் கொண்டு வரும்போது அவர்கள் பிரமாணம் செய்யும்படி கூறப்படும். மறுத்தால் உடனே மரணக்கினை விதிக்கப்படும் தாங்கள் கிறிஸ் தவர்கள் தாம் என்று அவர்கள் ஒத்துக்கொண்டாலும் மரணத் தீர்ப்பே. இன்னும் கிறிஸ்தவர்களை இம்சிக்கவும் கொல்லவும் பயன்படுத்திய முறைகள் எண்ணுக் கடங்காதன. சிலர் சரீரத்தின் எலும்புகளின் மூட்டுகள் (Joints) கழன்று, விட்டு விலகும்படி சரீரத்தின் கைகால்களை இழுத்து சித்தரவதை செய்யக் கூடிய கருவியில் (Rack) வைத்து வதைக்கப்பட்டனர். சிலர் உயிரோடே எரிக்கப்பட்டார்கள். சிலர் மரிக்கும் மட்டும் சவுக்கினால் அடிக்கப்பட்டார்கள். வேறுசிலர் கல்லெறியப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். இன்னும் சிலர் தூக்கப்பட்டார்கள். பலர் காட்டு மிருகங்கள் துன்புறுத்தும்படி எறியப்பட்டனர். சிலரைச் செங்குத்தான உயரமான உப்பரிகைகள் போன்ற இடங்களிலிருந்து தலைகீழாய்த் தள்ளினர். சிலரைக் காட்டு மாடுகள் முட்டிக் கொல்லும்படி போட்டுவிட்டனர். கொல்லப்பட்டவர்களுடைய பிரேதங்களை அவர்கள் நண்பர்கள் அடக்கம் செய்யவும் இடம் தரப்படமாட்டாது.

தீமோத்தேயு (Timothy)

பவுல் சிறைச்சாலையில் இருக்கும்போது, தீமோத்தேயு தம்மிடம் வரவேண்டுமென்று விரும்பினூர். மறுபுடியும் அவர் எபேசுவுக்கு வந்து,கி பி. 97மட்டும் அங்குள்ள சபையைக் கண் காணித்தார். அப்பொழுது அஞ்ஞானிகளுக்கு ஒரு பண்டிகை வந்தது. அவர்களுடைய கொண்டாட்டங்களில் முக்கியமாகக் கையில் தடி பிடித்தவர்களாய், முகத்தை முக மூடியால் மூடிக் கொண்டு, தங்கள் தேவர்களுடைய சொரூபங்களைச் சுமந்து கொண்டு தெருக்கள் வழியாக வலம் வருவார்கள். இந்த ஊர் வலத்தைக் கண்ட தீமோத்தேயு, விக்கிரகாராதனையைக் கடிந்து கொண்டார். உடனே அவர்கள் கோபாவேசங்கொண்டு அவர் மீது பாய்ந்து, தங்கள் கைகளில் உள்ள தடிகளினுல் நையப் புடைத்தார்கள். அடிகளினுல் ஏற்பட்ட காயங்களினுல் இரண்டு நாட்களில் தீமோத்தேயு மரணமடைந்தார்.

பொந்து மாகாண பிஷப்பாயிருந்த **போக்காஸ்** (Phocas) நெப்ட் யூன் (Neptune) என்ற வருணபகவானுக்குப் பலிசெலித்த மறுத்துவிட்டார். ஆகையால் அவரை முதலாவது எரிந்து கொண்டிருந்த சுண்ணும்பு காளவாய்க்குள் போட்டார்கள் சிறிது நேரம் கழித்து, அவரை அங்கிருந்து இழுத்து எடுத்து நீராவியை மேலே செலுத்திக் கொன்ருர்கள்.

அந்துயோகியாவுக்கு பிஷப்பாக இருந்த **இக்னேஷியஸ்** (Ignatius) என்பவரையும் ஏறக்குறைய இதேகாலத்தில் கொ ருர்கள். இக்னேஷியஸ் யோவான் சுவிசேஷகன் மூலம் சுவி சேஷத்தை அறிந்து ஏற்றுக்கொண்டு தமக்கு ஒப்புவிக்கப்பட் ஊழியத்தை மிகவும் உண்மையாய்ச் செய்துவந்தா ராயன் முன்பாக, கிறிஸ்துவுக்காகத் தான் கொண்டு

விசுவாசத்தை அறிக்கை செய்தபடியாலே, சிறைச்சாலையில் முதலாவது போடப்பட்டார். பின்பு சவுக்கினல் கொடூரமாய் அடித்தார்கள். சரீரமெல்லாம் படைச்சால்கள்போல் தசை கிழிந்தது அதன் பின்பு சிறு தீப்பந்தங்களை எண்ணெய்யிலே தோய்த்து அவருடைய விலாவில் வைத்துக் கட்டி, தீக்கொளுத்தினர்கள் பந்தம் எரிவதினல் உண்டான வேதனை ஒருபுறமிருக்க, குறட்டினல் சதையைச் சின்னபின்னமாகக்கிழித்துப் பிடுங்கி எடுத்தார்கள். கடைசியாக, காட்டு மிருகங்களுக்கு இரையாக எறிந்து விட்டனர்.

சிம்போராசா (Symphorosa) என்ருெரு விதவை இருந்தாள். அவளுக்கு ஏழு குமாரர் இருந்தனர். டிராஜன் அவர்கள் அந்நிய தேவர்களை வணங்கி, அவைகளுக்குப் பலியிடும் படி கட்டளையிட்டான். தாயும் பிள்ளைகளும் மறுத்து விட்டனர். அதைக் கண்ட ராயன் மிகவும் கோபமூண்டு **ஹெர்குலஸ்** (Hercules) என்ற அஞ்ஞான தேவனின் கோவிலுக்கு அவளைக் கொண்டு போகும்படிக்கட்டளையிட்டான். அங்கு அவளை நன்ருகச் சவுக்கடித்துத் தலை முடியில் கட்டித் தூக்கினர்கள், சிறிது நேரங் கழித்து ஒரு பெரிய கல்லை அவள் கழுத்தில் சேர்த்துக் கட்டி ஆற்றில் எறிந்தனர். அவள் தண்ணீரில் மூழ்கிச்செத்தாள்

சிம்போரசாவின் ஏழு குமாரரையும் ஏழு தூண்களில் சேர்த்துக் கட்டிக் கயிறுகளினலும் கப்பிகளினலும் இழுத்து இம்சித்தார்கள். அவர்களுடையகை, கால் கள் மூட்டுகள் கழன்றன. இந்த விதமாய்த் துன்புறுத்தியும் அவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நின்றபடியாலே, ஏழு பேரும் பின்வருமாறு கொல்லப்பட்டனர். மூத்தபையன் **கிரெஸெண்டியஸ் (Crescentius)** தொண்டையிலும், இரண்டாவ

தானஜூலியன் (Julian, மார்பிலும், மூன்றுவதான நெமேஷிய (Nemesius) இருதயத்திலும், நான்காவதான பிரிமிஷிய (Primitius)வயிற்றிலும், ஐந்தாவதான ஜஸ்டிஸ்(Justice) முது லும்,ஆருவதான ஸ்டாக்ரியஸ் (Sacteus)விலாவிலும், குத்தி கொல்லப்பட்டனர். ஏழாவதான யூஜெனிஸ் (Eugenius) இரண் டாகப் பிளக்கப்பட்டான்.

போலிகார்ப்பஸ் (Polyearpus, யோவான் சுவிசேஷகன் மூல குணப்பட்டவர். கிறிஸ்துவுக்காக 60 வருஷங்கள் ஊழியம் செய் தார். இவர் கொல்லப்படும்போது இவருக்கு வயது 86,

ஜெர்மெனிக்கஸ் (Germanicus)என்ற கிறிஸ்தவ வாலிபன் ஒருவன் காட்டு மிருகங்களிடம் எறியப்பட்டான். அவன் பீறுண்ட சமயம் அவனுக்கிருந்த தைரியத்தைக் கண்ட பலர் உடனே தானே குணப்பட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இதனைக் கண்டுகோபாவேசங்கொண்ட ஜனக்கூட்டம் "கிறிஸ்தவர் களைக் கொல்லுங்கள்" என்று கூக்கிரலிட்டார்கள். காட்ரு மிருகங் களின் உறுமுதல்களையும், ஜனங்களின் சத்தத்தையும் செவியுற்ற குவிண்டஸ் என்ற அந்நிய தேசத்தான் ஒருவன் நியாயாதி பதிகள் வீற்றிந்த பீடத்தண்டைஓடி, அவர்களை நிந்தித்தான். அதினிமித்தம் அவன் உடனே கொல்லப்பட்டான். மேலும் ஜனங்கள், "பொல்லாதவர்களை அழியுங்கள், கிறிஸ்தவர்களைக் கொல்லுங்கள், போலிகார்ப்பஸ் என்பவனைத் தேடிப்பிடியுங்கள்" என்று சத்தமிட்டார்கள். பெரிய குழப்பமும் கலகமும் உண்டாயிற்று.

போலிகார்ப்பஸ் தப்பியோடி ஒளித்துக்கொண்டார். அனுல் ஒரு சிறு பிள்ளை அவருடைய ஒளிப்பிடத்தைக் கண்டுபிடித்தது.

இதற்குமுன்னதாகவே அவர். தனது படுக்கை தீப்பிடித்தது போல் சொப்பனம் கண்டிருந்ததாலே, தனது முடிவுநெருங்கிற்ற என்று அறிந்துகொண்டார். ஆகையால், இரண்டாம் முறையில் தனக்குப் தப்பிக்கத் தருணம் உண்டாயிருந்த போதிலும் தப்புக்க வில்லை. அவரைப் பிடிக்கவந்தவர்கள் அவருடைய அமைதியும் சந்தோஷமுமான முகத்தைக் கண்டு அதிசயித்தனர்; பிடிக்க வந்தவர்களுக்கு முதலாவது விருந்தளித்தார். பின்பு ஒரு மணி நேரம் தான் ஜெபம் செய்யவேண்டுமென்று அவர்கேட்டபடியே, உத்தரவு கொடுக்கப்பட்டது. அதிக ஊக்கமாய் அவர் ஜெபித்ததைக்கண்ட, அவரைப் பிடிக்கவந்த மனுஷர் குணப் பட்டார்கள். ஆயினும், நீதிபதியிடம் கொண்டுபோகப் பட்டார், போலிகார்ப்பஸ் உயிரோடே எரிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

தகனிக்கப்படும்படி சந்தை வெளிக்குக் கொண்டுபோகப் பட்டார். தூணோடு சேர்த்துக் கட்டப்பட்டார். சுற்றிலும் விறகுகள் போடப்பட்டு அக்கினி கொளுத்தப்பட்டது. அவரோ கர்த்தரைப் பாடித்துதித்துக் கொண்டிருந்தார். தீ ஜுவாலித்து எரிந்தும் நெடுநேரமாக அவருக்கு சேதம் ஒன்றும் உண்டாக வில்லை. இதைக் கண்டு அதிசயித்தாலும், கொலையாளிகள் அவருடைய தேகத்தில் ஈட்டிகளால் குத்தினார்கள். உடனே நிறைய இரத்தம் அவருடைய சரீரத்தில் உண்டான காயங் களிலிருந்து பாய்ந்து, எரிந்து கொண்டிருந்த அக்கினியை அணைத்துவிட்டது. எனினும் பல முறை முயன்று அவரைக் கொன்று, கடைசியில் அவருடைய பிரேதத்தை அக்கினியால் தகனித்தார்கள் உயிரோடிருக்கும் போது அக்கினி பலம் செய்யாததைக் கண்டு அதிசயித்த ஜனம் போலிகார்ப்பஸ் ஒரு தெய்வம் என்று கூறி அவரை வழிபடத் தொடங்கினார்கள்.

ரோமாபுரியில் பெலிஸிட்டாட்டஸ் (Felicitatas) என்ருெரு கிறிஸ்துவ சீமாட்டி இருந்தாள். அவளுக்கு ஏழு குமாரர் இருந்தனர். அவர்களை அவள் பக்தியிலும் ஒழுக்கத்திலும் வளர்த்திருந்தாள். இராஜியமெங்கும் உண்டான பூமியதிர்ச்சிகள், பஞ்சம், வெள்ளம் இவற்றினிமித்தமாகக்கலக்கமடைந்த இராயன் கிறிஸ்தவர்களே அதற்குக் காரணம் என்று கூறி, அவர்களைப் பிடித்துத் தீர்ப்புச் செய்யும்படிக் கட்டளையிட்டான். இந்தச் சீமாட்டியும் அவளுடைய குடும்பத்தினரும் பிடிக்கப்பட்டு புபிலியு என்ற ரோம தேசாதிபதி விசாரணை செய்யும்படி ஒப்படைக்கப் பட்டார்கள்.

புபிலியு தாயை மனம் மாறச்செய்தால் பிள்ளைகளும் கிறிஸ்துவை மறுதலிப்பார்கள் என்று எண்ணி அவளிடத்தில் நயந்து பேசினுன். அவளோ தன் விசுவாசத்தில் உறுதியாயிருந்தாள். எனவே, புபிலியு அவளைப் பயமுறுத்தத் தொடங்கினுன். அதற்கும் அவள் அஞ்சவில்லை, அவளுடைய பிள்ளைகளும் தனித்தனியாய் விசாரிக்கப்பட்டபோதிலும் ஒருவராவது தங்கள் விசுவாசத்தை விட்டுச் சிறிதேனும் அசையவில்லை. ஆகையால் தாயின் கண்களுக்கு முன்பாகவே ஏழு குமாரரையும் கொல்லக் கட்டளை பிறப்பித்தான். அப்படியே ஜனேரியஸ் (Januarius) என்ற முதல் பையன் சவுக்கினுல் அடிக்கப்பட்டு, இரண்டு பழுக்களுக்கிடையில் வைக்கப்பட்டு நசுக்கிக் கொல்லப்பட்டான். இரண்டாவது மூன்ருவது பிள்ளைகளாகிய பேலிக்ஸ் (Felix) பிலிப்பு என்பவர்களின் தலையைக் கதையால் (கனத்த தடியால் (club) அடித்து, மூளையைச் சிதறடித்துக் கொன்ருர்கள் சில்வானு (Sylvanus) என்ற நான்காவது மகனைச் செங்குத்தான பாறையிலிருந்து கீழே தள்ளிக் கொன்ருர்கள். கடைசி மூன்று பிள்ளைகளான

அலெக்ஸாண்டர் (Alexander), விற்றலிஸ் (Vitalis) மார்ஷியாலிஸ் (Martialis) ஆகியோரைச் சிரச்சேதம் செய்தனர். கடைசியாகத் தாயையும், அவளுடைய கடைசி மூன்று பிள்ளைகளையும் வெட்டின அதே பட்டயத்தாலே வெட்டிக் கொன்றனர்.

மார்செல்லஸ் (Marcellus) என்பவரைக் கைது செய்து, லயோன்ஸ் (Lyons) பட்டணச் சிறையில் வைத்தார்கள். அவர் அங்கிருந்து தப்பியோடி, அநேகரை இரட்சிப்புக்கு வழி நடத்தினார். கடைசியாக காலன்ஸ் (Ghalens) என்ற இடத்தில் பிடிக்கப்பட்டுத் தேசாதிபதியிடம் கொண்டு வரப்பட்டார். அவரை மரங்களின் கொப்புகளைத் தாழ்த்தி வேறு வேறு கொப்புகளிலே கட்டினார்கள். பின்பு அந்தக் கொப்புகளை விட்டபோது, அவை விசையால் தங்கள் இடத்துக்கு உயரும். அப்பொழுது அவருடைய சரீரம் கிழிக்கப்படும் என்று எதிர் பார்த்தார்கள். இந்த முயற்சி பலிக்காமல் போகவே, அவரை இறக்கி விக்கிரகாராதனை நடந்துகொண்டிருந்த இடத்துக்குத் தூக்கிக் கொண்டுபோனார்கள். அதில் கலந்துகொள்ள அவர் மறுத்தபடியால், அவரை இன்னும் பலவிதமாய் இம்சை செய்து. முடிவில் அவரைத் தரையில் கிடத்தி அவருடைய இடுப்பில் ஆணி கடாவித் தரைக்குள் அது பாயும்படிச் செய்து அந்நிலையில் விட்டுப்போனார்கள். மூன்று நாட்கள் அவர் இந்த நிலையிலேயே கிடந்து மரித்தார்,

இப்படி இன்னும் ஆயிரக்கணக்கானபேர் விதம் விதமாய்க் கொல்லப்பட்டனர்.

கி. பி. 180-ல் மார்க்கஸ் ஆரிலியஸ் என்ற ராயன் மரித்துப் போனன். அவனுடைய ஸ்தானத்தில், கமோடஸ் (Commodus) என்ற அவனுடைய மகன் இராஜாவானன்

இவனுடைய காலத்திலும் பல கோர சம்பவங்கள் நடந்தன. யூற்றிகா (Utica) என்ற ஆப்பிரிக்காக் கண்டத்தின் பட்டணம் ஒன்றில், 300 கிறிஸ்தவர்கள் ஒன்ருய்க் கொல்லப்பட்டனர். இந்த முந்நூறு பேரையும் எரிந்துகொண்டிருந்த சுண்ணும்புக் காளவாயைச் சுற்றிலும் நிறுத்தினர்கள், அருகில் ஒரு பலிபீடம் கட்டியிருந்தது. அந்தப் பலிபீடத்தில் அந்நிய தேவர்களுக்குப் பலி செலுத்திஞல் உயிர் தப்பலாம் என்று கூறப்பட்டது. அவர்களோ ஒரே மனதுள்ளவர்களாய்ப் பலியிட மறுத்துத் தாமாகவே எரிந்துகொண்டிருந்த சுண்ணும்புக் காளவாய்க்குள் குதித்து விட்டனர்

பிரசித்திபெற்ற ஒரிஜன் (Origen) என்பவரின் தந்தை லியோனிடாஸ் (Leonidas) இரத்தசாட்சியாய்க் கொல்லப்படும் படிக் கொலைக்களத்துக்குக் கொண்டு போகப்பட்டார். அப் பொழுது மகன் தகப்பனுக்கு எழுதின கடிதமாவது: "அருமைத் தந்தையே! எங்களுக்காக (பிள்ளைகளுக்காக) உள்ள உமது கவலை உம்மை, உமது தீர்மானத்தினின்று அகலாதிருக்கப் பண்ணுவதாக" ஒரிஜனுடைய சிநேகிதர் பலரும் இரத்த சாட்சிகளாகவே மாண்டனர்.

வட ஆப்பிரிக்காவில் இருந்த ரோம மாகாணம் ஒன்றில் பெர்பெச்சுவா (Perpetua) என்ற ஓர் பெண்மணி இருந்தாள். அவள் கிறிஸ்தவள். வயது26. தன் கையில் பச்சிளங் குழந்தை யொன்றை ஏந்திக் கொண்டிருந்தாள், அவள் விசுவாசத்தினி

மித்தம் சிறையில் வைக்கப்பட்டாள் அவளுடைய தகப்பன் பல முறை சிறைச்சாலையில் அவளைச் சந்தித்து. சத்தியத்தை மறுதலித்து, ஜீவனைத் தப்பித்துக்கொள்ள ஆலோசனைகூறினன்' அவளோ அதற்கிணங்கவில்லை. நீதிபதி அவளை விக்கிரகங் களுக்குப் பலியிடவேண்டும் என்று கட்டளையிட்டான். அவள் மறுத்தபடியால், இருண்ட நிலவறையிலே அடைக்கப்பட்டாள். குழந்தையை அவளிடமிருந்து பிடுங்கிவிட்டார்கள். அவளைக் காத்துவந்த காவற்காரரில் இருவர் அவள்மீது இரக்கங்கொண்டு, அவளைத் தினமும் சுத்த ஆகாயம் சுவாசிப்பதற்காகவும், அவள் குழந்தைக்குப் பாலூட்டுவதற்காகவும் சிறிது நேரம் திறந்த வெளியில் விடுவார்கள். அவள் தகப்பன் மறுபடியும் அவளிடம் வந்து கிறிஸ்துவை மறுதலிக்கும்படி, கெஞ்சினபோது, அவள் மறுத்து, தேவ சித்தம் தன்னில் நிறைவேற வேண்டும் என்று கூறிவிடடாள். சிலநாள் பொறுத்து, விசாரணைக்காக மறுபடியும் நீதி ஸ்தலத்துக்கு பெர்பெச்சுவா கொண்டு செல்லப்பட்டாள், அங்கு அவளுடைய தகப்பன், அவளுடைய குழந்தையை எடுத்துக்கொண்டு வந்து. அந்தக் குழந்தை மீது இரக்கம் வைத் தாவது விசுவாசத்தை மறுதலிக்க வேண்டுமென்று கெஞ்சினன். அவளோ தன் விசுவாசத்தில் உறுதியாயிருந்தாள். கடைசியில், அவளும் அவளுடன் இருந்த மற்றக் கிறிஸ்தவர்களும் காட்டு மிருகங்களால் பீறப்பட வேண்டும் என்று தீர்ப்புப் பிறந்தது. அந்த நாளை எதிர்பார்த்தவர்களாய் அவர்கள் சிறையில் இருக்கும் காலத்தில் கர்த்தர் அவர்களைத் தைரியப்படுத்தும் படியாகப் பலவித பரலோக தரிசனங்களை அவர்களுக்கு அருளிச் செய்தார்.

அந்த நாள் வந்தது. கொலைக்களத்துக்கு அவர்கள் எல்லா ரையும், அஞ்ஞான பூஜாசாரிகளையும், பெண் பூஜாசாரிகளையும்

G.B. Sathyanesan, B

போல உடுத்திக் கொண்டுபோக ஏற்பாடு செய்யப்பட்டது. கைதிகளோ அவ்விதம் தாங்கள் உடுத்தப்படுவதை எதிர்த்தனர். அப்பேர்ப்பட்ட மூட நம்பிக்கையை எதிர்த்தே தங்கள் உயிரை விடுவதாகக் கூறினர். அதனாலே, இவ்விதமாக அவமானம் செய்யப்படாதபடி தப்பினார்கள்.

கொலைக்களத்துக்கு வந்து சேர்ந்தனர். பெர்பெச்சுவா ஜெயத்தின் பாட்டொன்றைப்பாடிக் கொண்டிருந்தாள். எல்லா ஆண்களும் சிறுத்தைப்புலிகளுக்கும் கரடிகளுக்களுக்கும் இரையாக எறியப்பட்டனர். கடைசியில் பெர்பெச்சுவா, பெலிசிட்டாஸ் (Felitas) என்றஇரண்டு பெண்களையும் நிர்வாணமாக வலைகளில் கட்டி, எல்லாரும் காணத் தொங்கவிட்டார்கள். கோரமான இரத்தக் காட்சிகளைக் காணப் பிரியப்படும் மூர்க்க சுபாவமான அந்த ஜனக்கூட்டத்தானும் இந்தக் காட்சியைக் காண விருப்பவில்லை. இருவரும் வஸ்திரம் உடுத்தப்பட வேண்டும் என்று ஜனங்கள் கேட்டுக்கொண்டனர்.

அப்படியே வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டவர்களாய் இருவரும் அரங்கத்தில் வீசியெறியப்பட்டனர். காட்டு மாடு ஒன்றை அதனுள்ளே விட்டனர். பெலிசிட்டாஸ் விழும்போதே மரணத்துக்கேதுவான காயமுற்றாள். பெர்பெச்சுவாவை மாடு இங்குமங்குமாகக் கொம்பினால் தூக்கி எறிந்து, உருட்டிப் புரட்டிப் பின்பு அமைதியாய் நின்றுவிட்டது அவளோ எழுந்து, காயப்பட்டுக் கிடந்த பெலிசிட்டாஸ் அருகில் சென்று அவள் தலையை மெதுவாகத் தூக்கி, அவளை ஆறுதல் படுத்தினாள். அதன் பின்பு மாடு அவர்களைத் தாக்காதபடியினாலே, இருவரையும் மறுபடியும் வெளியே எடுத்து, பொது ஜனங்கள் காணத்தக்கதாக அவர்களை வெட்டிக் கொல்லும்படி கொண்டு சென்றனர். கடைசியாக,

இருவரும் ஒருவரையொருவர் முத்தம் செய்து, பின்பு வெட்டப்பட்டு மரித்தனர். பெர் பெச்சுவாவை வெட்டின வீரன் இளைஞனும் மனுஷரை வெட்டிப்பழக்கமில்லாதவனுமானபடியினாலே, ஒரே வெட்டில் வெட்ட அறியாதவனாய்ப் பல முறை வெட்டிக் கொன்றான்,

சிலிசியா நாட்டானாகிய **ஜூலியன்** (Julian) என்பவன் கிறிஸ்தவன் ஆனதினாலே கைது செய்யப்பட்டான். பலதடவை மிகவும் கொடியசித்திரவதைகளால் வதைக்கப்பட்டான். பின்பு பன்னிரண்டு மாதகாலமாகப் பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் அவன் சுற்றித்திரிய வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அவன் போகுமிடமெங்கும் பொது ஜனங்கள் அவனைச்சொல்லிமுடியாத நிந்தைக்கும், பரிகாசத்துக்கும், அவமானத்துக்கும் உட்படுத்தினார்கள், ஆயினும் அவன் சத்தியத்தைவிட்டு விலகவில்லை. எனவே அவனை மறுபடியும் நீதிபதிமுன் கொண்டு வந்து அவனுடைய வஸ்திரங்களை உரிந்துவிட்டுச் சவுக்கினால் பயங்கரமாக அடித்தார்கள். பின்பு அவனை அநேக பாம்புகளுடனும் தேள்களுடனும் ஓர் தோல் பைக்குள் வைத்து மூடிக்கடலில் எறிந்து விட்டனர்.

நிக்கோமாக்கஸ் (Nichomachus என்றொரு கிறிஸ்தவனை அஞ்ஞான விக்கிரகங்களுக்குப்பலியிடும்படி நீதிபதி கட்டளையிட்டான். அவன் "சர்வ வல்லவருக்கே உரிமையான கனத்தையும் மகிமையையும் பேய்களுக்கும் பிசாசுகளுக்கும் செலுத்தமாட்டேன்" என்று சொன்னான். அதன் நிமித்தமாக அவனை "ராக்" (rack) என்ற கருவியில் வைத்து வதைத்தனர். இந்தக் கருவியினால் கை கால்களை அளவுக்கு மிஞ்சி இழுப்பதினால் மூட்டுக்கள் கட்டு விட்டு, எலும்புகள் புரண்டு தாங்க

முடியாத வேதனை உண்டாகும். இவ்வாறு வேதனைப்பட்ட நிக்கோமாக்கஸ் சாகுந்தருவாயில் வேதனை பொறுக்கமாட்டாமல் சத்தியத்தை மறுதலித்து விசுவாசத்தை விட்டு விட்டான். தான் அஞ்ஞானி என்று ஒத்துக்கொண்டான். அதனாலே விடுதலை செய்யப்பட்டான். ஆனால் மனதிலும் சரீரத்திலும் உண்டான மிகுந்த வேதனையினாலே கீழே விழுந்து உயிர் துறந்தான். இப்படி இரட்சிப்பையும், உயிரையும் ஏககாலத்தில் இழந்தான்.

டிரைபோ (Trypho) ரேஸ்பிஷியஸ் (Respicius) என்ற இரு கனத்துக்குரிய மனுஷர் கிறிஸ்தவர்களானதாலே பிடிக்கப்பட்டு ராக் என்ற கருவியினால் வதைக்கப்பட்டு மூன்று மணி நேரமாகத் துன்புறுத்தப்பட்டார்கள். அந்த நேரம் முழுவதும் அவர்கள் வேதனையை மிகுந்த பொறுமையுடன் சகித்தது மல்லாமல் சர்வ வல்லவரைத் துதித்துக்கொண்டேயிருந்தார்கள். பின்பு நிர்வாணமாய்க் கடுங்குளிரிலே நிறுத்தப்பட்டார்கள். அதனாலே அவர்கள் சரீரம் விறைந்து மரத்துப்போயிற்று. பின்பு மறுபடியும் சிறைச்சாலையி வைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள். சத்துருக்கள் அவர்கள் பாதங்களை ஆணிகளினால் உருவக் குத்தினார்கள். தெருக்கள் வழியாய் இழுத்துச் செல்லப்பட்டார்கள். சவுக்கால் அடிக்கப்பட்டார்கள். தீப்பந்தங்களினால் சரீரத்தின் பல பாகங்களைச் சுட்டார்கள். கடைசியாகத் தலையை வெட்டிக் கொன்றார்கள்.

மாசிலியா என்ற பட்டணத்தில் விக்டர் (Victor) என்றொரு வாலிபக் கிறிஸ்தவன் இருந்தான். கோவிலில் பணிசெய்வதிலும், ஏழை விசுவாசிகளுக்கு உதவி புரிவதிலும், தன் காலத்தைச் செலவழித்தான். அவன் பிடிக்கப்பட்டு நீதிபதிமுன் கொண்டு

வரப்பட்டான். அவன் அஞ்ஞானத் தேவர்களை வணங்க வேண்டும் என்றும் சக்கரவர்த்தியின் தயவை அவன் சம்பாதித்துக்கொண்டால் பல சலுகைகளைப் பெறுவான் என்றும். நீதிபதி கூறினான். விக்டரோ தான் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்றும் பூலோக ராஜா தனக்குத் தரக்கூடிய எவ்வித ஸ்தானமும் தன் பரலோக ராஜாவுக்கு ஊழியம் செய்வதைத் தடுக்க முடியாது என்றும் தீர்மானமாய்க் கூறிவிட்டான். இதினிமித்தம் அவன் சக்கரவர்த்தியின் தீர்ப்புக்கு அனுப்பப் பட்டான். மாக்ஸிமியன் (Maximian) என்ற சக்கரவர்த்தியோ அவன் ரோம விக்கிரகங்களுக்குப் பலி செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டான் அவன் மறுத்துவிடவே கடுமையான தண்டனைக்குட்பட்டான். அவனைக் கட்டித் தெருக்களின் வழியாக இழுத்துச் சென்றனர். அதைக் கண்டு களித்த மூர்க்க குணமுள்ள ஜனக்கூட்டம் அவனைப் பலவிதங்களில் கொடுமைப் படுத்திற்று, அதற்கு அஞ்சாத அந்த வீரனை ராக் (Rack) என்ற சித்திரவதைக் கருவியில் வைத்துத் துன்புறுத்தத் தொடங் கினார்கள். முதலில் அதனால் அவன் பயந்து நடுங்கினாலும் அந்தச் சித்திரவதையை மிகத் தைரியமாய்ச் சகித்தான். பின்பு அவனை இருட்டறையில் அடைத்தனர். அவன் சிறையிலடைக் கப்பட்ட அந்நாட்களில் சிறைச்சாலைக்காரரான (Jailers) அலெக்சாந்தர் (Alexander) பெலிசியன் (Felician) லாங்கினஸ் (Longinus) முதலியோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி செய்தான் அதையறிந்த சக்கரவர்த்தி அம்மூவரையும் உடனே கொலை செய்ய ஏற்பாடுசெய்தான்.

விக்டரை மறுபடியும் ராக்கில் வைத்துச் சித்திரவதை செய்தனர். கனத்ததடிகளால் (Clubs) நன்றாக அடித்தனர். மறுபடியும் இருட்டறையில் அடைக்கப்பட்டான். மூன்றும் முறை

விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். அப்பொழுதும் அவன் தன் விசுவாசத்தில் உறுதியாயிருந்தான். ஓர் சிறு பீடத்தைத் (altar) கொண்டுவந்தனர். அதன் மீது அவனைத் தூபங்காட்டச் சொன்னார்கள். அவனோ தைரியமாய் முன்னுக்கு ஒரு அடி எடுத்து வைத்துத் தன் காலால் பீடத்தையும் அதன் மீதிருந்த விக்கிரகத்தையும் உதைத்துத் தள்ளினான். அதைக்கண்ட ச்சக்கரவர்த்தி மிகக்கோபங் கொண்டு அவன் எந்தக்காலினால் உதைத்தானோ அந்தக்காலைத் துண்டிக்கக் கட்டளையிட்டான். உடனே அந்தக் கால் துண்டிக்கப்பட்டது. பின், அவனை அரைக்கும் இயந்திரத்திற்குள் எறிந்தனர் அவனை நசுக்கிக் கொல்லும்படியாகவே அப்படிச் செய்தனர் ஆனால் இயந்திரக் கல் உடைந்தது. உடனே பயங்கரமாகவே நசுங்கியிருந்த அவனை உயிரோடே வெளியே இழுத்து எடுத்தார்கள். இயந்திரத்தைப் பழுது பார்த்து முடிக்கும்வரை பொறுத்திருக்க முடியாதவனாக சக்ரவர்த்தி அவனுடைய தலையை வெட்டும்படி உத்தரவிட்டான். தலை வெட்டப்பட்டு விக்டர் மரித்தான்.

சிலிசியா மாகாணக் கவர்னரான மாக்ஸிமஸ் (Maximus) டார்சஸ் (Tarsus) என்ற பட்டணத்தில் இருந்தான். அப்பொழுது தெமெத்திரியு என்ற ராணுவ உத்தியோகஸ்தன் மூன்று கிறிஸ்தவர்களைப் பிடித்துக் கவர்னரிடம் கொண்டு வந்தான்.

மூவரிலும் மேன்மையான பதவியுள்ளவனும் மூத்தவனுமான டாரக்கஸ் (Tarachus) என்பவனை முதலாவது மாக்ஸிமஸ் விசாரணை செய்தான். அவனை 'யார்' என்று கேட்டபோது "ஒரு கிறிஸ்தவன்" என்று பதிலளித்தான். கவர்னர் மறுபடியும் அதே கேள்வியைக் கேட்க அவன் அதே பதில் கொடுத்தான். தேசாதிபதி கோபங்கொண்டாலும் அவன்மீது அனுதாபமுற்று

விக்கிரகங்களுக்குப் பலி செலுத்துவதாலே அவன் உயிர் தப்புவது மட்டுமல்ல, அவனுக்கு அதனாலே ஐசுவரியமும் கனமும் உண்டாயிருக்குமென்றும் ரோமச் சக்கரவர்த்திகள்கூட அப்படிச் செய்தபடியால் மேன்மைபெற்றனர் என்றும் கூறிப் புத்தி புகட்ட முயன்றான்.

அதற்கு டராக்கஸ் பின்வருமாறு பதிலுரைத்தான். "பேராசை கொள்ளுதல் பாவம். பொன் ஓர் விக்கிரகம்; மிகவும் தீமை விளைவிக்கக்கூடியது. பொன்னின் நிமித்தம் மோசங்களும் விரோதங்களும் கொள்ளைகளும் கொலைகளும் உண்டாகின்றன. ஒருவரையொருவர் வஞ்சிக்கும்படி பொன் தூண்டி விடுகின்றது. அதன் ஆசை ஏழைகளிடம் லஞ்சம் வாங்கும்படிசெய்து, லஞ்சம் வாங்குபவர்களை நித்திய அழிவுக்குட்படுத்துகிறது. விக்கிரக ஆராதனைக்கு என் மனச்சாட்சியில் சிறிதேனும் இடமில்லாததால் விக்கிரகங்களை வணங்கி வேலையில் உயர்வு பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. மேலும் கிறிஸ்தவன் என்ற மேன்மையான பெயரைக்காட்டிலும், அதிகமான கௌரவத்தை நான் விரும்பவில்லை. சக்கரவர்த்திகள் அஞ்ஞானிகளாயிருந்து விக்கிரகங்களை வணங்குவதாலே தங்களுக்குத் தாங்களே அழிவை வருவித்துக் கொள்ளத்தக்கதாக வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்."

இப்படி டராக்கஸ் தைரியமாய்ப் பேசினதாலே ஓர் தடியினாலே அவன் தாடையில் பலமாய் அடித்தனர். அவனுடைய தாடை எலும்பு உடைந்தது. பின்பு அவனுடைய வஸ்திரங்களைக் கழற்றிவிட்டுச் சவுக்காலடித்து விலங்கிட்டுத் துர்நாற்றமுள்ள காவற்கிடங்கிலே போட்டனர்.

இரண்டாவதான புரோபஸ் (Probus) என்பவனைப் பின்பு விசாரணை செய்தனர். மாக்ஸிமஸ் அவன் யார் என்று கேட்ட

G.B. Sathyanesan, B.A

போது அவனும் தான் பெருமைப்படக்கூடிய மேலான பெயர கிய கிறிஸ்தவன் என்றுகூறினன். மாக்ஸிமஸ் "நீ விக்கிரகங்களை ஆராதித்துச் சக்கரவர்த்தியின் தயவைச் சம்பாதித்துக்கொள்ள விட்டால் "கிறிஸ்தவன் என்ற உன் பெயர் உனக்கு அதி பயன் தரமாட்டாது" என்று கூறினன். மாறுத்தரமாகத் தனது ஐசுவரியத்தில் பெரும் பகுதி தான் கிறிஸ்துவின் போர் வீரனு னதே. அதனுலே தனக்குச் சக்கரவர்த்தியின் தயையைச் சம் பாதிக்க அவசியமில்லையென்று பதிலளித்தான். இதனுலே சவுக் காலடிக்கப்பட்டான். அடிகளினுலே இரத்தம் பாய்ந்தோடு வதைக் கண்ட தெமேத்திரியு அவனைத் தேசாதிபதியின் கட் டளைக்கு இணங்கும்படி சொன்னுன். அவனே முடியாது என்ற பாவனையாகத்தன் தலையை அசைத்து விட்டான். இதைக் கண்டு ஆச்சரியப்பட்ட மாக்ஸிமஸ் அவன் இன்னும் தன் மூடத்தனத்தில் உறுதியாய் நிற்கிறபடியால் அவனுடைய முதுகில் சவுக்காலடிப்பதை நிறுத்தி அவனைத் திருப்பிப் போட்டு அவனுடைய மார்பின் மீது சவுக்கினுல் அடியுங்கள் என்ருன். அப்படியே செய்தனர். அதையும் அவன் தைரியமாய்ச் சகித் தான். மேலும் "என் சரீரத்தினின்று பாய்ந்தோடும் இரத்தத் தின் அளவுக்கேற்ப என் ஆத்துமா பலங்கொண்டு உற்சாகப் படுகிறது" என்ருன். பின்பு அவனைக் காவற்கூடத்திற்குக் கொண்டுபோய் இரும்புச் சங்கிலிகள் மாட்டி அவனுடைய கை களையும் கால்களையும் தொழுமரத்தில் மாட்டினர். **அன்டிரானிக் கஸ்** (Andronicus) என்ற மூன்ருவதானவனும் விசாரிக்கப் பட்டபோது தான் ஒரு கிறிஸ்தவன் என்றும் எபேசு பட்டணத் தான் என்றும் சொன்னுன். டிராக்கஸ் புரோபஸ் என்ற அவனுடைய இரு சிநேகிதருக்கும் செய்தது போலவே இவனையும் தண்டித்துச் சிறையிலிட்டனர்.

சில நாட்கள் சிறையிலிருந்த பின்னர் மூவரும் மறுபடியும் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டனர். காக்ஸிமஸ் அவர்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகள், அவர்கள் விசுவாசத்தை விட்டுவிடச் செய்திருக்கும் என்று எண்ணிக்கொண்டான். டிராக்கஸ் இன்னும் விசுவாசத்தில் நிலைத்திருப்பதைக் கண்டு ஆத்திரமடைந்து அவனைப் பலவிதங்களில் சித்திரவதை செய்யும்படிக் கட்டளையிட்டான். அவனுடைய உள்ளங்கைகளில் நெருப்புத் தழலை வைத்தனர். அவனைத் தலைகீழாகக் கட்டித்தூக்கி அவனுக்குக் கீழே ஈரமான வைக்கோலில் நெருப்பு மூட்டிப் புகைத்தனர். மறுபடியும் அவனைச் சிறையிலடைத்தார்கள்.

பின்பு புரோபஸ் பலிசெலுத்த ஆயத்தமாயிருக்கிறானோ? என்று தேசாதிபதி கேட்டான். அவனோ "முன்னைவிட இப்பொழுது பாடுபட அதிக ஆயத்தத்துடன் வந்திருக்கிறேன். ஏனென்றால் நான் பட்டபாடுகளும் சித்திரவதைகளும் என்னுடைய தீர்மானத்தை அதிகமாய் உரப்படுத்தி உறுதிப்படுத்திற்று. ஆகையால் உங்களுக்கிருக்கும் உங்கள் முழுவல்லமையையும் என்மீது செலுத்திப் பாருங்கள். நீங்களாவது சக்கரவர்த்தியாவது, நீங்கள் சேவிக்கிற உங்கள் தெய்வங்களாவது அந்நிய தேவர்களை நான் வணங்கும்படி என்னை மாற்ற இயலாது" என்று சொன்னான்.

தேசாதிபதியோ அவனோடு தர்க்கித்து அந்நிய தேவர்களைப் புகழ்ந்து யூப்பித்தருக்கும் (Jubiter) பலியிடச் சொன்னான். புரோபஸ் மறுத்தது மட்டுமல்ல, பின்வருமாறு கூறினான். "உங்களுடைய சொந்த ஆசாரியர்களும் கவிஞருமே யூப்பித்தர் துர்நடத்தையுள்ளவன் என்று வர்ணித்திருக்கின்றனர்"

என்ருன். இந்த வார்த்தைகளைக் கேட்ட மாக்ஸிமஸ் அவன் தேவதூஷணம் சொன்ஞன் என்று சொல்லி அவனை வாயி அடிக்கும்படி கட்டளையிட்டான். பின்பு பழுக்கக் காய்ச்சின இரும்புகளால் அவன் சரீரம் முழுவதையும் சுட்டார்கள். இப்படி வதைத்து மறுபடியும் சிறையிலடைத்தனர்.

அன்டிரானிக்கஸ் கொண்டு வரப்பட்டான். அவனுடைய இரு சிநேகிதரும் சத்தியத்தை மறுதலித்து ராஜீயத்தின் தேவர்களுக்கு பூஜை செய்தனர் என்று பொய்யாய் மாக்ஸிமஸ் கூறினுன். அவனோ "ஓ! தேசாதிபதியே! இந்த விஷயத்தில் என் சிநேகிதர் பலவீனர்-கோழைகள்-என்று நீர் சொல்ல வேண்டாம். உமது சாதுரிய வார்த்தைகளினுல் என்னுடைய உறுதியைக் குலைக்கலாம் என்று நீர் எண்ணவும் வேண்டாம். உமது தெய்வங்களை நான் அறியேன். உமது அதிகாரத்துக்கும் நான் அஞ்சுவதில்லை. உமது பயமுறுத்தல்களை நிறைவேற்றும். உமது அதிகாரத்துக்குட்பட்ட பயங்கரமான சித்திரவதைகளையெல்லாம் எனக்குச் செய்யக் கட்டளையிடும். அவை எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காகச் சகிக்க ஆயத்தமாயிருக்கிறேன்" என்று பதிலுரைத்தான்.

இதினிமித்தம் அன்டிரானிக்கஸ் மிகவும் கொடுமையாக வாரினுலடிக்கப்பட்டான். சீக்கிரத்தில் அவனுடைய காயங்கள் சுகமடைந்தன. அதையறிந்த கவர்னர் சிறைச்சாலைக்காரன் வைத்தியரை சிகிச்சை செய்யவிட்டபடியாலேயே அன்டிரானிக்கஸ் சீக்கிரம் சொஸ்தமாஞன் என்று சொல்லி அவன்மீது வீண்பழி சுமத்திஞன். சிறைச்சாலைக்காரன் தான் ஒருபோதும் எந்த வைத்தியனையும் அழைத்து வந்ததில்லையென்றும் அவன் மீதுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் தான் சாக ஆயத்த

மாயிருப்பதாகவும் கூறினன். அன்டிரானிக்கஸ் தான் வணங்கி வந்த உண்மையுள்ள தேவன் திறமை வாய்ந்த வைத்தியர் என்றும் அவரே தன்னைச் சுகப்படுத்தினர் என்றும் கூறினன்.

சில நாட்கள் கழித்து இந்த மூன்று கிறிஸ்தவர்களும் மூன்ரும் முறையாக விசாரிக்கப்படத் தேசாதிபதிமுன் நிறுத்தப் பட்டனர். மறுபடியும் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். கடைசியாக மரணக்கினை விதிக்கப்பட்டது. மூவரையும் நகரத்தின் அரங்கசாலைக்குக் கொண்டுசென்றனர். அவர்களைப் பீறிக் கொல்லும்படி காட்டு மிருகங்கள் அவிழ்த்து விடப்பட்டன. அவைகளோ அவர்களுக்குச் சேதமொன்றும் செய்யாமல் வாளாவிருந்தன. இதனால் மாக்ஸிமஸ் மிருகங்களைக் காப்பவனிடம் கோபமுற்று அவர்கள்மீது பாய்ந்து இரத்தத்தைச் சிந்தும்படியான ஓர் துஷ்ட மிருகத்தைக் கொண்டுவரக் கட்டளை யிட்டான். அந்த நாளில்தானே வேறு மூவரைக் கொன்றிருந்த ஓர் பெரிய கரடியை அவன் அவர்கள் மீது விட்டான். எல்லாரும் ஆச்சரியப்படும் வகையில் அதுவும் அவர்களைத் தொடவில்லை. அதனலே மாக்ஸிமஸ் அவர்களைப் பட்டயத்தாலே வெட்டிக் கொல்லும்படிக் கட்டளையிட்டான். அவர்களை வெட்டும் முன்னதாக அவர்கள் சொன்னதாவது; "மனுஷனுய்ப் பிறந்த எவனும் ஒருநாள் நிச்சயமாய்ச் சாகவேண்டும். ஆகையால் வியாதிப்பட்டு மரிப்பதைக் காட்டிலும் இவ்விதம் கிறிஸ்துவுக்காக மரிப்பது எவ்வளவு உத்தமமானது!" இப்படிச் சொல்லிப் பட்டயத்தால் வெட்டுண்டு மூவரும் மாண்டார்கள்.

தெசலோனிக்கேப் பட்டணத்தைச் சார்ந்த கியோனியா (Chionia) அகேப் (Agape) ஐரின் (Irene) என்ற மூன்று சகோதரிகள் கிறிஸ்தவ மார்க்கத்தின்படி போதிக்கப்பட்டுக்

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். நீண்டகாலமாகத் தங்களுக்கு இன்னல் வரும் என்று அஞ்சி தன்னந்தனியான ஓரிடத்தில் ஒருவருக்கும் தெரியாமல் வாசம் செய்தனர். கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்டனர். பிடிபட்டபோது தங்களுக்கிருந்த கோழைத்தனத்தை எண்ணி மனஸ்தாபப்பட்டுத் தங்களுக்கு இனி நேரிடப்போகிற உபத்திரவங்களைத் தைரியமாய்ச் சகிக்க பெலன் தரவேண்டுமென்று கர்த்தரிடம் ஜெபித்தனர்.

அகேப் நீதிபதி முன் கொண்டுவரப்பட்டாள். அவன் கேட்ட கேள்விகளுக்குத் தான் விக்கிரகாராதனை சம்பந்தமான எவ்விதமான கட்டளைக்கும் கீழ்ப்படிய முடியாதென்றும், தனது உறுதியான தீர்மானத்தினின்று ஒன்றும் தன்னைத் திருப்பமாட்டாதென்றும் கூறிவிட்டாள். அவள் சகோதரியான கியோனியாவும் அவ்விதமே கூறினாள். இதனால் ஆத்திரமடைந்த அதிபதி அவர்களை உயிரோடே எரிக்கும்படிக் கட்டளையிட்டான்.

ஐரின் (Irene) என்ற இளைய சகோதரி மிகவும் அழகு வாய்ந்தவள். அவளுக்குப் பதினெட்டு வயது மாத்திரமே. அவளுடைய இரு சகோதரிகளையும் உயிரோடே எரிப்பதைக் கண்டால் அவளுடைய இளமனம் ஒருவேளை பயத்தினால் மாறி விசுவாசத்தை மறுதலிப்பாள் என்று நீதிபதி எண்ணினான். தன் சகோதரிகள் அக்கினியில் வெந்து மாண்டதைக் கண்ட ஐரின் மறுபடியும் நீதிபதி முன் கொண்டுவரப்பட்டாள். அவன் அவளிடம் பட்சமாயும் பயமுறுத்தியும் பேசினான். அவன் வார்த்தைகளுக்குப் பயனில்லை. அவளோ தன்விசுவாசத்தில் தைரியமாய் நின்று தன் சகோதரிகள் சென்ற பாதையிலேயே தானும் செல்ல விரும்புவதாகக் கூறி

விட்டாள். இதனாலே அந்தத் தேசாதிபதி மிகவும் கோபங் கொண்டான். அவளை வீதிகளிலே நிறுத்தவும் ராணுவ வீரர் தங்கள் விருப்பம்போல் யாவரும் காண அவளை அவமானப் படுத்தவும் கட்டளையிட்டான். அந்தவூர்க்கர் அவளைத் துஷ்டத் தனமாய் நடப்பித்து மானபங்கம் செய்தனர். பின்பு பட்டணத்து மதில் சுவர்களினருகில் அக்கினி உண்டாக்கி அதனுள்ளே அவளை எறிந்தனர். அவளுடைய சரீரம் தகனிக்கப்பட்டாலும் அவளுடைய ஆத்துமா தன் இரட்சகரான தேவனிடம் பறந்து சென்றது.

வட ஆப்பிரிக்காவில் மாரிட்டானியாவில் இருந்த உதவிக் குருவான தீமோத்தேயு (Timothy), மாரா (Maura) என்ற பெண்ணை மணந்து கொண்டான். விவாகமாகி மூன்றுவாரங்களே கழிந்தன. இருவரும் கிறிஸ்தவர்களானதினாலே பிடிக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்படும்படிப் பிரிக்கப்பட்டனர். அரியேனஸ் (Arrianus) என்ற தேசாதிபதி, தீமோத்தேயு அந்நிய தெய்வங்களை ஆராதிக்கும்படி தன்னாலியன்றமட்டும் வற்புறுத்திப் பார்த்தான். பிரயோஜனமில்லை. பின்பு தீமோத்தேயுவைத் திருந்த கர்த்தருடைய வேதத்தைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி கட்டளையிட்டான். தீமோத்தேயு, "எனக்கு பிள்ளைகளிருந்தால் அவர்களைச் சுட்டெரிக்கும்படிக் கொடுத்திருப்பேன். கர்த்தருடைய வசனம் எரிக்கப்படும்படி நான் ஒரு போதும் கொடுக்கமாட்டேன்" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டான்.

மூர்க்கமடைந்த தேசாதிபதி "அந்தப்புஸ்தகங்கள் உனக்குப் பிரயோஜனமில்லாமற்போகும்படிச் செய்வேன்" என்று கூறி அவனுடைய இரண்டு கண்களையும் குத்திக் குருடாக்கும்படிக் கட்டளையிட்டான். இந்தக் கொடூரமான தண்டனையைத்

தீமோத்தேயு பொறுமையாய்ச் சகிக்கின்றதைக்கண்டதேசாதிபதி இன்னுமதிகமாக ஆத்திரமடைந்தான். அதன் பயனாகத் தீமோத்தேயுவைத் தலைகீழாகக் கட்டித் தூக்கினார்கள். அவனுடைய கழுத்தில் பளுவான பாரத்தைக் கட்டினார்கள். வாயில் துணியைத் திணித்தார்கள்.

இந்தக் கொடுமைகளையெல்லாம் தீமோத்தேயுதைரியமாய்ச் சகித்தான். அப்பொழுது அவன் புதிதாகக் கலியாணம் செய்து கொண்டவன் என்றும் தன் மனைவியை அதிகமாய் நேசிப்பவன் என்றும் தேசாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.உடனேதேசாதிபதி, அவனுடைய மனைவியாகிய மாராவை அழைத்தனுப்பினான். அவளிடம், அவள் தன் புருஷனை அந்நிய தேவர்களுக்கு ஆராதனை செய்யும்படி இணங்க செய்துவிட்டால் அதன் பிரதி பலனாக அவனுடைய ஜீவனைக் காப்பாற்றிக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினான். விசுவாசத்தில் தளர்ந்தவளாய், தன் புருஷனை மிகுதியாய் நேசித்தபடியினாலே அவனுடைய ஜீவனை எப்படியாவது மீட்டுக்கொள்ள ஆசைகொண்டு அவள் அவ்விதம் செய்ய ஒத்துக் கொண்டாள். எனவே அவளைத் தீமோத்தேயுவிடம் அழைத்துச் சென்றனர். அவள் அவனிடம் நயந்து அன்புகனிந்த வார்த்தைகளால் பேசினாள். அவன் அவளுக்கு உத்தரவு சொல்லும்படி அவன் வாயிலிருந்த துணி நீக்கப்பட்டது. மனைவியின் வேண்டுகோளுக்கு இசைவான் என்று யாவரும் எதிர்பார்த்திருந்தனர். அவனோ அவன் அவள்மீது கொண்டிருந்த அன்பினைக் குறித்து பிழையாய் விளங்கிக் கொண்டதாக அவளைக் கடிந்துகொண்டான். மேலும் தான் விசுவாசத்தினிமித்தம் மரிக்கத் தீர்மானித்து விட்டதாக அறிவித்தான். அவள், மேலும் மேலும் அவனுடன் பேசித் தன் உறுதியை விட்டு விடும்படி வற்புறுத்தவே கடைசியில்

தீமோத்தேயு தன் மனைவியைப் பழித்துப் பேசி, அவளுடைய பெலவீனமான விசுவாசத்தினிமித்தம் அவளை மிகவும் கோபித்தான். அதோடு அவள் தன்னைப் பார்த்துப் படித்துத் தனது தைரியத்தைப் பின்பற்றும்படிக் கற்பித்தான். தானும் விசுவாசத்துக்காக மரிக்கப்போவதாகத் தேசாதிபதிக்கு அறிவித்துத் தனது பிழையை அவள் சீர்ப்படுத்த வேண்டும் என்று அவளைக் கேட்டுக்கொண்டான். தீமோத்தேயுவினுடைய வார்த்தைகளாலும் கர்த்தருடைய கிருபையாலும் பலப்படுத்தப்பட்டவளாய், அவள் தேசாதிபதியிடம் சென்று தான் தனது புருஷனுடன் அன்பில் மட்டுமல்ல விசுவாசத்திலும் ஒன்ருக இணைந்திருப்பதாகவும், அவனை விசுவாசத் துரோகியாய் மாற்றும்படி தான் துணிந்த தனது துர்க்குணத்தினிமித்தம் தான் சித்திர வதைகளை அனுபவிக்கத் தகுதியுள்ளவள் என்றும் கூறினுள். உடனே தேசாதிபதி தீமோபதேயுவைவிட அதிகக் கொடுமையாய் அவளை வதைக்கும்படி உத்தரவிட்டான். கடைசியில் தீமோத்தேயுவும், மாராவும் ஏககாலத்தில் சிலுவையிலறையப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜூலிதா (Julitha) என்ருெரு கிறிஸ்தவப் பெண்மணி இக்கோனியாவில் வசித்து வந்தாள். அங்கு விக்கிரகங்களுக்குப் பலியிடவேண்டும் என்ற அறிக்கை வாசிக்கப்பட்டபோது, அவள் தனது சின்ன மகனுன சிரிகஸ் (Cyricus) என்பவனையும் இரண்டு வேலைக்காரிகளையும் தன்னோடு அழைத்துக் கொண்டு பட்டணத்தைவிட்டு ஓடிப்போனுள். ஆயினும் டார்ஸஸ் (Tarsus) என்ற பட்டணத்தில் பிடிக்கப்பட்டாள். அலெக்சாந்தர் என்ற தேசாதிபதியிடம் கொண்டு போகப்பட்டபோது தான் ஒரு கிறிஸ்தவள் என்று அறிக்கையிட்டாள். அதனிமித்தம் அவளுடைய குமாரனை அவளுடைய கைகளி

னின்று பிடுங்கிக்கொண்டனர் அவளை ராக் (Rack) என்ற சித்திரவதைக் கருவியில் வைத்து வதைத்தனர். இதைக்கண்ட குழந்தை தாயிடம் போக எண்ணிக் கதறி அழுதது. தேசாதிபதி பிள்ளையின் சௌந்தரியத்தைக் கண்டு பரிதாபப் பட்டு, தானே தனது கரங்களில் அப்பிள்ளையை ஏந்திக்கொண்டு, அதை அழாதபடி சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான். பிள்ளையோ அழுகையை நிறுத்தின பாடில்லை. தாய் வதைக்கப் பட்டபோதிலும் 'நான் ஒரு கிறிஸ்தவள்" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருந்தாள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த பிள்ளை, தாய் சொன்னதைக் கேட்டு, அர்த்தம் தெரியாமலே "நான் ஒரு கிறிஸ்தவள்" என்றது. இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தேசாதிபதி மிகுந்த கோபமுற்று, பிள்ளையைத் தரையில் எறிந்துவிட்டான். பின்பு தாய் ராக் என்ற கருவியிலிருந்து காணும் வண்ணமாகவே அந்தக் குழந்தையினுடைய தலையை தரையில் மோதி அடிக்க மூளை சிதறினது; பிள்ளை மாண்டது. ஆயினும் ஜூலிதா மனம் தளரவில்லை. கடைசியாக அவள் தலையை வாளால் வெட்டிக் கொன்றனர்.

மேலே சொல்லப்பட்ட உபத்திரவங்களைத் தவிர தேவனுடைய ஜனமாகிய யூதர்களுக்குக் கடந்த காலங்களில் எத்தகைய கொடிய உபத்திரவங்கள் உண்டாயின என்பதையும் நாம் அறிவோம். சில ஆண்டுகளுக்கு முன்பு ஹிட்லர் என்ற ஜெர்மன் சர்வஅதிகாரி (Hitler, the German dictator) ஆயிரக்கணக்கான ஏறக்குறைய 6,000,000 யூதர்களை மிகவும் கொடுமையாக நவீன முறையிலே மின்சார சக்தியினாலும் (Electrocution), விஷ வாயுவினாலும் (Gas chambers) இரக்கம் சிறிதுமில்லாமல் வதைத்துக் கொன்றான்.

மேற்கூறிய எல்லாவிதமான உபத்திரவங்களைப் பார்க்கிலும், மகா உபத்திரவ காலத்தில் தேவனுடைய ஜனத்துக்கும், பூமியின் குடிகளுக்கும் சொல்லொண்ணு மகா கொடிய பயங்கர உபத்திரவங்கள் உண்டாகும். ஆகையினுல்தான், இயேசு: உலக முண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்." (மத். 24:21) "சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும்' வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; "ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக் கிறதினுல் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்" (லூக். 21:25-26) என்று கூறினுர்.

இந்த நாட்களில் 1,44,000 யூதர்களைத் தெரிந்து கொண்டு, அவர்கள் நெற்றிகளில் முத்திரை போட்டு, அவர்கள் அந்திக் கிறிஸ்துவினுல் அழிக்கப்பட்டுப் போகாதபடி அவர்களைப் பாதுகாத்து, அவர்கள் பின்பு இதே பூமியில் ஸ்தாபிக்கப்படப் போகிற ஆயிரம் வருஷ அரசாட்சியில் பங்குபெறச் செய்கிறுர். இதைக் குறித்து வெளி. 7:3-8-ல் வாசிக்கிறேம்.

தேவனுடைய முத்திரையைத் தங்கள் நெற்றிகளில் தரித்திராத மனுஷர்கள் யாவரும் மகா உபத்திரவக் காலத்தில் மிகவும் துன்புறுத்தப்படுவார்கள். இது சம்பந்தமாக எசேக் கியேல் 9:4-6 ல் வாசிப்போமானுல், அங்கு எருசலேம் நகரத்துக்குள் செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளமிடப்

பட்டுக் காக்கப்படுகிறார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறதைக் காணலாம். இது மகாஉபத்திரவகாலத்தில் தங்கள் நெற்றிகளில் முத்திரையிடப்பட்டுக் காக்கப்படுகிற 1,44,000 யூதர்களுக்கு ஒரு அடையாளமாகக் கூறப்பட்டுள்ளது.

வெளி. 7:1-8-ல் சொல்லப்பட்ட 1,44,000 பேரைப்போல, வெளி. 14:1-5-ல் 1,44,000 பேர் கொண்ட இன்னொரு கூட்டத்தாரைக் காண்கிறோம். இந்த இரண்டு கூட்டத்தாரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களா? இல்லை. இரண்டு கூட்டத்தாரும் ஒரே எண்ணிக்கை (1,44,000)யினராயிருந்தாலும், ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களல்லர் என்பதைக் கீழ்க்கண்ட காரணங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

(1) வெளி. 7-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 1,44,000 பேருக்கு நெற்றிகளில் முத்திரையிடப்பட்டது. ஆனால் வெளி. 14-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 1,44,000 பேர்களுடைய நெற்றிகளில் பிதாவின் நாமம் எழுதப்பட்டிருந்தது.

(2) வெளி. 7 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 1,44,000 பேர் மகா உபத்திரவ காலத்தில் காக்கப்படும்படியாக முத்திரையிடப்பட்ட யூதர்களேயாவர். ஆனால் வெளி. 14-ஆம் அதிகாரத்தில் காணும் 1,44,000 பேர் ஆட்டுக்குட்டியானவர் எங்கு போனாலும் அவரைப் பின்பற்றிப் பிதாவின் பூரணசித்தத்தைச் செய்து, தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக மாசில்லாதவர்களென்பதற்கு அடையாளமாகப் பிதாவின் நாமம் தங்களுடைய நெற்றிகளில் எழுதப்பட்டவர்கள்.

(3) வெளி. 7 ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 1,44,000 பேர் இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலுமிருந்து

தெரிந்து எடுக்கப்பட்டு, முத்திரையிடப்பட்டவர்கள். ஆனால் வெளி. 14-ல் காண்கிற 1,44,000 பேர் பூமியிலிருந்தும், மனுஷரிலிருந்தும் மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்.

(4) வெளி. 7-ல் காணப்பட்ட 1,44,000 முத்திரையிடப்பட்ட யூதர்கள், எழுத்தின்படி இப்பூமியிலுள்ள சீயோனிலோ, அல்லது பரலோகத்திலுள்ள சீயோனிலோ இருப்பதில்லை. ஏனெனில் பூமிக்குரிய எருசலேமோடு சேர்ந்த சீயோனில் இவ்வளவு எண்ணிக்கையையுடைய ஜனம் வசிக்க இடம் போதாது. ஆனால் வெளி. 14-ல் சொல்லப்பட்ட 1,44,000 பேர் பூமிக்குரிய சீயோனில் அல்ல; பரலோகத்திலுள்ள சீயோனில் இருக்கிறார்கள். எப்படியெனில், இவர்கள் "சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்குமுன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும்" இருப்பதாக வெளி. 14:3-ல் சொல்லப்பட்டுள்ளது. யோவான், வெளி. 4:2-ல் சிங்காசனம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லுகிறார். நான்கு ஜீவன்களும், 24 மூப்பர்களும் பரலோகத்தில் சிங்காசனத்திற்கு முன்பாக இருந்ததாகக் காண்கிறோம். (வெளி. 4.10; 14:3)

(5) வெளி. 7-ல் சொல்லப்பட்ட 1,44,000 பேர் இவ்வுலகில் அழிவுக்குரிய சரீரத்தோடு, முத்திரையிடப்பட்டு, உபத்திரவ காலத்தில் காக்கப்படுகிறார்கள். ஆனால் வெளி. 14-ல் காணும் 1,44,000 பேர் "தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டார்கள்." (14:4) அவர்கள் இயேசுவின் வருகையில் மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். ஆகையால் அவர்கள் பரலோகத்தில் மகிமையடைந்த சரீரங்களோடு காணப்படுகிறார்கள்.

G.B. Sathyanesan, B.A.

(6) வெளி. 7-ல் சொல்லப்பட்ட 1,44,000பேர் இயேசுவை உபத்திரவகாலமாகிய 7வருஷங்கள் முடிவிலே, அல்லது தாங்கள் முத்திரிக்கப்பட்டு 3½ வருஷ முடிவிலே காண்பார்கள். "அந் நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவ மலையின் மேல் நிற்கும்."(சகரியா14:4).அதாவது இவர்கள் இயேசு பூமிக்கு வரும்போதுதான் அவரைக் காணக் கூடியராவர். ஆனால்வெளி.14-ல் சொல்லப்பட்ட 1,44,000பேர் சீயோனில் ஏற்கனவே இயேசுவோடிருந்து, அவரைப் பின்பற்று கிறவர்களாயிருந்தார்கள். (வெளி. 14:4)

இவ்விதமாக வெளி. 7-ல் சொல்லப்பட்ட 1,44,000 பேர் எசேக். 9:3-7-ல் அடையாளமாகக் காண்கிற, இஸ்ரவேலிலே செய்யப்படுகிற அருவருப்புக்களினிமித்தம். பெருமூச்சுவிட் டழுகிற. உபத்திரவ காலத்தில் முத்திரிக்கப்பட்ட யூதர்களாவர்' ஆனால் வெளி. 14-ல் சொல்லப்பட்ட 1,44,000பேர் இவ்வுலகில் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து அவர் எங்கே போனாலும்அவரைப் பின்பற்றி ஜெயமெடுத்துப் பரலோகத்தில் அதி உன்னத நிலையை அடைந்த ஊழியக்காரரை மாத்திரம் குறிக்கிறது. மகா உபத்திரவ காலமாகிய பின்பகுதியாகிய இந்த 3½ வருடங்களில், கர்த்தருடைய இரண்டு சாட்சிகளாகிய, ஏனோக்கும், எலியாவும் தங்கள் சாட்சியைச் சொல்லி முடிக்கிறபோது, அந்திக்கிறிஸ்து அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர் களைக் கொன்று போடுவான்.

"ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள். அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள்" (வெளி.11:9.)எருசலேம்

நகரத்தின் வீதியில் கிடக்கும் இவர்களுடைய உடல்களைப் பூமியில் குடியிருக்கும் சகலஜனங்களும் எவ்விதம்ஒரேசமயத்தில் பார்க்க முடியும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால்அறிவுபெருகிப் போன இக்காலத்தில், தூர தேசங்களில் நடக்கும் நடனங்கள், நாடகங்கள், பலவிதமான பந்தய விளையாட்டுக்கள், பாடங்கள் பயிற்றுவித்தல் முதலியவற்றை உலகின்எப்பாகங்களிலும் பார்த்து அனுபவிக்கும்படி மின்சாரசக்தியின் உதவியினால்பலவித நூதன கருவிகளைக் (Television) கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று நாம் அறிவோமன்றோ? ஆதலின் இவர்கள் உடல்களையும் உலகத்தவர் யாவரும் பார்ப்பது நடைபெறக் கூடியதேயாகும்.

அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப் படுத்தினபடியால் அவர்கள் மரணத்தினிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப் பட்டுக்களிகூர்ந்து, ஒருவர்க்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள். 3½ நாளுக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள். அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. "இங்கே ஏறி வாருங்கள்" என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள். (வெளி. 11:7-12) இவ்விதமாக மரணத்தை ருசிபாராது உயிரோடு பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களாகிய ஏனோக்கும், எலியாவும், மகா உபத்திரவ காலத்தில் இப்பூமிக்குத் திரும்பி வந்து, ஊழியஞ்செய்து, பின்பு அந்திக்கிறிஸ்துவினால் கொல்லப்பட்டு, தேவனால் 3½ நாளில்உயிர்ப்பிக்கப்பட்டு, மேகத்தில் ஏறி மறுபடியும் பரலோகத்துக்குப்

போகிறார்கள். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுள் இவ்விரண்டு பேர்கள் தாம் முதலாவது உயிர்த்தெழுவார்கள். ஆகையால் இவர்களைப் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் முதற்பலன் என்னலாம்.

அதிகாரம் - 8

ஐந்தாம் வரிசை—பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், சாதாரண இரத்த சாட்சிகளும்

உபத்திரவ காலமாகிய 7 வருஷ முடிவிலே, இயேசு இவ்வுலகத்திற்கு எல்லாரும் காணத்தக்கதாக வெளியரங்கமாக, மகிமையோடு தமது பரிசுத்தவான்களோடு ஒலிவ மலையின் மேல் இறங்குவார். இது இயேசுவின் இரண்டாம் வருகையின் மூன்றும் பகுதியேயாகும்.

"இதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாம் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்". (வெளி. 1:7) இப்பூமியில் ஆயிரம் வருஷம் தமது பரிசுத்தவான்களோடு ஆளுகை செய்யும்படியாகவும், அவபக்தியுள்ளவர்கள் மேல் நியாயத்தீர்ப்புச் செலுத்தும்படியாகவும் அவர் இச்சமயம் வருகிறார். இதைக் குறித்து ஏனோக்கு: "இதோ எல்லோருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்து வந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைக

ளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்". (யூதா 14, 15)

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, எவ்விதம் தமது சீஷர்கள் பார்த்துக் கொண்டிருக்க, எருசலேமுக்குச் சமீபமாய் இருக்கிற ஒலிவமலையிலிருந்து பரமேறிச் சென்றாரோ. (அப். 1:11-12) அவ்விதமாகவே, அவர் ஏழு வருஷ உபத்திரவ காலத்தின் முடிவிலே, அதே ஒலிவமலையின்மேல் வந்து இறங்குவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய்ப் பிளந்துபோம்; இதினாலே ஒரு பாதி வட பக்கத்திலும். ஒருபாதி தென்பக்கத்திலும் சாயும். (சகரி. 14:4-5) மத்தேயு 24:27, 30-ஆம் வசனத்தின் கடைசிப் பாகத்தையும் கவனிக்கவும், இயேசுவின் இவ்வருகையின்போது பழைய ஏற்பாட்டுச் சகல பரிசுத்தவான்களும், இரத்த சாட்சிகள் யாவரும் உயிர்த்தெழுவார்கள். (வெளி. 20:4) இந்த உயிர்த்தெழுதல் லேவி. 23:22-ல் கூறப்பட்ட "சிந்திக் கிடக்கிற கதிர்களைப் பொறுக்குதலுக்கு" (Gleanings) அடையாளமாகக் காட்டப்படுகிறது.

அர்மகெதோன் யுத்தம்

உபத்திரவ காலமாகிய ஏழு வருஷ முடிவிலே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, மேற்கூறப்பட்ட பரிசுத்தவான்களோடு, இப்பூமிக்கு வருகையில், பிசாசு பூலோகமெங்குமுள்ள சகல ராஜாக்களையும், சகல ஜாதிகளையும் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்கு, எபிரேயு பாஷையிலே "அர்மகெதோன்" (Armageddon) என்னப்பட்ட இடத்திலே கூட்டிச்சேர்ப்பான். வெளி. 16:13-16. அக்காலத்தில் நடக்கும் இந்த யுத்தமானது மகாபயங்கரமாயிருக்கும். (சகரி. 14:2-5, II தெச. 2:7-10, வெளி 19:11-21, ஏசா.

24:17-22 இந்த வசனங்களை வாசிக்கவும்) கர்த்தர் தமது ஜனத்துக்காகவும், எருசலேமுக்காகவும், போராடுவார். "பறந்து காக்கிற பட்சிகளைப்போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்புவிப்பார்; அவர் கடந்து வந்து அதை விடுவிப்பார்." (ஏசா. 31:5) அந்திக்கிறிஸ்துவும், பூமியின் இராஜாக்களும், அவர்களுடைய சேனைகளும், ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம் பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும், ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; (வெளி. 17:14) "அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும், அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும், மோசம் போக்கின கள்ளத் தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள். மற்றவர்கள் குதிரைமேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாமிசத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன." (வெளி. 19:20-21)

இங்குச் சொல்லப்பட்டுள்ள மிருகமும், கள்ளத் தீர்க்கதரியும் யார்?

அதிகாரம்-9

சாத்தானின் திருத்துவம்

தேவன் திரித்துவமாகப் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவராக இருப்பதுபோல, சாத்தானும், வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி என்று திருத்துவமாக இருக்கிறான். (வெளி. 16:13:19:20; 20:2,10)

வலுசர்ப்பம் : (Dragon) சாத்தானுக்கு, பிசாசு, பழைய பாம்பு, வலுசர்ப்பம், எதிராளி, பெயல்செபூல், அபெத்தோன்

(Heb), அப்பொல்லியோன் (Gk.) என்று பல பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (வெளி. 9:11, 20:2, I பேது. 5:8, லூக். 11:15) மேலும் சாத்தான் "இந்த உலகத்தின் அதிபதி" (யோவா 12 : 31; 14:30), "இப்பிரபஞ்சத்தின் தேவன் (II கொரி. 4:4), "ஆகாயத்து அதிகாரப்பிரபு" (எபே. 2:2) என்றும் அழைக்கப்பட்டிருக்கிறுன். வெளி. 12:10-ல் அவன் நமது சகோதரர்கள் மேல் "குற்றஞ்சாட்டு கிறவன்" என்றும் கூறப்பட்டுள்ளான். அவன் ஆதி முதற் கொண்டு மனுஷகொலை பாதகனுயிருக்கிருன் அவன் இச்சைக் கும் பொய்க்கும் பிதாவாக இருக்கிருன். (யோவா. 8:44) இவனைப் "பழைய பாம்பு" என்று சொல்லியிருப்பதால் விழுந்து போனவர்களில் இவன் தான் முதல்வன் என்றும், அவர்கள் எல்லாரிலும் மிகவும் வயது சென்றவன் என்றும் வெளிப்படு கிறது. இவனது விழுகையின் காரணம், இறுமாப்பு (Pride) என்று I தீமோ. 3:6-ல் வாசிக்கிறும். இதினிமித்தம் இவன் ஆக்கினைக்குள்ளாக வைக்கப்பட்டிருந்தாலும், ஆதாம், ஏவாளை வஞ்சித்தபடியினுல் வல்லமையை அடைந்து கொண்டான். ஆதியிலே மனுஷன் இப்பூமியிலே: நிலத்திலும், தண்ணீரிலும், ஆகாயத்திலும் ஆளுகையுள்ளவனுக இருந்தான். (ஆதி. 1:26) ஆனுல் அவன் பிசாசின் சொல்லுக்கு இணங்கிப் பாவஞ் செய்த வுடனே தனது ஆளுகையை இழந்து,பிசாசுக்கு அடிமையானுன் இவ்விதமாகப் பிசாசு உலகத்துக்கு அதிபதியாகவும், இப் பிரபஞ்சத்தின் தேவனுகவும் ஆகிவிட்டான். "உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது." (I யோவா. 5:19) என்றும்; "உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு"(வெளி.12:9) என்றும் வாசிக்கிறும். இப்போது இவன் ஆகாயத்திலிருந்து ஆளுகை செய்ய அதிகாரமுடையவனுகயிருக்கிருன். (எபே. 2:2, 6:12) ஆனுல் கர்த்தராகிய இயேசு இரண்டாம் ஆதாமாக வெளிப்பட்டு, மனுஷன் மீறின, கற்பனையைத்தான் கைக்கொண்டு, பிசாசானவனைத் தனது சிலுவையின் மரணத்தால் வென்றுர். (ஆதி 3:15; எபி. 2:14-15; I யோவா. 3:8) இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் மேல் பிசாசுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அவர்கள்

இயேசுவின் நாமத்தினாலே அவனை ஜெயிக்கிறார்கள். (மா 16:17, வெளி. 12:11) இயேசுவின் இரகசிய வருகையில் "ஆண்பிள்ளை" யாகிய பூரணமாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது வானத்திலே யுத்தமுண்டாகும் (வெளி 12:5, 7-9) மிகாவேலும், அவனை சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடு யுத்தம்பண்ணி அதையும் அதைச்சேர்ந்த தூதர்களையும் பூமியிலே தள்ளி விடுகிறார்கள். அதன் பின்பு சாத்தான் இப்பூமியிலே அந்திக்கிறிஸ்துவாகிய மிருகத்தோடும் (வெளி.13:1), கள்ளத்தீர்க்கதரிசியோடும் (வெளி. 13:11, சேர்ந்து பொல்லாங்கின் திரித்துவமாக இருந்துகொண்டு 7 வருஷங்கள் ஆளுகை செய்வான். அந்த 7 வருஷ முடிவிலே இயேசு பரலோகத்திலிருந்து தமது சகல பரிசுத்தவான்களோடே வந்து இப்பூமியிலே ஆயிரம் வருஷம் அரசாட்சி செய்கிறார். (Millennium) அக்காலத்தில் இந்த வலுசர்ப்பம் ஒரு தூதனால் பிடிக்கப்பட்டுப் பெரிய சங்கிலியினால் கட்டப்பட்டுப் பாதாளத்தில் தள்ளப்பட்டு ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அடைத்து வைக்கப்படுகிறது (வெளி. 20:1-2). அந்த ஆயிரம்வருஷம் முடியும்போது, சாத்தான் கொஞ்சக்காலம் விடுதலையாக்கப்படுகிறான். அப்போது அவன் பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளை மோசம்போக்கி, அவர்களைக்கடைசி யுத்தத்துக்குத் திரட்டிக்கொண்டு வருவான். அப்போது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கித் துன்மார்க்கரைப் பட்சித்துப்போடும். சாத்தான் பிடிக்கப்பட்டு அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டு, இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவான். (20:7-10) இதுதான் சாத்தான் அல்லது வலுசர்ப்பத்தின் சரித்திரம்.

மிருகம் (The beast)-(அந்திக்கிறிஸ்து) (வெளி. 13:1-10):- இயேசுகிறிஸ்துவினுடைய இரகசிய வருகையில் பூரணமாக்கப்பட்ட புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், அல்லது சபை, அல்லது வெளி. 12:5-ல் சொல்லப்பட்ட "ஆண்பிள்ளை" எடுத்துக்கொள்ளப்பட்டவுடனே சாத்தானும் அவனைச் சேர்ந்த தூதர்களும் பூமியிலே விழத் தள்ளப்படுகிறார்கள். வெளி.

G.B. Sathyanesan, B

12:7-10) அப்போது சாத்தான் பொல்லாப்பின் திரித்துவமாக (Evil trinity) இப்பூமியில் ஆளுகை செய்கிருன். அந்தத் திரித்துவத்தின் இரண்டாவது ஆளாகிய மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பி வருவதாக வாசிக்கிறோம். வெளி. 13:1) இதே மிருகம் பாதாளக் குழியிலிருந்து (bottomless pit) ஏறி வருவதாகவும் வாசிக்கிறோம், (வெளி. 17:8) இதிலிருந்து பாதாளக்குழியும், சமுத்திரமும் ஒன்றுதான் என்பதை அறிந்து கொள்ளலாம். இந்தப் பொல்லாப்பின் திருத்துவத்தின் இரண்டாவது ஆளாகிய மிருகம் ஏசாயா 14-ம் அதிகாரத்தில், 'அதிகாலையின் மகனுகிய விடிவெள்ளி' என்றும் ஆங்கில வேதாகமத்தில் 'லூசிபர்' (Lucifer) என்றும் அழைக்கப்படுகிருன். அவனுடைய ஆவி பாபிலோன் இராஜாவினிடத்தில் கிரியைசெய்து கொண்டிருந்தபடியால், பாபிலோன் இராஜாவுக்கு விரோதமாகத்தீர்க்கதரிசனம் உரைக்கையில் இந்த லூசிபரைக் குறித்தும், அவனது விழுகையின் காரணத்தைக் குறித்தும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. (ஏசா 14:4-14)

இந்த மிருகம் அந்திக்கிறிஸ்துவாக இயேசுவின் இரகசிய வருகைக்குப் பின்பு வெளி. 17-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட மகா பாபிலோன் என்று அழைக்கப்பட்ட விழுந்துபோன ரோமன் கத்தோலிக்க சபையில் வல்லமையாகக் கிரியை செய்வதைக் காணலாம்.

இந்த அந்திக்கிறிஸ்துவின் ஆவி இப்பொழுதே கிரியை செய்கிறது என்று யோவான் அப்போஸ்தலன் I யோ.2:18,43-ல் சொல்லுகிருர். உபத்திரவ காலமாகிய 7 வருஷங்களின் முடிவிலே கர்த்தராகிய இயேசுவும், பரிசுத்தவான்களும், இப்பூமியிலே ஆயிரம் வருஷம் ஆளுகைசெய்யும் படியாகவும், துன்மார்க்கரை நியாயந்தீர்க்கும் படியாகவும் வருகையில் (வெளி 1:7, யூதா 14,15) இந்த மிருகமும்.பூமியின் இராஜாக்களும், அவர்களுடைய சேனைகளும் அவர்களோடு யுத்தம் பண்ணும்படி கூடிவருவார்கள். அப்பொழுது இந்த மிருகம் பிடிக்கப்பட்டுக் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடு தள்ளப்பட்டுச் சதா காலங்களிலும் வாதிக்கப்படும். (வெளி. 19:19-20;20:10)

கள்ளத்தீர்க்கதரிசி (The false Prophet) (வெளி. 13:11-18) உபத்திரவகாலமாகிய 7 வருஷத்துவக்கத்தில் வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பி வருவதாக வாசிக்கிறோம். அது ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளுடையதா யிருந்து, வலுசர்ப்பத்தைப் போலப் பேசினது. அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப் பித்துச், சாவுக்கேதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும், அதின் குடிகளும் வணங்கும்படிச் செய்தது. அன்றியும், அது மனுஷருக்கு முன்பாக வானத்தி லிருந்து பூமியின் மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்க தாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படித் தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம் போக்கிப் பட்டயத்தினாலே காயப்பட்டுப், பிழைத்த மிருகத்துக்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்க தாகவும் மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்கு சத்துவங் கொடுக்கப்பட்டது. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கைகளிலாவது, நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது, அதின், நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது.

இந்த இரண்டாவது மிருகத்துக்குதான் 'கள்ளத் தீர்க்க தரிசி' என்று பெயர். (வெளி. 16:13, 19:20, 20:10) கர்த்த ராகிய இயேசு உபத்திரவகால முடிவிலே, இந்தப் பூமிக்குப் பரிசுத்தவான்களோடு கூட வருகையில், இந்தக் கள்ளத் தீர்க்க தரிசியும் மிருகத்தோடு பிடிக்கப்பட்டு அக்கினியும், கந்தகமும்

எரிகிற கடலிலே தள்ளப்பட்டுச் சதாகாலமும் வாதிக்கப்படும். (வெளி. 19:20;20:10)

மேலே சொல்லப்பட்ட சாத்தானின் பொல்லாப்பின் திரித்துவமாகிய, வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி, இவைகளைத் தவிர வெவ்வேறு பொல்லாத ஆவிகள் வல்லமையாக ஆகாய விரிவிலிருந்து வெவ்வேறு காலங்களில் ஆளுகை செய்து கொண்டிருந்ததாக நாம் வேதத்தில் வாசிக்கிறோம். தானியேல் 21 நாட்கள் உபவாசித்து ஜெபித்தபோது, கர்த்தருடைய தூதன் அவனிடத்தில் வந்து "பெர்சியா இராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்" என்று சொன்னதை வாசிக்கிறோம். (தானி. 10:13) பாபிலோன் இராஜியத்துக்குப் பின்பு, மேதியா, பெர்சியா இராஜியத்துக்குப் பின்பு, கிரேக்கர் ஆட்சி வந்தபடியால், அந்தத் தூதன்: "இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் பண்ணத் திரும்பிப் போகிறேன்; நான் போன பின்பு, கிரேக்கு தேசத்து அதிபதி வருவான்" என்று உரைத்தான். (தானி. 10:20) பெர்சியா இராஜியத்தின் விழுகைக்குப்பின்பு கிரேக்கு இராஜியம் அதிகாரத்துக்கு வந்தபடியால் அதற்குரிய பொல்லாத ஆவிகள் கிரியை செய்தன.

இதைத் தவிர எசேக். 28:11-19-ல் அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்பைக் குறித்து வாசிக்கிறோம். இது சாத்தானும் அன்று; லூசிபரும் அன்று; இது தனக்கிருந்த அளவற்ற அழகினால், மனமேட்டிமையடைந்து தன்னைக் கெடுத்துக் கொண்ட, விழுந்துபோன மற்றொரு தூதன். தன்னைச் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தாவை மறந்து, தனக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களில் பெருமை பாராட்டினபடியால் இந்தப் பயங்கர விழுகை ஏற்பட்டது. விழுந்துபோன இந்தத் தூதனுடைய ஆவி, அக்காலத்தில் தீரு இராஜாவுக்குள் கிரியை செய்த

படியால் அவனுக்கு விரோதமாக இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

II பேதுரு 2:4-ல் பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்ப விடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக் கொடுத்திருக்கிறார் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் செய்த பாவம் இன்னதென்று சொல்லப்படவில்லை. மேலும் யூதா 6-ல் தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட இன்னொரு கூட்டமான தூதர்களைக் குறித்தும் வாசிக்கிறோம். இவைகள் மகா நாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலி களினாலே கட்டப்பட்டு அந்தகாரத்தில் அடைத்து வைக்கப் பட்டிருந்தன.

இவைகளைத் தவிர, வெளி. 9: 14, 15-ல் ஐபிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே நான்கு தூதர்கள் கட்டப்பட்டிருந்த தாக வாசிக்கிறோம். அவர்கள் எந்தக் காரணத்தால் அவ்விதம் கட்டப்பட்டிருந்தார்களென்று வேதத்தில் கூறப்படவில்லை. அவர்கள் மனுஷரில் மூன்றிலொரு பங்கைக் கொல்லும்படிக்கு ஒரு மணி நேரத்துக்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்துக்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்தார்களென்றும், உபத்திரவக் காலத்தில் ஆறும்தூதன் எக்காளம் ஊதினபோது அவர்கள் அவிழ்த்து விடப்பட்டனரென்றும் வாசிக்கிறோம்.

இவ்விதமாகச் சாத்தான் பொல்லாப்பின் திரித்துவமாக இருப்பதுமல்லாமல், தன்னோடு ஏராளமாக விழுந்துபோன தூதர்களை உடையவனாக இருக்கிறான். ஆகையினால்தான் பரி. பவுல், எபே. 6:12-ல் " ஏனெனில், மாமிசத்தோடும், இரத்தத் தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப் பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்ட லங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக் குப் போராட்டம் உண்டு" என்கிறார்.

அர்மகெதோன் யுத்தத்துக்குப் பின்பு பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பம் பிடிக்கப்பட்டு ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும், அது ஜனங்களை மோசம் போக்காதபடி சங்கிலியினால் கட்டுப்பட்டுப் பாதாளத்தில் தள்ளப்பட்டு அடைத்து வைக்கப்படுகிறது. (வெளி. 20,1-2) இவ்வுலகத்திலிருக்கும் சகல இராஜியங்களும் கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜியங்களாகின்றன. (வெளி. 11:15) (தானி. 7:18, 27) இயேசுவும் மேலே சொல்லப்பட்ட முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்த எல்லாப் பரிசுத்தவான்களும், இரத்த சாட்சிகளும், உயிர்த்தெழுந்த சரீரங்களோடு இப்பூமியில் ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வார்கள். (வெளி. 20:4-6, ஏசா. 32:1)

——— O ———

அதிகாரம்-10

ஆயிர வருஷ அரசாட்சி

வேதாகம பாஷையில் இந்த வார்த்தை பூமியில் கிறிஸ்துவின் 1000 வருஷ அரசாட்சியைக் குறிக்கிறது. 1000வருஷ அரசாட்சியைப் பற்றிய உபதேசம் பரிசுத்த வேதாகமத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல சபையின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த போதகர்களும் அதை விசுவாசித்தும், உபதேசித்தும் வந்தார்கள்.

சபையின் ஆதிப் போதகர்களில் ஒருவரான "ஜஸ்ட்டின் மார்ட்டர்" (Justin Martyr) கீழ்க் கண்டவாறு எழுதியிருக்கிறார். "நானும் சத்தியத்தைப் பற்றிக் கொண்டிருக்கிற எல்லாக் கிறிஸ்தவர்களும், ஏசாயா, எசேக்கியல் முதலிய தீர்க்கதரிசிகளும், ஒரே அபிப்பிராயத்துடன் ஒத்துக் கொள்ளுகிறதுபோலச் சரீர மீட்பு உண்டாகுமென்றும், புதிதாகக் கட்டப்படுகிற எருசலேமில் 1000 வருஷ அரசாட்சி உண்டாகுமென்றும் எல்லோரும் ஒத்துக் கொள்ளுகிறார்கள்" (Dial cum

Trypho P. P. 313-315) என்கிறார். "அன்றியும் அவர் தாமே, கிறிஸ்துவின் அப்போஸ்தலரில் ஒருவரான யோவான் தனக்குண்டான வெளிப்படுத்தலினால் கிறிஸ்துவின் உண்மையான விசுவாசிகள், கிறிஸ்துவோடுகூட எருசலேமில் 1000 வருஷம் வசிப்பார்கள் என்றும், அதற்குப்பின் பொதுவான உயிர்த்தெழுதலும், நியாயத்தீர்ப்பும் உண்டாகும் என்றும் தீர்க்கதரிசனமாக உரைத்திருப்பதாகச் சொல்லுகிறார்.

நான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த "லெக்டாண்டியஸ்" என்பவர், "தேவபுத்திரன் கேட்டின் மக்களை அழித்து, நீதிமான்களுக்கு உயிர்த்தெழுதலைக் கொடுத்த பின்பு, 1000 வருஷம் அவர்களோடுகூடப் பூமியில் வாசம்பண்ணி, அவர்களை நீதியாய் அரசாளுவார். இவ்விதமாய்ப் பூமியில் நீதி வாசமாய் இருக்கும்போது பரலோக ஆட்சி நடந்து கொண்டிருக்கும். அந்த 1000 வருடமும் தேவனுடைய ஜனங்களுக்கு எந்த விதமான தீங்கும் செய்யாதிருக்கும்படியாகப் பிசாசுகளின் தலைவனைச் சங்கிலிகளினால் கட்டி, பாதாளத்தில் அடைத்து வைத்திருப்பார். இதுதான் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் கைக்கொண்டிருக்கிற பரிசுத்த தீர்க்கதரிசிகளின் உபதேசம். இதுவே எங்களுடைய ஞானம்" என்று எழுதியுள்ளார்.

இரண்டாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்திருந்த ஐரேனியசும் (Adv Hear V 32 Sqq) பாப்பியாசும் 1000 வருஷ அரசாட்சியைப்பற்றி தங்களுடைய எதிர்பார்த்தலுக்கு, அப்போஸ்தலர்களை முகமுகமாகக் கண்டிருந்தவர்களுடைய வார்த்தைகளை ஆதாரமாக்கிக் கொண்டிருந்தார்கள். தீருநகரில் பிஷப்பாயிருந்த மெதோடியசும் கூட 1000 வருஷத்தைப்பற்றிய உபதேசத்தை அதிக வல்லமையாக ஸ்தாபித்த ஒருவராயிருந்தார். (Synpos Decem Virginum IX 5).

ஆனால் முதல் நான்கு நூற்றாண்டுகளிலிருந்த போதகர்களுடைய உபதேசங்களைக்கூடத் தாங்கள் ஏற்றுக் கொள்வ

தில்லையென்று ஏழாம் நாட்காரர் முதலிய சில கூட்டத்தார் சொல்லுகிறார்கள். அப்படியானால் 1000 வருஷ அரசாட்சி பூமியிலல்ல, பரலோகத்திலிருக்கும் என்ற அவர்களுடைய பிழையான உபதேசத்தைக் கண்டிக்கும்படியாக, நாம் வேத வசனங்களை ஆதாரமாக்கிக் கூறலாம். ஏழாம் நாட்காரர் முதலியோர் கீழே சொல்லப்படுகிறதான பிழையான உபதேசங்களைப் பிரசித்தப் படுத்துகிறார்கள்.

(1) 1000 வருஷ அரசாட்சி பூமியிலல்ல, அது பரலோகத்திலிருக்கும்.

(2) இந்தப் பூமி 1000 வருஷ அரசாட்சியில் அக்கினியினால் அழிந்து ஒன்றுமில்லாமற்போகும்.

(3) இப்படி ஒன்றுமில்லாமற்போகும் பூமியானது, பாதாளம் அல்லது 1000 வருஷம் சாத்தானை அடைத்து வைத்திருக்கும் இடமாயிருக்கும். இந்த உபதேசங்களில் சத்தியம் சிறிதேனும் இல்லை.

(1) 1000 வருஷ அரசாட்சி, நிச்சயமாகப் பரலோகத்திலல்ல, இந்தப் பூமியிலேயே நடைபெறும். நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்டதும், தானியேல் வியாக்கியானப்படுத்திக் கொடுத்ததுமான சிலையில் பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, இரும்பு பாதி, களிமண் பாதியுமாகச் சேர்ந்து இப்படி 5 பாகங்கள் இருந்ததாக அறிவோமல்லவா? இந்த 5 பாகங்கள் பூமிக்குரிய 5 இராஜியங்களை வெளிப்படுத்துகிறதாயிருந்தன. பர்வதத்திலிருந்து ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்து, அந்தச் சிலையில் மோதி அதை நொறுக்கிப் போட்டது. ஏழாம் நாட்காரரும் மற்றும் எல்லா வேத வியாக்கியானிகளும், ஒத்துக் கொள்ளும் வண்ணமாக, இந்தக் கல் கர்த்தராகிய இயேசுவின் இராஜியமாயிருக்கிறது. இந்தக் கல்லைப் பற்றி மூன்று காரியங்கள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. (தானி. 2:31-44)

(a) அது சிலையைமோதியது. (தானி. 2:34)

(b) அந்தச் சிலையை மோதிய கல் பெரிய பர்வதமாகிப் பூமியை நிரப்பிற்று. (தானி. 2·35) கல் அல்லது கிறிஸ்துவின் இராஜியம் பூமியை நிரப்பிற்று. அதாவது அது பரலோகத்தில் அல்ல, இப்போதிருக்கும் இந்தப் பூமியில்தான் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு எதிராக 1000 வருஷ அரசாட்சி பூமியிலல்ல என்று ஏழாம் நாட்காரர் தர்க்கித்து, ஜனங்களை வழிதப்பச் செய்வது ஆச்சரியமே.

(c) கிறிஸ்துவின் இராஜியத்தைக் காட்டும் இக்கல் எப்போது ஆரம்பமாகிறது என்று பார்க்கலாம். ஏழாம் நாட்காரர் படிப்பிக்கிறதுபோல, அது ஒரு 1000 வருஷம் முடிந்த பின்பா? இதை விளக்கும்படியாக நாம் தானி. 2 : 44-ஐ பார்ப்போம். "அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜியத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த இராஜியம் வேறே ஜனத்துக்கு விடப் படுவதில்லை." ஏழாம் நாட்காரர் சொல்லுகிறதுபோல 1000 வருஷ அரசாட்சி பரலோகத்திலும் அந்த ஆயிர வருஷம் முடிந்து கிறிஸ்து பூமியிலே வருகிறதுமாயிருந்தால் "அந்த இராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் ஒரு இராஜியத்தை எழும்பப்பண்ணுவார்" என்று திருவசனம் சொல்வதெப்படி? 1000 வருஷ அரசாட்சி ஆரம்பிக்கக் குறிக்கப்பட்ட நேரமானது இங்கே பூமியில் கடைசியாக ஆளுகை செய்கிற இராஜாக்களுடைய காலத்தில் என்று சொல்லப் பட்டிருக்கிறது. "உலகத்தின் இராஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜியங்களாயின" (வெளி. 11 : 15) என்கிற வேத வசனத்திலிருந்து இது தெளிவாகிறது "இராஜியங்களாயின" என்ற வார்த்தையானது, இந்த உலக இராஜியங்கள் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் மாற்றப் படுகிறதைக் குறிக்கிறது. (தானி. 7 : 27)

(2) பூமி சாத்தானைக் கட்டி வைக்கிறதான இடமாகும் படியாக, அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டு நாசமாக்கப்படும்

என்று சொல்வது ஏழாம் நாட்காரருடைய தந்திரமான உபதேசமே. (வெளி 20 : 1-3) வசனங்களில் சொல்லப்படும் பாதாளத்தை எழுத்தின்படி நரகமென அவர்கள் விசுவாசிப்பதில்லை ஆகையால் அவர்கள் அதை ஒரு அலங்காரமான வார்த்தையாக உபயோகித்து வியாக்கியானம் பண்ணுகிறார்கள். சாத்தானை அடைத்து வைக்கிறதான பாதாளம் (வெளி. 20:1-3) நிச்சயமாக அக்கினியுள்ள இடமே. அவன் பாதாளக் குழியைத் திறந்தான். உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று. (வெளி. 9:2) இது பூமியின் தாழ்விடமேயாகும். ஏனெனில் கிறிஸ்து முதலாவதாகப் பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார். (எபே. 4 : 9) என்று சொல்லப்படுவது இந்தப் பாதாளக்குழியையே குறிக்கும். அது எப்படி?

பாதாளக் குழியைக் குறிக்கும் கிரேக்க பதத்தில் அபுஸோஸ் (Abussos) என்பது, கிறிஸ்து இறங்கினதான பாதாளம் என்னும் இடத்தைக் குறிப்பதாகும். இந்த வார்த்தையே "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்திற்கு (Abussos) இறங்குகிறவன் யார்" ? (ரோமர் 10 : 7) என்ற வசனத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

(3) சாத்தானைக் கட்டி வைக்கும் இடமாயிருக்கும்படி இந்தப்பூமி சுட்டெரிக்கப்பட்டு, வெறுமையாக்கப்படும் என்று அவர்கள் படிப்பிப்பது, வேத வசனங்களைத் தங்கள் விருப்பம் போல் அர்த்தப்படுத்துவதேயாகும். இந்தப்பூமி அக்கினியால் சுட்டெரிக்கப்படும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. அவ்வாறு சம்பவிக்குமென்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ள அணுசக்தி மூலமும் தெரிய வருகிறது. ஆனால் ஒன்றுமில்லாமல் நிர்மூலமாக்கப்படும் என்பதை ஸ்தாபிக்கும் படியாக ஏசா. 24:6-ஐ அவர்கள் ஆதாரமாக்குகிறார்கள். இந்த வேத பாகம், பூமி நிச்சயமாகச் சுட்டெரிக்கப்படும் என்பதைக் காட்டுகிறது. "இதனிமித்தம் சாபம் தேசத்தைப் பட்சித்தது அதின் குடிகள்

தண்டிக்கப்பட்டார்கள் தேசத்தார் தகிக்கப்பட்டார்கள், சிலர் மாத்திரம் மீந்திருக்கிறார்கள்" என்பதே. இந்த வசனத்தைக் கொண்டு, தன் நாசகரமான உபதேசத்தை ஸ்தாபிக்கும்படியாக, (Mrs. White) உவைட் அம்மையார் தன்னுடைய வியாக்கியான புஸ்தகத்தில் மேற்கண்ட வாக்கியத்தின் கடைசி பாகத்தை—சிலர் மாத்திரம் மீந்திருக்கிறார்கள் என்ற பாகத்தை விட்டுவிட்டு பூமி சுட்டெரிக்கப்பட்டு, முழுவதும் நிர்மூலமாக்கப்படும் என்று விளக்கியிருக்கிறார். "பூமி தீயால் வெந்து போனாலும் சிலர் மாத்திரம் மீந்திருக்கிறார்கள்" என்பது கிறிஸ்து தன்னுடைய 1000 வருஷ அரசாட்சிக்காகப் பூமிக்கு வரும்போது பூமியிலே வாசம்பண்ணும்படி, சகல ஜாதிகளிலும் ஒரு கூட்டம் மீந்திருக்கும் என்பதை வெளிப்படுத்துகிறது.

ஏழாம் நாட்காரர் எடுத்துக்காட்டும் இன்னொரு வேதபாகம் எரே. 4:25, 26- "பின்னும் நான் பார்க்கும்போது மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்து போயின. பின்னும் நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிர கோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதின் பட்டணங்களெல்லாம் இடிந்துபோயின." இந்த வேதவசனத்தை மாற்றிச் சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாத விதத்தில் உபயோகிப்பது பிழையான வியாக்கியானமேயாகும். மேலே சொல்லப்பட்ட வேதபாகத்தில் "மனுஷனில்லை" என்பது பட்டணங்களுடைய நிர்மூலமாக்கப்பட்ட நிலவரத்தைக் காட்டுகிறது. அதின் பட்டணங்களெல்லாம் இடிந்து போயின. (எரே. 4:26) ஆனாலும் அது முழு உலகத்தின் அழிவைக் காண்பிக்கிறதன்று. ஏனெனில் அதற்கடுத்த வசனத்தில் "தேசமெல்லாம் பாழாய்ப்போம்; ஆகிலும் சர்வசங்காரம் செய்யேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று எழுதப்பட்டிருக்கிறது. (எரே. 4:27) ஒரு மனிதனும் குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும் (எரே. 4:29) என்பது சத்தியமே. ஆனால் இவ்வாறு விடப்படுவது பூரணமான அழிவை அல்ல; அந்தப் பட்டணங்களிலிருந்து ஓடிப்போவதையே குறிக்கும். "அவர்கள் அடர்த்தியான

காடுகளில் புகுந்து, கன்மலைகளிலும் ஏறுவார்கள்." (எரே. 4:29)

ஏதேன் தோட்டத்தில் பாவத்தினிமித்தமாக மனுஷன் இழந்துபோன சகல ஆசீர்வாதங்களையும் பெற்று அனுபவிக்கும்படியாகக் கர்த்தர் இந்தக் காலத்தில் அனுக்கிரகம் பண்ணுகிறார். கர்த்தர் மனுஷனைத் தமது சாயலாகவும்; தமது ரூபத்தின்படியேயும் உண்டாக்கி, அவனுக்குச் சகல ஜீவ ஜந்துக்களின் மேலும் ஆளுகை கொடுத்திருந்தார் (ஆதி.1.28) ஆனால் மனுஷன் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டுத் தனது ஆளுகையை இழந்துபோனதுமல்லாமல் பிசாசுக்கு அடிமையானான். ஆனால் தேவன் சர்வ வல்லவராகவும், சர்வ ஞானமுள்ளவராகவும் இருக்கிறபடியால், மனுஷனைச்சிருஷ்டித்த தமது நித்திய நோக்கத்தை தமது குமாரன், இயேசு கிறிஸ்துவின் மூலமாகவும் மறுபடியும் நிறைவேற்றுகிறார். இயேசு மனுஷனுக்கு இம்மையிலே ஆவிக்குரிய பிரகாரமாக ஆளுகை கொடுப்பதுமல்லாமல், (ரோம. 5:17) இப்பூமியிலேயே எழுத்தின்படி ஆயிரம் வருஷம் ஆளுகையும் கொடுத்து (வெளி. 20 : 4) கடைசியாக நித்தியத்திலும் ஆளுகை தருகிறார். (வெளி. 22:5)

இந்த ஆயிர வருஷ அரசாட்சி காலத்தில் மனிதனுக்குக் கிடைக்கும் சில முக்கியமான ஆசீர்வாதங்களைக் கவனிப்போமாக.

1) இந்த உலகத்தின் அதிபதியாகிய பிசாசு தள்ளப்பட்டு பாதாளத்தில் அடைத்து வைக்கப்படுகிறான். சமாதான பிரபுவாகிய இயேசு சிங்காசனத்தில் வீற்றிருந்து நீதியாக, சமாதானமாக அரசாளுவார். (ஏசா 16:5, 32:1) இக்காலத்தில் "தேவ இரகசியம் நிறைவேறும். அதாவது தேவனைப்பற்றியுள்ள மறைபொருள் நீங்கி, அவர் யாரென்றும், எப்படிப்பட்டவர் என்றும், மனுஷன் அறிந்து கொள்வான். பரிசுத்தவான்கள் இப்பொழுதே தேவன் எப்படிப்பட்டவரென்று ஆவிக்குரிய பிரகாரமாக அறிந்து கொள்கிறார்கள். பரி. பவுலும் "நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" என்கிறார். (II தீமோ. 1:12) அந்நாட்

களில் ''சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்'' (ஆபகூக் 2:14)

2) கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இதே பூமியில் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களோடே ஆயிரம் வருஷம் அரசாளுகிறார். தானியேல் 2:34 - 35, 44 – ஐ வாசித்தால் இது விளங்கும். கைகளால் பெயர்க்கப்படாமல் உருண்டு வந்த பெரிய கல் இயேசுவைக் காட்டுகிறது. ''சிலையை மோதின கல்லோவென்றால் ஒரு பெரிய பர்வதமாகிப் பூமியையெல்லாம் நிரப்பிற்று'' இவ்வுலகத்துக்குரிய சகல இராஜியங்களும் அப்போது 'அழிக்கப்பட்டு இயசேு பூமி முழுவதையும் ஆண்டு கொள்வார். இயேசுமகிமை, பொருந்தினவராய் வெளியரங்கமாகப் பரிசுத்தவான்களோடும் ''பரலோகத்திலுள்ள சேனைகளோடும் ''இப்பூமிக்கு வந்து இந்த இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். (வெளி. 19 : 11 21)

3) எருசேலம் அக்காலத்தில் முக்கிய பட்டணமாக, இராஜியங்களின் தலைநகராக இருக்கும். யூதர்கள் பிரதான ஜனங்களாக இருப்பர். (ஏசா. 2:2-3) முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்த பரிசுத்தவான்களும் இரத்தசாட்சிகளும் உயிர்த்தெழுந்த சரீரங்களோடு இப்பூமியில் அரசாளுவார்கள். (வெளி. 5 : 10) மற்ற எல்லா ஜனங்களும், ஜென்ம சரீரத்தோடு பிரஜைகளாக இருப்பர். மற்ற எல்லா ஜாதிகளிலும் இஸ்ரவேலர், அல்லது யூதர்கள் பிரதானமான ஜனமாகயிருப்பார்கள் உபா. 28:14-ல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி அவர்கள் தலையாகவும் மேலாகவும் வைக்கப்படுவர். அவர்களைச் சேவிக்காத ஜாதியார் அழிக்கப்படுவர். (ஏசா. 60:12)

(4) ''சமாதானப் பிரபு'' வாகிய இயேசு அரசாட்சி செய்வதால் இந்தப் பூமியெல்லாம் சமாதானத்தால் நிரப்பப்பட்டிருக்கும். சமாதானத்தைக் கெடுக்கிற சத்துருவாகிய பிசாசு அப்பொழுது கட்டப்பட்டவனாய்ப் பாதாளத்தில் அடைத்து வைக்கப்பட்டிருப்பான். மனுஷர்களுக்குள்ளே பகை நீங்கிப்போய் ஒருவரோடொருவர் சமாதானமாக இருப்பதால், ஜனங்கள்

"தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாக மறு ஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை" (மீகா 4:3-4, ஏசா. 2:4)

(5) மனுஷனுக்கும் மிருகங்களுக்கும் இடையே உள்ளபகையும், மிருகத்துக்கும், மிருகத்துக்கும் இடையே உள்ள பகையும் முற்றிலுமாக நீங்கிப்போகும். அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும், கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும்; பால் மறந்த பிள்ளை கட்டு விரியன் புற்றிலே தன் கையை வைக்கும்" (ஏசா. 11:6-8) "ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும், என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு செய்வதுமில்லை கேடுண்டாக்குவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா. 65:25). ஏதேன் தோட்டத்தில் பாவத்தில் விழுவதற்கு முன்பு, மனிதன் எவ்விதம் மிருகங்களோடு சஞ்சரித்தானோ, அவ்விதமே ஆயிர வருஷ அரசாட்சி காலத்தில் இருப்பார்கள்.

(6) இந்தப் பூமியும், முழு சிருஷ்டியும் சாபத்திற்குட்பட்டு விடுதலையடையும்படியாகத் தவித்துக் கொண்டிருக்கிறதென்று ரோமர் 8:19-22-ல் காண்கிறோம். ஆயிரம் வருஷ அரசாட்சிக் காலத்தில், முழு சிருஷ்டிக்கும் சாபத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. "வனாந்தரமும், வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி

களித்துப் புஷ்பத்தைப்போலச் செழிக்கும். ......வெட்டாந்தரை தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்; வலுசர்ப்பங்கள் தாபரித்துக்கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும், நாணலும் உண்டாகும்.'' (ஏசா. 35:1-7)

பலஸ்தீனு தேசம்—இது கர்த்தர் ஆபிரகாமுக்கும் அவனது சந்ததிக்கும் வாக்குத்தத்தமாகக் கொடுத்த தேசம். யோசுவா வின் மூலமாக, இஸ்ரவேலர் பெற்றுக்கொண்ட இந்தத்தேசமானது ''பாலும், தேனும் ஓடுகிற'' செழிப்பான தேசமாயிருந்தது. ஆனால் இஸ்ரவேலர் கர்த்தரை விட்டுப் பின்வாங்கி அவருடைய கட்டளைகளை விட்டு விலகி, அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டபோது, அவர் மழை பெய்யாதபடி வானத்தை அடைத்தார். ஆகையால் தேசம் வறட்சியாகப் போனது. ஆனால் ஆயிரவருஷ அரசாட்சியில் பலஸ்தீனு தேசம் எல்லாத் தேசங்களைப் பார்க்கிலும் அதிகச் செழிப்பாகவும் சிங்காரமுமானதாக இருக்கும். (யோவே. 3:18, ஆமோஸ் 9:13, எசே. 20:6)

(7) மனுஷனுடைய ஆயுசு நாட்கள் ஜலப்பிரளயத்துக்கு முன்பு இருந்ததுபோல நீண்டதாக இருக்கும். ''அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும் தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்; நூறு வயது சென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான்; (Child in English) (ஏசா. 65:20) அதாவது, நூறு வயதில் ஒரு மனுஷன் மரித்தால், அவன் பாலகன் (Child) என்று தான் கருதப்படுவான். ஆகையால், ஒருவன் மனுஷன் என்று கருதப்பட பல நூற்றாண்டுகள் ஜீவித்தல் வேண்டும். அவ்விதமாகவே விருட்சத்தின் நாட்களைப் போலக் கர்த்தருடைய ஜனத்தின் நாட்களிருக்கும். (ஏசா. 65:22) மனுஷர்கள் நீண்ட வருஷங்களாக

முதிர் வயது மட்டும் ஜீவிப்பார்கள். (சகரி. 8:4) மேலும் ஜனத்தொகை அந்நாட்களில் மிகுதியாகப் பெருகும் (ஏசா. 60:22). அக்காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு இருக்காது. "நகரத்தின் தெருக்களிலே, விளையாடுகிற ஆண்பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும், அதின் வீதிகளில் நிறைந்திருக்கும்". (சகரி. 8:5) எல்லாரும் ஆரோக்கியமுள்ளவர்களாக இருப்பார்கள். "வியாதிப் பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை". (ஏசா. 33:24) சீதோஷ்ண ஸ்திதி, மனுஷன் நீடித்த நாட்களாக ஜீவிக்க அனுகூலமாக இருக்கும். "பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும், மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும்" (ஏசா. 4:6) சூரியனுடைய வெப்பம் பூமியை நேராகத் தாக்காத படிக்கு ஒரு மறைவு இருக்கும்.

சூரியன், சந்திரனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் அதிகரிக்கும். "கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப் போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும்" (ஏசா. 30:26). இக்காலத்தில் நிலா ஒளிவீசும் இரவு பகலைப் போல அவ்வளவு பிரகாசமாகவும், பகல் ஏழு மடங்கு பிரகாசமாகவும் இருக்கும். இவைகள் இவ்விதமாக இருப்பினும், இயேசுவின் மகிமைக்கு அவைகளை எவ்விதத்திலும் ஒப்பிட முடியாது "அப்பொழுது சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும், எருசலேமிலும் ஆளுகை செய்வதால், சந்திரன் கலங்கும், சூரியன் நாண மடையும்; அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும்". (ஏசா. 24:23)

(9) சகல ஜாதிகளும் பரிசுத்தமான ஜீவியம் செய்யவும், பரிசுத்தமான பாதையில் நடக்கவும் திருப்பப்படுவார்கள். "அங்கே பெரும் பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி எனப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை. அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை." (ஏசா. 35:8) சகலமும் பரிசுத்தமாயிருக்கும். அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும். கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும். அப்பொழுது எருசலேமிலும், யூதாவிலுமுள்ள எல்லாப் பானைகளும் சேனைகளின் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும். பலியிடுகிற யாவரும் வந்து அவைகளில் எடுத்து, அவைகளில் சமைப்பார்கள்; அந்நாள் முதல் சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே டாதொரு காநானியனும் இருப்பதில்லை." (சகரி. 14:20-21)

(10) அக்காலத்தில் முழு உலகத்திலும் ஒரே மதம் இருக்கும். "சூரியன் உதிக்கிற திசை தொடங்கி அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல். 1:11) முழு உலகமும் தேவனைப் பற்றிய அறிவினால் நிரப்பப்பட்டிருக்கும். (ஏசா. 11:9, சகரி. 8:22-23) "சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் வெளிப்படும்" (ஏசா. 2:3) அக்காலத்தில் ஓய்வுநாள் கொண்டாடப்படும். "அப்பொழுது மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும், மாம்சமான யாவரும்

னக்கு முன்பாகத் தொழுது கொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசா. 66:23)

இந்த 1000 வருட காலத்தில் பாவத்துக்குக் காரணக் காரணகிய சாத்தான் கட்டப்பட்டுப் பாதாளத்தில் சிறையாக வைக்கப்படுவதினாலே, மனுஷர்கள் பாவிகளாயிருந்தாலும், பாவஞ்செய்யத் தூண்டப்படாமல் புறம்பான பரிசுத்தமுடையவ ராகக் காணப்படுவார்கள். அவர்களுடைய இருதயம் உண்மை யாக மாற்றப்படாமல் இருக்கும்; அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் பகை, எரிச்சல், இச்சை முதலிய கெட்ட சுபாவங்கள் தூண்டப்படாமல் இருதயத்தில் மறைந்திருக்குமே ஒழிய முற்றிலுமாக நீங்குவதில்லை. ஆகையால்தான், ஆயிர வருஷ முடிவில், சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலை யாக்கப்படும்போது, அவன் பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளை மிக எளிதாகத் தூண்டி மோசப் போக்குகிறான். அவர்கள் அவனது பொய்யை நம்பி, அவனைப் பின்பற்றி அவனைச் சேவிப்பார்கள். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரவி பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும் (பலஸ்தீனா தேசத் தையும்), பிரியமான நகரத்தையும், (எருசலேம் பட்டணத் தையும்) வளைந்துகொள்வார்கள். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி, அவர்களைப் பட்சித்துப் போடும் (வெளி. 20:7-9). "மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியு மிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங் களிலும் வாதிக்கப்படுவார்கள்." (வெளி. 20:10)

இவ்விதமாக மனுஷன் ஆயிரம் வருஷம் தேவ சமுகத்தில் ஜீவித்தும், பூமியெங்கும் சமாதானத்தையும், ஆசீர்வாதங்களையும் அனுபவித்த பின்னும், தனது சிருஷ்டிகருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினால் தேவன் இனிமேல் என்னதான் செய்ய முடியும்? முழு மனுஷவர்க்கத்தையும் அழிப்பதே நியாயமாகத் தெரிகிறது. நோவாவின் காலத்தில் நடந்தது போல இன்னொரு ஜலப்பிரளயத்தை அனுப்பிச் சகல மனுஷர்களையும் அறவே அழிக்கலாம். ஆனால் அவர் அவ்விதம் தான் செய்வதில்லை என்று வாக்களித்திருக்கிறார். (ஆதி. 9:11) ஆகையால்தான் அவர் கடைசியாக இந்தப் பூமியையும் அதிலுள்ளவர்களையும் அக்கினிக்கு இரையாக ஒப்புக்கொடுத்து நியாயந்தீர்க்கிறார் (II பேதுரு 3:7)

புதிய வானம் - புதிய பூமி

ஆயிர வருஷ அரசாட்சியின் காலத்தில், ரோமர் 8:20-ல் சொல்லப்பட்டபடி, "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டுத் தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும்". இப்பூமியானது எல்லாவிதச் சாபத்திலிருந்தும் நீங்கலாகி, ஏதேன் தோட்டத்தைப் போலிருக்கும். நாம் ஏற்கனவே பார்த்தபடி ஆகாயத்திலும், பூமியிலும் இப்பொழுது கிரியை செய்துகொண்டிருக்கிற, ஆகாயத்தின் அதிகாரப் பிரபுவாகிய பிசாசும், அவனுடைய சேனையும், பாதாளத்தில் தள்ளப்பட்டுப் போகும். சூரியன், சந்திரனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் அதிகரிக்கும். (வெளி. 20:1–2, ஏசா. 30.26) ஆகையால் எல்லாச் சாபத்துக்கும் நீங்கலாக்கப்பட்டுப் புதியதாக்கப்பட்ட

இந்தப் பூமியைப் "புதிய பூமி" என்றும், இந்த வானத்தைப் "புதிய வானம்" என்றும் சொல்லலாம். இதைக் குறித்து ஏசாயா 65, 66ஆம் அதிகாரங்களில் வாசிக்கிறோம். இதைத் தவிர வெளிப்படுத்தல் 21:1-ல் யோவான் அப்போஸ்தலன் "பின்பு, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரம் இல்லாமற்போயிற்று" என்கிறார். இங்கு உரைக்கப்பட்ட புதிய வானமும், புதிய பூமியும் நித்தியத்திலுள்ளவை. ஏசாயாவில் உரைக்கப்பட்ட புதிய பூமியும், புதிய வானமும் ஆயிர வருஷ அரசாட்சியில் உள்ளவை. ஒரே பதங்களை இரண்டு இடங்களிலும் உபயோகப்படுத்தியிருப்பதால், இரண்டும் ஒன்றுதான் என்று வாதிப்போர் உண்டு. அது தவறு. உதாரணமாக, வெளி. 7-ம் அதிகாரத்திலும் 14-ஆம் அதிகாரத்திலும் 1,44,000 பேர் கொண்ட இரண்டு கூட்டத்தாரைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரண்டும் ஒரே எண்ணிக்கையையுடைய கூட்டத்தாராய் இருந்தாலும் இவ்விரு வகுப்பாரும் வெவ்வேறானவர் என்பதை நாம் முன்பு கவனித்தோம். இயேசு யூதா கோத்திரத்துச் சிங்கம் என்றழைக்கப்படுகிறார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம் என்றழைக்கப்படுகிறான். இவ்விதமாக, வேதத்தில் ஒரே பதத்தை அல்லது எண்ணிக்கையை வெவ்வேறு விஷயங்களைக் குறித்தும் உபயோகப்படுத்தியிருக்கிறதைக் காண்கிறோம்.

ஏழாம் நாட்காரரும், வேறு சிலரும் கொண்டு வந்திருக்கும் மற்றொரு பிழையான உபதேசமென்னவெனில், ஏசாயாவில் சொல்லப்படும் புதிய வானமும், புதிய பூமியும் (ஏசா. 65 : 17, 66 : 22) வெளிப்படுத்தலில் சொல்லப்படும் புதிய வானமும், புதிய பூமியும் (வெளி. 21 : 1-2) ஒன்றென வியாக்கியானம்

G.B. Sathyanesan, B.A.

செய்வதே. அப்படிச் செய்வது ஓய்வுநாள் நித்தியத்திலும் இருக்கும் என்கிற தங்கள் பயங்கரமான தப்பான உபதேசத்தை ஸ்தாபிப்பதற்காகவேயாம். “அவர்களிலும் சிலரை ஆசாரியர் களாகவும், லேவியராகவும் தெரிந்துகொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் படைக்கப்போகிற புதிய வானமும், புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல...... மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாமிசமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுது கொள்ளுவார்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா. 66:21-23) இங்கே சொல்லப்படுகிற புதியவானமும், புதிய பூமியும் 1000 வருஷத்தில், ஏதேனின் பூரணத்தில் ஸ்தாபிக்கப் படும் பூமியைக் குறிக்கிறது. அந்தப் புதிய பூமியில் ஓய்வுநாள் (மோசேயின் நியாயப்பிரமாணங்களெல்லாம்) ஆசரிக்கப்படும். இது உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களால் அல்ல, பூமிக்குரிய சரீரங்களோடுகூட பூமியில் வசிப்பவர்களால் ஆசரிக்கப் படுவதைக் குறிக்கும். ஆகையினாலேயே மேற்சொல்லப்பட்ட வசனத்தில் ஓய்வுநாள் மாத்திரமல்ல, மோசேயின் பிரமாணத் தின்படியுள்ள ஆசாரியரும், லேவியரும் இருப்பார்களென்று நாம் வாசிக்கிறோம். ஆயிரவருஷத்தில் காணப்படுகிறதான எசேக்கியேலின் தேவாலயத்தில் பூமியின் ஜனங்கள் பலிகளைச் செலுத்துவார்களென்று நாம் வாசிக்கிறோம். (எசே. 45 : 17) சுருக்கமாகச் சொன்னால் ஏசாயாவில் சொல்லப்பட்டிருக்கிற புதிய வானம், புதிய பூமிக்கும் வெளிப்படுத்தலில் சொல்லப்பட் டிருக்கிற புதிய வானம், புதிய பூமிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

ஏசாயாவில் சொல்லப்பட்ட புதிய பூமிக்கும், புதிய வானத் துக்கும் வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட புதிய பூமிக்கும், புதிய வானத்துக்கும் உள்ள சில முக்கிய வித்தியாசங்கள் கீழே கூறப்பட்டுள்ளன;

(1) ஏசாயாவில் சொல்லப்பட்ட புதிய வானத்திலும், புதிய பூமியிலும் சாபம் உண்டு; மரணம் உண்டு(ஏசா. 65 : 20), வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட புதிய பூமியிலும், புதிய வானத்திலும் சாபமும் இல்லை (வெளி. 22 : 3), மரணமும் இல்லை (வெளி. 21 : 4).

(2) ஆயிரம் வருஷம் அரசாட்சியின் காலத்தில் கிறிஸ்துவின் "ஆளுகை ஒரு சமுத்திரந்தொடங்கி, மறு சமுத்திரம் வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (சக. 9 : 10). எசேக்கியேலில் சொல்லப்பட்ட புதிய ஆலயத்திலிருந்து புறப்படும் நதி கிழக்குத் தேசத்துக்குப் புறப்பட்டுப் போய், வனாந்தர வழியாய் ஓடிக் கடலில் விழும். (எசே. 47 : 8) ஆனால் வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட நித்தியத்தில் "சமுத்திரமும் இல்லாமற்போயிற்று" என்று வாசிக்கிறோம் (வெளி. 21 : 1)

(3) ஏசாயாவில் சொல்லப்பட்ட புதிய பூமியில் ஜனங்கள் "வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருப்பார்கள். திராட்சைத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள். (ஏசா. 65:21) வெளிப்படுத்தலில் சொல்லப்பட்டவை, மனுஷருடைய கைகளினால் உண்டாக்கப்பட்டவைகள் அல்ல, அவைகள் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரம். (எபி 11:10) இதைக் குறித்து II கொரி 5:1ல் "பூமிக்குரிய கூடாரமாகிய நமது வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கை வேலையல்லாத நித்தியவீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்" என்று பரி. பவுலும் கூறுகிறார். ஏசாயாவில் சொல்லப்பட்ட புதிய பூமியில்

ஜனங்கள் திராட்சைத் தோட்டங்களை நாட்டி அவைகளின் கனியைப் புசிப்பார்கள். (ஏசா. 65:21) ஆனால் பரலோகத்தில் கர்த்தருடைய ஜனங்கள் இனிப் பசியடைவதுமில்லை, இனித் தாகமடைவதுமில்லை; வெயிலாவது, உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை எனச் சொல்லப்பட்டிருக்கிறது. (வெளி. 7:16) என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! வாருங்கள். உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். (மத். 25:34) என்று கர்த்தர் இதைக் குறித்தே சொன்னார். 1000 வருஷம் முடிந்த பின்பு இந்த பூமியிலேயே நித்தியத்தை ஸ்தாபிக்கும்படியாகக் கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு கூட இறங்கி வருவார் என்கிற ஏழாம் நாட்காரருடைய போதனை விஞ்ஞான சாஸ்திரத்திற்கும் திருவசனத்திற்கும் விரோதமாயிருக்கிறது. அணு சக்தியைக் கண்டுபிடித்ததினால் எல்லா பொருட்களும் அழிவுக்குரியதென்று அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தப்பூமி நித்தியமாயிருக்காது. இந்த உண்மையை நம்முடைய கர்த்தராகிய இயேசு வானமும் பூமியும் ஒழிந்து போம் (மத். 24:35) என்று கூறி ஸ்திரப்படுத்தியிருக்கிறார். இதைக் குறித்தே அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள் போல் மாறிப்போம் என்றும், நாம் அசைவில்லாத இராஜ்யத்தை பெறுவோம் என்றும், பரி. பவுல் கூறுகிறார். (எபி. 12:27,28) இதனை விளக்கவே வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பின் சமயத்தில் ஆகாயமும் பூமியும் அகன்று போயின என்றும், அவைகளுக்கு இடம் காணப்படவில்லை என்றும், (வெளி. 20:11) கூறியுள்ளார். உயிர்த்தெழுதலில் பங்கு பெறும் எல்லா விசுவாசிகளுக்காகவும் நித்தியத்தில் ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும், அதின் மத்தியில் ஒரு புதிய எருசேலமையும் தேவன்

ஆயத்தப்படுத்தியிருக்கிறார். அது மட்டுமல்ல, பூரணமாய்ப் பிரதிஷ்டை செய்த 1,44,000 தேவ ஊழியர்கள் கிறிஸ்துவோடு கூட சீயோன் மலையில் நிற்கிறதாகவும், நாம் இங்கே காண்கிறோம் (வெளி. 14 : 1-5, 22:3-5).

ஆகையினால் 1000 வருஷம் அரசாட்சி, பூமியில் அல்ல என்று சொல்வதும், அதே காலத்தைக் குறிக்கிற புதிய வானமும், புதிய பூமியும், நித்தியத்திலுள்ள புதிய வானமும் புதிய பூமியும் என்று உபதேசிப்பதும், வேத வசனத்துக்கு விரோதமான வியாக்கியானங்களே. கிறிஸ்துவின் 1000வருஷ அரசாட்சி நிச்சயமாக இந்தப் பூமியிலேயே நடைபெறும். உலகத்தின் இராஜியங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் உரிய இராஜியங்களாயின (வெளி. 11:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பொதுவான உயிர்த்தெழுதலும் (General Resurrection) **வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும்** (White - Throne Judgement) **வெளி.** 20 11–12.

ஆயிரம் வருஷம் அரசாட்சிக்குப் பின்பு மற்றொரு உயிர்த்தெழுதல் உண்டு என்பதை வெளி. 20:5 - ல் வாசிக்கிறோம். மரணமடைந்த "**மற்றவர்கள்**" அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. ஆகவே மொத்தம் இரண்டு பிரதான உயிர்த்தெழுதல்கள் உள்ளன; ஒன்று ஆயிர வருஷ அரசாட்சிக்கு முன்பு. இது "முதலாம் உயிர்த்தெழுதல்" (எபி. 11:35) என்று சொல்லப்படும். இதில் முன்பு சொல்லப்பட்ட 5 வரிசைகளும் அடங்கும். அடுத்தது' ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப்பின்பு நடக்கும். இதை "இரண்டாம் உயிர்த்தெழுதல்" அல்லது "பொதுவான

உயிர்த்தெழுதல்'' என்று சொல்லலாம். இதில் இனிமேல் சொல்லப்படும் கடைசி இரண்டு வரிசைகளும் அடங்கும். இது எப்பொழுது சம்பவிக்கிறது?

ஆயிரம் வருஷம் முடியும்போது; சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகிப் பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும், மாகோகையும் (துன்மார்க்கர்) மோசம் போக்கி, அவர்களை இயேசுவுக்கும், பரிசுத்தவான்களுக்கும் எருசலேமுக்கும் விரோதமாக முழுச்சக்தியோடு கடைசித் தடவையாக யுத்தத்துக்குக் கூட்டிக்கொண்டு வருவான். அவர்கள் தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அப்பொழுது தேவன் அவர்கள்மேல் அக்கினியை இறங்கி வரப்பண்ணி, அவர்களைப் பட்சித்துப்போடுவார். அவர்களை மோசம்போக்கின பிசாசானவனைத் தேவன் மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளிப் போடுவார். அவர்கள் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். (வெளி. 20:7-10)

கோகு, மாகோகு (Gog and Magog)

வெளிப்படுத்தல் 20:7-10 ல் ஆயிரம் வருஷம் அரசாட்சிக்குப் பின்பு, சாத்தான் விடுதலை பெற்று பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும், மாகோகையும் கூட்டிக்கொண்டு தேவனுடைய ஜனத்துக்கு விரோதமாகக் கடைசித்தடவையாக மகா கோபத்தோடும் முழு வல்லமையோடும், வருவானென்றும்' அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போடும்

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கோகு, மாகோகு என்பது யார் என்பதைக் கவனிப்போம்.

கோகு என்பது மேசேக், தூபால் ஜாதிகளின் அதிபதி என்றும், மாகோகு அவனுடைய தேசம் என்றும் எசே. 38:3-ல் வாசிக்கிறோம் இது வட திசையிலிருந்து வரும் ஜாதி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (எசேக் 38:6, 15; 39:2) மேசேக், தூபால் என்பது தற்காலத்தில் ருஷ்யா தேசத்திலுள்ள மாஸ்கோ (Moscow), டோபால்ஸ்க் (To polsk) என்ற இரு முக்கிய பட்டணங்களைக் காட்டுகின்றன. எசேக்கியேல் 38,39 அம் அதிகாரங்களில் "கடைசி வருஷங்களில்" (எசேக். 38:8,16) சம்பவிக்கும் காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது 7 வருஷ உபத்திரவ காலத்தின் முடிவில் பிசாசானவன் ருஷ்யா தேசத்தாரைத் தலைமையாக்கிக் கொண்டு பூமியின் சகல ஜாதிகளையும் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக "அர்மெகதோன்" என்ற இடத்தில் யுத்தத்துக்கு வருவான் என்று நம்பப்படுகிறது. (எசேக். 38;4-7; 15,16, வெளி. 16:16) ஆனால் அவர்கள் தேவனாலே முற்றிலுமாய்த் தோற்கடிக்கப்படுவார்கள். தேவனுடைய ஜனம் சத்துருக்களுடைய யுத்த ஆயுதங்களை விறகாகப் பயன்படுத்துவதற்காக 7 வருஷங்கள் செல்லும் என்றும் (எசே. 39:9), தேசத்தைச் சுத்தம் பண்ணும்படிக்கு அவர்களுடைய பிணங்களைப் புதைத்துத் தீர ஏழு மாதங்கள் செல்லும் என்றும் (எசேக். 39:12) சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் பின்பு பூமியில் 1000 வருஷ அரசாட்சி நடக்கிறது. (இவற்றைக் குறித்துள்ள விவரங்களை உயிர்த்தெழுதலின் ஐந்தாம் வரிசையில் வாசிக்கவும்). ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு சாத்தான் விடுதலையடைந்து, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதி

ளாகிய கோகையும், மாகோகையும் (துன்மார்க்கர்) கூட்டிக் கொண்டு, கடைசித் தடவையாக, மகா கோபத்தோடு தேவனுக்கும் பரிசுத்தவான்களுக்கும் விரோதமாக வருவான். அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போடும் (வெளி. 20:7-10). இவ்விதமாக ஆயிரம் வருஷம் அரசாட்சிக்குப்பின்பு கடைசியாக ஆவேசத்துடன் கர்த்தருக்கும் தேவனுடைய ஜனத்துக்கும் விரோதமாகச் சாத்தானால் கூட்டிச் சேர்க்கப்படும் துன்மார்க்கரான சகல ஜாதிகளுக்கும் கோகு, மாகோகு என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. (P. 883 of Scofield Reference Bible & pp 305 & 306 Halley's Bible Hand Book).

பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு

இதற்குப் பின்பு ஒரு பெரிய வெள்ளைச் சிங்காசனம் ஆகாய வெளியில் (Space) ஸ்தாபிக்கப்பட்டுக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதின்மேல் வீற்றிருக்கிறார். இந்தப் பூமியும் வானமும் அவருடைய சமூகத்திலிருந்து விலகிப்போகின்றன. அப்பொழுது மரித்தும் இன்னும் உயிர்ப்பிக்கப்படாமலிருக்கும். சிறியோர் பெரியோர் அனைவரும் உயிர்ப்பிக்கப்பட்டு, நியாயத்தீர்ப்படையும்படியாக அவருக்கு முன்பாக வந்து நிற்பார்கள். (வெளி. 20:11-12) இதுவே "இரண்டாம் உயிர்த்தெழுதல்" அல்லது பொதுவான உயிர்த்தெழுதல் (மத். 25:31-33)

G.B. Sathyanesan, B.

அதிகாரம்-11

இரண்டாம் உயிர்த்தெழுதல் அல்லது பொதுவான உயிர்த்தெழுதல் — ஆரும் வரிசை-மறுபடியும் பிறந்தவர்கள அல்லது இரட் சிக்கப்பட்ட வர்கள்.

ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெருத எல்லாத் தேவனுடைய பிள்ளைகளும் உயிர்ப்பிக்கப்பட்டு, வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன் நிற்பார்கள். இவர்கள் மறுபடியும் பிறந்தவர்கள்; இயேசுவின் இரத்தத்திஞல் கழுவப்பட்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள் இவர்கள் நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. (லூக் 10:20, வெளி. 20:15) இவர்கள் வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன்பாக, நியாயந்தீர்க்கப்பட்டுத்தாங்கள் இயேசுவுக்காகவும்' பரிசுத்தவான்களுக்காகவும் செய்த அன்பின் கிரியைகளுக்கு ஏற்ற வாறு பிரதிபலனைப் பெற்றுக்கொள்வார்கள் இவர்களுடைய ஜீவியத்தின் முழுவரலாறும் அவர்களுடைய புஸ்தகங்களில் எழுதப்பட்டிருக்கும். வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன் ஜீவ புஸ்தகங்களும், புஸ்தகங்களும் திறக்கப்படும். (வெளி.20:21) அவரவர் கிரியைகளின் படி அவரவருக்குப் பலனளிக்கப்படும். இயேசு மத். 10:42-ல் "சீஷன் என்னும் நாமத்தி னிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம்(a cup of coldwater) குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்ருர். இங்கு இவர்களைப் பற்றி மத்யேு 25:31-40-ல் வாசிக்கிருேம். இவர்களைச் செம்மறியாடுகளென்றும், நீதிமான்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு இவர்களைப் பார்த்து "வாருங்கள் என் பிதாவிஞல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்

பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' என்கிறார். அதற்குக் காரணம் இவர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டபின்பு தேவன்பினால் நிரப்பப்பட்டுத் தன்னலத்துடன் ஜீவிக்காமல், மற்றவர்களுக்காக ஜீவித்து அநேக நற்கிரியைகள் செய்திருக்கிறார்கள். ஆகையால் தேவன் இவர்களை நீதிமான்களாக எண்ணி நித்தியஜீவனை அடையச் செய்கிறார் (மத். 25:46). நித்தியத்தில் இவர்களுடைய வாசஸ்தலம் "புதிய பூமியே யாகும்'' (வெளி. 21:1 இவர்கள் புதிய எருசலேமின் வெளிச்சத்திலே நடப்பார்கள். (வெளி. 21:24) மேலும் "பூமியின் இராஜாக்கள் தங்கள் மகிமையையும், கனத்தையும் அதற்குள்ளே (புதிய எருசலேம்) கொண்டு வருவார்கள்'' என்று வெளி. 21:24-ல் வாசிக்கிறோம். யார் இந்தப் பூமியின் இராஜாக்கள்? இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளின் மத்தியிலும் சிலர் கர்த்தருக்காக வைராக்கியமாக ஜீவித்து நற்கிரியைகளில் பெருகிப் புதிய பூமியில் மற்றவர்களைப் பார்க்கிலும் ஒரு மேன்மையான நிலவரத்தில், அதாவது இராஜாக்களைப்போல விளங்குவார்கள். மேலும் புதிய பூமியில் வாசஞ் செய்பவர்களுக்குள்ளே ஜாதி வித்தியாசம் காணப்பட இடமுண்டு எப்படியெனில் வெளி. 21:24 ல் "இரட்சிக்கப்படுகிற ஜாதிகள்'' (Nations in Eng.) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிருப்பவர்கள் முற்றிலுமாகப் பரிசுத்தமாக்கப்படாதபடியினால் தாங்கள் இன்னின்ன ஜாதியாரென்று எண்ண இடமுண்டு

அதிகாரம்-12

ஏழாம் வரிசை - துன்மார்க்கரும், நித்தியமும்

(யோவா. 5 : 29, தானி. 12 : 2. வெளி. 20 : 13-15)

கடைசியாகப் பாவிகளும், துன்மார்க்கரும், கர்த்தரை விட்டுப்

பின் வாங்கிப்போனவர்கள் அனைவரும் உயிர்ப்பிக்கப்பட்டு, வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன் கொண்டுவரப்பட்டு நியாயந் தீர்க்கப்படுவார்கள். வெளிப்படுத்தல் 20:13-15ல், 'சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன இது இரண்டாம் மரணம் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்'' என்று வாசிக்கிறோம். இங்குக் கூறப்பட்டுள்ள சமுத்திரம், மரணம், பாதாளம் என்பவை என்ன?

துன்மார்க்கர் உயிர்த்தெழுந்து, நியாயத்தீர்ப்பு அடைவதற்கு முன்பு, அவர்களுடைய ஆத்துமாக்கள் பின் சொல்லப்பட்ட மூன்று விதமான இடங்களில் தண்டனையில் வைக்கப்படுகிறார்கள். அவையாவன; (1) பாதாளம் அல்லது நரகம் (Hell Gk. Hades; Hell sheol) (2) மரணம் அல்லது புறம்பான இருள் (Death Gk. Tartarus-oute darkness) (3) சமுத்திரம் அல்லது பாதாளக்குழி (Sea. Gk Abussor - Bottomless pit) இவ்வுலகத்தில் ஜீவிக்கும்போது, அவரவர் செய்த பாவங்களுக்குத் தக்கவாறு அவர்கள் மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டு மேலே சொல்லப்பட்ட மூன்று இடங்களில் வைக்கப்பட்டு, அவரவருடைய பாவங்களுக்கு ஏற்றவாறு தண்டிக்கப்படுவார்கள். மரித்தோரின் உயிர்த்தெழுதலில் இவர்கள் ஏழாவது அல்லது கடைசி வரிசையில் உயிர்ப்பிக்கப்பட்டு, வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன் நின்று நியாயந்தீர்க்கப்பட்டுக் கடைசியாக நித்திய வேதனையுள்ள இடமாகிய அக்கினிக்

கடலில் (Gk. Gehenna) தள்ளப்படுவார்கள். மரித்தவுடனே துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் செல்லும் மேலே கூறப்பட்டுள்ள மூன்று இடங்களைக் குறித்து விவரமாக இனிக் கவனிப்போமாக.

1- பாதாளம் அல்லது நரகம் HELL (Gk. Hades Sheol) (யோவா. 5:29, தானி. 12:2, சங். 9:17, மாற். 9:43-48, லூக். 16:19-31)

துன்மார்க்கர் மரித்தவுடனே பாதாளம் அல்லது நரகம் என்ற இந்த இடத்துக்குச் சென்று, அவர்களுடைய ஆத்துமாக்கள் வேதனையினாலும், தாகத்தினாலும், வியாகுலத்தினாலும் பாடுபடுவார்கள். லூக். 16:20-31-ல் இதைக்குறித்துத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. லாசரு மரித்தவுடனே, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியில் கொண்டுபோய் விடப்பட்டுத் தேற்றப்பட்டான். ஐசுவரியவான் மரித்தவுடனே. பாதாளத்துக்குச் சென்று வேதனைப்பட்டான். அவன் தூரத்திலே ஆபிரகாமையும். அவன் மடியிலே லாசருவையும் கண்டான் என்றும், ஆபிரகாமோடு பேசினான் என்றும் பார்க்கிறோம்.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் பாதாளம் அல்லது நரகம் (Hell) இயேசு உயிர்த்தெழுந்து, பரத்திற்கு ஏறிப்போவதற்கு முன்பு இரண்டு பாகமாக இருந்தது. இரட்சிக்கப்பட்டோர், "பரதீசு" அல்லது "ஆபிரகாம் மடி" என்று சொல்லப்பட்ட ஒரு பாகத்திலும், துன்மார்க்கர் 'நரகம்' என்று சொல்லப்பட்ட மற்றொரு பாகத்திலும் இருந்தனர் இவ்விரண்டு இடங்களின் மத்தியில் ஒரு 'பெரும்பிளப்பு' இருந்தது. இவ்விரண்டு கூட்டத்தாரையும் வேறு பிரித்து, இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லா உணர்ச்சியோடும் அறிவோடும்

இருந்து. தேற்றப்பட்டு, ஆறுதலடைந்தார்கள். துன்மார்க்கரோ எல்லா உணர்ச்சியோடும், அறிவோடும் இருந்து, வேதனையை அனுபவித்தார்கள் இயேசு உயிர்த்தெழுந்து பரத்துக்கு எழுந்தருளிப்போனபோது 'பரதீசு' அல்லது 'ஆபிரகாம் மடி' என்று சொல்லப்பட்ட நீதிமான்களுடைய இடமானது உன்னதத்திற்கு தேவனுடைய சந்நிதானத்துக்கு மாற்றப்பட்டது. ஆகையால்தான் பரி பவுல்: "மூன்றும் வானம் வரைக்கும் .. பரதீசுக்குள் எடுக்கப்பட்டு" என்றார். (11கொரி. 12:14) எபேசியர் 4:8-10 இவ்விஷயத்தைத் தெளிவாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருந்தாலும், அவைகள் மூடப்பட்ட நிலைமையில் தான் இருந்தபடியால் (சங். 32:1) அவர்கள் சிறையாக்கப்பட்ட விதத்தில்தான் இருந்தனர். ஆகையால் இயேசு சிலுவையில் மரித்தபோது, பூமியின் தாழ்விடங்களில் இறங்கிப் பரதீசில் இருந்த நீதிமான்களைச் சிறையாக்கிக்கொண்டு எல்லா-வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறிப்போனார். துன்மார்க்கர் இருக்கும் இடமாகிய "பாதாளம்" அல்லது "நரகம்" என்ற இடத்துக்கு எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டதாக நாம் வேதத்தில் காண்கிறதில்லை.

மேலும், I பேதுரு 3:19-20-ல் இயேசு மரித்தபின்பு பாதாளத்துக்கு (Hades) இறங்கிச் சென்று காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று வாசிக்கிறோம். இந்த ஆவிகள் யார்? ஒருமனுஷன் மரித்த பின்பு சத்தியத்தை அறியும்படியாக அவனுக்கு ஒரு தருணம் கொடுக்கப்படுமா? இந்தக் கேள்விக்கு விடை 20-ஆம் வசனத்தில் காண்கிறோம். காவலில் வைக்கப்பட்டுள்ள இந்த ஆவிகள் எவையெனில் நோவாவின் காலத்தில், சத்தியம் அறியத் தருணம் கிடைப்-

பதற்கு முன்பு சடுதியாக ஜலப்பிரளயத்தினுல் மாண்டு போனவர்கள். அந்த ஜலப்பிரளயம் முழு உலகத்தின் மேலும் வந்தது. பூமியிலுள்ள சகலமனுஷ வர்க்கமும் அழிக்கப்பட்ட சந்தர்ப்பம் அது ஒன்றே. நோவாவும் அவனது குடும்பமுமாகிய எட்டுப்பேர் மாத்திரம் பேழைக்குள் பிரவேசித்துக் காக்கப்பட்டார்கள். ஜலப்பிரளயம் வரும் வரை நோவா ஜனங்களுக்கு நீதியைக் குறித்துப் பிரசங்கித்தான். (II பேதுரு 2:5) ஆயினும் எல்லாரும் மனந்திரும்பக் கூடாதபடிக்குச் சடுதியாக உண்டான ஜலப்பிரளயத்தினுல் அழிந்து போனுர்கள். ஆகையால் இயேசு மரித்து உயிர்த்தெழுமுன் பாதாளத்துக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குப் பிரசங்கித்தார்.

லூக்கா 16:20-31-ல் சொல்லப்பட்ட ஐசுவரியவான் மரித்தவுடன் பாதாளத்தில் வேதனைப்பட அவனிடத்தில் காணப்பட்ட பாவம் என்ன? இவன்: கொலை, களவு, விபசாரம் முதலிய பெரிய பாவங்களைச் செய்ததாகச் சொல்லப்படவில்லை. இவன் இவ்வுலகிலுள்ள எத்தனையோ ஜனங்களைப் பார்க்கிலும் நல்லவனுகக் காணப்படுகிருன். அந்தத் தரித்திரன் லாசரு, பருக்கள் நிறைந்தவனுக, நாற்றமுடையவனுக இருந்தாலும் அவனைத் துரத்தி விடாமல். தனது வீட்டின் வாசலருகே இருக்கும்படியாக அனுமதித்திருக்கிருன். ஆனுலும் "அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்." இப் பூமியில் உயிரோடிருக்கும் காலத்தில் நன்ருகப் புசித்தும், குடித்தும் உலக நன்மைகளை அனுபவித்தும் தன்னலத்துன் ஜீவித்து வந்தான். மேலும், கர்த்தருக்காக அல்லது மற்றவர்களுக்காக அவன் ஜீவிக்கவில்லை. தனது வீட்டு வாசலருகே வியாதியினுலும் பசியினுலும் வருந்தும் அந்த ஏழை லாசருவின்மீது அவனுக்கு இரக்கமில்லை, ஆகையால் மனந்திரும்பாமலிருந்த அவன் பாதாளத்தில் தன் நாவை

குளிரப்பண்ணும்படி ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடைக்-காமல் அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறான். "சுக-போகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" (I தீமோ. 5: 6) என்று சொல்லப்பட்டிருக்கிறபடியே தன்னலமுள்ள சுகபோகமான வாழ்க்கை, ஆத்துமாவில் அழிவை உண்டாக்கு-கிறது. இதே சத்தியத்தை மத்தேயு 25:41 - 46- லும் காண்கிறோம். இங்கே கூறப்பட்டுள்ள வெள்ளாடுகள் துன்-மார்க்கரேயாவர். இவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாமலும் இரட்சிக்கப்படாமலும் இருந்தபடியால் இவர்களுடைய வாழ்க்கை இவ்வுலகில் எந்தவிதமான நற்கிரியைகளுமின்றிச் சுயநலமுள்ளதாகவே இருந்துள்ளது. ஆகையால், இயேசு இவர்களைப் பார்த்து: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்-பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்கிறார். (மத். 25 : 41)

இவ்வுலகில் அநேகர் சன்மார்க்கராக, நல்லவர்களாக, அன்புள்ளவர்களாக, சாந்தமுள்ளவர்களாகக் காணப்படலாம். ஆயினும், இக்கிருபையின் காலத்தில் உலக இரட்சகராகிய இயேசுவை விசுவாசியாமலும், ஏற்றுக்கொள்ளாமலும், அறிக்கையிடாமலும் இருப்பார்களாகில் அவர்கள் பாவிகளே. (யோவா. 16:9, ரோம. 10:9-10) அவர்களுக்கு இரட்சிப்பு இல்லை. (யோவா. 14:6, அப். 4:12, 16:31) அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட மாட்டாது. (வெளி. 20:15)தேவன் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் அழிக்கிறார். (யோபு 9:22, எசேக். 21:3) இவர்களெல்லாரும் மரித்த-வுடனே அவர்கள் ஆத்துமா நரகம் அல்லது பாதாளத்துக்குச் சென்று கடைசியில் வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு வரை வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும்.

(2) **மரணம் அல்லது புறம்பான இருள்** (Death or outer Darkness. GK. Tartarus) மத். 8:12, 22:13, 25:30, II பேது. 2:4, யூதா 6, யோபு 10:21-22

இங்கு மரணம் என்று சொல்லப்படுவது ஒரு நிலை அல்ல. இது துன்மார்க்கருக்கென்று வைக்கப்பட்டுள்ள வேதனையுள்ள மற்றொரு இடத்தைக் காட்டுகிறது. (வெளி. 20:13-14) இது புறம்பான இருள் என்றும், இங்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. காரண மென்ன? இந்த இடத்துக்குப் போகிறவர்களுக்கு மகாவேதனை யும், பயமும், திகிலும் தாங்கமுடியாத துக்கமும் மனச்சஞ்சல மும் இருக்கும். ஏனெனில் இங்குச் சென்றவர்கள் யாவரும் தேவனையும், சத்தியத்தையும் அறிந்து, அவருடைய ஈவுகளையும், ஆசீர்வாதங்களையும் ருசித்தவர்கள். ஆனால் அதற்குப் பாத்திர வான்களாய், உண்மையுள்ளவர்களாய் ஜீவிக்காமல், தங்களைத் தாங்களே துணிகரமாய்க் கெடுத்துக்கொண்டார்கள். இவர்கள் ஏசாவைப்போல் சீர்கெட்டவர்கள். "ஏனென்றால் பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர் விட்டுக் கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற் போனான்." (எபி. 12:17)

ஆகையால் இந்த இடத்தில் எப்போதும் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (வெளி. 16 : 10-11-ஐ வாசிக்கவும்.)

A விழுந்து போன தூதர்கள் I பே. 2:4 யூதா:6

இந்த இடம் யாருக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது? (A விழுந்துபோன தூதர்களுக்காகவும் (B) கர்த்தரை விட்டுப்

G.B. Sathyanesan.

பின்வாங்கிப்போன மனுஷர்களுக்காகவும் இந்த இடம் ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது.

பாவம் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்திருக்கிறார். (II பேதுரு. 2:4) இவர்கள் செய்த பாவங்கள் சொல்லப்படவில்லை. மேலும் "தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்." (யூதா 6) மனுஷர்களுக்குச் சோதனையின் காலம் இருந்தது போலத் தேவ தூதர்களுக்கும் சோதனையின் காலம் இருந்தது. அச்சமயம் இந்தத் தூதர்கள் தங்களது அழைப்பில் உறுதியாயிராமல், தங்களுக்கு ஏற்பட்டுள்ள மேன்மையான நிலையை அற்பமாய் எண்ணி அசட்டை செய்து, தங்களது உயர்ந்த பதவியை இழந்து போனார்கள். ஆகையால் அவர்கள் நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று இப்போது சங்கிலியினால் கட்டப்பட்டு அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். சிலர் இங்கு உரைக்கப்பட்ட விழுந்துபோன தூதர்களை ஆதி. 6 : 1-5-ல் சொல்லப்பட்ட "தேவ குமாரரோடு" சம்பந்தப்படுத்தி, இவர்கள் "மனுஷ குமாரத்திகளோடு" கூடினபடியால் தங்களுக்கு ஆக்கினையை வருவித்துக் கொண்டார்கள் என்று சொல்வர். அது முற்றிலும் தவறு. ஏனெனில் இங்குச் சொல்லப்பட்ட "தேவ குமாரர்" என்பது தேவனுடைய ஜனத்தைக் குறிக்கும். ஆதி. 4 : 26-ல் ஏனோஸுக்குப் பிறகு மனுஷர் தங்களைத் தேவனுடைய புத்திரர் என்று சொல்லிக் கொண்டார்களென்று, ஆங்கில மொழிபெயர்ப்பில் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. மேலும் தூதர்கள் விவாகம் அற்றவர்கள், அவர்களுக்குள்

கொள்வினை கொடுப்பனை கிடையாது என்பதை இயேசு மத்தேயு 22 : 30-ல் விளக்கிக் கூறியுள்ளார்.

(B) கர்த்தரையும், சத்தியத்தையும் விட்டுப் பின்வாங்கிப் போன மனுஷர்கள்: சத்தியத்தை அறிந்து, பிரகாசிக்கப்பட்டு இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டுத் தேவனுடைய வெளிப்படுத்தலைப் பெற்றுப் பரிசுத்தாவியைப் பெற்று, பின் வாங்கிப்போனவர்களுக்காக இந்தப் பயங்கரமான இடம் வைக்கப் பட்டிருக்கிறது. இவர்களைக் குறித்து "நாய்கள்" என்றும், பன்றி கள் என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (மத் 7:6, பிலி. 3:2, II பேதுரு. 2:20-22, வெளி. 22:15) இவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட்டுப்போகும். (வெளி. 3:5) "ஏனெனில் ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல் வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசி பார்த்தும், மறுதலித்துப் போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத் துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" (எபி 6:4-6). "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத் தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக் கினையுமே இருக்கும் மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத் தத்தை அசுத்தமென்றெண்ணிக் கிருபையின் ஆவியை நிந்திக்

கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானு யிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்'' (எபி. 10:26-29). மேலும் ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்,பின் வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது'' என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களா யிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.'' (எபி.10:38-39). மேலும் இயேசு: ''லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்'' (லூக். 17:32) என்றார். கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜியத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார். இந்தப் புறம்பான இருளில் எப்படிப்பட்டவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதைக் குறித்து இயேசு சொல்லியவற் றைக் கீழே கவனிப்போமாக:-

(a) மத். 8:5-10; லூக்7:1-10 இந்தவசனங்களில் நூற்றுக்கு அதிபதி ஒருவனைக்குறித்து நாம் வாசிக்கிறோம். அவன் ஒரு புறஜாதியான்; ரோம அதிகாரி. அப்படியிருந்தும் அவன் இயேசுவின் மேல் விசுவாசமும், தேவஜனமாகிய யூதர்கள்மேல் அன்பும் உள்ளவனாகக் காணப்பட்டான். அவன் யூதர்களை நேசித்து அவர்களுக்காக ஒரு ஜெப ஆலயத் தையும் கட்டினான். அவனது வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையாய் இருந்த போது, இயேசு தனது வீட்டுக்கு வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க வேண்டுமென்று அவரை வேண்டிக் கொள்ளும்படி யூதருடைய மூப்பரை முதலாவது அவ ரிடத்தில் அனுப்பினான். (லூக். 7:3) ஆயினும், பின்பு அவன் இயேசு தன் வீட்டுக்குள் பிரவேசிக்கத்தான் பாத்திரவான் அல்ல வென்றும், அவருடைய வார்த்தையில் வல்லமையும், அதிகாரமும் உண்டென்று விசுவாசித்து, அவனது வேலைக்காரன் சொஸ்த

மடைய அவர் ஒரு வார்த்தை மாத்திரம் சொன்னால் போதும் என்றும் சொல்லி அனுப்பினான். "இயேசு இதைக் கேட்டு, ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராஜ்ஜியத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். இராஜ்ஜியத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத்.8: 10-12)

இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில், எந்த மனுஷனும் இயேசுவைச் சர்வ வல்லமையுள்ள கர்த்தரென்றும், இரட்சகர் என்றும், விசுவாசித்து ஏற்றுக் கொள்ளாவிடில் அவனுக்கு இரட்சிப்பு இல்லை. யூதர்கள் எழுத்தின்படி தேவனுடைய ஜனமென்று எண்ணப்பட்ட போதிலும், அவர்களில் பெரும்பாலோர் இயேசு மெய்யான தேவனென்றோ, மேசியா என்றோ விசுவாசியாதிருந்தார்கள். அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ''இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி அவரைக்குறித்து இடறலடைந்தார்கள்.'' (மாற். 6:3) மேலும் அவரை, ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்றும் பிசாசு பிடித்தவன் என்றும் (யோவான் 8:49) சொன்னார்கள். காரணமென்னவெனில், யூதர்கள் எழுத்தின்படி ஆபிரகாமுடைய சந்ததியாராகத் தேவனுடைய ஜனமாக இராஜ்ஜியத்தின் புத்திரராக இருந்தாலும் அவர்களுடைய ஜீவியம் கனியற்றதாக, மாய்மாலமானதாக, தன்னலமுள்ளதாக

இருந்தது. அவர்கள் தங்களுடைய ஜீவியம் கண்டிக்கப்படாத படிக்கு இவ்வுலகில் மெய்யான ஒளியாக வந்திருந்த இயேசு விளிடத்தில் வர மனமில்லாமலிருந்தார்கள் (யோவான்3:19-20) ஆகையால் எழுத்தின் படி யூதர்கள், அல்லது தேவ ஜனமாக இருப்பினும், இயேசுவிலும், அவருடைய வார்த்தையிலும் விசுவாசமில்லாவிட்டால், அவர்கள் புறம்பான இருளில் தள்ளப் படுவார்கள். அவரில் விசுவாசமுள்ள யாவரும், பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்க்கப்பட்டுப் பரலோக இராஜ்ஜி யத்தில் பரிசுத்த வான்களோடே காணப்படுவார்கள்.

(b) மத். 22:1-13, கலியாண வஸ்திரம் தரித்திராமல், கலியாணச் சாலைக்கு வந்திருந்த மனுஷனை இராஜா பார்த்து, பணிவிடைக்காரரை நோக்கி: "இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள்'' என்றான். இங்கு "வஸ்திரம்'' என்று சொல்லப்படுவது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் நமக்குக் கிடைக்கிற தேவ நீதியைக் காட்டுகிறது. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப், பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' II கொரி. 5:21) நம்முடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக் கிறது. (ஏசா 64:6) ஆகையால் இயேசுவை விசுவாசித்து, இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுப் பரிசுத்தாவியைப் பெற்றபின்பு நாம் இயேசுவைப்போல இவ்வுலகில் புதிதான ஜீவியம் செய்தல் வேண்டும். (ரோமர். 6:4-5; கலா. 3:27 II கொரி. 3:18; எபே. 4:22-24) அவ்விதமாக ஜீவிக்காமல், தங்களது மனமும், மாமிசமும் விரும்பினபடி ஜீவிக்கிறவர் களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டு (ரோமர் 8:1). அவர்கள் புறம் பான இருளிலே தள்ளப்படுவார்கள். இயேசுவைப்போலப்

பூரண சற்குணராக இவ்வுலகில் ஜீவித்தவர்களுக்கு மணவாட்டிக்குரிய, "சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்" அளிக்கப்படும். (வெளி. 19:8).

(c) மத். 25:14-30. பிரயோஜனமற்ற ஊழியக்காரன் புறம்பான இருளிலே தள்ளப்படுவானென்று இங்கு வாசிக்கின்றோம். ஐந்து தாலந்தையும், இரண்டு தாலந்தையும் பெற்றுக்கொண்ட ஊழியக்காரர்கள், வியாபாரம் செய்து முறையே வேறு ஐந்து தாலந்தையும், இரண்டு தாலந்தையும் சம்பாதித்தார்கள். ஒரு தாலந்தைப் பெற்றுக்கொண்டவனோ கஷ்டப்பட்டு, வியாபாரம் செய்ய விரும்பாமல், நிலத்திலேதத் தோண்டி தன் பணத்தைப் புதைத்து வைத்துவிட்டுச் சோம்பலாக பிரயோஜனமற்றவனாக இருந்ததுமல்லாமல், தனது எஜமானைக் குற்றப்படுத்தி, அவனைத் தவருக நியாயந்தீர்த்தான். ஆகையால் எஜமான் அவனைப் பொல்லாதவனாகவும், பிரயோஜனமற்றவனாகவும் கண்டு, அவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போட்டான். ஆகையால் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்கள், தாலந்துகள், பல நன்மைகளைப் பெற்றபிறகு, கர்த்தருடைய மகிமைக்காகவும், மற்றவர்களுடைய நன்மைக்காகவும் ஜீவிக்காமல், தன்னலமாக, சோம்பலாக, அசதியாக, பிரயோஜனமற்றவர்களாக ஜீவிப்போமாகில், நாமும் பொல்லாதவர்களாகக் கருதப்பட்டுப் புறம்பான இருளிலே தள்ளப்பட வேண்டியதாகும். "கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" என்றும் (எரேமியா 48:10) "நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" என்றும் (மத் 3:10) வாசிக்கிறோம்.

(3) பாதாளக்குழி அல்லது சமுத்திரம்

(Bottomless Pit, or Sea GK. ABUSSOS) வெளி 17:7-8; 13:1-3; 20:1-3; 9:2; ரோம. 10:6-7,

வெளிப்படுத்தல் 20:13-ல் மூன்றாவது இடமாகிய சமுத்திரம் அல்லது பாதாளக்குழியைக் குறித்து வாசிக்கிறோம். "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது." இது, பாதாளம் அல்லது நரகம் என்றும், மரணம் அல்லது புறம்பான இருள் என்றும், முன்பு கூறப்பட்ட இடங்களைப்போல, துன்மார்க்கரின் ஆத்துமாக்கள் மரித்தவுடனே அடையக்கூடிய தற்காலிகமான மற்றொரு வேதனையுள்ள இடமேயாகும். தமிழ் மொழிபெயர்ப்பில், 'பாதாளக்குழியானது' (bottomless pit) "பாதாளம்" (Hell) என்று பிழையாகப் பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. (லூக். 8:31; வெளி. 17:8; 11:7; 20:2; ரோமர் 10:6-7) இந்தப் பாதாளக்குழி, இவ்வுலகில் நாம் காண்கிற சமுத்திரத்தைப் போலத் தண்ணீருள்ள இடம் அன்று; பிசாசுகளுக்கென்று பிரத்தியேகமாக இது வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் பிசாசுகள் அநேக சந்தர்ப்பங்களில் எவ்விதம் இந்த இடத்துக்கு அனுப்பப்பட்டனவென்றும், எவ்விதம் அவைகள் இவ்விடத்திலிருந்து புறப்பட்டு வந்தன என்றும் வேதத்தில் வாசிக்கிறோம். உபத்திரவக் காலத்தில் "அப்பல்லியோன்" என்ற பாதாளத்தின் தூதன் அல்லது இராஜாவுடைய தலைமையின் கீழ், மனுஷரைச் சேதப்படுத்துவதற்காக அதிகாரம் உடையவைகளாய்ப் பிசாசின் வல்லமையுடைய "வெட்டுக்கிளிகள்" நூதன உருவத்தோடு இந்தப் பாதாளக் குழியிலிருந்து புறப்பட்டு வந்தன என்று நாம் வெளி. 9:1-11-ல் காண்கிறோம். ஆயிர வருஷ அரசாட்சியின் காலத்தில், சாத்தான் பெரிய சங்கிலியினால் கட்டப்பட்டு, இந்தப் பாதாளக்குழியிலே சிறையாக வைக்கப்படுகிறான் என்றும் வெளி 20:1-3-ல் வாசிக்கிறோம். இயேசு "லேகியோனால்" பிடிக்கப்பட்ட மனுஷனிலிருந்து பிசாசுகளைத் துரத்தும்போது "தங்களைப் பாதாளத்திலே போகக் கட்டளையிடாதபடிக்கு

Deep-Eng. Abussos-G.K.)

அவைகள் அவரை வேண்டிக் கொண்டன." (லூக். 8 31) ஏனெனில் அது மிகவும் வேதனையுள்ள இடம் என்று பிசாசுகள் நன்றாக அறிந்திருக்கின்றன. (லூக் 8:28) இந்தப் பாதாளக் குழியிலிருந்துதான் (bottomless pit) ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும் உடைய மிருகம் ஏறி வந்தது. (வெளி. 17:8)

வேதத்தில் "பாதாளக்குழி" என்ற பதத்துக்குப் பதிலாக சமுத்திரம்' என்ற பதத்தைப் பல இடங்களில் உபயோகித்திருப்பதைக் காணலாம். வெளி 17:8-ல் பாதாளக் குழியிலிருந்து ஏறி வந்த அதே மிருகம், வெளி. 13:1-ல் சமுத்திரத்திலிருந்து வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வெளி. 11:7-லும் பாதாளக் குழியிலிருந்து ஒரு மிருகம் ஏறி வந்ததாக நாம் வாசிக்கிறோம். இவைகளெல்லாம் அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கின்றன. "பாதாளக்குழி" என்று சொல்லப்பட்ட இந்த இடமானது அடிப்பாகமற்ற மிக ஆழமான ஒரு படுகுழி என்றும், இதற்குள் தள்ளப்பட்டவர்களுக்கு எப்போதுமே அமிழ்ந்து போகிற உணர்ச்சி உண்டாயிருக்கும் என்றும் அறிந்துகொள்ளலாம். இதைக்குறித்து வெளி. 9:1-3-ல் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது பூமியின் ஆழத்திலிருக்கிறதென்றும், புகையினால் நிறைந்த ஒரு பெரிய அக்கினிச்சூளையென்றும் தெரிகிறது. இந்த இடமானது எப்பொழுதும் பூட்டுப்போடப்பட்டு இருக்குமென்றும், குறிக்கப்பட்ட வேளைகளில் மாத்திரம் தேவனுடைய அனுமதியின் பேரில், அதற்கென்று வைக்கப்பட்டுள்ள திறவுகோலினால் தேவ தூதனைக் கொண்டு திறக்கப்படுமென்றும் காண்கிறோம். ஆகையினால் இதற்குள் தள்ளப்பட்டவர்கள் எளிதாக வெளியே வரமுடியாது. "சமுத்திரம்" என்று இந்த இடம் அழைக்கப்படுவதும், மிகவும் ஆழமான இடமென்

பதைத் தான் காட்டுகிறது. ஆகையினுல், பாதாளம், சமுத்திரம் என்று ஒரே இடத்தைக் குறித்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் ஏசாயா 14:4-15ல் லூசிபருடைய விழுகையைப் பார்க்கிருேம். அவன் மேட்டிமையடைந்து தேவனுக்கு மேலாகத் தன்னை உயர்த்தினபடியால், ''அகாதமான பாதாளத்தில்'' தள்ளுண்டு போனுன் இவனுடைய துஷ்ட ஆவி, பாபிலோன் இராஜாவுக்குள்ளும் கிரியை செய்தபடியால், அவனுக்கும் அதே நியாயத்தீர்ப்பு தேவனுல் வந்தது. இதே விதமாக, ஏதேன் தோட்டத்திலிருந்த கேரூபுக்கும் சம்பவித்தது என்று எசே. 28:12-18-ல் வாசிக்கிருேர். அது தனது அழகினுலும், வியாபாரத்தின் மிகுதியினுலும், இருதயத்தில் மேட்டிமையடைந்து, எல்லா ஈவுகளையும் தனக்குக் கொடுத்த தேவனைப் பார்க்கிலும், தன்னையும் தனது ஈவுகளையும் பெருமையாக எண்ணிற்று. ஆகையால் அதற்கும், அதினுடைய ஆவியினுல் ஆட்கொண்ட தீரு இராஜாவுக்கும் மேலே சொல்லப்பட்ட அதே நியாயத்தீர்ப்பு அளிக்கப்பட்டது. ''உன்னைக் குழியிலே (Pit) விழத்தள்ளுவார்கள்: நீ சமுத்திரங்களின் (Seas) நடுவே கொலையுண்டு சாகிறவர்களைப்-போல் சாவாய்.'' (எசே 28: 8) மத். 23: 12-ல் இயேசு 'தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்', தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்'' என்று சொல்லியபடி, தங்களை ஆதி உன்னதத்திற்கு உயர்த்தின யாவரும் அடிப் பாதாளத்துக்குத் தள்ளப்பட்டதைக் காணலாம். நேபுகாத்நேச்சார் இராஜா. தேவனுக்கு மகிமையையும், கனத்தையும் செலுத்தாமல் தன்னை மிகவும் உயர்த்தி, 'இது என் வல்லமையின் பராக்கிரமத்தினுல் என்,மகிமைப் பிரதாபத்துக்கென்று,இராஜியத்

துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா,'' (தானி.4:30) என்று சொன்ன மாத்திரத்தில் அவன் பொல்லாத ஆவிகளினால் பிடிக்கப்பட்டுப் பைத்தியக்காரனாகிவிட்டான் என்று நாம் காண்கிறோம் அவன் தன்னைத் தாழ்த்தின-போதோ, அவனது புத்தி அவனுக்குத் திரும்ப வந்து, தனது ராஜியத்திலே மறுபடியும் இராஜாவாக வைக்கப்பட்டான். (தானியேல் 4:32-37). ஆகையால் இறுமாப்படைந்த பிசாசுக்-காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும், அவனைப் போலத் தங்களை உயர்த்தின மனுஷர்களுக்காகவும் இந்தப் பாதாளக்குழி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்று நாம் காண்கிறோம். (1தீமோ 3:6)

மகாபாபிலோன் (வெளி. 17, 18 அதிகாரங்கள்.)

இப்பூமிக்குரிய பாபிலோன் இராஜியம் அழிக்கப்பட்டு, அதினுடைய பெரிய அரசன் பாதாளக் குழிக்குத் தள்ளப்பட்டது போல, வெளி. 17-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஆவிக்குரிய பாபிலோன்கூட, இந்தப் பயங்கரமான இடத்துக்குத் தள்ளப் படும். இந்த ஆவிக்குரிய பாபிலோன் எது? வெளி. 17 : 5-ல் இந்தப் பாபிலோன் ஒரு இரகசியம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆம், அது உலகத்துக்கு உண்மையாகவே ஒரு இரகசியம் தான். ஆனால் அக்கினி ஜுவாலை போன்ற கண்களும், ஆழமான காரியங்களை ஆராய்ந்து அறிகிற ஆவியையும் உடைய தேவனுக்கு இது ஒரு இரகசியம் அன்று. முதல் வசனத்தில், இந்தப் பாபிலோன் திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந் திருக்கிற ஒரு வேசி என்றும், மூன்றும் வசனத்தில், அது ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும் உடையதும், தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின்மேல் ஏறியிருக்கிற ஒரு ஸ்திரீ என்றும் சொல்லப்பட்டுள்ளது. புதிய

ஏற்பாட்டில் கிறிஸ்துவை விவாகம் பண்ணியிருக்கும் சபையை ஸ்திரீக்கு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கிறது (எபே. 5 : 23-32; கலா. 4 : 26; வெளி. 12 : 1) தனது புருஷனுக்கு உண்மையற்ற வளாயிருப்பவள் வேசி என்றழைக்கப்படுவாள். ஆகையால் இந்தப் பாபிலோன் விழுந்துபோன சபைக்கு அடையாளமாகக் காணப்படுகிறது. "பாபிலோன்" என்று அழைக்கப்படுவது எதைக் காட்டுகிறதென்றால், எழுத்தின்படியுள்ள பாபிலோனில் கிரியை செய்த அதே பொல்லாத ஆவி, ஆவிக்குரிய இந்தப் பாபிலோனில், அல்லது விழுந்துபோன இந்தச் சபையில் கிரியை செய்கிறது. இந்தப் பொல்லாத ஆவியும், ஸ்திரீ உட்கார்ந்திருந்த சிவப்பு நிறமுள்ள மிருகமும் ஒன்றேயாகும். மிருகத்தின்மேல் அவள் உட்கார்ந்திருப்பதினால், அவள் அந்த மிருகத்தினால் சுமக்கப்பட்டு, வழிநடத்தப்படுகிறாள். ஆகையால் மிருகம் ஏறிவந்த பாதாளக்குழிக்கு (வெளி. 17 : 8) இந்த ஸ்திரீயும் தள்ளப்பட வேண்டியதாகும். 7-ஆம் வசனத்தில் ஒரு தூதன், "இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையுமுடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்துடைய இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்" என்றான். 9-ஆம் வசனத்தில் அந்த ஏழு தலைகளும், அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகள் என்றும், 18-ஆம் வசனத்தில், அந்த ஸ்திரீயானவள் பூமியின் இராஜாக்கள்மேல் இராஜ்யபாரம் பண்ணுகிற மகா நகரம் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது. உலக சரித்திரத்தைக் கவனித்துப் பார்த்தால் ஏழு மலைகளின்மேல் கட்டப்பட்டுள்ள பட்டணம், ரோமாபுரி என்றும், அவ்விடமிருந்து ரோமன் கத்தோலிக்க சபையின் தலைவர்கள் முழு உலகத்திலுள்ள தேசங்களையும், அவைகளின் அதிகாரிகளையும், ஆவிக்குரியபடியும், தேச சம்மந்தமாகவும் ஆளுகிறார்கள் என்றும் அறியலாம்.

வெளி. 17 : 1-ல் இந்தச் சபையானது ஒரு மகாவேசி என்றும், அவள் திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிறதாகவும் சொல்லப்பட்டுள்ளது. 15-ஆம் வசனம் அந்தத் தண்ணீர் ஜனங்களையும், கூட்டங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும் காட்டுவதாகக் கூறுகிறது. இவ்விதமாக ரோமன் கத்தோலிக்க சபை காணப்படுகிறது. அது தனக்கு முழு உலகத்திலுமிருந்து பின் பற்றுகிற ஆயிரக்கணக்கான ஜனங்களுண்டு என்று பெருமை பாராட்டுகிறது. 3-ஆம் வசனத்தில் அந்த ஸ்திரீயினுடைய இருப்பிடம் வனாந்தரம் என்பதினால் ஆவிக்குரிய விஷயத்தில் இந்தச் சபை வறட்சியாக உள்ளது என்பதை அறிகிறோம். மேலும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருந்த மிருகம் தூஷணமான நாமங்களால் நிறைந்திருந்தது (10:3) இது இச்சபையின் பயங்கர துர்உபதேசங்களைக் காட்டுகிறது போப்புகள், இப்பூமியில் தேவனுடைய ஸ்தானத்தை வகிப்பதாகவும், மனுஷர்களுடைய பாவங்களை மன்னிக்கவும், அவர்களுக்கு மன்னிப்புச் சீட்டுகளைக் கொடுக்கவும் தங்களுக்கு எல்லாவித உரிமையும், அதிகாரமும் உண்டென்றும் சொல்லுகிறார்கள். "அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும், சிவப்பான ஆடையுந் தரித்து, பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புக்களாலும், அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்". (வெளி. 17:4) இவ்விதமாக விழுந்துபோன இந்தச் சபை உலகப் பிரகாரமான மகிமையும், மேன்மையும், பயங்கர கேடுபாடுகளும் உடையதாக இருக்கிறது. சிவப்பு நிறமுள்ள (17:3,4) மிருகம், வேசி, வலுசர்ப்பம் (12:3), போப்பு கைக்கொண்டுவரும் சிவப்பு நிறத்தைக் காட்டுகிறது. போப்புடைய சிங்காசனம் சிவப்பு. சிவப்பு உடை தரித்த 12 பேர் அதைச்

சுமப்பார்கள். கர்டினல்மாருடைய (Cardinals) தொப்பிகளும், அங்கிகளும் சிவப்பு. (Page 655 of Halleys Bible Hand Book) போப்புடைய கிரீடம் 90,000 ஸ்டர்லிங் பவுண்டு கொண்ட விலையேறப்பெற்ற கற்களையும், முத்துக்களையும் கொண்டது. அவரது செங்கோல் 15,000 ஸ்டர்லிங் பவுண்டு விலை மதிப்புள்ளது. 6-ஆம் வசனத்தில் அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது. இந்தச் சபையானது தனது துர் உபதேசங்களை ஏற்றுக்கொள்ளாத உண்மையான தேவனுடைய ஜனங்களை ஆயிரக்கணக்காகச் சென்ற காலங்களில் சித்திரவதை செய்து கொன்றதை யாவரும் அறிவர். சீர்திருத்தல் காலத்தில் மாத்திரம், ரோமன் கத்தோலிக்க சபை ஐம்பது மில்லியன் ஜனங்களைச் சபைத் துரோகிகள் என்று சொல்லிக் கொன்றது. அதைத் தவிர எல்லா நூற்றாண்டுகளிலும் எண்ணி முடியாதக் கிறிஸ்தவர்கள் இச்சபையினால் மிகவும் கொடூரமான முறையில் வதைக்கப்பட்டு இரத்தசாட்சிகளாக மரித்திருக்கிறார்கள். உண்மையான கிறிஸ்தவ சபைக்குரிய எவ்விதமான குணசீலங்களும் இதில் காணப்படாமல் இருக்கையில் இது, தான் மாத்திரம் உண்மையான சபை எனக் கூறி, எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறது. ஆகையால் இது அகாதமான பாதாளத்தில் தள்ளப்பட்டுத் தண்டிக்கப்படப் பாத்திரமாக இருக்கிறது.

இந்தமகாவேசியான விழுந்துபோன சபையை (ரோமன் கத்தோலிக்கச் சபையை) தேசீய பாபிலோன் (Political Babylon) (வெளி. 17:12-13, 15-18) கடைசியாக அழித்துப் போடுகிறது. ஏனெனில், அந்த மிருகமாகிய அந்திக்கிறிஸ்து தன்னைத்தான் யாவரும் வணங்க வேண்டுமென்ற நோக்க

முடையதாக இருக்கிறது. (II தெச 2:3-4; வெளி. 13:15) ஆயினும், தேவன் மகிமையோடு வந்து அந்திக் கிறிஸ்துவையும் அவனது ஜனத்தையும் "அர்மகெதோன்" என்ற இடத்திலே முற்றிலுமாகச் சங்கரிப்பார். (வெளி.16:6: 17:14; 19:19-21)

உத்தரிக்கும் ஸ்தலம் (Purgatory)

ரோமன் கத்தோலிக்க சபையின் மற்ளெரு துர் உபதேசம் என்னவெனில், ஒரு மனுஷன் மரித்தவுடன் அவனது ஜீவிய காலத்தில் ஏற்பட்ட எல்லா பாவங்களும் சுத்திகரிக்கப்பட அவனது ஆத்துமா உத்தரிக்கும் ஸ்தலம் (Purgatory) என்ற இடத்துக்குத் தற்காலிகமாகச் சென்று வேதனைப்படும் என்பதே. அவைகள் அந்த இடத்தில் சுத்திகரிக்கப்பட்ட பின்பு நீதிமான்களுடைய வாசஸ்தலத்துக்குச் செல்லும் என்பர். ஆனால் வேதத்தில் இதற்குச் சாதகமாக ஒரு வார்த்தையும் சொல்லப்படவில்லை. மரிக்கும் சமயத்தில் ஒரு மனுஷனுடைய ஆவிக்குரிய நிலைமை எப்படியுள்ளதோ, அப்படியே அவன் நித்தியத்திலும் இருப்பான். "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" என்று எபி. 9:27-ல் சொல்லப்பட்டபடி மனுஷனுடைய மரணத்துக்குப் பின்பு நியாயத்தீர்ப்புதான் உண்டு. பரிசுத்தவான்களுக்கோ இவ்வுலகிலே நியாயத்தீர்ப்புண்டு.(I கொரி.11:31-32) ஆகையால் மரணத்துக்குப்பின் சுத்திகரிக்கப்பட எவ்வித இடமும் கிடையாது.

அக்கினிக்கடல்

(LAKE OF FIRE GK. GEHENNA)

வெளி.20:13-15; 21:8; மத்.25:41-6.

துன்மார்க்கர் மரித்தவுடனே, அவர்களுடைய ஆத்துமாக்கள், சரீரத்தை விட்டுப் பிரிந்து, தங்களுக்கென்று குறிக்கப்

பட்டுள்ள மூன்று இடங்களாகிய (1) நரகம் (2) மரணம் (3) சமுத்திரம் என்பவைகளுக்குச் சென்று, தாங்கமுடியாத வேதனைகளை அநுபவிக்கும். இந்த மூன்று இடங்களைக் குறித்து விவரமாக மேலே பார்த்தோம். உயிர்த்தெழுதலில் இந்த இடங்களிலுள்ள துன்மார்க்கர் ஏழாவது ·வரிசையில் உயிர்ப் பிக்கப்பட்டுத் தங்களது சரீரங்களோடு, ஆகாயவெளியில் (Space) வைக்கப்பட்டுள்ள தேவன் வீற்றிருக்கும் பெரிதான வெள்ளைச் சிங்காசனத்துக்கு முன்பு நிற்பார்கள். "அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங் களில் எழுதப்பட்டவைகளின்படியே, மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்." (வெளி. 20:12) அவர்களுடைய ஜீவியத்தின் முழு வரலாறும், அவர்களுக்கென்று ஏற்படுத்தியுள்ள புஸ்தகங்களில் பதிக்கப் பட்டிருப்பதால், அவரவருடைய துர்க்கிரியைகளுக்கு ஏற்றவாறு தண்டனை விதிக்கப்படுவர். இவர்கள் இயேசுவை விசுவாசித்து, ஏற்றுக் கொள்ளாத படியால் இவர் களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்திலும் காணப்படாது. "ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ, அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்." (வெளி.20:15) மேலும், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், விக்கிரகா ராதனைக் காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். (வெளி. 21;8) சத்தியத்தை நன்றாக அறிந்த பின்பும், இவ்வுல கத்தின் ஸ்தானம், மானம், பெயர், புகழ்ச்சி, அந்தஸ்து இவை களினிமித்தமாகவும் மனுஷ பயம், மரண பயம், இருப்பதினாலும் அநேகர் அதை ஏற்றுக் கொள்ளவோ கைக் கொள்ளவோ அஞ்

வர். இன்னும் அநேகர் இயேசுவையும், வேதத்தையும் விசுவாசியாமல் இருப்பர். இன்னும் சிலர் அவசியத்துக்கு பொய் பேசுவர் இவர்களும் துன்மார்க்கராகவேக் கருதப்பட்டு,மற்ற பயங்கரப் பாவிகளோடும், அக்கிரமக்காரரோடும், பிசாசோடும், அவனுடைய தூதர்களோடும் சேர்ந்து ஒன்ருய் அக்கினிக் கடலிலே தள்ளப் பட்டு நித்திய காலமாக வேதனைப்படுவர் என்பதை நினைக்கும்போது எவ்வளவு பரிதாபமாக இருக்கின்றது! இவ்விதமாக, வெள்ளைச்சிங்காசன நியாயத் தீர்ப்புக்குப் பின்பு நரகம், மரணம், சமுத்திரம் இம் மூன்று இடங்களிலுமுள்ள துன்மார்க்கர் அனைவரும், தங்கள் சரீரங்களோடு நித்திய அக்கினிக் கடலிலே தள்ளப் படுவார்கள். (வெளி. 20: 13-15)

இந்த அக்கினிக் கடலுக்கு, "அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல்" (வெளி 21:8) 'இரண்டாம் மரணம்' (வெளி. 21:8), 'நித்திய அக்கினி' (மத் 25:41), 'நித்திய ஆக்கினை அல்லது தண்டனை' (மாற்கு 3:29; மத்தேயு 25:46) என வேறு பெயர்களும் உண்டு.

இதற்கு "இரண்டாம் மரணம்" என்று சொல்லக் காரணம் என்ன? இவ்வுலகில் இருக்கையில் ஒரு மனுஷனுக்குச் சரீரத்தின்படி ஏற்படும் மரணத்தோடு சம்பந்தப்படுத்தி. இது இரண்டாம் மரணம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதல் மரணத்தில், ஆத்துமா, சரீரத்தை விட்டுப் பிரிந்து போகிறது. ஆனுல் இரண்டாம் மரணத்தில் ஆத்துமா, பாவத்தினிமித்தமாக தேவனை விட்டு என்றென்றைக்குமாய்ப் பிரிந்து போகிறது. உயிர்த்தெழுந்த பின்பு, ஆத்துமாவும், சரீரமும் ஒன்று சேர்ந்து இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலில் தப்ப வழியில்லாமல் என்றென்றைக்கும் தவிக்கும். ஆகையால்தான் இயேசு: "ஆத்துமாவைக்

G.B. Sathyanesan.

கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' (மத். 10:28) என்று கூறுகிருர். இது அவியாத அக்கினியுள்ள நரகம்'' என்றும். இங்கு ஆத்துமாவோடு சேர்ந்து, சரீரமும் பாடுபடுவதினல், ஒருவனுடைய கை, கால், கண் முதலிய எந்த அவயவமாவது நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கு இடறலாய் இருக்குமானல் அதைத் தறித்து அல்லது பிடுங்கிப் போடுவது அவனுக்கு நலமாயிருக்கும் என்று இயேசு சொன்னுர். (மாற். 9:43-48; ஏழாம் ஓய்வுநாள்காரரும், இன்னும் அநேகரும் நினைக்கிறபடி, அக்கினிக் கடலில் தள்ளப்பட்ட யாவரும்) எரிந்து, சாம்பலாகி, ஒன்றும் இல்லாமற் போவார்கள். (Total annih lation) என்பதற்கு எந்த விதமான அத்தாட்சியும் கிடையாது. வெளி. 19:20- ல் மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு, இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள் என்று வாசிக்கிரோம். இச்சம்பவம் இப்பூமியில் ஆயிர வருஷ அரசாட்சி ஆரம்பிக்கிறதற்குச் சிறிது முன்பு நடை பெறும். வெளி.20:10-ஐ வாசிபபோமானல், ஆயிர வருஷ அரசாட்சி முடிவில், பிசாசும் பிடிக்கப்பட்டு, ''மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்'' என்பதைஅறியலாம். ஆயிரம் வருஷம் கழிந்த பின்பும், மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும், அக்கினிக் கடலிலே அழிந்துபோகாமல், உயிரோடிருப்பதை இங்குக் காண்கிரோம். அவர்கள் இரவும், பகலும் ''சதாகாலங்களிலும்'' வாதிக்கப்படுவார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. எபி 1:8-லும் ,,சதாகாலம்'' என்ற பதம், ஆங்கிலத்தில்

("தேவனே! உம்முடைய சிங்காசானம் என்றென்றைக்குமுள்ளது") உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய சிங்காசனமும், பரலோகமும், நித்தியமாய் இருப்பின் நரகமும் அதில் தள்ளப்பட்டவர்களும் உயிரோடு நித்தியமாய்த் தானிருக்க வேண்டும். இதே சத்தியத்தை மத். 25:46-ல் துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடையவும் நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்று சொல்லப் பட்டதைக் காண்கிறோம். வெளி 14:11-ம் துன்மார்க்கனுடைய தண்டனை நித்தியமானது என்பதை உறுதிப்படுத்துகிறது. "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும் ....இரவும், பகலும் இளைப்பாறுதலிராது" யோவான் ஸ்நானன் பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" என்று சொல்லும் போது (மத் 3:12) துன்மார்க்கருக்குக் கிடைக்கப் போகும் நித்திய தண்டனையைக் காட்டுகிறார் இயேசுவும் இவ்விஷயத்தில் சந்தேகம் ஏற்படாமலிருக்க, "அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலிருக்கும்" என்று மாற். 9:44, 46, 48-ல் கூறி எச்சரிக்கிறார்

இந்த நித்திய அக்கினிக் கடலைத் (Gehenna) தேவன் மனுஷருக்கென்று உண்டாக்காமல், பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் தான் ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்பதை மத் 25:41 மூலமாக அறியலாம். ஒரு மனுஷனும் கெட்டுப் போகாமல், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். (II பேதுரு 3:9; I தீமோ. 2:4). ஆனால் பிசாசுக்கு அடிமையாகி, அவனுடைய இச்சையின்படி ஜீவிக்கிறவனெவனும், பிசாசு அடைந்த ஆக்கினைத்தீர்ப்புக்குப் பங்குள்ளவனாகிறான்.

அகவே, நண்பனே, நீர் நித்திய நரகத்துக்குப்போவது தேவ சித்தமில்லையென்பதை அறிந்து கொண்டீர். நீர் நித்தியமாய் இயேசுவோடுகூட அவருடைய சிங்காசனத்தில் இருக்கவேண்டு மென்பதே அவருடைய நித்திய நோக்கம். இதற்காகவே, அவர் பரலோகத்தின் இன்பத்தை விட்டுத் தாழ்த்தப்பட்ட நம்மை உயர்த்த, மானிடக்கோலம் பூண்டு, மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, பாவ மனுஷன் பூரண பரிசுத்த ஜீவியம் செய்யக்கூடும் என்பதை ரூபகாரப்படுத்தத் தான் பூரண பரிசுத்த ஜீவியம் செய்து முன்மாதிரியைக் காண்பித்தார். அதனுடன் நாம் பாவ மன்னிப்பைப் பெற்றுச் சுத்திகரிக்கப்பட (1 யோவா.1:7-9) தமது கடைசித் துளி இரத்தத்தையும் சிந்தினார். கடைசியாக, நாம் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் பொருட்டுத் தாம் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, நம்மைச் சேர்க்கும் பொருட்டாகச் சீக்கிரமாய் வருகிறார்.

முடிவுரை

தற்கால உலக நிலையையும், சபையுடைய நிலவரத்தையும் பார்க்கும்போது, நம் மீட்பர் சீக்கிரம் வருகிறார் என்றுஅறிகிறோம். விஞ்ஞானம் விருத்தியடைந்து அறிவு பெருகிப்போகும் என்னும் வார்த்தை நிறைவேறிற்று. மனிதர் சந்திரமண்டலத்திற்குச் சென்றது மாத்திரமல்ல, செவ்வாய்க் கிரகத்தையும் (Mars) ஆராயத் துவங்கி விட்டனர். அதிவேகமான ஆகாயக்கப்பல்கள் மூலம் உலகத்தைச் சிறிதாக்கிக் கொள்கின்றனர்.

ஹென்றிஃபோர்டு என்பவர் 1913-ஆம் ஆண்டில் மாடல் T என்ற ஊர்தியை பலர் பிரயாணம் செய்யும் வசதியுடன் அறிமுகம்செய்தார். ஆனால் மாடல் T-யின் ஓடும் வேகம் மணிக்கு சுமார் 30 மைல் அளவிலேயே இருந்தது. முதலாவது உலகப் போரின் பின்னர், தற்காலத்திலுள்ள கடைசித் தலைமுறையின் தொடக்கத்தில் பிரயாணம் செய்யும் வேகமானது படிப்படியாக அதிகரித்து, தற்கால ஆகாய விமானங்கள் மணிக்கு 1,000மைல் வேகத்திற்கு அதிகமாகவும், விண்வெளி வீரர்களைத் தாங்கிச் செல்லும் விண்வெளிக் கப்பல்கள் மணிக்கு 20,000மைல்வேகத்திற்கு அதிகமாகவும் பறக்கின்றன. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் விண்வெளிக்கு மேலே இயங்கும்படி அனுப்பியிருக்கும் இயந்திரங்களைப் பூமியிலிருந்தே பழுது பார்த்துக் கொள்கின்றனர். மனுஷரின் உணர்ச்சிகளை இயந்திரங்கள் (Computer) மூலம் கண்டு கொள்ளுகின்றனர்.

அன்றியும் இன்று யூதர்கள் விருத்தியடைகின்றனர். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்கள் சத்துருக்களை மேற்கொண்டு வருவதை சமீபத்தில் உகாண்டாவில் (Uganda)

என்டபி (Entebbe) என்னும் ஆகாய விமான நிலையத்தில் இருந்து யூதர்கள் தங்களுடைய ஜனத்தை இம்மட்டும் சரித்திரத்தில் அறிய முடியாத விதத்தில் மீட்டுக் கொண்டதிலிருந்து அறிவோமே. மேலும் 1967 - ஆம் வருஷத்தில் எகிப்தின் 13 இராஜ்யங்கள் அவர்களுக்கு விரோதமாய் வந்த போது சிலமணி நேரங்களுக்குள் எகிப்தியரைப் பயங்கரமாய் முறியடித்தனர் ''யூதாவின் தேசம் எகிப்தியருக்குப் பயங்கரமாயிருக்கும்'' ஏசாயா 19:17 என்னும் வசனம் நிறைவேறியதை இந்தச் சம்பவத்தின் மூலம் அறிகிறோம் அல்லவா?

கொள்ளை நோய்களும், பஞ்சமும் பெருகி வருவதைத் தவிர்க்கவும் மனுஷர் எவ்வளவு முயற்சி எடுக்கிறார்கள். அவ்வளவுக்கு அதிகமாய் அது பெருகிவருவதைக் காண்கிறோம். கர்த்தருடைய வருகைக்கு முன்னதாக பூமியதிர்ச்சிகள் சம்பவிக்கும் என்று கர்த்தர் சொன்னது பூமியின் பல பகுதிகளிலும் நிறைவேறி வருகிறது. சமீபத்தில் மேற்கு ஜெர்மனியிலும், பாகிஸ்தானிலும், சீனாவிலும் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால், பலபேர் உயிர் இழந்ததைக் குறித்துப் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்ததைப் பலர் அறிந்திருப்பார்கள். இத்துடன் பரவிப் பெருகும் கொள்ளைநோய்கள், பஞ்சங்கள் முதலியவற்றைத் தவிர்க்க அதிகாரிகள் தங்களால் இயன்ற அளவு முயற்சித்தும், தவிர்க்க முடியாது தியங்கி நிற்கின்றனர்.

சூரியனில் ஒரு பிளப்பு ஏற்பட்டிருப்பதாகவும், அதன் நிமித்தம் உஷ்ணம் அதிகரித்து வருவதாகவும் விஞ்ஞானிகள் கூறுவதை அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். தற்காலத்தில் உஷ்ணம் கூடியிருப்பதையும், அதினால் சிலர் மாண்டதையும் அறிந்து, அதிர்ச்சி அடைகிறோம் இத்துடன் முன்பு நாம் இந்தப் புத்தகத்தின் ஆறும் அதிகாரத்தில் (பக்கங்கள் 92,93)

ஒரு மிருகத்தைக் குறித்தும், 666 என்னும் இலக்கத்தைக் குறித்தும் படித்தோம் அல்லவா? அதைத் தெளிவாக பின் வரும் வசனங்களில் வாசிக்கிறோம். (வெளி. 13: 16 - 18) "அது சிறியோர், பெரியோர். ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் வலது கைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன்; அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்று அறுபத்தாறு". இதன் நிறைவேறுதல் என்று நாம் எண்ணத்தக்கதாக Brussels என்னும் இடத்தில் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட மிருகம் என்னும் இயந்திரம், இந்த 666 என்னும் இலக்கத்துடன் இயங்க இருப்பதை மார்ச் 1974 'மூடி' மாத வெளியீட்டின்மூலம் அறியலாம். அது பின்வருமாறு:-

"உலகத்துக்கு ஒரு பெருஞ்சேதம் சம்பவிக்குமானால், அந்த நிலவரத்தை மாற்றிப் புனரமைப்புக்கான திட்டங்களை மேற்கொள்ள கம்ப்யூட்டர் (Computer- கணக்கிடும் பொறி) மூலமாக ஏற்கனவே ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று, ஐரோப்பிய பொதுச்சந்தை (European Common Market)யின் தலைமை ஆய்வாளரான (Chief Analyst) டாக்டர் ஹான்டிரிக் எல்ட்மன் (Dr. Handrick Eldman) என்பார், பிரஸல்ஸ் (Brussels) என்ற இடத்திலிருந்து அறிவிக்கிறார். இது சம்பந்தமாக ஓர் முடிவுக்கு வர பல விஞ்ஞானிகளும், ஆலோசனையாளரும், மேற்கூறின நிறுவனத்தின் தலைமை

யகத்தில் கூடினர். அவ்வேளையில் டாக்டர் எல்ட்மன், 'பீஸ்ட்' (Beast-மிருகம்) என்று பெயரிடப்பட்ட ஓர் ராட்சத இயந்திரத்தைத் திறந்து வைத்தார். அது அவர்கள் கூடியிருந்த கட்டிடத்தின் மூன்று மாடியளவு இடத்தை நிரப்பிற்று. இந்த ராட்சதப் பொறி நூற்றுக்கு அதிகமான உணர்வூட்டும் ஏதுக்களைத் தனக்குள்ளே கொண்டு, தானாகவே திட்டமிடும் ஆற்றலுள்ளது.

''கணக்கிடும் நிபுணர்கள்'' (Computer Experts) ஓர் இயந்திரத்தின் மூலமாகவே உலக வர்த்தகத்தை நிர்ணயிக்கும்படி மாபெரும் திட்டம் ஒன்று வகுத்துள்ளனர். அந்த இயந்திரம் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் கடன் சீட்டு (Credit Cards) வழங்கும் முறையைத் தவிர்த்து, அதற்குப் பதிலாக ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு இலக்கம் தரக்கூடிய அமைப்புகளைத் தனக்குள்ளே கொண்டதாகும். இந்த இயந்திரம், மக்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் பயன்படுத்தும் கடன் சீட்டுக்குப் பதிலாக ஒரு இலக்கத்தைக் கொடுக்கும். மேலும் ஒளிக்கதிர்கள் (Laser) மூலமாக, கண்களால் காணக்கூடாத விதத்தில் ஒவ்வொருவருடைய நெற்றியிலோ அல்லது கையின் பின்புறமோ ஓர் இலக்கத்தைப் பதித்துவிடும். கடன் சீட்டுக்குப் பதிலாக இந்த இலக்கம் எப்பொழுதும் அவர்கள்மேல் காணப்படும். இந்த இலக்கம் கண்களுக்கு மறைவாக இருக்கும். என்றாலும் வாங்கும், விற்கும் இடங்களிலும், பணம் கட்டும் இடங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் 'சிவப்பு ஒளிச்கதிர் வீசும் கருவிகள், (Infra Red Scanners) அவரவருடைய இலக்கங்களைத் தெளிவாகக் காண்பித்துவிடும். '666' என்னும் இலக்கத்தை உபயோகித்து முழு உலகத்துக்கும் செல்லும்படியான ஓர் கடன் சீட்டு இலக்கம் கொடுக்கப்படலாம் என்று டாக்டர் எல்ட்மன் கூறுகிறார்.

உலகம் ஓர் ஒழுங்குக்குள் வர வேண்டுமானல், உலகி லுள்ள யாவரும் ஒரே சர்வதேச—சமாதான— அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஓர் சர்வதேச வியாபாரப் புது முறைக்கும், இந்த இலக்கமிடும் திட்டத்துக்கும் கீழ் வர வேண்டும் என்று மேற்கூறிய பொதுச்சந்தை ஆய்வாளர்கள் எண்ணுகின்றனர். மேலே கூறப்பட்ட 'கணக்கிடும் பொறி' (Computor) மூலமாக ஒரு மனிதனுக்கு உலகத்திலுள்ள எந்த மனிதனின் இலக்கத்தையும் எளிதில் விரலால் கணித்துவிடக் கூடியதாயிருக்கும். மனிதவர்க்கம் முழுவதையும் அடக்கி ஆளக் கூடிய வல்லமை வாய்ந்த வழியை இது வகுத்துக் கொடுக்கும். மனிதனைப் பற்றிய எல்லா உலகப் பிரச்சனைகளுக்கும் தீர்வு தரும் ஏற்றதோர் வங்கி (Bank) யாகும் இது. இது சமாதானத்திற்கான ஓர் கருவியாகவோ அல்லது ஓர் சர்வாதிகாரியுடைய ஆயுத மாகவோ பயன்படுத்தப்படலாம்.

யாராவது ஒரு நபர் இக்கட்டுப்பாட்டுக்கு இசைய மறுத்தால் என்ன சம்பவிக்கும் என்ற கேள்விக்கு பொதுச் சந்தையின் தலைவர் ஒருவர், அப்படிப்பட்டவர்களைத் தேவைக்குஏற்றாற்போல் இணங்கவைக்க பலாத்கார முறையைக் கையாள வேண்டியது வரும் என்று வலியுறுத்தும் முறையில் பதிலளித்தார்.

அந்திக் கிறிஸ்துவைப் பற்றி

இது சம்பந்தமாக ஐரோப்பியப் பொதுச்சந்தையின் நிறுவனரும், நிர்வாகியும் 'நேட்டோ'(NATO North Atlantic Treaty Organisation) வடஅட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் பொதுச் செயலாளருமான ஹென்றி ஸ்பீக் (Henry Speak) என்பவர், "ஏற்கனவே ஆலோசனைச் சங்கங்களின் தொகை தேவைக்கு மிஞ்சிவிட்டது. இதற்கும் அதிகமாக இன்னும் ஒரு ஆலோசனைச்

சங்கர் தேவையில்லை. எல்லா மக்களின் ஆதரவையும் பெற்று நாம் இந்தப் பொருளாதாரச் சேற்றில் அமிழ்ந்து விடாதபடி இதினின்றும் நம்மைத் தூக்கியெடுக்கக்கூடியத் தனித்தகுதிவாய்ந்த ஓர் மனுஷனே தற்போதையத் தேவை. அவன் தேவனோ. சாத்தானோ,யாராயிருந்தாலும் அப்படிப்பட்டவனை அனுப்புங்கள். அவனை ஏற்றுக்கொள்ள நாங்கள் ஆயத்தம்'' என்றுசொல்லுகிறார்

இப்படிப்பட்ட இந்த நிறுவனத்துக்கு அந்திக் கிறிஸ்துவே தலைவனாக வருவான் என்று(வேதாகமத்தெளிவு பெற்ற) நமக்கு இது நம் கண்களைத் திறக்கும் திறவுகோலாக இருக்கிறது.

உலகத்தில் இவ்விதக்காரியங்கள் சம்பவித்துக்கொண்டிருக்க சபையிலும்''மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக்காண்பாரோ''வென்று(லூக்கா 18:8)இயேசு கேட்டதற்கேற்பவும் பரி. பவுல் II தெச. 2:3-ல் 'கர்த்தர் வருவதற்கு முன்பாக விசுவாசத் துரோகம் சம்பவிக்கும்' என்று கூறியதும் நிறைவேறிக்கொண்டு வருகிறது. கடைசி நாட்களில் மனுஷர் "தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன்பெலனை மறுதலிப்பார்கள்'' (II தீமோ. 3:1-5) என்று கூறியிருப்பதுபோல கிறிஸ்தவர்களில் பலர் கிறிஸ்தவ ஜீவியத்தின் பெலனாகிய பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பரிசுத்தம் முதலியவற்றைஇழந்து விசுவாசத்திற்குத் துரோகஞ்செய்து உலக மனுஷராய் மாறி வருவதைக் கண்ணுற்று, வேதனை அடைகிறோமே. அன்றியும் சபைக்கு பரி யோவான் எழுதும்போது ''அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்'' (வெளி. 22:11) என்கிறார். அவ்விதமே ஒரு பக்கத்தில் ஜெபக்

கூட்டங்களும், எழுப்புதல்களும் பெருகி வருகின்றன. மறு பக்கத்தில் நடனசாலைகளும், குடிவெறிகளும், களியாட்டு இடங்களும், மற்றும் பலவிதப் பாவங்களும் பெருகி வருகின்றன. Social Movement என்று சொல்லி ஆண்களும் பெண்களும் தவருன முறையில் பழகி அசுத்தமான பாவங்களில் ஈடுபடு-கின்றனர். இவ்விதம் வரும் என்பதை யோவான் அன்று கண்டு அத்துடன் அவ்வசனத்தின் அடுத்த வசனத்தில் 'இதோ சீக்கிரமாய் வருகிறேன்' என்று எழுதுகிரூர்.

பிரிட்டனிலுள்ள விஞ்ஞானிகள் அசாதாரணமும் செயற்-கையுமான ஒருவித ஒலியை உருவாக்கியுள்ளனர் அவ்வொலி-யானது கேட்பவரின் மனதிலுள்ள எண்ணங்களை முழுவதுமாக அகற்றி, கேட்பவர்களை முற்றிலுமாக அதின் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வருவதால், அவர்கள் ஒரு இயந்திரம்போல் இயக்கப்படுகிருர்கள். இவ்வொலி இவ்வித மிகக் கொடிய நாசத்தை விளைவிக்கும் ஆற்றலுடனிருப்பதால், இவ்வொலி பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை (tape) லண்டனில் பூமிக்கடியிலுள்ள ஒரு நிலவறையில் பூட்டி வைத்துள்ளனர், இவ்வொலியைக் கண்டு பிடிக்க உதவி செய்தவர்களில் ஒருவர். மனோதத்துவ முறையில் நடத்தையை கற்கும் புகழ்பெற்ற மனோ தத்துவ வல்லுனரான பண்டிதர் ராபர்ட் ஷார்ப் என்பவராவார் அவர் கூறுவதாவது:-இந்த ஒலியானது மிகவும் சக்தி வாய்ந்தது. நாசம் விளைவிப்போர் இவ்வொலியைத் தீய விளைவுகளுக்காக உபயோகிக்கலாம். தேவையானுல், ஒரு அரசாங்கம் வானொலி மூலமாக இவ்வொலியைப் பரப்பி, மக்கள் மனதில் நிலவும் கருத்துக்களை முற்றிலுமாக அகற்றிவிட்டுத், தங்களுக்குகந்த கருத்துக்களைப் பிரச்சாரம் செய்து அவற்றை மக்கள் நம்பும்-படியாகச் செய்து விடலாம். காதில் பொருத்தப்படும் கேட்கும்

கருவி மூலமாக, இவ்வொலியைப் பரிசோதனைக்காக செலுத்தும் போது, அவர்களுடைய மூளையானது தூங்கிய நிலையை அடைந்ததாக E. E. G. கருவி காட்டிற்று இந்நிலையில் மூளையானது பேசுவோர் தெரிந்தளிக்கும் எச்செய்தியையும் பெற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தது.

பண்டிதர் ஷார்ப் பிரிட்டனிலுள்ள நடத்தை சிகிச்சையகத்தின் தலைமை இயக்குனராவார். அவர் மேற்கொண்ட பல பரிசோதனைகளின் முடிவுகளைக் கூறும்போது 'இந்த ஒலியின் சக்தியானது மக்கள் எதையும் நம்பவும் எதையும் செய்யவும்அவர்களை இயக்க வல்லதாகும்' எனக் கூறுகிறார். மகாபெரிய உபத்திரவத்தில் கைவிடப்பட்டவர்களின் நிலையைக் குறித்து ''ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்'' (II தெச. 2:11,12) என்னும் வேத வாக்கியம் இதனால் நிறைவேறுகிறது. (World events & Bible Prophecy, April 77.)

அமெரிக்காவிலுள்ள N A S A என்ற விண்வெளிப் பயண நிறுவனம், அறிவியலில் அல்லது கணிதவியலில் Ph. D. பட்டம் பெற்ற ஒருவர், 11,904 ஆண்டுகளில் கணக்கிடுவதை அவர்களுடைய கணக்கிடும் கருவியால் ஒரே நிமிடத்தில் கணக்கிட முடிகின்றது எனத் தெரிவிக்கிறது. (World Events & Bible Prophecy, March'77.)

The next visitor to planet Earth' என்ற நூலில் பண்டிதர் எலெஸ் இவ்வாறு கூறுகிறார் :—''வெளிப்படுத்தின விசேஷத்தில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டிருக்கும் உலகத்

தில் இனிவரும் சர்வாதிகாரி, இப்போதே நம்முடன் இருக்கின்ருன் என்று நான் நம்புகிறேன். அவன் யாரென்று இப்போது நாம் அறியோம்; ஆனுல் குறித்த வேளையில் அவன் வெளிப்படுத்தப்படுவான். அந்த உலக சர்வாதிகாரியுடைய எண் மதிப்பை (இலக்கத்தை) நம்முடைய கர்த்தர் கூறியிருக்கிருர். அது ஒரு குறிப்பிட்ட மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது. அவனுடைய எண் அறுநூற்று அறுபத்து ஆறு (666) ஆகும். இத்தாலி தேசத்திலிருந்து வரும் பாத அணிகளில் ஐரோப்பிய பொதுச்சந்தையின் (European common Market) வியாபாரச் சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அச்சின்னமாவது: ஒரு வட்டத்தின் நடுவில் குறுக்காக ஒரு கோடு வரையப்பட்டிருக்கும். அதன் கீழ் 666 என்ற எண்ணும், சரியாக வெளிப்படுத்தின விசேஷத்தில் விவரிக்கப்பட்டிருப்பது போலவே, கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்குட்டியின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

அந்த மிருகத்தின் சொரூபமானது, உலகிலுள்ள அனைவரும் அந்திக் கிறிஸ்துவைக் கடவுளாக வணங்க வேண்டுமென்றும், அவனுடைய இலக்கத்தையும், முத்திரையையும் தரித்துக்கொள்ள வேண்டுமென்றும் அனைவருக்கும் கட்டளை கொடுப்பதை அப்போஸ்தலனுகிய யோவான் கேட்க முடிந்தது. லெப். கர்ணல்வெர்னன் உவால்டெர்ஸ் என்பவர் முதன் முதலாகப் பேசுகின்ற கணக்கிடும் கருவிகளை (computers) உண்டு பண்ணிஞர். அதன் பின்னர், மனிதருக்குத் தெரிந்த எல்லா மொழிகளிலும் பேசும் கணக்கிடு கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மனிதரைக் கட்டுப்படுத்த கணக்கிடும் கருவிகளை உபயோகிக்கும் நோக்கத்தோடு நவீன வழி முறைகள் தற்போது செயல்படுத்தப்படுகின்றன. இப்படிப்பட்ட நவீன

கண்டு பிடிப்புகளில் சில மனிதரைப் பெரும் திகிலடையச் செய்பவையாக அமைந்துள்ளன'' (World Events & Bible Prophecy, April '77.)

விஞ்ஞானிகளுக்கு இந்த மிருகத்தைக் குறிச்தும், இந்த எண்ணைக் குறித்தும் சத்திய வேதத்தில் இருப்பது தெரியாதிருந் திருக்கலாம். அறிந்திருந்தாலும், அறியாதிருந்தாலும் சத்திய வேதம் சத்தியமே. அதில் எழுதியிருப்பவை யாவும் நிறைவேறி வருகின்றன. இப்பொழுதே அந்திக்கிறிஸ்துவின் ஆவி கிரியை செய்கிறது. 'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்பது போலவே, அது இப்பொழுது நிறைவேறிக்கொண்டிருக் கிறது. ஆனால் மேற்கூறிய வசனங்களில் உள்ள எழுத்தின்படி உள்ள நிறைவேறுதல் இயேசுவின் வருகைக்குப் பின்பு நிச்சய மாகவே, நிச்சயமாகவே நிறைவேறும். ஆகவே அக்கொடிய சம்பவத்தில் அகப்பட்டு இயேசுவை, மறுதலித்து விடாதபடி இப்பொழுதே ஆயத்தப்படுவோமாக! அதற்காக இயேசுகிறிஸ்து வின் இரத்தத்தின் மூலம் பாவங்கள்கழுவப்பட்டு உண்மையான முழுக்கு ஸ்நானத்தை உண்மையான ஊழியர்கள் மூலம் பெற்று அவரோடு உடன்படிக்கைபண்ணி, பரிசுத்தாவியின் வல்ல மையை அந்நிய பாஷை அடையாளத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன்பின்பு அந்த ஆவியானவராலே பரிசுத்தத் தையும், அவருடைய சாயலையும்பெற்று அவர் வருகைக்குக் காத்திருப்போமாக! ஆமென்!

—— G.B. Sathyanesan, P

கிடைக்குமிடம்:

கிறிஸ்ற்றல் ஸ்டோர்ஸ்,

மார்த்தாண்டம்.

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை-1.

விலை ரூ. 1/-